
கடூழியம்
இ.தியாகலிங்கம்

கடூழியம்

இ. தியாகலிங்கம்

சுயவெளியீடு
உதவி
lulu.com

KATULIYAM

(New short novels and short story collections from Norway)

First Edition
July 2021
ISBN: 978-1-105-02733-8

Publication Editor
Thiagalingam Ratnam
Vetlandsveien 117
0686 Oslo
Norway

Pages: 139

Printed & Published by
Lulu.com

உள்ளே...

எனதுரை

இயற்கை தன்னை வாழவைத்துக் கொள்ளப் பெண்ணை வஞ்சித்திருப்பது யதார்த்தம். அந்த யதார்த்தத்தை உணர்ந்து ஒவ்வொரு பெண்ணிற்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது மனிதாபிமானம் உள்ள ஒவ்வொரு ஆணின் கடமையுமாகும். அதைச் சில நாடுகள் ஓரளவு செவ்வனே செய்துள்ளன. நோர்வேயும் அந்த நாடுகளில் ஒன்று. இது உன்னதமான மனிதத்தைப் பேணும் நடவடிக்கையாகும். பூவுக்குத் தலை ஆணுக்குப் பெண் என்பது போல இந்த உன்னதமான முன்னேற்றத்திற்கு ஒரு மறு பக்கமும் உண்டு.

நல்ல சட்டங்களை அல்லது அதில் இருக்கும் ஓட்டைகளை மனித மூளைகள் கச்சிதமாய் பயன்படுத்திக் கொள்ளும். அதில் ஆண் பெண் என்கின்ற வேறுபாடு கிடையாது. இந்த உன்னதமான சட்டங்கள் பெண்களைப் பாதுகாக்கும் அதே நேரம் சில ஆண்களைப் பாதிக்கிறது என்பதும் உண்மையே.

அதன் தாக்கம் எப்படி இருக்கிறது என்பதே கடூழியத்தின் கதை. மேற்கொண்டு அது உங்கள் சுவைப்பிற்கு.

இன்று கொரோனா என்கின்ற கொடிய வருத்தம் உலகை அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறது. பல நாடுகள் அதன் தாக்கம் தெரியாது பொருளாதாரத்தை மட்டுமே எண்ணுகிறதோ என எண்ணத் தோன்றுகிறது. முதலில் நோய்க்கு எதிராக முழுப் பலத்துடன் போராட வேண்டும் என்பது மிகவும் அவசியம். அதற்காகப் பொருளாதாரத்தை முற்றுமாகக் கைவிடுதல் என்று பொருளாகாது. ஆனால் அமரிக்கா, இந்தியா, பிரேசில் இத்தாலி போன்ற பல நாடுகளில் நடந்தது போன்ற பேரவலங்களைத் தடுக்க வேண்டும்.

கொரோனா தனது முழுப் பலத்தையும் காட்ட முதல் எழுதப்பட்ட கதை இது. இன்றும் அது காட்டிவிட்டதா என்பது கேள்வியே. அதன் பிடிக்குள் அகப்பட்ட ஒரு மனிதனின் அல்லாடலே இந்தக் கதை.

கொரோனா தாக்கத்தின்போது உலகம் எப்படி அநீதியைத் தன்னுள் பதுக்கி வைத்திருக்கிறது, மனிதர்கள் எவ்வளவு சுயநலத்தோடு நடந்து கொள்கிறார்கள் என்பதையும் அதற்கு நேர்மாறாகத் தங்கள் உயிரையும்

தியாகம் செய்து மனிதர்களைக் காப்பாற்றும் மனிதர்களையும் காணமுடிந்தது.

இனியாவது சுயநலத்தோடு நடப்பவர்கள் மாறுவார்களா? மாற வேண்டும்.

உலகத்தில் உயிரினங்கள் தோன்றியது தொடக்கம் இப்படியான அச்சுறுத்தல் இருந்திருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க வாய்ப்பில்லை என்பது எனது ஊகம். இயற்கை தன்னைத் தானே செப்பனிடும் முறை இது. அந்த இயற்கையில் உதித்த மனிதன் அதனைக் கைக்கொள்ள நினைத்தது விபரீதமே. அதனால்கூட அதன் சில கடுமையான கோலங்களை அது காண்பிப்பதாக இருக்கலாம்.

ஆனால் மனிதனால் இயற்கை மீது மேற்கொள்ளப்படும் அளவுக்குமீறிய குறுக்கீடு வருங்காலத்தில் பெரும் விளைவுகளை உண்டு பண்ணலாம். அதனால் ஒட்டு மொத்த மனித இனத்திற்கே பாதிப்பு ஏற்படலாம். மனிதர்கள் இனியாவது அதை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப நடக்க வேண்டும் என்பது என்னுடைய அவா. எனது அவாவை இந்த மனித இனம் ஏற்றுக் கொள்ளுமா?

அன்புடன்
இ. தியாகலிங்கம்
http://www.karainagaran.com
ratnamt67gmail.com

கடூழியம்

1

நல்லதோர் வீணைசெய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?

சட்டென அவன் கதவைப் பாய்ந்து எட்டிப் பிடித்தான். அது வெளிப்பக்கம் திறந்து உள்ளே மனிதரைப் புகவிடும் கண்ணாடிக் கதவு. இந்தக் கதவு திறப்பதற்காய் அவன் பல நிமிடங்கள் இரைக்காகப் பதுங்கிய புலியாகக் காத்திருந்தான்.

அவன் கையில் இந்த வீட்டின் திறப்பு ஒரு காலத்தில் பெறுமதி அற்ற பொருள் போலக் கிடந்தது. அது நம்பிக்கை நிலைத்திருந்த காலம். அதனால், அவன் இந்த வீட்டை அவள் பெயரில் வாங்கினான். அந்த நம்பிக்கையும், வீடும் இப்பொழுது கைநழுவிப் போய்விட்டது.

அலாவுதீனின் அற்புதக் கோட்டைக் கதவு திறந்தது போல அந்தப் பெண் கதவைத் திறந்தாள். திறந்ததும் காத்திருந்த அவன் சட்டெனப் பாய்ந்து கதவை எட்டிப் பிடித்தான். அந்தப் பெண் தன்னை இரையென நினைத்துப் புலி ஒன்று அவள் மேல் பாய்ந்ததாய் முதலில் நடுங்கிப் போய்விட்டாள். பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைத் துணிவுடன் திரும்பிப் பார்த்தாள். அவனை அந்த அடுக்குமாடியில் அவள் பலவருடங்களாகப் பார்த்திருக்கிறாள். இப்போது சிலகாலமாக அவன் எங்கோ சென்றிருக்க வேண்டும். அதனால் அவனைச் சட்டென அவளால் அடையாளம் காணமுடியவில்லை. என்றோ பிரிந்துசென்ற பயணியை அடையாளம் கண்டது போல அவளது அதிர்ச்சி சில கணத்தில் இற்றுப்போக, அறிமுகம் நினைவுக்கு வந்தது. எங்கிருந்து இவன் மீண்டும் திரும்பி வந்தான் என்பது அவளுக்கு தெரியாது. அதைப் போலவே அவன் எங்கே போய் இருந்தான் என்பதையும் அவள் அறியாள். அவளுக்கு அது ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. பிள்ளைகள் பாடசாலையால் மதிய இடைவேளைக்கு வந்துவிட்டார்கள். அவர்களுக்கு உணவு எடுத்துக் கொடுக்க வேண்டிய அவசரம் அவளுக்கு. அதை முடித்துக் கொண்டு அவர்கள் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். 'Valle Hovin Videregående Skole' வீட்டிலிருந்து கூப்பிடும் தொலைவிலிருந்தது.
அவனை பார்த்து ஒரு புன்முறுவல் பூத்தவண்ணம் தனது குடியிருப்பை நோக்கி அவசரமாக சென்றாள்.

சபா என்கின்ற சபேசனுக்கு இப்படிக் கதவை எட்டிப் பிடித்துக் கள்ளன் போல உள்ளே நுழைவது அடி நாக்கில் பதிந்த வேப்பெண்ணெய் போலக் கசந்தது. ஆனால், இன்று நிலைமை அப்படியாக மாறிப் போய்விட்டது. முதுகில் குரங்கு போலத் தொங்கிய பை மனது போல இரும்பாக கனத்தது. அதற்குள் அவன் தேவையான அனைத்துப் பொருட்களையும் எடுத்து வந்தான். இந்த வீட்டிலும் சில பொருட்கள் இருக்கலாம். இருந்தாலும் அவற்றைத் தேடிப் பிடிக்க முடியாது. அப்படி எல்லாம் நேரம் செலவு செய்யக்கூடிய காரியம் அல்ல இது. வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல அனைத்தும் சுமுகமாக நடக்க வேண்டும்.

முதலாவது மாடிக்கு ஏறிப் போனவன் அதன் விஸ்தீரணமான சாளரத்தினூடே வெளியே நோக்கினான். ஒரு காலத்தில் முன்னே இருந்த நிலம் விஸ்தீரணமான வெளியாக இருந்தது. இன்று 'Vallhall' மைதானம் தனித்துப் பரந்து கிடந்த காட்சி மாறிப் போய்விட்டது. இந்தக் கட்டடக்காடு மனித தேவை என்றாலும் மனதை வேதனை கசக்கிப் பிழிகிறது. ஐரோப்பிய ஒன்றிய மக்களுக்கு நோர்வே தனது கதவைத் திறக்க வேண்டி வந்த பின்பு, மக்களின் திடீர் வருகையால் பேத்தையன் போல ஊதிப் பெருத்தது ஒஸ்லோ மாநகரம். அப்படி வந்த மக்களுக்குக் குடியிருப்பு வசதி செய்ய வேண்டிய கட்டாயத்தில் நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் போலத் தோன்றிய குடியிருப்புகள், மற்றும் அலுவலகங்கள் இவை. அவை மூச்சுவிட முடியாத நெருக்கத்தில் இங்கு. ஒஸ்லோவின் இரத்தக் குழாய்கள் சுற்றி வளைத்து ஓடினாலும் பல பச்சை நுரையீரல் துண்டுகளும் சில காலத்திற்கு முன்பு இங்கே இருந்தன. அவை இப்போது எங்கே? நவீன குடியிருப்புகளுடன் நவீன பல அலுவலகக் கட்டடங்களும் தங்களுக்கான இடத்தை இங்கே முண்டியடித்துப் பிடித்துக்கொண்டு இருக்கின்றன.

புதிதாக பல குடியிருப்புகள் மட்டும் அல்லாது புதிய 'Valle Hovin Videregående Skole, intility arena', மலை போன்ற கண்ணாடிக் கட்டடங்கள், 'Treverke' என்கின்ற மரத்தால் மட்டும் உருவாக்கப்பட்ட ஆறுமடிக் கட்டடம், உல்லாச விடுதி ஒன்று என்பதாக எண்ணற்ற கட்டடங்கள் மூச்சு முட்டும் நெருக்கத்தோடு முட்டி மோதி நிற்கும் கோலம். இவற்றை சமாளிப்பதற்கு அதற்கான பாதை அமைப்புகள், அதைச் சுற்றி உள்ள மற்றும் வசதி அமைப்புகளென அது விஸ்தீரணமாகப் பெருகி வெளியைத் தின்று இருந்தது. இப்படி இது மாறியது சபேசனுக்கு தெரிந்து இருந்தாலும் அதை இன்று நேரே பார்த்த போது மரண மயக்கமும், மலைப்பும் வந்தன. சபேசனுக்கு அங்கே நின்று இந்த மாற்றங்களைப் பார்க்கும் பொறுமையோ, நேரமோ இருக்கவில்லை. வாழ்க்கையில் அவன் பலமுறை அடைக்கோழி போலப் பொறுமை காத்து

பார்த்துவிட்டான். இப்போது அந்தப் பொறுமை காப்பு அவனிடம் இருந்து நழுவிய மீனாய் வழுவிச் சென்றுவிட்டது. அவன் மேலே நோக்கி நடக்கத் தொடங்கினான். மின்தூக்கியை பயன்படுத்தி இருக்கலாம். அதற்குள் சிலவேளை மறைகாணிகள் பொதிந்து இருக்கலாம் என்கின்ற எண்ணத்தில் அதை அவன் தவிர்த்துவிட்டு படிகளைப் பாவித்தான். அப்படிச் செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றியது. மலையேறத் தொடங்கியாகிவிட்டது இனி அதில் மாற்றம் வேண்டாம் என்கின்ற எண்ணத்தோடு அவன் முன்னேறினான்.
படிகளால் ஏறியதால் உளவு மாட்டின் களைப்பை அவனால் உணர முடிந்தது. வாழ்க்கைமுறை மாறிவிட்டது. ஆயிரம் கவலைகள் ஈசலைப் போல மனதை அடைக்கும் பொழுது அதற்குள் உடம்பைப் பற்றிய கவலை தொலைந்து போகிறது. மனிதனின் வாழ்க்கையில் பிடிப்பு இருக்கும் போது உடலைப்பேண வேண்டும் என்கின்ற அவா எல்லா அசைவுகளிலும் இருக்கும். அதே நேரம் வாழ்க்கையில் இருக்கும் பிடிப்பு உக்கி இற்றுப்போகும் போது அது தலைகீழாக மாறிப் போய்விடும். அப்படியே அவன் வாழ்வும் மாறியிருந்தது. அதைப் பற்றி இப்போது கவலை கொள்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் தனது திருப்பதி நேர்த்திக்கடனைப் பக்தியோடு நிறைவேற்றுவது போல மூர்க்கமாக மேலே ஏறினான்.

நாலாவது மாடி, நானூற்று ஐந்தாம் எண் வீடு... அவன் நினைவிலிருந்து என்றும் பிய்த்தெடுத்துத் தூக்கமுடியாதபடிச் சுவடு பதித்து நிலைத்திருப்பது. இந்த வீட்டில் ஒரு சகாப்த சாபங்களும், வலிகளும், உண்மைகளும் புதைந்து கிடக்கின்றன. அதை இலகுவாக அறுத்து எறிய முடியாது. சபேசன் அறுக்க வேண்டும் என்றே முயன்றான். இயற்கை வலியது. அதன் படைப்புகள் விளங்கமுடியாத விசித்திரங்களைக் கொண்டவை. அவனால் அதன் மர்மத்தை மீற நினைத்தாலும் மீறமுடியவில்லை. மீண்டும், மீண்டும் செக்கு மாடாக இயற்கையிடம் அகப்பட்டு, அதை மீற முடியாத மனிதனாக... வேதனை இரணமாகப் பொங்கும் வாழ்வாக... அந்த வாழ்வின் முடிவில் காலன் வேடன் போலக் காத்திருக்க... சபேசன் வெறுப்பாகச் சிரித்துக் கொண்டான்.

நாலாவது மாடிக்கு வந்த சபேசன் படிக்கட்டு முடிந்த இடத்தில் நின்று மூச்சு வாங்கினான். அவன் இதயம் மார்புக் கூட்டிற்குள் புகுந்த எருமையாக முட்டி மோதி வெளியேறத் துடிப்பது போல இடித்தது. இந்த மனித வேதனைகளுக்கு ஒரு முடிவு வேண்டும் என்று அவனுக்கு தோன்றியது. இந்த உலகத்தில் மனிதக் கூட்டிற்குள் உயிரைப் பிடித்துவைத்துக்கொண்டு நிம்மதியாக வாழ்வது பெரும் சவாலாக இருக்கிறது. பலர் தாக்குப்பிடித்து வாழ்கிறார்கள். சிலர் தோற்றுப் போய் மாள்கிறார்கள். இப்படியாக எண்ணங்களில் இழுபட்டவனுக்கு வந்த

அலுவலைப் பார்க்காது, நினைவுகளில் கட்டுண்டு கிடப்பது வெறுப்பேற்றியது.
சபேசன் முழு உடலையும் மிருக பலத்தோடு ஒரு முறை உதறிக் கொண்டான். எப்படி என்பது விளங்கவில்லை. நினைத்தது போல நடக்க வேண்டும் என்கின்ற மனித இச்சை அவனிடம் மேலோங்கி நின்றது. அவன் ஒருமுறை கண்ணை மூடினான். காலம் அவனைப் பின்னோக்கி இழுத்தது. காலத்தின் இழுப்பிற்குக் கட்டுப்படமுடியாத கால அவகாசம் அவனுக்கு. அவன் காலத்தின் இழுப்பில் சிறைப்படாது தனது கருமத்தை நோக்கலானான்.

பல குடியிருப்புகள் இருக்கும் அந்தத் தளத்தில் மின்விளக்குகள் இருட்டின் இருப்பிடத்தை இல்லை என்று ஆக்குவதில் வெற்றி கண்டிருந்தன. மனதைக் கவலைஇருட்டுக் கவ்வும் போது அதை விரட்டுவதற்கு விளக்குகள் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அவை முழுமை பெற்றவையாக இருப்பதில்லை. அப்படியே சபேசனின் காலம் கழிந்தது. கழிந்தது பற்றிக் கவலை கொள்ளும் நேரம் இது இல்லை. அவனுக்கு அது சட்டென விளங்கியது. அவன் மெல்லப் பலமாகத் தனது அடிகளை எடுத்து வைத்து முன்னேறினான். யாரையும் அந்த நீண்ட பாதையில் காணவில்லை. எவரது கதவும் திறக்கவில்லை. இன்று அவளுக்கு வேலை இல்லை என்பதை சபேசன் அறிந்து வைத்திருந்தான். அவள் வேலை செய்யும் கடையைச் சில காலம் நோட்டமிட்டு இருக்கிறான். இன்று அவளுக்குக் வேலை இல்லாததால் வீட்டில் ஏதாவது விசேசமாகச் சமைப்பாள். கொரோனா காரணத்தால் யாரும் முக்கியமான காரணங்கள் இன்றி வெளியே போவதில்லை. கொத்தாக அனைவரும் வீட்டில் இருக்கிறார்கள் என்பதை அறிந்தே அவன் இன்று வந்தான். அதை இன்னும் சிறிது நேரத்தில் அவனால் உறுதி செய்து கொள்ள முடியும். அவன் அந்த உறுதியுடன் இறுதியான அடிகளை அவதானமாக எடுத்து வைத்தான்.

சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்பதில் அவனுக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. சட்டத்தை மதித்தே அவன் நடந்து வந்தான். நோர்வேயின் சட்டங்கள் பல விதங்களில் மிகவும் மேன்மையானவையே. அதைத் தவறாது திருத்திக் கொள்வதிலும், நவீனப்படுத்துவதிலும் அவர்கள் பின்னுக்கு நிற்பதில்லை. என்றாலும் இன்னும் அதில் பல ஓட்டைகள் இருக்கின்றன. அந்த ஓட்டைகள் சிலருக்கு எதிரியாக மாறிவிடுவதும் உண்டு. சபேசன் சட்டத்தை மதித்து நடந்தாலும் அதே சட்டமே அவனுக்கு எதிரியானதான உணர்வு. அது அவனை எப்போதும் வாட்டும். தூசிலும் கடையான ஒரு தனிமனிதனால் என்ன செய்ய முடியும் என்கின்ற நிதர்சனம். அதைவிட வந்தேறு குடியான அவனால்...? அவன் அதனால் அதைப்பற்றி அதிகம் சிந்திப்பது இல்லை. இப்போது

அதைப்பற்றிச் சிந்திப்பது அதைவிட அனாவசியம் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் வந்த வேலையில் இறங்கினான். நெஞ்சுக் கூட்டிற்குள் அந்த எருமைமாடு மீண்டும் எழுந்து மூர்க்கமாக முட்டி மோதியது.

அவன் அதைப் பொருட்படுத்தாது பொறுமையாகத் தனது அடிகளை எடுத்து வைத்தான். எந்த அசுமாட்டமும் இல்லை. அதுவே அவனுக்கு ஒரு நல்ல சகுனமாகத் தோன்றியது. சகுனம்? அதை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. இந்த நேரத்திலும் சகுனம் பார்ப்பதை எண்ணி அவனுக்கு மீண்டும் மீண்டும் நகைப்பு வந்தது. தத்துவங்களுக்கு மனித உருவம் கொடுத்து, அந்த உருவங்களுக்கு மகா சக்தி கொடுத்து, வாழ்க்கை முழுவதும் அதன் தாக்கத்தால் கட்டுப்பட்டுக் கிடப்பது மகா மடமை என்பது அவனுக்கு என்றும் ஆய்ந்து உணர்ந்த பாடம். சில மனிதர்களுக்கு உய்த்துணர்ந்த பாடமாக இருப்பது, பல மனிதர்களின் நம்பிக்கைக்கு விரோதமாகிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பலர் அறிவுறுத்திப் பார்த்து விட்டார்கள். இந்த அறிவுறுத்தலால் மனித இனம் மாறியதாக இல்லை. பயத்தோடு மற்றைய விலங்குகளிடம் இருந்தும், இயற்கையிடம் இருந்தும், தப்பித்து வாழப் போராடிய மனித இனம், இயற்கை மனிதனை வென்ற போது, மனிதன் அந்தப் பயத்தில் பல துணைகளைத் தேடிக் கொண்டான். அந்த வடிவில் வந்த உருவங்கள், பின்பு அந்த உருவங்களுக்கு உயிர் கொடுத்த குருட்டுத்தனமான நம்பிக்கை, என்று அது அசைக்க முடியாத ஆணி வேர்விட்டு மனித இனத்தைப் பிணைத்து நிற்கிறது.
தமது கற்பனைக்குள் நிரந்தரமாகச் சிறைப்பட்டுக் கொண்ட மனித இனம். கற்பனைகள் நிஜத்தை விழுங்கிய உண்மையைப் பலரால் விளங்கிக் கொள்ள முடியாத பரிதாபம். அவர்கள் அதனால் பிரிவுண்டு, திரிந்து கிடக்கும் அலங்கோலம். அந்த அலங்கோலத்தில் அழகு பார்க்கும் அற்பத்தனம்.

அவன் தனது இந்த மனவோட்டத்தை வெறுத்தான். வந்த வேலையைச் செய்யாது மனம் வாடும் மனவோட்டத்தில் ஈடுபட்டதிற்காய் வருத்தப்பட்டவனாய் மேற்கொண்டு நடந்தான்.

*

கதவு பூட்டி இருந்தது. அழைப்பு மணியை அழுத்த வேண்டும். அழுத்திய பின்பு பார்வையில் பட்டுவிடாது மறைந்து நிற்க வேண்டும். அவன் அதற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டான். தொடர்ந்தும் யாரும் அங்கே இல்லை. எந்த வீட்டுக் கதவும் உள் பாதையில் திறந்து இருக்கவில்லை.

சபேசன் அழைப்பு மணியை அழுத்தினான். சுவருடன் அணைந்தபடி மறைந்து நின்றான். கணங்கள் யுகங்களாகக் காட்டெருமை நெஞ்சிற்குள் மீண்டும் முட்டி மோதிச் சேட்டை செய்தது. அவள் யாரை எதிர்பார்த்தாளோ தெரியாது. என்ன நினைத்தாளோ விளங்கவில்லை. கதவைத் திறந்து கழுத்தை நீட்டி வெளியே எட்டிப்பார்த்தாள். அவள் சுதாரிப்பதற்குள் சபேசன் பாய்ந்து கதவையும் அவளையும் சேர்த்துத் தள்ளினான். அவள் இப்படி நடக்கும் என்று கணப்பொழுதும் நினைத்து இருக்கவில்லை. நினைத்து இருந்தால் கதை கருவில் கலைந்திருக்கும். அவனது அந்தத் தாக்குதலுக்குக் தாக்குப் பிடிக்க முடியாதவள் தடுமாறி குளியல் அறைக் கதவைப் பிடித்து நிலத்தில் விழாது தன்னைப் பாதுகாத்துக் கொண்டாள். உள்ளே வந்த சபேசன் கணப்பொழுதில் வெளிக்கதவை மூடிப் பூட்டிவிட்டான்.

நந்தினிக்குச் சபேசன் என்ன செய்கிறான் என்பது விளங்கவில்லை. ஆனால், இது எதுவும் நல்லதற்கு இல்லை என்று மனதில் தோன்றியது. சத்தத்தைக் கேட்டு லக்சா கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். பின்பு கதவை மூடிக்கொண்டாள். டிலிஸ் அதுகூடச் செய்யவில்லை. எப்போதும் ‘ஹெட்செட்’டைப் போட்டுப் பாட்டுக் கேட்டுக் கொண்டு இருக்கும் அவனுக்கு இது கேட்டிருக்காது.
நந்தினிக்கு இது சுனாமி மாடிவீடு தேடிவந்து அடித்ததான அதிர்ச்சி. அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட அவளுக்குச் சில கணங்கள் தேவைப்பட்டன.

2

நந்தினி சபேசனிடம் இருந்து தப்பியோட நினைத்தாள். அவள் அதை நினைப்பதற்கு முன்பே அவள் அப்படித்தான் செய்ய போகிறாள் என்பதை அறிந்தவன் போல எட்டிப் பாய்ந்து அவள் இடது கையைப் பிடித்தான். நந்தினிக்கு வலது கையால் அவன் கன்னத்தில் ஓங்கி அறைய வேண்டும் போல் இருந்தது. அறைந்தால் அது மேலும் வன்முறையாகும் என்பது உறைக்க அந்த எண்ணத்தைக் கைவிட்டாள். என்றாலும் அவனை முறைத்த வண்ணம் கையை விடுவிக்க முயன்றாள். அவன் பிடி அதற்கேற்ப இறுகியது.

அவன் அவசரமாக எதையோ தான் கொண்டு வந்த பையில் தேடினான். என்ன தேடுகிறான் என்பது நந்தினிக்கு விளங்கவில்லை. அவன் எதைத் தேடினால் எனக்கு என்ன என்கின்ற எண்ணத்தில் அதைப் பொருட்படுத்தாது, அவள் அவனிடம் இருந்து எப்படி கையை விடுவிப்பது என்பதில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தினாள்.

இனிப் பிரயோசனம் இல்லை. கத்தி டிலிசைக் கூப்பிட வேண்டும் என்று எண்ணி வாயைத் திறந்தாள். அவன் திடீரென அதை அவளது வாய்க்குள் திணித்தான். சற்றும் இதை எதிர்பாராத அவள் வியர்த்து, விறுவிறுத்து, நடுங்கிப் போய்விட்டாள். அவளிற்கு உடல் முழுவதும் மலேரியா வந்தவள் போலத் தொடர்ந்து நடுங்கியது. அத்தோடு அதற்கு மாறாகத் தெப்பமாக வியர்த்தது. மனிதன் எதை இழந்தாலும் இளக்க முடியாதது உயிர். எந்த உயிரும் அதை விடமுடியாது வலிய இழுத்துப் பிடித்துக்கொள்ளும். மனிதன் அதில் மிகவும் மோசமான உயிர். தற்கொலை செய்து கொண்டால்த்தவிர அவன் எதற்காகவும் உயிரைத் துறப்பதற்கு விரும்புவதில்லை.

நந்தினிக்கு வாய் வலி கண்டது. அதை அவன் வைத்த வேகத்தில் இதழில் காயம் உண்டாகியது போல உப்புக் கரித்தது. வாயைத் திறந்து கத்த முடியாதவாறு அவன் அதைப் பிடித்து இருந்தான். எடுத்தால் அல்லது திமிறினால் வாய்க்குள் வெடித்து விடுமோ என்று அவள் அஞ்சினாள். அவள் உடல் தொடர்ந்தும் நடுங்கியது. கை விறைத்து இப்பொழுது எழ மறுத்தது. மனதில் அடுத்த கணம் என்ன நடக்கும் என்கின்ற திகில் குடிகொண்டது.

'இப்ப கத்தடி பாப்பம்...? எத்தினை காலம் எல்லாரையும் நீ ஏமாத்துவாய்? எல்லாத்துக்கும் ஒரு முடிவு வரோணும். இதுக்கும் ஒரு முடிவு வரோணும் எண்டு நான் முடிவு செய்திட்டன். ஊரையும், பிள்ளைகளையும் ஏமாத்த உனக்கு உதவி தேவைப்பட்டு இருக்கலாம். ஆனா, உன்னுடைய இந்த

ஏமாத்து வேலைய முடிவுக்குக் கொண்டு வறதுக்கு எனக்கு யாருடைய உதவியும் தேவை இல்லை… என்ன அதிர்ச்சியா இருக்குதா? நான் எவ்வளவு பொறுமயாப் போனன். நான் என்னடி உன்னிட்ட கேட்டன்? நீ என்னடி எனக்குச் செய்தாய்? பழிவாங்கல்… ம்… திட்டமிட்ட பழிவாங்கல்? நான் இண்டைக்கு என்ன செய்யப் போகிறன் தெரியுமா?'

சபேசன் மேலும் அதை அவள் வாய்க்கு உள்ளே தள்ளினான். அவள் எதுவும் சொல்ல முடியாது, செய்ய முடியாது அவஸ்தைப்பட்டாள். அவன் மறு கையால் படுக்கை அறைக் கதவைத் திறந்தான். அவளை உள்ளே போகுமாறு கண்களால் ஜாடை காட்டியபடி துப்பாக்கியை மேலும் உள்ளே தள்ளினான். பயத்தில் அவள் மழையில் நனைந்த கோழியாக நடுங்கினாள். அவளுக்கு அவன் கட்டளைக்குப் பணிவதைவிட வேறு தெரிவுகள் இருக்கவில்லை.

அவளை அவன் உள்ளே தள்ளிச் சென்றான். பின்பு தனது பையிலிருந்து எடுத்த 'RS PRO PE Coated Silver Duct Tape'-ஆல் அவள் வாயை முதலில் மூடி ஒட்டினான். பின்பு அவளது கைகளைப் பிணைத்தான். அங்கிருந்த ஒரு கதிரையில் அவளை வைத்துக் கட்டினான். கதிரையைக் கட்டிலோடு சேர்த்துப் பிணைத்தான். அவள் அசையக்கூடாது என்பதில் அவன் அதிக கவனம் செலுத்தினான்.

நந்தினிக்கு எதுவும் விளங்கவில்லை. தன்னை இவன் கொல்லப் போகிறானா என்கின்ற கேள்வி உண்டாகியது. அந்த அளவிற்கு இவனிடம் துணிவு உண்டா என்கின்ற வினாவும் அத்தோடு எழுந்தது. 'பசுவைப் போன்று அமைதியானவன் இவன். பச்சைமிளகாயைச் சாப்பிட்டாலும் சிரித்துக் கொண்டு இருப்பான். இன்று இவனால் எப்படி மாற முடிந்தது? என்னை எது செய்தாலும் பறுவாய் இல்லை. ஆனால், பிள்ளைகளை எதுவும் செய்துவிட்டால்? இவனால் அப்படிச் செய்துவிட முடியுமா? அவர்களுக்காக நித்தமும் அழுது கொண்டு அலைபவன் அவர்களைக் காயப்படுத்துவானா? அப்படி எதுவும் செய்யமாட்டான்' என்பதாக நந்தினிக்கு எண்ணத் தோன்றியது. அவளின் உள்மனது எதையும் முழுமையாக நம்ப முடியாது என்று அவளை எச்சரித்தது. அடுத்து என்ன செய்வது என்று அவளுக்கு விளங்கவில்லை. அவளை அசைய முடியாது கட்டி வைத்திருந்தான். கதிரையோடு சேர்த்துக் கட்டுவதைத்தான் அவள் இதுவரையும் பார்த்து இருக்கிறாள். அவன் கதிரையோடு கட்டிப் பின்பு அதைக் கட்டிலோடும் சேர்த்துக் கட்டி வைத்திருக்கிறான். வாய்கூடத் திறக்க முடியாது. இப்போது தான் என்ன நினைத்தாலும் எதுவும் செய்ய முடியாது என்பது அவளுக்கு விளங்கியது.

*

இது சில காலத்திற்கு முன்பு முளைத்த அடுக்குமாடி. கண்ணாடிகள் பெரும் சாளரமாய் பளிங்கிடும் மாடிக் கட்டடம். இந்தக்குடியிருப்பு பாவித்ததால் ஓரளவு தேய்மானம் அடைந்துபோய் இருக்கிறது. பிரதான படுக்கை அறையும் குளியல் அறையும் ஒருபக்கத்தில் இருக்கின்றன. நீளமான மேல்மாடம் கோலிற்கு வெளிப்புறமாக... ஒரு காலத்தில் அது அரங்கத்தைப் பார்த்த வண்ணம் இருந்தது. அந்தப் பல்கணியில் நின்று இசைக் கச்சேரி ஒன்றை இலவசமாகப் பார்த்த ஞாபகம் அவனிடம் உண்டு. கோல், சமையல் அறை, மற்றும் இரண்டு படுக்கை அறைகள் மற்றைய பக்கத்திலிருந்தன. உள்ளே பளிச்சிடும் வெள்ளையாக இல்லாது, பழுப்பு நிறத்தில் ஒரே நிறமாக கண்ணைக் குத்தாது 'பெயின்ற்' அடித்து இருந்தார்கள். இந்த நவீன கட்டடங்கள் வெக்கையை வெளியே விடாது தன்னகத்தே வைத்துக் கொள்ளும் சாளரங்கள், கதவுகள், மற்றும் சுவர்களைக் கொண்டது. ஒருவர் தனது பிறப்பிலிருந்து இறப்பு வரையும் இந்த வீட்டில் வாழும் வசதி படைத்தது. சாளரத்திற்குப் பழுப்பு வெள்ளையும், கறுப்பும் கலந்த பூ-வடிவிலான தடிப்பான திரை இடப்பட்டு இருந்தன. அதற்கு அமைய எல் வடிவிலான ஒருபக்கம் படுக்கும் வசதி கொண்ட சோபா கோலிலிருந்தது. அதைவிட சுற்றும் தனி நாற்காலி ஒன்றும் அங்கே. இதற்கு அமைவாகக் கறுப்பான சோபாமேசை, தொலைக்காட்சி, மற்றும் நவீன குடியிருப்பு ஒன்றிற்குத் தேவையான பொருட்கள் அங்கே பரவிக் கிடந்தன.

இது ஒரு திறந்த சமையல் அறையைக் கொண்ட குடியிருப்பு. இப்படிப்பட்ட திறந்த சமையல் அறையைக் கொண்ட வீடுகளை நோர்வே மக்கள் மிகவும் அதிகமாக விரும்புவார்கள். தமிழர்களுக்கும், மற்றைய பல நாட்டினருக்கும் இது அவ்வளவு சுவாரசியமாக இல்லாவிட்டாலும் அதன் வசதிகளைப் பயன் படுத்தினால் அதில் எந்தச் சிக்கலும் இருப்பது இல்லை என்பதை உணர்ந்து கொள்வார்கள்.

அவள் பெயரில் அந்த வீட்டை வாங்கினாலும் அதை அவர்கள் தங்களது இரண்டாவது வீடாகவே பாவித்தார்கள். அப்போது அவன் நித்தம் இங்கு வருவான். அதை அழுகு படுத்துவதில் அவன் தனது உழைப்பையும், பணத்தையும் வஞ்சகம் இல்லாது முதலீடு செய்து இருக்கிறான். அதில் சில மாற்றங்களை அவனால் கவனிக்க முடிந்தது. அத்தோடு அதைப்பற்றிக் கவலைப்படும் நேரம் இது இல்லை என்பதும் அவனுக்கு விளங்கியது.

*

‘ம் என்னடி யோசிக்கிறா? எப்பிடி தப்பிக்கலாம் எண்டு யோசிக்கிறாயா? யோசிப்பாய்… ஆனா, அதுக்கு இந்தமுறை எந்த வழியும் இருக்காது. எவ்வளவு காலம் என்னை நரக வேதனைப் படுத்தி இருப்பாய்? எல்லாத்திற்கும் ஒரு முடிவு இருக்கடி. நான் உன்னிட்ட என்ன சொத்தா அல்லது சுகமா கேட்டன்? தேவைப்பட்ட காலத்தில பாவிச்சுப்போட்டு தேவை இல்லை எண்டபிறகு பிளான் பண்ணிக் கருவேப்பிலை மாதிரி தூக்கி எறிஞ்சுபோட்டாய். எது செய்து இருந்தாலும் நான் கவலைப்பட்டிருக்கமாட்டன். ஆனா, நான் எதுக்குக் கவலைப்படுவன் எண்டதை அறிஞ்சு அதையே கவனமாய் செய்து இருக்கிறாய். கெட்டிக்காரி. ஆனால், கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு மட்டும்தான் எண்டது உனக்குத் தெரியுமோ?’

‘ஆ… ஆ… ஆ..’ நந்தினி அவன் சொல்வதை அடைத்திருந்த வாயினூடே ஆட்சேபித்தாள்.

‘என்னடி? என்னடி சொல்லப் போகிறாய்? துவக்கால ஒண்டு மூஞ்சயில போட்டா எப்படி இருக்கும் எண்டு தெரியுமா?’ அவன் துப்பாக்கியை வேகமாக ஓங்கினான். அவள் பயத்தில் குளிர்கண்ட கோழியாக நடுங்கினாள்.

‘என்னவோ சொல்ல வாறியா? ம்… நீ என்ன எப்பவாவது, ஏதாவது சொல்ல விட்டியா? பறுவாய் இல்லை என்னை நீ சொல்ல விடாட்டியும் உன்னை நான் சொல்ல விடுகிறன். ஆனா, கத்தினாத் துவக்கால அடிச்சு உன்ரை முப்பத்திரெண்டு பல்லையும் கழட்டித் தந்திடுவன். ஓ… அதில மட்டும் எந்தத் தயவு தாட்சண்ணியமும் இருக்காது’

அவள் சபேசன் சொல்வதைக் கேட்டு ‘ம்… ம்..’ என்ற வண்ணம் திரு திருவென விழித்தாள். அவன் எட்டி அவள் வாய்மீது ஒட்டி இருந்த ‘RS PRO PE Coated Silver Duct Tape’ துண்டைக் கிழித்தான். அவள் ‘ஊ..’ என்று வேதனையில் அலறத்தொடங்கியவள், அவன் துப்பாக்கியைக் காட்டவும் அதை அவதியாக முழி பிதுங்க அடக்கிக் கொண்டாள்.

நந்தினி இடி விழுந்தாலும் அசையாத இரும்புப் பெண். இருந்தும் இப்போது கரையில் துடிக்கும் மீனாக அவள் கலங்கிப் போய் இருந்தாள். எதிர்பாராதது, எதிர்பாராதநேரத்தில் தாக்கியதால் அதிர்ந்துபோய் இருந்தாள். கடைக்கண்களில் ஈரம் கோடாய் கசிந்து நீண்டது. இவன் என்ன செய்யப்போகிறான் என்பது அவளுக்குத் தெரியாது. மனதில் ஏதோ ஒரு பயம் புற்றுநோய் போல அவளை உள்ளிருந்து தின்றது. ‘என்ன செய்வது?, எப்படி இதற்கு விடைகாண்பது?’ என்று அவள் தனது மூளைக்கு அதிக பழுக் கொடுத்து சிந்தனை செய்தாள். பயத்தில் மூளை வழமைபோல வேலை செய்ய மறுத்தது.

தான் நினைத்தது போலத் திட்டமிட்டு நந்தினி பலவற்றையும் பனியில் வழுக்குவது போலச் சுலபமாகச் செய்து இருக்கிறாள். அவளுக்கு நேரமும், சந்தர்ப்பமும் கிடைத்தால் அவள் அதைத் தவறவிடாது கெட்டித்தனமாகப் பாவித்துக் கொள்வாள். இப்போது அப்படி எதுவும் செய்ய முடியாது. எதுவும் செய்வது என்ன...? எண்ணக்கூட முடியாதவாறு மூளை முரண்டு பிடித்தது. உளவுசாலில் களவில் விழுந்த நாம்பனாய் அது எழுந்து கொள்ள மறுத்தது.

சபேசன் கையில் வைத்திருக்கும் துப்பாக்கியை அசண்டையீனமாகக் கையாள்வது அவளுக்கு மேலும் பயத்தைத் தந்தது. தற்செயலாக வெடித்தாலும், பிறர் முனைப்பில் வெடித்தாலும் சேதாரம் நிச்சயம் என்பதில் எந்த ஐயமும் அவளிடம் இருக்கவில்லை. இவனைச் சமாதானப்படுத்துவதைவிட இதிலிருந்து தப்பிப்பதற்கு வேறு எந்த வழியும் இப்போது இல்லை என்பது விளங்கியது. அவள் அதில் முழு முயற்சியுடன் ஈடுபட எண்ணினாள். அதற்கு அவன் 'RS PRO PE Coated Silver Duct Tape' துண்டை அகற்றியது வசதியாக இருந்தது. அவள் அவனைப் பார்த்தாள். அவன் வழமையாக இருப்பது போல இன்று இல்லை. அவனுள் ஏதோ ஒரு மாற்றம் இருப்பதை அவளால் காணமுடிந்தது. அது எதனால் வந்த மாற்றம் என்பது அவளுக்கு விளங்கவில்லை.

காலம் அண்ட வீதியில் பிரயாணிக்கும் வஸ்துவைப் போலக் கடுகதியில் விரைகிறது. விரைந்தும் விட்டது. தான் நினைத்தது போலவே அனேக வேலைகளை அவள் செய்து வந்தாள். அதில் தோல்விகளே அற்ற வெற்றிகளை மட்டுமே கண்டாள். அது சபேசனுக்குப் பிடிப்பதில்லை என்பது அவளுக்குத் தெரியும். அவனின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று அவள் எண்ணியது கிடையாது. உரித்துச் சொல்வதென்றால் அவன் விருப்பை மிதித்து வெறுப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்து வந்திருக்கிறாள். அதற்கு அவன் தன்னை ஏமாற்றியதாகவும், அது இந்தச் செயலுக்குத் தகுந்த காரணம் என்றும் அவள் எண்ணினாள். அந்த வெறுப்பின் உச்சத்தில் உண்டாகிய எதிர்வினையாக சபேசன் இன்று, இங்கே வந்திருக்கிறான். அவன் கையில் துப்பாக்கியோடும், கண்ணில் வன்மத்தோடும் வந்திருப்பது அவளுக்கு விளங்கியது.

'எதுவும் நடக்காமல் சமாளிக்க வேண்டும்' அவனின் கோபத்திற்குக் குழை அடித்துக்குழப்பிவிட வேண்டும். எப்படி என்று பிடிபடவில்லை. ஏதாவது கதைத்துச் சமாளிக்க வேண்டும் என்பதாக அவள் மீண்டும் எண்ணிக்கொண்டாள்.

'என்னடி யோசிக்கிறா...? எப்படிப் பிரட்டிக் கதைக்கலாம் எண்டு யோசிக்கிறியா? நீ அப்பிடித்தான் யோசிப்பாய் எண்டு எனக்குத் தெரியும். தேவை இல்லாமல் அப்பிடி மினக்கெடாதை. இனி உன்ரை செப்படி வித்தையெல்லாம் என்னிட்டப் பலிக்காது. நான் ஒரு முடிவுக்கே வந்திட்டன். இல்லை என்னை ஒரு முடிவுக்கு நீ கொண்டு வந்திட்டாய். அதை இனி யாராலும் மாத்த முடியாது. அதுக்கெல்லாம் இனி நேரம் கிடையாது. கிடைச்ச நேரம் எல்லாம் நீ என்ன ஏமாளியாக்கவே பாவிச்சாய். எல்லாம் தெரிஞ்சும் நான் பொறுமயா இருந்ததுக்கு ஒரு காரணம் இருந்திச்சுது. ஆனா, நீ அதை எண்டைக்கும் நிறைவேறாமல் கவனமாய் காவாந்து பண்ணீட்டாய். இப்ப இந்த உலகத்தில எனக்கு எண்டு யாரும் இல்லை... அந்த வலியை உனக்குச் சொல்லி விளங்கப்படுத்தேலாது. ஆனா, இண்டைக்கு... உனக்கு அதை உணர வைக்கிறன். அந்த நாள் இந்த நாள் எண்டு உனக்குத் கொஞ்ச நேரத்தில தெரியும்'

'ஏனப்பா உப்பிடிக் கதைக்கிறியள்? நான் என்ன அப்பிடிச் செய்தன்? நீங்கள் செய்தது எல்லாம் சரியா? சரி நடந்ததெல்லாம் நடந்து முடிஞ்சுதெண்டு இப்ப அவரவர் பாட்டுக்குத் தானே இருந்தம். இப்ப ஏன் மற்றவையின்ரை வீட்டுக்க வந்து இப்படி அநியாயம் செய்யிறியள்?'

'ஓ... மற்றவையின்ரை வீடு? என்னைவிட்டிட்டு உங்களுக்குத் தனியா ஒரு வீடு? அதுகூடப் பறுவாய் இல்லை... எனக்கு அதில பிரச்சினையும் இல்லை... ஏனடி அவங்கள என்னிட்ட இருந்து பிரிச்சாய்? எதை நான் மன்னிச்சாலும், இதை நான் மன்னிக்கிறதாய் இல்லை... நீ அவங்கள என்னிட்ட இருந்து பிச்சுக் கொண்டு போனது என்ரை வாழ்க்கையின்ரை அர்த்தத்தையே இல்லாமல் செய்த மாதிரி. அதை நான் சரி செய்ய வேணும் எண்டு எத்தினை பாடுபட்டன்? நீ மதிச்சியா? இங்க சட்டம் உனக்கு வசதியாய் இருக்கிறதால சாவை எனக்குச் சாபமாய்த் தந்தாய்... இல்லையா?'

'நான் அப்பிடி ஒண்டும் உங்களுக்குச் செய்ய இல்லை... நீங்கள் அப்படி நினைச்சா அதுக்கு நான் ஒண்டும் செய்ய முடியாது. இப்ப நீங்கள் செய்கிறது அதைவிடப் பிழையான விசயம். சட்டத்தை மீறி வீட்டுக்க புகுந்து, துப்பாக்கி முனையில என்னைப் பயமுறுத்துகிறது அதைவிடக் குற்றம். நீங்கள் ஏன் திடீரெண்டு இப்பிடிச் செய்யிறியள்?'

'எனக்கு நோர்வேச் சட்டம் நல்லாய் தெரியும். அதுதான் நான் பொறுமையா இருந்தன். ஆனா, அதுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை... நீ அதை நல்லாய் பயன்படுத்தினாய். இறக்கை முளைக்க முதலே அதுகளின்ரை மூளையை நீ நாசம் பண்ணிப் போட்டாய். இனி எதைப் பற்றியும் எனக்குக் கவலை இல்லை... இருப்பவனுக்கே கவலை. இல்லாதவனுக்கு என்ன கவலை சொல்லு பார்ப்பம்?'

'உங்களுக்கு என்ன பயித்தியமா பிடிச்சு இருக்குது? இப்ப வந்து துவக்கோடை நிக்கிறியள்? துவக்கோடை வந்து நிண்டா பிள்ளையளுக்கு

உங்களில அன்பு வந்திடுமே? தயவு செய்து உதை ஒரு பக்கம் வையுங்க... என்னை அவுட்டு விடுங்க... நாங்கள் கதைப்பம்'
'உன்ரை பசப்பை இதோட நிப்பாட்டடி... பெரிய தியாகி இவ... என்னப் பற்றி இப்ப பெரிசாக் கவலைப் படுகிறா... ஆடு நனையிது எண்டு ஓநாய் அழுத கதையாட்டம் இப்ப எனக்குப் புத்திமதி சொல்ல வந்திட்டா'
'என்னப்பா கதைக்றியள்? ஆடு ஓநாய் எண்டு... எதுக்கு இப்ப உந்தக் கதை?'
'ஓ... அப்பிடியே...? இந்தத் துவக்கால வாயில ஒண்டு போட்டன் எண்டா முப்பத்திரெண்டு பல்லும் போயிடும். ம்... யாருக்கடி உபதேசம் செய்யிறாய்? நான் இங்க உபதேசம் கேட்க வர இல்லை... எனக்கு இனிப் புத்தனாக வேணும் எண்டு எந்த ஆசையும் இல்லை... அதுக்கு இனி அவசியமும் இல்லை... ஆனா, இண்டைக்கு இங்க பலித் திருவிழா நடக்கப் போகுது. ம்... என்னுடைய வேதனையைப் பலியிடுகிற கடைசி நாள். உனக்கு விளங்குதா? விளங்கும். நீதான் பெரிய தில்லாலங்கடி ஆச்சே... உனக்கு விளங்காமல் என்ன இருக்கும்?'
'என்ன...? எனக்குப் பயம் காட்டுறியளே? இப்ப கட்டை அவுட்டு விடுறியளோ இல்லயோ? தேவையில்லாமல் உங்கட கடைசிகாலத்த ஜெயில்ல கழிக்கப் போறியள்'
'நான் ஜெயில்ல இருந்தால் என்ன? வீட்டில இருந்தால் என்ன? எனக்கு இப்ப எல்லாம் ஒண்டுதான். நீ இண்டைக்குத் தேவை இல்லாமல் கதைச்சியெண்டா உனக்கு இந்தத் துப்பாக்கியின்ரை 'ரேஸ்ற்' காட்ட வேண்டி வரும். அது உனக்கு வேணுமா?'
'இஞ்சபார் இவற்றை வெருட்டல... இதுக்கெல்லாம் நான் பயப்பிட மாட்டன். உங்களால ஒரு மயிரும் பிடுங்க முடியாது. பிடுங்கிப் பாருங்க அப்ப தெரியும்'

அதைக் கேட்டதும் அவன் கோபத்தில் படுவேகமாய் இரையைப் பிடிக்கும் புலியாகப் பாய்ந்து வந்தான். அப்படிப் பாய்ந்து வந்தவன் துப்பாக்கியை அவளது காதில் வைத்துப் பலமாக அழுத்தினான். நந்தினிக்கு காது பிய்ந்தது போல வலி எடுத்தது. கத்தினால் மேலும் துன்பப்படுத்துவான் என்றும் தோன்றியது.

'தயவு செய்து அப்படித் துவக்கால அழுத்தாதையுங்க... எனக்கு காது பிய்யிற மாதிரி வலிக்குது' என்றாள்.
'என்னப்பற்றி நீ என்னடி நினைக்கிறா? நான் உன்னைக் கொஞ்ச வந்திருக்கிறன் எண்டு நினைக்கிறியா? இல்லாட்டி இதுகின்ரை ரவை வெடிக்காது எண்டு நினைக்கிறியா? அல்லது எனக்கு வெடிக்க வைக்கத் தெரியாது எண்டு நினைக்கிறியா? ஒரு அமத்து அமத்தினால் மண்டை பிளந்து ஆவெண்டு... கெதியாப் போகவேணும் எண்டு நினைக்கிறியா?

உடனடியாக இப்பவே அது வேணுமா? அப்ப காது மட்டும் வலிக்காது? கபாலமே சிதறும்... பாக்கப் போறியா?'

'இது என்ன கோதாரி? என்னையேன் இப்படி வதைக்கிறீங்கள்?'

'நானே உன்னை வதைக்கிறன்? நீ செய்தாய். ஒரு நாள் இல்லை, இரண்டு நாள் இல்லை... பன்னிரண்டு வருசமாக திட்டமிட்டுச் செய்திருக்கிறாய். அப்பா எண்டால் பேய் எண்டு பயம் காட்டி வைச்சிருக்கிறாய். விசத்தை ஏத்திப் பிஞ்சுகளின்ர சுயத்தை அழிச்சு வைச்சிருக்கிறாய். இதுக்கெல்லாம் ஒரு முடிவு வராது எண்டு நினைச்சியா? எதுக்கும் ஒரு முடிவு இருக்குது. உனக்கு தெரியுமா, இந்த அண்டத்துக்கே ஒரு முடிவு இருக்குதாம். வாழ்க்கைப் பயணம் தொடங்கிறதே ஒரு முடிவை நோக்கித்தான். அந்த முடிவு எப்ப வரும் எண்டு யாருக்கும் தெரியாது. அதுதான் ஞானமும் அஞ்ஞானமும். அதையும் மீறி அபூர்வமா, சிலருக்கு மட்டும் தெரியவரும். இதைப்பற்றி உன்னோட கதைக்கிறது விழலுக்கு இறைச்ச நீர் மாதிரி. உனக்கு வடிவாத் திட்டமிட்டுப் பழிவாங்கத் தெரியும். சரி அதைவிடு... உன்னுடைய பசப்பலுக்கு எல்லாம் நான் மசிவன் எண்டு நினைக்கிறியா? எல்லாம் இப்ப காலம் கடந்த ஞானோதயம். பலிக்கான காலம் வந்தாச்சுது. இனி வலியைப் பற்றி எல்லாம் சிந்திக்கக்கூடாது. நான் சொல்லுறது உனக்கு விளங்குதா?'

'ஏன் அப்பா இப்பிடிக் கதைக்கிறியள்? நீங்கள் இப்பிடிச் செய்கிறதால பிள்ளையளுக்கு உங்க மேல நல்ல அவிப்பிராயம் வருமா? உங்களுக்கு எப்பவாவது பிள்ளையள் வேணும் எண்டா நீங்கள் இப்படி நடக்கக்கூடாது'

'நீ அவங்களுக்கு நான் நல்ல அப்பாவா இருக்க விட்டியா? திட்டமிட்டு குழிபறிச்சாய். உன்ன மாதிரி திட்டமிட்டு மனிசர கொஞ்சம் கொஞ்சமா காயப்படுத்த வேற யாரால முடியும்? அதுக்கு எல்லாம் சேர்த்து உன்னை நொருக்கிச் சித்திரவதை செய்ய வேணும். ஆனா, நான் இதுவரையும் அதைச் செய்ய இல்லை... அது எனக்குச் சரியாப்பட இல்லை... அதுக்கெல்லாம் சேர்த்து இண்டைக்கு இருக்கெடி உனக்கு'

'பொம்பிளையள்ல கை வைச்சா இஞ்ச என்ன நடக்கும் தெரியும்தானே? நான் கத்தினா பக்கத்து வீட்டுக் காரரே போலீசுக்குப் போன் பண்ணுவாங்கள். தேவையில்லாம உங்கட உயிரை விடுகிறமாதிரி எதுவும் செய்யாதையுங்க... தயவு செய்து இந்தக் கட்டை அவிட்டு விட்டிட்டு மரியாதையா வெளிய போங்க... நான் எதுவும் செய்ய இல்லை. யாருக்கும் இதைப்பற்றிச் சொல்ல இல்லை. இனிமேலைக்கு இப்படி முட்டாள்தனமாய் நடக்காதையுங்க'

'என்னடி? என்னப் பயமுறுத்துறியா?'

திடீரென புயல் வேகத்தில் கோபத்தோடு எட்டி அவள் கன்னத்தில் அறையப் போனான். பின்பு தனது கையை அதற்குப் பதிலாகக் கட்டிலில்

அடித்துக்கொண்டான். கதிரையுடன் சேர்ந்து அவள் உடல் அதிர்ந்து நடுங்கியது. அவள் திகைத்துப் போய்விட்டாள். அந்தத் திகைப்பில் அப்படியே விறைத்துச் சிலையானாள். அங்கங்கள் அனைத்தோடு அவள் நாவும் அசைய மறுத்தது. அடுத்த கணமே கோபம் பொங்கிக் கண்ணீர் எரிமலையாக வெடித்தது.

'கட்டிவைச்சு அடிக்க வாறியாடா நாயே? நீ கடைசிவரைக்கும் அனாதையாக் கிடந்து சாகப் போகிறாய். உன்னை ஒரு நாய்கூடத் திரும்பிப் பாக்காது. இனி ஒருதரம் என்னில கைவைக்க வந்தியெண்டா, நடக்கிறதே வேற. கட்டை அவுட்டுவிட்டிட்டு வெளிய போடா நாயே'
'ஓ உனக்கு இன்னும் திமிர் அடங்கேல்ல என்னடி? நீ செய்த பிழை பற்றிக் எந்தக் குற்ற உணர்வும் உனக்கு இல்லை. என்ன...? திமிர்றா...? ஆங..' அவன் மீண்டும் எட்டி அவள் கன்னத்தில் அறைவது போல வந்தான். அவள் 'ஐயோ... ஐயோ..' என்று கத்தினாள். அவன் பாய்ந்து 'RS PRO PE Coated Silver Duct Tape'-துண்டை எடுத்து அவள் வாயை மூடி ஒட்டிவிட்டான். மீண்டும் அவள் கன்னத்தில் ஓங்கி அறைவது போலக் கையை வேகமாகக் கொண்டு சென்றான். இப்போது அவள் கண்கள் மட்டும் கண்ணீர் மொழி பேசியது. அவனுக்கு அவளைப் பார்த்து இரக்கம் வரவில்லை. கொல்ல வேண்டும் என்கின்ற கோபம் வந்தது.
'உன்ன நொருக்கித் தள்ள வேணும் எண்டது என்னுடைய விருப்பம். எண்டாலும் நீயும் ஒரு பெம்பிளை எண்டதால தப்பிச்சா. கொஞ்சம் 'மென்ரல் ரோச்சர்'. ம்... அதுக்கு நீ தகுதியானவள்'
அவன் மீண்டும் அவள் கட்டுக்களைக் கவனமாக சரிபார்த்தான். பின்பு அவளது அலைபேசியை எடுத்துக் கொண்டான். அத்தோடு- கவனமாகத் தனது பையையும், துப்பாக்கியையும் தன்னுடன் எடுத்துக் கொண்டான்.
'மற்றவயப் பாத்திட்டு வாறன். ஏதாவது இடையில செய்தாய் எண்டால் ஒரேதா டுமீல்..'
அவன் துப்பாக்கியை அவள் தலையை நோக்கி நீட்டிக் காட்டினான். பின்பு வெளியே சென்றான். செல்ல முதல் குளியல் அறையிலிருந்த திறப்பை எடுத்துவந்து படுக்கை அறைக் கதவைப் பூட்டிவிட்டுச் சென்றான்.

3

அவர்கள் வெளியே என்ன நடக்கிறது என்று அறியாது, அறிய விரும்பாது, தாங்கள் அமைத்துக் கொண்ட உலகமாகிய அறைக்குள் அடைந்து கிடந்தது, இன்று சபேசனுக்கு வசதியாக இருந்தது. இங்கு வளரும் பிள்ளைகள் தங்கள் தனிமையை, தனியுரிமையை, சிறுவயதிலிருந்தே அறிந்து அதை தங்கள் கையில் எடுத்துக் கொள்கிறார்கள். இல்லை என்றால் அதை வலியுறுத்திப் பெற்றுக் கொள்கிறார்கள். ஒன்றாக இருக்கும் பொழுதே இவர்களுக்குத் தனியறை கொடுத்தாகிவிட்டது. தனியறை என்பது தனிராச்சியம் மாதிரியே. வேற்று நாட்டின் தூதரகம் உங்கள் வீட்டிற்குள் இருப்பது போல. அதற்குள் செல்வதென்றால் அனுமதி பெற்றே செல்ல வேண்டும். சபேசன் அவர்கள் தனிமையைத், தனியுரிமையை ஒரு போதும் மீறியது கிடையாது. அப்படியான மனப்பான்மை அவனிடம் எதற்கும் தோன்றாது. சிறுவர்கள் என்றாலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்க அவன் தவறமாட்டான். ஆனால், அதற்கான மதிப்பு அவனுக்குக் கிடைத்ததா? அவை மாற்ற முடியாத கடந்தகாலம். இது வித்தியாசமான நிகழ்காலம். இன்று பல விதிகள் மீறப்படும். துன்பம் முடிவு பெறும்.

ஹாலிற்கு வந்த அவன், ஹாலின் சாளரங்கள் மற்றும் கதவிற்கு இடப்பட்டு இருந்த திரைச் சீலைகள் விலகிக் கிடப்பதைக் கவனித்தான். அதை அவன் பெண் சேலை கட்டுவது போல அக்கறையோடு ஒழுங்குபடுத்தினான். உள்ளே நடப்பது வெளியேயோ அல்லது வெளியே நடப்பது உள்ளேயோ தெரியவேண்டிய அவசியம் இல்லை என்பது அவன் முடிவு. திரைச் சீலைகளை ஒழுங்கு செய்தவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவன் தொலைக்காட்சியை இயக்கினான். அதன் சத்தத்தை அதிகமாக வைத்தான். முதலில் யாரிடம் செல்வது என்கின்ற கேள்வி உண்டாகியது. முதலில் டிலிஸ்சின் அறைக்குச் செல்வதாக முடிவு செய்தான். பிள்ளைகள் என்று எண்ணும் போது அவன் இதயம் வலிகொண்டது. ஒரு கணம் ‘இத்தோடு திரும்பிச் சென்றுவிட்டால் என்ன?’ என்கின்ற எண்ணம் சட்டென உருவாகியது.

‘விடலாம்... இத்தோடு போகலாம்... அப்படிச் செய்தால் இந்த நரக வேதனைக்கு முடிவு இருக்காது’ என்பது உறைத்தது. ஆயுள் பூராகவும் அந்த வேதனையோடு அவன் புழுவாய்த் துடிக்க விரும்பவில்லை. அதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்பதை அவனால் கைவிட முடியவில்லை.

அவள் செய்தது அநியாயம் என்பதும் அதற்குத் தான் இப்போது செய்வது ஒரு வகையில் நியாயம் என்றும் அவனுக்குத் தோன்றியது. அது அப்படி எல்லோருக்கும் தோன்றுமா என்பதில் அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. தனக்கு இது நியாயம் என்றாலும் இது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதும் விளங்கியது. கோபம் சுருக்குச், சுருக்கு என்று தைக்கும் போது இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்று தோன்றும். அதனால் உந்தப்பட்டே இங்கு வந்தான். புறப்பட்ட கணை மீண்டும் இருப்பிடம் போகாது. அவனாலும் வந்த நோக்கத்தை விட்டு இனி விலக இயலாது. அவனுக்கு 'போதும்... போதும்..' என்றாகிவிட்டது. வாழ்விலிருந்த பிடிப்பு அனைத்தும் இற்றுப் போய்விட்டது. முடிவு தேடி நித்தம் எங்கும் சிறகொடிந்த பறவை போலக் காலம் போகிறது. 'பின்பு ஏன் இந்தத் தேவையில்லாத குழப்பம்?' என்கின்ற கோபம் அவன் மீதே அவனுக்கு உண்டாகியது.

வெளியே இருந்து சூரிய ஒளிக்கீற்று உள்ளே வரவில்லை. உள்ளே இருந்து எந்த ஒளியும் வெளியே கசியாது. ஒலிகூட கிட்டத்தட்ட அப்படித்தான். ஒலியை வடிகட்டும் பொறி முறைகள் பல நவீன கட்டடங்களில் பொதியப்படுவது வழமை. பெரிதாக அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அவன் மேற்கொண்டு சிந்திக்க விரும்பவில்லை. காலம் கடத்தாது காரியத்தை முடிக்க வேண்டும் என்கின்ற உந்தல் அவனிடம் வந்தது. அவன் டிலிசின் அறையை நோக்கிச் சென்றான்.

அறைக் கதவுக்கு அருகே வந்தவன் அப்படியே நின்றான். இப்போது கதவைத் தட்டி அனுமதி பெற்றுச் செல்வது, தான் வந்த காரியத்திற்குப் பாதகமாகும் என்பது விளங்கியது. 'இன்று வழமையான நாகரிக நாடகத்தைப் புறக்கணிக்க வேண்டும். மகனாய் இருந்தாலும் அவனும் தனி உயிரே. தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அவன் எதுவும் செய்யலாம். அதற்கெல்லாம் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது. இப்படி ஒரு நிலை வந்தது பெரும் சாபம். வந்துவிட்டது. இனி வந்த காரியத்தை உத்வேகமாக முடிப்பது பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும்' அவன் முடிவு செய்து கொண்டான்.

சபேசன் கதவைத் திடீரென்று திறந்து கொண்டு உள்ளே போனான். இவன் வந்த விதத்தையும், வேகத்தையும் பார்த்த டிலிஸ் அதிர்ந்துபோனான். அவன் அதிலிருந்து விடுபடச் சில கணங்கள் தேவைப்பட்டன. அதிர்ச்சியின் பிடியை அசுரத்தனமாக அறுத்தெறிந்து,
'எதுக்கு உள்ள வாறீங்க? கதவைத் தட்டாமல் ஏன் உள்ள வாறீங்க? உங்களுக்கு இந்த சிம்பிள் நாகரிகம்கூட மறந்து போச்சுதே? வெளியால போங்க... தயவு செய்து வெளியால போங்க... அம்மாவோட கதைக்க

வேணும் எண்டா கதைச்சுப் போட்டு கெதியா வீட்டை விட்டு வெளிய போங்க’ என்று கத்தினான்.

சபேசன் டிலிஸ்சைப் பார்த்து அடக்கமாகச் சிரித்தான். ‘அதென்ன?’ அவனுக்குப் பின்புறமாக இருந்த படத்தைக் காட்டிக் கேட்டான். அவன் திரும்ப மெதுவாகத் தனது பையிலிருந்த துப்பாக்கியை வேகமாக எடுத்து அவன் பின் தலையில் ‘பொட்’ என்று ஒரு போடு போட்டான். இவ்வளவு வேகமாக அப்பா இப்படி அடிப்பார் என்று டிலிஸ் எதிர்பார்க்கவில்லை. அவன் எதுவும் எதிர்த்துச் சொல்ல முதல் மயங்கித் தரையில் விழப்போனான். சபேசன் எட்டி அவனைத் தாங்கிக் கொண்டான். அவனைத் தொட்டுப் பல காலம் ஆகிவிட்டது. அவன் வாசம் சபேசனின் மூளையை விட்டு அகர்ந்தது கிடையாது. அதை இப்போது மீண்டும் உணர்ந்தான். ‘உணராமல் தடுக்க வேண்டும் என்பதில் நிரந்தர வெற்றி கண்டுவிட்டாள்’ என்று அவனுக்குத் தோன்றியது.

சபேசன் ஒருகணம் தயங்கினான். கடைக்கண்களில் சிலதுளி கண்ணீர் பொங்கியது. அவன் அதை விரைவாகத் துடைத்துக் கொண்டான். டிலிஸ்சின் கைகளையும், கால்களையும் கட்டி அவன் வாய்க்கு ‘RS PRO PE Coated Silver Duct Tape’ துண்டு ஒன்றை ஒட்டினான். அவனைத் தூக்கி வந்து வதிவறையில் இருந்த சோபாவில் இருத்தி வைத்தான். அவன் கேசத்தை மெதுவாகக் கோதிவிட்டான். அவனால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்கள் எதற்கும் கட்டுப்படாமல் பெண்களைப் போல வெந்நீராகக் கண்ணீர் உகுத்தன. அவன் மீண்டும் கண்களைத் துடைத்துக் கொண்டான். அவன் கேசத்தைக் கோதி அவனை ஒருமுறை பாசத்தோடு இறுக்கி அணைத்துக் கொண்டான். மனது இரும்பாய் கனத்தது. இதயம் ஈட்டியைச் செருகியதாய் நொந்தது. மூளை எண்ணங்களால் தணியாது வெந்தது. ‘ஆனால், இனி மாற்றுவழி இல்லை’ என்பதும் விளங்கியது. சபேசன் டிலிஸ்சின் கன்னத்தில் ஒரு முத்தம் வைத்தான். அவனது சட்டையைச் சரி செய்துவிட்டுத் தனது பையை எடுத்துக் கொண்டு லக்சாவின் அறையை நோக்கிச் சென்றான்.

*

லக்சா தனது வீட்டுப் பாடங்களில் கவனம் செலுத்திக் கொண்டு இருந்தாள். அப்பா வந்தது தெரியும். அப்பாவோடு அவளுக்கு ஆரம்பத்திலிருந்தே எந்தக் கடுமையான பாசப் பிணைப்பும் இருந்தது கிடையாது. அப்பாவுடன் கதைப்பதற்கு எதுவும் இல்லை என்பதாக அவள் முடிவு செய்துவிட்டு அறைக்குள் தன் அலுவல்களைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். இதுவரையும் அப்படித்தான் செய்தாள். அப்பாவைப் பற்றிய

எந்த வன்முறையான பின்பமும் அவள் மனதிலிருந்ததில்லை. வந்தவர் கதைத்துவிட்டுச் செல்வார் என்பதே அவள் எண்ணமாக இருந்தது. அப்பாவுக்கு இருக்கும் மனவலி பற்றி அவளுக்குத் தெரியாது. அம்மாவின் வேதத்தை அவள் அப்படி நம்பினாள். அவர்களுக்குள் என்ன நடந்தது என்பது அவளுக்குத் தெரியாது. அப்பாவின் வாசம் அவர்களில் பட்டுவிடக் கூடாது என்பது அம்மாவின் வேதம். அம்மா அவர்களுடன் பல மணித்தியாலங்கள் செலவு செய்தாள். அப்பா சில மணித்தியாலங்கள் செலவு செய்தது உண்டு. அருகில் எப்போதும் இருந்து முலைப்பால் ஊட்டிய அம்மா ஊட்டிய அனைத்தும் சரியாகத் தோன்றியது. அம்மா தன்னுடன் எப்போதும் அவர்களை அணைத்து வைத்துக் கொண்டாள். அப்பாவைத் தவிர்த்தும் வந்தாள். அம்மாவை மீறி அப்பாவைச் சொந்தம் கொண்டாடும் துணிவு முதலில் இருக்கவில்லை. பின்பு மனது மரத்து, மறந்து போயிற்று. இப்போது அவர் நினைவுகூட அவளுக்கு இருப்பதில்லை. இன்று எதற்கு இங்கு திடீரென வந்தார் என்பதும் அவளுக்கு விளங்கவில்லை.

டிலிஸ்சை ஒரு தட்டுத் தட்டிக் கட்டிப் போட்டாகிவிட்டது. லக்சாவை அப்படி அடிக்க முடியாது. இருவர் மீதும் தவறியும் அவன் கைகள் பட்டதில்லை. நந்தினியைக்கூட அப்படித்தான் அவன் பார்த்துக் கொண்டான். ‘இன்று டிலிஸ்மீது?’ அவனுக்குக் கவலையாக இருந்தது. ஆனால், அவனுக்கு வேறு எந்த மாற்றுவழியும் இருந்ததாகத் தோன்றவில்லை. அவள் கதவருகே வந்தவனுக்கு, என்ன செய்வது என்று விளங்கவில்லை. லக்சாவின் அறைக்குள் அதிரடியாகப் பிரவேசிக்க அவன் மனது ஒப்புக்கொள்ளவில்லை. அவளை மலரைப் போலத் தடவிக் கொடுக்க மனம் ஏங்கித் தவித்ததுண்டு. அந்தச் சந்தர்ப்பங்களை நந்தினி கிட்டாமல் செய்வதில் கெட்டித்தனமாய் சாதித்து வந்தாள். எப்போதும் சட்டத்தை மதிக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில் அவன் தனது எல்லையை எதற்காகவும் மீறியது இல்லை. அதனால் அவன் இழந்தவை மதிப்பிட முடியாதவை.

‘அந்த வாழ்க்கையும், கொள்கையும் இன்று அடிபட்டுப் போய்விட்டது. வாழ்வதற்கே பிடிப்பில்லாத கணங்கள் வாழ்வை ஆட்டிப் படைக்கும் பொழுது கொள்கை என்ன, குறிக்கோள் என்ன? என்றாலும் மலரினும் மென்மையானவள் சொந்த மகள். எது எப்படி இருந்தாலும் அவளும் இந்தப் பொதுவிதிக்குள் அகப்பட்டவளே’ அவளைத் துன்புறுத்தக் கூடாது என்கின்ற எண்ணத்தோடு கதவைத் திடீரெனத் திறக்கும் எண்ணத்தைக் கைவிட்டுக் கதவை மெதுவாகத் தட்டினான். திடீரென யார் கதவைத் தட்டுவது என்கின்ற கேள்வியோடு வந்து லக்சா கதவைத் திறந்தாள். அவளுக்கு அப்பாவை அங்கே கண்டதில் அதிர்ச்சி. அன்பாகக் கதைப்பதா அல்லது அதட்டிக் கதைப்பதா என்பதும் விளங்கவில்லை.

‘அம்மா சொல்லியவற்றை நினைத்தால் இவருடன் என்றும் அன்பாகக் கதைக்கக்கூடாது, ஆனால், அவரின் முகத்தை நேரில் பார்க்கும் பொழுது அழுகையே வந்துவிடும்’ யாரை உண்மையாக நம்புவது என்பதில் அவளுக்குத் தொடர்ந்தும் தடுமாற்றம். ‘அம்மா எப்போதும் அருகில். அது என்றும் மீறமுடியாத அண்மை. ஆனால், ஓதப்பட்டது உண்மையா? அல்லது விலகி நிற்பது உண்மையா?’ மனது விடைகாண முடியாது போராடியது. அவளுக்கு என்ன சொல்வது என்றே முதலில் விளங்கவில்லை. பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு,

‘என்ன? என்ன வேணும் அப்பா?’ என்றாள். நீண்ட காலத்திற்குப் பின்பு அப்பாவைப் பார்த்ததில் மனதில் கவலை பொங்கக் கண்களில் கண்ணீர் சுரந்தது.

‘நான் எத்தினைதரம் உங்களப் பிச்சை கேட்கிற மாதிரிக் கேட்டிருப்பன். உங்கட அன்பு மட்டும் வேணும் எண்டு தவமிருந்து பிச்சை கேட்டிருப்பன். அதை எல்லாம் நீயோ உன்தம்பியோ ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள இல்லை? இப்ப நீ கேட்கிறாய் என்ன வேணும் எண்டு...? பறுவாய் இல்லை. அதுகூட எனக்குச் சந்தோசம்தான்’

‘உங்களைப் பற்றி அம்மா சொன்னது அப்பிடி. இப்பவும் யார் சொல்லுறது உண்மை எண்டு எனக்குத் தெரியாது. கூட இருந்த அம்மாவை நம்புகிறதா? உங்களை நம்புகிறதா? எண்டு எனக்குத் தெரியாது. நீங்கள் கூடாது எண்டும், மனதாலும், உடலாலும், ரோச்சர் பண்ணினதாவும் சொன்னா அம்மா. அதலதான் உங்களை விட்டிட்டு வந்தாவாம். அதுக்கு மேல தன்னோட நாங்களும் இல்லாட்டி தான் செத்துப் போயிடுவன் எண்டா. எங்களுக்கு வேற எந்தத் தெரிவும் இல்லை அப்பா. அம்மா இல்லாமல் நாங்கள் எப்பிடி அப்பா?’

‘அப்பிடி லேசாச் சொல்லாத லக்சா... நீங்கள் நினைச்சிருந்தா, உறுதியா கேட்டு இருந்தால் நிச்சயம் உங்களை யாரும் தடுத்து இருக்க இயலாது. உங்களுக்கும் அப்பா தேவையிலாதவராய் போயிட்டார். அதாலதான் ஏனோ தானோ எண்டு விட்டிட்டியள் இல்லையா? நான் சொல்லுறது சரியா?’

‘நீங்கள் சரியா இருந்தியளா அப்பா? நீங்கள் சரியாய் இருந்திருந்தால் அம்மா ஏன் உங்களப் பற்றிக் கொம்பிளையின்-
பண்ணப் போகிறா?’

‘ஓ... அப்பிடிச் சொல்லுறியா? அது சரி... நான் அம்மாவை எப்பவாவது ரோச்சர் பண்ணினத நீ பார்த்து இருக்கிறியா? அல்லது எப்பவாவது எந்த விதத்திலவாவது உங்களை நான் ரோச்சர் பண்ணி இருக்கிறனா? உறவு எண்டது சிக்கலானது. பிள்ளைகள் எண்டாலும் சொல்ல முடியாத விசயங்கள் புருசனுக்கும் பெண்டாட்டிக்கும் இடையில இருக்கும். அதைப் பிள்ளையள்கூடத் திறந்து பாக்க வேணும் எண்டு நினைக்கக்கூடாது’

‘இல்லை அப்பா. அப்பிடி எதுவும் நீங்கள் நடந்து கொண்டது இல்லை… எங்களுக்கு உண்மையில உங்களுக்கு உள்ள என்ன சிக்கல் இருக்கு எண்டும் தெரியாதுதான்’
‘ஆனாலும், நீங்கள் அப்படியேதோ நடந்த மாதிரி… நான் அம்மாவைத் துன்புறுத்தின மாதிரி எனக்குத் தண்டனை தந்தியள்? அந்தத் தண்டனைய இனி யாரும் திரும்பிப் பெற முடியுமா? நான் அனுபவிச்சது போதும். இனி எனக்கு எதுவும் தேவை இல்லை எண்டு நினைக்கிறன். சும்மா உயிருள்ள ஜடமா இந்த உலகில எதுக்கு வாழவேணும்?’
‘அப்பா என்ன கதைக்கிறியள்? இப்படிக் கதைக்காதீங்க அப்பா’
‘நான் சொன்னத இதுவரை நீங்கள் கேட்டதே இல்லை… இப்ப நீங்கள் சொல்லுறதைக் கேட்கவேணும் எண்டு நினைச்சாலும் எனக்குக் கேட்க நேரமும் மனதும் இல்லை. நீங்க நல்ல பிள்ளையள் எண்டு எனக்குத் தெரியும். உங்களத் தவறா வழிநடத்தி இருக்கிறாள். கொஞ்சம் நீங்கள் விழிப்பாய் இருந்திருக்கலாம். சுயமாச் சிந்திச்சு இருக்கலாம். நீங்கள் அதைச் செய்ய இல்லை. நான் அதுக்குப் பதிலாக அனுபவிக்க வேண்டியது எல்லாத்தையும் அனுபவிச்சிட்டன்’
‘அப்பா நீங்கள் இப்ப என்ன கதைக்கிறியள்? நடந்ததை இனி மாத்த முடியாது. ஏன், எப்பிடி வருங்காலம் அமையும் எண்டே எங்களுக்குத் தெரியாது. அம்மா இப்ப பொலிசுக்குப் போன் பண்ணினால் திரும்பவும் உங்களுக்குத் தேவையில்லாத பிரச்சனை வரும். இது தேவையா அப்பா?’
‘நீ பயப்பிடாதை இண்டைக்கு அப்பிடி எந்தப் பிரச்சனையும் நடக்காது’
‘ஓ… அது என்ன அதிசயம் அப்பா?’
‘அதுவா. இங்க கிட்டவா’

அவள் எதுவும் அறியாது அவன் அருகே சென்றாள். அவனுக்கு அவளையும் தலையில் தட்டித் தூக்கிக் கொண்டு செல்வதற்கு மனது வரவில்லை. அவனிடம் ஒரு ‘ஸ்பிறே’ இருந்தது. அதை அவளுக்காகவே வாங்கி வைத்திருந்தான். அதைத் தனது பையிலிருந்து சட்டென எடுத்து அவள் முகத்தில் அடித்தான். அடுத்த கணம் அவள் மயங்கி அவன் கையில் விழுந்தாள்.

அவளைத் தூக்கிக்கொண்டு கோலுக்கு வந்தான். அவளை டிலிஸ் பக்கத்தில் வைத்து கைகளைக் கட்டி வாயை ‘RS PRO PE Coated Silver Duct Tape’ துண்டால் மூடி ஒட்டிவிட்டான். கால்களையும் அவன் மறக்கவில்லை. அவள் மயக்கம் சிறிது நேரத்தில் தெளிந்துவிடும். நிச்சயம் அவள் அதிர்ச்சி அடைவாள். என்ன செய்வது? இறுதிக் கணங்கள் பலருக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும். தனது மகளுக்கும்

அதே நிலை என்பதை எண்ண அவனுக்கு மனதில் சுருக்கென்று ஊசி ஏறிய வேதனை உண்டாகியது.

4

சபேசனுக்கு வந்த அலுவல்கள் இலகுவாக நடப்பதான உணர்வு உண்டாகியது. அதை அனுபவிக்க ஒரு தேநீர் தயாரித்துப் பருகினால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அவன் சென்று ‘கேத்தில்’ ஆழியை அழுத்தினான். அது சத்தத்துடன் கொதிக்கத் தொடங்கியது. மூன்று அலைபேசியையும் ஒரு பாத்திரத்திற்குள் போட்டு நீரை நிரப்பி ஒரு பக்கத்தில் வைத்தான். அவனது மனதும் ‘கேத்தில்’ போலக் கொதித்தது. ‘அதற்கு ஒரு விடை கிடைத்துவிடும். அடைபட்டுக் கிடந்த சுதந்திரப் பறவைக்கு மெல்ல இந்தக் கூட்டிலிருந்து விடுதலை கிடைக்கும்’ என்று எண்ணிக் கொண்டு இருந்தவனை அழைப்புமணியின் அலறல் அதிர்ச்சியில் எகிறித் தூக்கிப் போட்டது. அவன் ஒரு கணம் நடுங்கிப் போய்விட்டான். என்ன செய்வது என்கின்ற குழப்பம் ஏற்பட்டது. எடுத்தால் பிரச்சனை. எடுக்காவிட்டாலும் எதாவது பிரச்சனையாகலாம் என்கின்ற ஐயம் இருந்தது? அவன் சில கணங்கள் உறைந்து போனான். அழைப்புமணி மீண்டும் அதிர்ந்தது. அந்தச் சத்தத்தில் லக்சா அனுங்கினாள். சபேசன் என்ன செய்வது, ஏது செய்வது என்று விளங்காது தடுதாளிப்பட்டான்.

அழைப்பு மணி தொடர்ந்தும் ஒலித்தது. இப்போது சபேசனின் அதிர்ச்சி பொங்கும் கோபமாக உருமாறி வெறி கொள்ள வைத்தது. அவன் வேகமாகச் சென்று அழைப்பு மணியை எடுத்தான்.

‘யாரது?’ என்று கோபமாக நோர்வே மொழியில் கேட்டான்.
‘நான் ‘Helthjem’-இல் இருந்து வந்திருக்கிறன். உங்களிட்ட பார்சல்- தரவேணும்’
‘நாங்கள் இப்ப அலுவலா இருக்கிறம். பார்சல் வாங்க முடியாத அளவுக்கு கையில அலுவல்’
‘அப்ப நான் கடையில கொடுக்கிறன். நீங்கள் அங்க போய் எடுக்கலாம். சரிதானே?’
‘ம்... கொஞ்சம் பொறுங்க... நான் வெளிக் கதவைத் திறக்கிறன். மேல கொண்டு வந்து கதவுக்கு முன்ன வைச்சிட்டு போங்க. சரியா?’
‘சரி’
சபேசன் வெளிக் கதவைத் திறந்தான். ‘Helthjem’-காரன் மேலே வந்து வீட்டுக் கதவுக்கு முன்பு நின்றான். அவன் ஒரு அரேபியன். பொதிகள் கொடுக்கும் அந்த மனிதன் ‘Helthjem’ நிறுவனத்தின் சீருடை அணிந்து இருந்தான். அத்தோடு ஒரு பெரிய பறிபோன்ற பை அவன் கழுத்தில்

தொங்கியது. அது பொதிகளைக் காவிச்செல்ல அவனுக்கு உதவியாக இருந்தது.

சபேசன் கதவிலிருந்த துவாரத்தின் ஊடாக அவன் என்ன செய்கிறான் என்று உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான். அந்த அரேபிக்காரன் சிறிது நேரம் கதவையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டு நின்றான். அவன் உடனடியாகப் பொதியை வைத்துவிட்டு விரைவாகப் போயிருக்க வேண்டும். சந்தேகப்படும்படி கதவின் முன்பு நிற்பது சபேசனுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. வெளியே சென்று அவன் மூக்கில் ஒரு இடி வைக்கவேண்டும் என்று தோன்றியது. அப்படிச் செய்தால் பிரச்சனை வேறு திசையில் திரும்பிவிடும். வந்த காரியம் நிறைவேறாது சிறை செல்ல வேண்டும். பொறுமை. பொறுமையைத் தவிர எதையும் இப்போது பாவிக்க முடியாது. அவன் தெளிவாகச் சிந்தித்தான். அமைதியாக பார்த்துக் கொண்டு நின்றான். 'யாராவது உள்ளிருந்து சத்தம் போட்டால் நிலைமை மோசமாகிவிடும். யாரும் அப்படிச் செய்யக்கூடாது' என்று எண்ணிக் கொண்டான்.

அவன் சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு அவசரமாகப் புறப்பட்டுச் சென்றான். சபேசனுக்கு மீண்டும் உயிர்மூச்சு வந்தது. அவன் கதவைத் திறந்து பொதிகளை உள்ளே எடுத்துப் போட்டான். கதவை மூடிவிட்டுக் கோலுக்கு வந்தான்.

தேநீர் தயாரிக்கும் அவகாசமும், விருப்பும் இப்போது இல்லாது போய் இருந்தது. அவன் கோலுக்கு உள்ளே வந்து டிலிஸ்சையும், லக்சாவையும் பார்த்தான். டிலிசுக்கு நினைவு வந்திருந்தது. கண்களில் கண்ணீர் வடிந்திருந்தது. அழுது இருக்கிறான். அடித்த காயத்தின் வலியாலா அல்லது வேறு மனவழுத்தத்தாலா என்பது விளங்கவில்லை. கனவிலும் தான் பிள்ளைகளுக்குச் செய்யக்கூடாது என்று தான் எண்ணியதை இன்று செய்கிறேனே என்கின்ற மனவுறுத்தல், கவலை, குற்ற உணர்வு அவனை வாட்டியது.

இப்படி ஒரு நாள் வந்து இருக்கக் கூடாது. பிறப்பு என்பதே இறப்பை நோக்கிய பயணத்திற்கான ஆரம்பப் புள்ளி என்பதை யாராலும் மாற்றிவிட முடியாது. தன்னுடைய அந்தப் புள்ளி எப்போது எப்படி என்பதை மனிதனால் நிச்சயிக்க முடிவதில்லை. இருந்தும் சிலரால் நிச்சயிக்க முடிவதுண்டு. அதை நிச்சயிக்கும் தகமை அல்லது வன்மம் கொண்டவனாகச் சபேசன் இன்று.
லக்சா திடீரென முனகினாள். அவளுக்கும் இப்போது மயக்கம் தெளிந்து விட்டதை சபேசனால் பார்க்க முடிந்தது. 'பாவம் பிள்ளைகள்' என்கின்ற கவலை தோன்றியது. 'அவர்களுக்குப் பசிக்காதா?' என்கின்ற வினா

உருவாகியது. ‘குடிக்க ஏதாவது கொடுக்கலாம். தேநீர் தயாரித்துக் கொடுக்கலாம். ஆனால், இப்போது கட்டை அவிழ்த்து தேநீர் கொடுத்தால் வந்த அலுவல் திசைமாறிச் செல்லாதா?' என்கின்ற கேள்வி எழுந்தது. அவன் தனது இரக்கத்தை, பாசத்தை, தற்போது மூட்டைகட்டி வைக்க வேண்டும் என்று எண்ணினான். அதற்குப் பதிலாகத் தன்னைப் புறக்கணித்த வன்மத்தை நினைவுக்குக் கொண்டுவர முயன்றான். முயற்சி முழுமையடையா விட்டாலும், முயற்சி திருவினையாக்கும் என்பதை நம்பினான்.

சபேசன் திடீரெனக் கோபமானான். அவன் அனுபவித்த வேதனை அப்படிப் பிரவகித்தது. சோபாவிற்கு அருகே வந்து லக்சா, டீலிஸின் கட்டுக்களை சரிபார்த்தான். பின்பு படுக்கை அறைக்குச் சென்றான். அங்கே நந்தினி கட்டிலையே ஈடாடச் செய்வதில் தோற்றுச் சோர்ந்து போய் இருந்தாள். சபேசனைக் கண்டதும் அவள் கண்களில் கோபம் வாளின் முனையில் பட்ட ஒளியாகத் தெறித்தது.

‘என்னடி, கோபமா? வா, எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டுறன். மொன்னையில இப்பவே ஒண்டு போட வேணும் போலத்தான் இருக்குது. போட்டா இதுக்கையே மயங்கிக் கிடப்பாய். கட்டி வைச்சுப் பெம்பிளைய அடிக்கிறான் எண்டுவாய்'

என்று கூறியவன் அவளைக் கட்டிலோடு சேர்த்துக் கட்டி வைத்திருந்த கட்டையும் கதிரையோடு சேர்த்துக் கட்டி வைத்திருந்த கட்டையும் அவிழ்த்து தூக்கி நிறுத்தினான். நந்தினிக்கு எட்டிப் பாய்ந்து அவன் குரல்வளையைக் கடிக்க வேண்டும் போல இருந்தது. அதைச் செய்துவிடாது கையையும் கட்டி, வாயையும் ஒட்டி வைத்திருந்தான். அதனால் அவள் அடுத்த ஆயுதமான கண்ணீர் பொங்கிப் பொங்கிக் கரை புரண்டு அவள் தனங்கள் தாண்டி ஓடியது.
சபேசனுக்கு ‘இப்போதே இவளது தலையில் ஒரு சன்னத்தைப் பாய்ச்சிவிட வேண்டும்' என்கின்ற எண்ணம் தோன்றியது.

‘அது இவளுக்குப் போதாது. இவளுக்குக் கடுமையான தண்டனை வேண்டும். மறக்க முடியாத அந்தத் தண்டனையை அவள் இன்று பெற்றாக வேண்டும். அவளைத் தண்டிக்கும் பொழுது நான் அனுபவிப்பதைவிடப் பலமடங்கு தண்டனையை அவள் அனுபவிக்க வேண்டும். என் வாழ்வு அழிந்து பலகாலம் ஆகிவிட்டது. இன்று இதற்கு ஒரு முடிவ வரவேண்டும். இந்த வேதனைச் சிறையிலிருந்து எனக்கு நிரந்தர விடுதலை கிடைக்க வேண்டும். அதுவே என் முத்தியாகும்' எனச் சபேசன் எண்ணினான்.

சபேசன் நந்தினியைத் தூக்கி நிறுத்தித் தள்ளிக் கொண்டு கோலுக்குச் சென்றான். தன்னை சிறைப்படுத்தி கைதி போல நடத்துவான் என்கின்ற கற்பனைகூட அவளிடம் இருந்ததில்லை. இந்தக் கணங்களை அவளால் சகிக்க முடியவில்லை.

சபேசன் அவளைக் கொண்டு சென்று சோபாவில் பிள்ளைகளுக்கு பக்கத்தில் இருத்தினான். பின்பு அவளது காலை மீண்டும் கவனமாகப் பிணைத்தான். நந்தினி கனவிலும் இதை எதிர்பார்க்கவில்லை. இப்படியும் நடக்கலாம் என்பது கனவு போல இருந்தது. தன்னை இவன் இன்று எதுவும் செய்வான் என்பது விளங்கியது. ஏதாவது வன்முறையாக நடப்பானோ என்கின்ற சந்தேகம் ஏற்கனவே சிலவேளை வந்ததுண்டு. அப்படி ஏதாவது செய்தாலும் அது கிட்டத்தட்டச் சமமான எதிரிகளுக்கு இடையில் நடக்கும் யுத்தம். அதைப்பற்றி அவள் துவண்டு விடமாட்டாள்.

'ஆனால் இங்கே பிள்ளைகள்?' அவள் உயிரிலும் மேலானவர்கள். அவர்களுக்காகவே வாழ நினைத்தவள். அப்படியான அவர்களுக்கு ஒரு துன்பம் என்றால் அவளால் நிச்சயம் உயிரோடு வாழமுடியாது. அதை அறிந்தே சபேசன் இப்படிச் செய்கிறான் என்பது அவளுக்கு விளங்கியது. அதைவிட அதிர்ச்சியானது அவர்கள் மேல் உயிரை வைத்திருக்கும் சபேசனா இப்படிச் செய்கிறான் என்பது. அவனைப் பார்க்கப் பார்க்க, இன்று செய்வதை எண்ண எண்ண மேலும் மேலும் தாங்க முடியாத அதிர்ச்சியாய் இருந்தது. 'ஏன் இவன் இப்படிச் செய்கிறான்?' என்பது அவளுக்கு விளங்கவில்லை. 'பிள்ளைகளை என்ன செய்யப்போகிறான்? என்னை என்ன செய்யப் போகிறான்?' என்பன விளங்காத புதிராக இருந்தது.

'சபேசன் 'சாதுவாக' வாழ்ந்து வந்தான். இப்போது பிசாசாக மாறி வந்திருக்கிறான். நான் நினைத்ததைவிட அவன் பல கோணங்களில் மாறிப்போய் இருக்கிறான். அவனது இந்த மாற்றம் திகில் கொள்ள வைக்கிறது' என்று அவள் எண்ணினாள்.

'அவனது இந்த மாற்றத்திற்கு நான் சிலவேளைக் காரணமாக இருக்கலாம் ' என்பது விளங்கியது. 'சபேசனைப் பொறுத்தவரை நானே ஒரே ஒரு காரணம் என்று எண்ணுவான். நான் செய்தது பிழையாக இருந்தாலும் எதற்காகப் பிள்ளைகளையும் இங்கு கொண்டு வந்து கட்டிப் போட்டு இருக்கிறான்?' மனதில் இனம் புரியாத பயம் உண்டாகியது. 'ஏதாவது அனர்த்தமாக சபேசன் செய்துவிடக் கூடாது' என்று மனம் பயந்தது. 'நான் செய்த பிழைதானா இது?' என்கின்ற எண்ணமும், நடுக்கமும் அவளுக்குத் தோன்றியது.

'என்னடி கடுமையா யோசிக்கிறாய்? எவ்வளவு நாள் நான் இரவிரவா நித்திரை இல்லாமல் யோசிச்சு இருப்பன். நான் என்ன பிழை விட்டன் எண்டு என்ர தலையைப் போட்டு உடைச்சிருப்பன். நான் சின்ன சின்னப் பிழை விட்டு இருக்கலாம். ஆனா, நீ ஒரு தண்டனை தந்தியே... அது தூக்குத் தண்டனை. இப்ப இது பிணம். உயிரோட இருக்கிற பிணம். இதை விரைவா எரிக்க வேணும். இல்லாட்டி நாத்தம் எடுக்கும். ஊரே நாறிப்போகும்'
'ம்... ம்... ம்..'

நந்தினி ஏதோ சொல்வதற்கான பிரயத்தனம் மேற்கொண்டாள். அவன் அவளைக் கோபமாகப் பார்த்தான். கன்னத்தைப் பொத்தி அறைய வேண்டும் என்கின்ற மிருகத்தனமான வன்மம் அவனிடம் தோன்றியது. ஆனால், 'வேண்டாம்' என்று முடிவு செய்துகொண்டான். 'அவளுக்குத் தண்டனை கொடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு. அதுவே பிள்ளைகளையும் தேவை இல்லாது தண்டிப்பதாக இருக்கக்கூடாது. அதில் மிருகத்தனமான வன்முறை சேரக்கூடாது' என்று எண்ணினான்.
'என்ன...? ரேப்ப வாயில இருந்து எடுக்க வேணுமா? என்னோட கதைக்கப் போறியா? பிரச்சன இல்லை. கதைக்கலாம். ஆனா, கத்தினா எண்டால் இந்தத் துவக்கால தலையில போடுவன். அதுக்கு நான் பொறுப்பு இல்லை. எல்லாருக்கும்தான் இந்தக் கொண்டிசன். விளங்கிச்சா?'

மயக்கம் தெளிந்து இருந்த லக்சாவும், டிலிசும், 'ம்...ம்..' என்று தலையாட்டினர். அவர்களுக்கு 'அப்பாவா இப்படி?' என்று மலைப்பாக இருந்தது. அதை ஜீரணிக்க முடியவில்லை. அவர்களைப் பார்க்க மீண்டும் கண்ணீர் சிந்திவிடுவேனோ என்கின்ற கவலை சபேசனுக்கு உண்டானது. அவன் அதை பெரும் பிரயத்தனத்துடன் அடக்கிக் கொண்டான். அவர்களை அதிகம் பார்க்காது தவிர்க்க முயன்றான்.

5

சபேசன் எழுந்து அவர்கள் வாயில் ஒட்டி இருந்த ரேப் துண்டுகளை அகற்றினான்.

‘என்ன வேலையப்பா செய்யிறியள்? உங்களுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்குது? இப்ப போய் ஜெயில்ல இருக்கப் போறியளா? தயவு செய்து எங்கட கட்டை அவுட்டு விட்டிட்டுப் பையத் தூக்கிக் கொண்டு வெளிய மரியாதையா போங்க... சும்மா தேவை இல்லாமல் பிரச்சனையப் பெரிசாக்கிக் கொண்டே போகாதேங்க... கெதியா கட்டை அவுளுங்க அப்பா. அவுட்டுப்போட்டு பையை எடுத்துக் கொண்டு வெளிய போங்க’ என்றான் டிலிஸ்.

‘டிலிஸ் சொல்லுற மாதிரி கெதியாச் செய்யுங்க... பிளீஸ் பைய எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளிய போங்க அப்பா. நாங்க உங்களைக் பார்க்காட்டியும் நீங்க வெளியில சுதந்திரமாய் இருக்கோணும். நீங்கள் போய் ஜெயில்ல இருந்தா எங்களுக்குச் சந்தோசமா இருக்குமா? அம்மாவோட பிரச்சினை எண்டா அதை நீங்கள் அம்மாவோட பேசித் தீருங்க... எங்களை எதுக்கப்பா இப்பிடி கட்டிவைச்சு சித்திரவதை செய்யிறியள்? பிளீஸ் அப்பா அவுட்டு விடுங்க’ என்றாள் லக்சா.

‘அப்பாவுக்கும், அம்மாவுக்கும் பிரச்சினை எண்டு தெரியும்தானே லக்சா? பிறகு நீங்கள் எதுக்கு என்னோட கதைக்காமல் விட்டியளாக்கும்? அதுக்கு உங்களிட்ட ஏதாவது விளக்கம் இருக்கா? நான் எத்தினை தரம் கெஞ்சி இருப்பன்... அப்ப எல்லாம் உங்களுக்கு இப்பிடி யோசிக்க வேணும் எண்டுகிற எண்ணம் வர இல்லை. இண்டைக்கு அப்பாவை இந்தக் கோலத்தில கண்ட பிறகுதான் உங்களுக்கு அந்த ஞானம் பிறந்திருக்கா? அப்பா உங்கட எந்த ஞானத்தையும் பெறுகிறதுக்கு இண்டைக்கு இங்க வரவில்லை. உங்கட சமாதானம் எல்லாம் என்னைச் சாந்தப்படுத்தாது. உங்களை நான் எப்பிடிக் குழந்தையா இருக்கேக்க பாத்திருப்பன்? அது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். தெரிஞ்சாலும் பொருட்படுத்தாது இருந்திருக்கலாம். அம்மாவுக்கு அப்ப நான் ஆவி, பொருள் அனைத்துமாகத் தேவைப்பட்டன். பாவிச்சு முடிஞ்ச பிறகு அம்மா மாத்திரம் இல்லை எல்லாரும் தூக்கி எறிஞ்சிட்டியள். கொஞ்சக் காலத்தில உங்களுக்கு டைப்பர் மாத்த வேண்டிய தேவை இல்லாமல்

போயிட்டுது. அவளுக்குப் புருசனைவிட என்ர காசு, அரசாங்கத்தின்ர காசு எண்டு பணம் மட்டும் பெரிசாப் போச்சுது'

'அப்பிடி இல்லை அப்பா. நீங்கள் பேசி இதுக்கு ஒரு முடிவ எடுப்பியள் எண்டு நினைச்சம். நாங்கள் உங்களோட கதைக்கப் போய் அம்மாவும் எங்களை வெறுத்தா நாங்கள் என்ன செய்ய முடியும் எண்டுகிற பயம். உங்களால எங்களுக்குத் தேவையான எல்லாம் செய்ய முடியுமா அப்பா? ஆனா, அம்மாவால எங்களுக்குத் தேவையானதைச் செய்ய முடியும். அம்மாவின்ரை இடத்தை நீங்கள் பிடிக்க முடியாது. ஆனா, நீங்கள் இரண்டு பேரும் சண்டை பிடிச்சால் நாங்கள் என்ன செய்யிறது? உங்களில எங்களுக்கு எந்தக் கோபமும் இல்லை. ஆனா, அம்மாவை வெறுப்பேத்தக் கூடாது எண்டு நினைச்சம். அது தப்பா அப்பா?' என்றாள் லக்சா.
'நீங்கள் செய்தது தப்புதான். குழந்தப் பிள்ளைகளா இருக்கேக்க உங்களை அம்மாவின்ரை தேவை கட்டுப்படுத்தி இருக்கலாம். ஆனா, பன்னிரண்டு வயசுக்குப் பிறகு நீங்கள் நினைச்சிருந்தா அதை யாராலும் தடுத்து இருக்க முடியாது. உங்களுக்கு அப்பிடி அப்பா தேவைப்பட இல்லை. நான் எத்தினை பாடுபட்டாலும் உங்களுக்கு அது ஒரு பொருட்டாய் தெரிய இல்லை... என்னதான் செய்யா விட்டாலும் அப்பா அனுப்பின செய்திக்குப் பதில் செய்தியாவது அனுப்பி இருக்கலாம். அனுப்பினியளா? வருத்தமாக காய்ச்சலல்ல படுத்திருக்கிறன் எனக்கு ஒரு குளிசை வாங்கி வந்து தாங்க எண்டு எத்தினைதரம் 'மசேச்' அனுப்பி இருப்பன். உங்களுக்கு நான் இருந்த நிலைமை தெரியாது. தெரிஞ்சு கொள்ள வேணும் எண்டுகூட நீங்கள் நினைக்க இல்லை... செத்தனா இல்லாட்டி உயிரோடை இருக்கிறனா எண்டுகூட எட்டிப்பாக்க உங்களுக்கு மனசு வரேல்ல... அம்மா உங்களைக் கெடுத்து இருக்கலாம். சிந்திக்க, செயல்பட முடியாமல் சிறு பிள்ளையா இருக்கேக்க நஞ்சூட்டி இருக்கலாம். அப்பிடியெண்டா நீங்களாச் சிந்திக்கக்கூடிய நிலைமைக்கு வந்த பிறகு எல்லாம் மாறி இருக்க வேணும். ஆனா நீங்கள் மாற விரும்பேல்ல... நான் செத்திருந்தால்கூட நீங்கள் அலுவல் முடிஞ்ச பிறகுதான் வந்து பார்த்து இருப்பியள். இல்லாட்டி அம்மா சொன்னா எண்டு எட்டிப் பார்க்காமலே விட்டிருப்பியள்... இல்லையே? அம்மாவை மன்னிக்க முடியாதுதான். அதுக்காக உங்களை மன்னிக்கலாம் எண்டும் இல்லை' என்றான் சபேசன்.

'நீங்கள் இப்ப செய்து இருக்கிறதைப் பார்த்தால் பயித்தியக்காரன் செய்திருக்கிற மாதிரிதான் இருக்குது. நீங்கள் இப்பிடிதான் எடுத்தன் கவுட்டன் எண்டு நடப்பியள் எண்டு அம்மா சொன்னது சரியாத்தானே இருக்குது? அப்பிடித்தானே நீங்கள் இப்ப செய்து இருக்கிறியள். தயவு

செய்து இந்தக் கட்டுகளை அவுட்டு விட்டிட்டு கெதியா வெளிய போங்க அப்பா’ என்றான் டிலிஸ்.

‘யாரும் சொல்லிக் கேட்கிற மனிசனா இவர். நீங்கள் போய் இவரிட்ட மன்றாடுறியள். உங்களை நான் ஏன் பாதுகாத்து வைச்சிருந்தன் எண்டு இப்ப தெரியுதா? இவரைப் பற்றிக் கவலைப்படாமல் இருங்கோ எண்டு சொன்னது சரி எண்டது இப்ப விளங்குதா?’ என்றாள் நந்தினி.
‘எட்டி மொன்னியில இந்தத் துவக்கால போட்டிடுவன். உண்மையப் பேசு. உனக்கும் எனக்கும் பிரச்சினை இருந்தால் அதை எங்களுக்குள்ள பேசித் தீர்த்திருக்க வேணும். அதை விட்டிட்டு அதை நீ பிள்ளையள பாவிச்சு வன்மம் தீர்த்தது அசிங்கம். அந்த வக்கிரமான உன்ன நான் எண்டைக்கும் மன்னிக்கமாட்டன். இண்டைக்கு உன்ர நாடகத்திற்கு ஒரு முடிவு கட்ட வேணும்’ என்றான் சபேசன்.

‘ஓ… முடிவுகட்டுவியள். இன்னும் கொஞ்ச நேரத்தில நான் வேலைக்குப் போக இல்லை எண்டால் நான் எங்க எண்டு தேடத் தொடங்குவினம். அப்பிடி தேடத் தொடங்கினால் என்ன நடக்கும் எண்டு தெரியும்தானே? தயவு செய்து கெதியா இங்க இருந்து வெளியேறுங்க… அது எல்லாருக்கும் நன்மையாக இருக்கும். விளங்குதா? உங்களால அனுபவிச்சது காணும். இனியாவது எங்களை நிம்மதியாக இருக்க விடுங்க’ என்றாள் நந்தினி.

‘ஓமடி… நீ சின்னஞ் சிறுசுகளையே ஈரம் இல்லாமல் வெருட்டி அடிமைப்படுத்தி வைச்சு இருந்து இருக்கிறாய். அப்படியான நீ மற்றவைய விடுவியா என்ன? யார் வந்தாலும் இண்டைக்கு இங்க ஒண்டும் மாறப் போகிறது இல்லை. ஆனா, எல்லாத்திற்கும் ஒரு முடிவு கட்ட வேணும் எண்டதில நான் தெளிவாய் இருக்கிறன். வேலை நேரம் பற்றி எனக்குத் தெரியாது எண்டது உன்ர நினைப்பு. அந்த நினைப்ப கொண்டுபோய் அடுப்பில வை’

‘என்னப்பா குழந்தைப் பிள்ளை மாதிரிச் சொன்னதையே சொல்லிக் கொண்டு இருக்கிறியள். தயவு செய்து போங்க அப்பா… நாங்கள் இனி உங்களோட கதைக்கிறது பற்றி யோசிப்பம். இப்ப போங்க அப்பா’ என்றாள் லக்சா.
‘இப்ப பிள்ளையள் என்ன செய்தவை எண்டு எல்லாரையும் கட்டிவைச்சுச் சித்திரவதை செய்கிறியள்?’ என்றாள் நந்தினி.
‘எல்லாருக்கும் இதில பங்கு இருக்குது. முதல்ல நீ. எனக்கும் உனக்கும் இடையில இருந்த பிரச்சனைய அவங்களப் பாவிச்சு சாதிச்சியே அது மன்னிக்க முடியாத குற்றம். அது சொந்தப் பிள்ளையள நஞ்சூட்டிக்

கொன்ற மாதிரி. நீ அவங்களை ஏற்கனவே கொன்றிட்டாய். ஏனடி அப்பிடிச் சொய்தாய்? எத்தினைதரம், எத்தினை முறை நான் அவங்களைத் தொடர்பு கொண்டன். ஆனா, நீ எல்லாத்தையும் கெடுத்திட்டாய். பொதுவா நல்ல தாய் தகப்பன் தங்களுக்கு இடையில என்ன பிரச்சினை இருந்தாலும் அதை ஒரு நாளும் பிள்ளைகளிட்ட எடுத்துக் கொண்டு போகமாட்டினம். அனேகமாக அப்பிடித்தான் சிந்திக்கிற மனிசர்கள் செய்வினம். அதைத்தான் இஞ்சையும் பலரும் செய்வினம். ஆனா, நீ என்ன செய்தாய்? அவங்கள வைச்சு என்னோட சதுரங்கம் விளையாடி இருக்கிறாய்? உன்னுடைய சதுரங்கம் விளங்காமல் அவங்களும் பலியாகி, பிறகு அவங்களும் வன்மம் பாராட்டுற மாதிரி நடக்கத் தொடங்கீட்டாங்கள். எல்லாம் உன்னாலதான். எண்டாலும் நாங்கள் ஒரு குடும்பம்தானே? அதுதான் நான் அதுக்கு எல்லாம் ஒரு முடிவு கட்ட வேணும் எண்டு வந்து இருக்கிறன்' என்றான் சபேசன்.

'சரி அப்பா. இது உங்கள் இரண்டு பேருக்குமான பிரச்சன. அதில ஏன் எங்களைக் கொண்டு வந்து செருகுகிறியள். தயவு செய்து எங்களை அவுட்டு விடுங்க அப்பா. எனக்கு நிறையப் படிக்க வேண்டி இருக்குது'
'உங்களுக்கு பங்கு இல்லை எண்டு இண்டைக்கு நீங்கள் உதறித் தள்ளிப் போட்டு போக முடியாது. நீங்கள் என்ன செய்தியள் எண்டது தெரியாமல் தொடர்ந்து படிச்சு என்ன பிரயோசனம் சொல்லுங்க பாப்பம். குருடன் காட்டில நடக்கிற மாதிரி நடக்கிறதில என்ன பிரயோசனம் இருக்குது? அப்பிடித்தான் எங்கட குடும்பமும் இருந்திருக்கு. அப்பிடி ஒரு குடும்பம் இருக்கிறதில எந்தப் பிரயோசனமும் இல்லை'
'குருடன் செவிடன் எண்டு என்ன வியாக்கியானம் கதைக்கிறீங்கள்? எங்கள இப்ப அவுட்டு விடுங்க... இல்லாட்டி நீங்கள் இங்க இருந்து ஜெயிலுக்குத்தான் போவியள். இதுதான் நான் உங்களைக் கடைசியாகக் கேட்கிறதா இருக்கும். உங்களிட்ட இதுக்கு மேல மன்றாடேலாது' என்றாள் நந்தினி.

'ஒரு அவதியும் வேண்டாம். இங்க இருந்து ஒருத்தரும் வெளிய போகப் போகிறது இல்லை... நீங்கள் இப்ப அமைதியாக இருங்க... உங்களுக்கு ரீ வேணுமா? நான் ரீ போட்டாறன். எல்லாரும் ரீ குடிக்கலாம். ஓ... உங்களால குடிக்க ஏலாட்டியும் நான் பருக்கி விடுகிறன்'
என்று கூறிய சபேசன் எழுந்தான்.

6

சபேசனுக்கு சமையலறையில் எங்கே என்ன இருக்கிறது என்பதில் தடுமாற்றம் எழுந்தது. இருந்தாலும் அவையவை அந்தந்த இடத்திலேயே இருந்தன. அவையவை இன்றும் மாறாது இருந்தமை அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. உறவால் பிரிந்தாலும், பிரிந்து வேற்றிடத்தில் வாழ்ந்தாலும் அடிப்படியான சில அமைப்புக்கள் மாறாமலே இருந்தன. பெயர் தொடக்கம் பல விடயங்கள் இன்றும் அசையாது அப்படியே மையில் கற்களாய் குந்தி இருந்தன. தேநீருக்குத் தேவையான பொருட்களைத் தேடி எடுப்பது கடினமாக இருக்கவில்லை. தேயிலையைத் தேடி எடுத்துக்கொள்ளலாம். தொலைந்த வாழ்வை எங்கே தேடி எடுக்க முடியும்? அவனுக்கு அதை எண்ண மீண்டும் கோபம் உண்டாகியது.

கோபத்தில் தேநீர் தயாரிப்பதை நிறுத்திவிட்டு வந்த அலுவலைப் பார்க்க வேண்டும் என்கின்ற எண்ணம் அவனை ஒரு கணம் ஆட்டிப் படைத்தது. பின்பு தன்னை மெதுவாக ஆசுவாசப் படுத்திக் கொண்டு, தேநீர் தயாரிப்பதில் ஈடுபட்டான். தேநீர் தயாரித்து முடிய அதைச் சுவைத்துப் பார்த்தான். அது நன்றாகவே இருந்தது. பின்பு அதைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தான். அது குளிர்மையாக இருந்தால் கையைக் கட்டியபடி குடிப்பவர்களுக்குத் தொந்தரவாக இருக்காது என்று அவன் நினைத்தான். தனது அலைபேசியை எடுத்து முகப்புத்தகத்தை ஒருமுறை தட்டிப் பார்த்தான்.

தேநீர் தயாரித்து முடிய மீண்டும் சென்று வெளிக்கதவின் ஓட்டையூடாக யாரும் நிற்கிறார்களா என்று நோட்டம் விட்டான். அப்படி யாரும் நிற்கமாட்டார்கள் என்பது தெரிந்தும் மனது ஏனோ அதைக் கேட்க மறுத்தது. அதன் நிம்மதிக்காக மீண்டும் சென்று பார்த்தான். அங்கே யாரும் இல்லை. அது அவனுக்கு மிகவும் நிம்மதியைத் தந்தது.

திரும்பி வந்த சபேசன் தேநீரைக் குவளைகளில் ஊற்றினான். straw தேடி எடுத்துக் குடிப்பதற்கு வசதியாக அவற்றினுள் போட்டு விட்டான். பின்பு அவற்றை எடுத்துக் கொண்டு மீண்டும் சோபாவிற்கு வந்தான். மூவரும் திகைப்போடு சபேசனைப் பார்த்தார்கள். அப்பா சாப்பாடு பரிமாறுவது லக்சாவுக்கும், டிலிஸ்க்கும் புதுமையானது அல்ல... இன்று அவர்களுக்கு அது பயமாக இருந்தது.

‘என்ன பாக்கிறியள்? எல்லாருக்கும் தேத்தண்ணி போட்டு இருக்கிறன். முதல்ல குடிச்சிட்டு பிறகு கதைக்கலாம். கை பின்னுக்குக் கட்டி இருக்க எப்பிடிக் குடிக்கிறது எண்டு யோசிக்கிறியளா? பயப்பிட வேண்டாம். நான் உங்களுக்கு உதவி செய்யிறன். சரியா?’
‘வேண்டாம் அப்பா’ என்றான் டிலிஸ்.
‘ஏன்ரா டிலிஸ்?’
‘நீங்கள் ரீயில ஏதும் கலந்து இருக்கமாட்டியள் எண்டுகிறதுக்கு என்ன உத்தரவாதம். உங்களை இப்ப நம்பேலாது’ என்றான்.
‘ம்… அம்மா உனக்கு முறையாகத்தான் பாடம் எடுத்து இருக்கிறா. அதில ஒண்டும் தப்பில்ல… அம்மா அந்தப் பாடத்தை எடுக்காட்டித்தான் தப்பு. இல்லாட்டி எப்பிடி உங்கள என்னிட்ட இருந்து இவ்வளவு காலமும் பிரிச்சு வைச்சிருக்க முடியும்?’ என்றான் சபேசன்.
‘அம்மா உங்களிட்ட இருந்து எங்களைப் பிரிச்சு வைச்சிருந்தா எண்டுகிறத்துக்காக இப்ப நீங்கள் என்னப்பா செய்யப் போறியள்? நீங்கள் செய்யிறது மட்டும் சரியா எண்டு யோசிக்க மாட்டியளா?’ என்றாள் லக்சா.
‘இவ்வளவு காலமும் நீங்கள் செய்ததெல்லாம் சரி எண்டால் நான் இப்ப செய்யிறதும் சரிதான். நான் இண்டைக்குச் செய்யிறதில சரி பிழை பாக்க முடியாமல் இருக்கிறன். நான் எடுத்து இருக்கிறது சரியான முடிவுதான் எண்டதில எனக்கு இனித் தடுமாற்றம் வராது. உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனா, இது நீங்களே விதை போட்டு வளர்த்த பயிர் எண்டு உங்களுக்கு விளங்குதா?’
‘அதை விடுங்க அப்பா. இப்ப எங்களை முதல்ல அவுட்டு விடுங்க’ என்றான் டிலிஸ்.
‘அவுட்டுவிடத்தான் போகிறன். திரும்பத் திரும்ப அதையே கேட்காதையுங்க… இப்ப நீங்கள் முதல்ல ரீ குடியுங்க’
‘சும்மா சுத்தாதேங்க அப்பா. நீங்கள் ரீயில என்ன கலந்து கொண்டு வந்தியள் எண்டு எங்களுக்குத் தெரியாது. அதையெல்லாம் நாங்கள் எப்பிடிக் குடிக்கிறது?’ என்றான் டிலிஸ்.
‘ஓ நம்பிக் குடிக்காதீங்க… உந்த ஆள் நஞ்சைக் கலந்திருப்பார் எண்டதில சந்தேகம் இல்லை’ என்றாள் நந்தினி.
‘நெஞ்சில நஞ்சு மாதிரி எண்ணம் இருந்தால் யாரையும் நம்பமுடியாதுதான். நீ அதை உன்னோட மட்டும் வைச்சிருக்கேல்லை… பிள்ளைகளின்ர நெஞ்சிலையும் விதைச்சு வைச்சிருக்கிறாய். சரி உன்னிட்டக் கடைசியா வாறன். அப்ப உனக்கு அதைப்பற்றி விளங்கப்படுத்துகிறன்’
‘டிலிஸ்… நீ நான் தந்த ரீ சுத்தமானது எண்டு நம்ப இல்லையா?’
‘இல்லை அப்பா? எப்பிடி நான் நம்ப முடியும்?’
‘ம்… இது நியாயமான சந்தேகமே? உன்னை அப்படி அம்மா வளர்த்து வைச்சிருக்கிறா… ம்… சொந்த அப்பாவையே நம்பக்கூடாது எண்டு

சொல்லித் தந்திருக்கிறா. அதை நீங்கள் நம்புறியள். நல்லது... இப்ப அப்பா அந்த விசம் கலந்த ரீயக் குடிச்சுச் சாகப் போகிறன். பாக்கிறியளா?'
'வேண்டாம் அப்பா' என்றான் டிலிஸ்.
சபேசன் அதைப் பொருட்படுத்தாது ஒவ்வொரு குவளையிலிருந்தும் ஒவ்வொரு மிடறு குடித்தான். பின்பு அவர்களைப் பார்த்து,
'ஓ இங்க பாருங்க... எனக்கு நஞ்சு குடிச்சும் மயக்கம் வருகுதில்ல... ம்... என்ன சொல்லுறா டிலிஸ்? நஞ்சு ரீயில இல்லையடா டிலிஸ் உன்ர அம்மாவின்ர மனசில இருக்குது. அந்த முண்டம் என்னைப் பழிவாங்கிறதா நினைச்சு உங்களைப் பழிவாங்கி வச்சிருக்கிறாள். அப்பா இருந்தும் தன்ர வன்மத்திற்காக அப்பா இல்லாத பிள்ளையளா வளர்த்து இருக்கிறாள். அதுக்கு நீங்களும் தலையாட்டிக் கொண்டு இருந்திருக்கிறியள். அதால நீங்கள் மட்டும் இல்லை நானும் வதைபடுகிறன் எண்டுகிற எண்ணம் உங்களுக்கு வராமலே போயிட்டுது. அது உங்களில பிழை இல்லை. அப்பிடி சிந்திக்க வைக்கத் தெரிஞ்சு இருக்க வேணும் இல்லையா? உங்கட அம்மாவுக்கு வெள்ளை உள்ளங்களை நஞ்சூட்ட மட்டும்தான் தெரியும். தேள் மாதிரி. அதால, விசத்தைத் திரும்ப எடுக்க முடியாது. எடுக்கிறது அதுகின்ர இயல்பும் இல்லை. சரி நீங்க இப்ப ரீ குடியுங்க'

என்று கூறியவன் தேநீரை 'straw'-வின் உதவியோடு பரிமாறத் தொடங்கினான். ஐயம் நீங்கியதால் லக்சாவும் டிலிசும் தேநீரைப் பருகினர். லக்சாவுக்குப் பசிக்கத் தொடங்கி இருந்தது. அந்தப் பசிக்கு இது நெருப்பைத் தணிக்கும் நீராகிற்று.

சபேசன் கடைசியாக நந்தினிக்கு வழங்கினான். அவள் அதைப் பருக மறுத்தாள். அதைத் தூக்கி அவள் தலையில் ஊற்ற வேண்டும் போல் ஒரு முறுகல் உடம்பில் வந்தது. அவன் அவள் அருந்தாதது பற்றிக் கவலைப்படவில்லை. அவள் அதற்குத் தகுதியானவள் இல்லை என்பதில் அவன் முகம் பார்க்கும் பளிங்கு நீர் போன்று தெளிவாக இருந்தான். சபேசன் அவளைப் பார்த்து சிரித்துவிட்டு, அந்தத் தேநீரையும் தானே எடுத்துப் பருகினான். அப்போது அவள் முகம் போன போக்கைப் பார்த்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. அதை அவன் ஆறுதலாக இரசித்தான்.

'செய்கிறது எல்லாம் செய்து முடிச்சாலும் உனக்கு இன்னும் திமிர் அடங்கேல்ல... இண்டைக்கு உன்ர கொழுப்ப அடக்கிறன்' என்றான் சபேசன்.
'என்ன செய்கிறது எல்லாம் செய்து முடிச்சுப்போட்டு... நான் ஒண்டும் பிழை செய்ய இல்லை. பிள்ளையள ஒழுங்கா வளர்க்கப் பார்த்தன்'

‘ஓ... இவ ஒண்டும் தெரியாத பாப்பா. இவவுக்கு எல்லாம் சொல்ல வேணும்’
‘சும்மா பசப்பாதேங்க... நான் என்ன அப்படிச் செய்தன்? சொல்லுங்க பாப்பம்?’
‘ஓ... நீ ஒண்டும் செய்ய இல்லை’
‘செய்தா அதைச் சொல்லுங்க’
‘நீ என்னப் பாவிக்கும் வரைக்கும் பாவிக்க வேணும் எண்டு திட்டம் போட்டு நல்லாப் பாவிச்சாய்... அப்ப நல்ல பெண்டாட்டி மாதிரி எப்பிடி எல்லாம் நீ நடிச்சாய்? என்ன நடந்தாலும் ஒண்டுமில்ல எண்ட மாதிரி என்ன நடிப்படி நடிச்சாய். அது எல்லாம் அவங்கள் சுயமா இயங்கும் வரைக்கும் நடந்த நாடகம். அதுக்குப் பிறகு உனக்குத் துணிவு வந்திட்டுது. சொத்து சேர்க்க வேணும் எண்டு என்னைப் பேய்க்காட்டி வீடு வாங்கிப்போட்டு அதையே உனக்குச் சாதகமாய் பாவிக்கத் தொடங்கினாய். அதுக்கு என்னைப்பற்றி தேவையில்லாத நஞ்சை எல்லாம் அவங்களுக்கு ஓதினாய். நல்ல அம்மா எண்டால் நஞ்சான பிரச்சனைகள பிள்ளைகளிட்ட கொண்டு போகமாட்டாள். உனக்கு பிள்ளையளப் பற்றி என்ன கவலை? உன்ர காரியம் நடக்க வேணும். அதுக்காக யாரையும் பலியிடத் தயாராக இருந்தாய். கேட்டா அது, இது எண்டு... ஆயிரம் ஆயிரம் சாட்டு’
‘ஓ இவர் மாத்திரம் பெரிய சுத்தம். உங்களில எனக்கு இருந்த சந்தேகம் இன்னும் அப்பிடியே மாறாமல் இருக்குது. மாறாமல் இருக்கிறது என்ன எனக்கு வடிவாத் தெரியும்.... இனியும் அது மாறாது’
‘அது எல்லாம் உன்னுடைய கற்பனை. அதுக்கு ஒரு உருவமே இல்லை. உருவத்தை நீ உன்ர மூளையில பிரதிட்டை செய்தால் அதுக்கு நான் ஒண்டும் செய்ய முடியாது. என்ர வாழ்வைப் பாழாக்கினாலும் பறுவாய் இல்லை. அதுக்காக நீ அப்பாவிப் பிள்ளையளின்ர வாழ்வைப் பாழாக்கிப் போட்டாய். இதெல்லாம் நீ எதுக்குச் செய்தாய் எண்டு எனக்கு நல்லாய் தெரியும்’
‘என்ன தெரியும் சொல்லுங்க... சொல்லுங்க... பாப்பம்...?’
‘அவங்கள் சின்னனா இருக்கேக்க அவங்களுக்கு டைப்பர் மாத்திறது தொடக்கம் சாப்பாடு ஊட்டுகிறது, குளிப்பாட்டுகிறது எண்டு எல்லாத்துக்கும் உனக்கு உதவி தேவைப்பட்டுது. அப்ப நான் உனக்கு கட்டாயம் தேவைப்பட்டன். நான் என்ர பிள்ளைகளுக்கு அதை எல்லாம் செய்தன். அதெல்லாம் நான் சொல்லிக் காட்டத் தேவையில்லை. ஆனா, நீ அதுக்கு மாறாக நீ மாத்திரமே அவைய வளர்த்தன் எண்டு ஓதி வைச்சிருக்கிறாய். அது கூடப் பறுவாய் இல்லை. நீ என்னுடைய உதவி உனக்குத் தேவை இல்லை எண்ட உடன சட்டெண்டு அந்த வீட்டக்கு மாறினாய். என்னிட்ட இருந்தே உதவிப் பணம் கோரினாய். தனியாய் இருக்கிறன் எண்டு அரசாங்கத்திட்ட இருந்து வேறை உதவிப் பணம்

கோரினாய். எல்லாம் சேர்த்துக் கொழுத்த வருமானம் வரும் எண்டதை தெரிஞ்சு கொண்டு அதை இதை எல்லாம் சாட்டா வைச்சு ஓடினாய். நீ ஓடினால் பறுவாய் இல்லை. ஆனால் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு ஓடினாய். அதுதான் நீ செய்யக்கூடிய பெரிய துரோகம். அதையும் நீ விட்டு வைக்க இல்லை'
'ஓ... நான் செய்தன். அதில உங்களுக்கு என்ன பிரச்சனை? நீங்கள் ஒழுங்கா இருந்திருந்தா நான் ஏன் அப்படிச் செய்திருக்கப் போகிறன்?'
'ஓ... அப்பிடியா...? நான் தளும்பினாலும் சரி, ஸ்திரமாய் இருந்து இருந்தாலும் சரி இதுதான் நடந்து இருக்கும். உனக்குப் பிரச்சன இல்லை. இத்தனையும் நீ பிள்ளையளுக்குச் செய்யிறன் எண்டு சொல்லிச் செய்தாய். பிறகு அந்தப் பணத்தை எடுத்து என்ன செய்தாய்? நானே மாதம் உனக்கு எட்டாயிரம் குரோணர் கட்டியிருக்கிறன். அதெல்லாம் உன்ர விருப்பத்திற்குச் செலவழிச்சாய். அதுக்கு எதிராய் அப்பாவைப் பிள்ளையளிட்ட இருந்து விலக்கி வைச்சாய். என்னையும், பிள்ளைகளையும் அதுக்காகப் பலியாக்கினாய் இல்லையா? இண்டைக்கு அதுகள் என்னை எதிரியாய் பாக்குதுகள். அத உன்னால இனி மாற்ற முடியுமா? நோர்வே சில சட்டங்களை மனிசர் மனச்சாட்சியோட நடப்பினம் எண்டுகிற நம்பிக்கையில, இயற்றி வைச்சிருக்குது. ஆனா, அதைச் சிலர் துஸ்பிரயோகம் செய்யினம். அதுவும் இந்தப் பிள்ளைகளுக்கான உதவி, பிள்ளைகள் தாய் தகப்பனோட இருக்க வேண்டிய நேரம், எண்டுற விசயத்தில ஆம்பிளையளுக்கு இருக்கிற நன்மையைவிடப் பெம்பிளையளுக்கு அதிகமாத்தான் இருக்குது. அதையும் நீ துஷ்பிரயோகம் செய்து எல்லாரையும் நல்லா ஏமாத்தினாய். உன்மாதிரியான ஆட்கள என்ன செய்ய வேணும் சொல்லு? சட்டத்தில இருக்கிற ஓட்டைகளப் பாவிச்சு ஆம்பிளையளப் பைத்தியமாக்கிறவைய என்ன செய்யலாம்? நீ இதைத் தெரிஞ்சே திட்டமிட்டுச் செய்திருக்கிறாய். இதைத்தானாம் இங்க பல தமிழ் பெம்பிளையள் பெண்விடுதலை எண்டு கொண்டாடித் திரிகினமாம். நீ சுருட்டிக் கோட்டை கட்டுறதுக்கு என்னப் பழிவாங்கிறதா நினைச்சு எனக்குப் பிள்ளையளோட இருந்த பிணைப்பைப் பலியிட்டுப் போட்டாய். உன்ர சுயநலத்திற்காக பிள்ளைகளின்ர அப்பா அவரோடான உறவைப் பலியிடுவியா? அதுதான் எனக்கு இண்டைவரைக்கும் விளங்க இல்லை. மனசால பொறுக்கவும் முடிய இல்லை'

7

‘அப்பா உங்கள் ரெண்டு பேருக்கும் இடையில இருக்கிற பிரச்சனைக்கு எங்களை ஏன் பழிவாங்கிறியள்? எனக்கு இப்ப ரொயிலற்றுக்கு போக வேணும் அப்பா’ என்றாள் லக்சா.

‘ஓ... அது வேறையா?’

‘ம்... மனிசர் எண்டா இதெல்லாம் வரும்தானே அப்பா?’ என்றாள் அவள்.

‘சரி... சரி... வா! அம்மாவும் மகனும் பேசாமல் இருக்கவேணும். ஏதாவது செய்தியள் எண்டா நான் என்ன செய்வன் எண்டு எனக்குத் தெரியாது. ரெண்டு பேருக்கும் விளங்குதா?’

‘ம்... ம்..’ என்றான் டிலிஸ். நந்தினி பேசாது இருந்தாள்.

சபேசன் கால்கட்டை நீக்கி அவளைக் கூட்டிச் சென்றான்.

ஏதாவது செய்து அவர் வருவதற்கு முன்பு தப்பித்துச் சென்றால் சிறை உடைத்தது போல இருக்கும் என்று எண்ணினாள். அது சாத்தியமா என்பது அவளுக்கு விளங்கவில்லை. வெளிக் கதவால் தப்பியோட முடியாது என்பது உறுதியான முடிவு. அங்கேதான் அவன் காவல்காரன் போல நிற்கிறான் என்பது அவளுக்குத் தெரியும். அப்படி இருக்க அந்த வழியால் தப்பிக்க முடியாது. பல்கணியில் நின்று சத்தம் போடலாம். அவன் பல்கணிக் கதவைத் திறந்து வந்து இருவரையும் பிடித்து விடுவான். பல்கணியிலிருந்து பாய முடியாது. நாலாவது மாடியிலிருந்து பாய்ந்தால் பிணமாகத்தான் கீழே போய்ச் சேரமுடியும். அதற்காக இப்படியே எதுவும் செய்யாது இருக்க முடியாது. பல்கணிக்குச் சென்று அங்கிருந்து டிலிசை பக்கத்து வீட்டிற்குள் அனுப்பினால் மற்றவர்களும் தப்பிப்பதற்குப் பெரும் வசதியாக அமையும். அதற்கு முதலில் கைகளை அவிழ்க்க வேண்டும். நந்தினி டிலிசைப் பார்த்து,

‘டேய்..’ என்றாள்.

‘என்னம்மா?’ என்று அவன் கேட்டான்.

‘கிச்சினுக்குப் போய் கத்தி எடுத்து வந்து கட்டை கெதியா வெட்டடா. கெதியாப் போடா. அவர் வாறத்துக்குள்ள தப்பிக்க வேணும். ஓடு... கிச்சின் முதல் லாச்சீக்க நிறையக் கத்தி இருக்குது. ஏதாவது ஒண்டைக் கெதியா எடுத்தா?’

‘இது தேவையில்லாத ஆபத்து அம்மா..’

‘இப்ப அவர் இருக்கிற நிலமயில அவரை நம்புறது அதைவிட ஆபத்து. தயவு செய்து நான் சொல்லுறதக் கேள். கெதியாப் போய் எடுத்தா.

மெதுவா... சத்தம் கேட்காமல் போ. அந்த ஆள் இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவார்'

டிலிசுக்கு உண்மையில் பயமாக இருந்தது. அப்பாவைத் தேவையில்லாமல் துாண்டி விடுவது போலத் தாங்கள் செய்யும் காரியம் அமைந்து விடுமோ என்கின்ற பயம் எட்டிப் பார்த்தது. இருந்தும் 'Den som intet våger, intet vinner' என்கின்ற நொஸ்க் வசனம் நினைவுக்கு வந்தது. (அதன் பொருள் கிட்டத்தட்ட முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதாகும்). அவன் அதன் பின்பு நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

'அம்மா?'
'என்னடா?'
'கால்கட்டு இருக்கே அம்மா?'
'ம்... காலை நீட்டு'

அவன் காலை நீட்ட அவள் புரண்டு, விழுந்து, இழுத்து இழுத்து ஒருவாறு வந்து அவன் காலை அடைந்தாள். அவனது கட்டை வாயால் விறுவிறுவென்று கடித்து நீக்கத் தொடங்கினாள். அந்த அலுவல் அவளைத் தெப்பமாக வியர்க்க வைத்தது. அவள் உடலிலிருந்து அனல் எழுந்தது. நந்தினி எடுத்த காரியத்தை முடிக்காது விடுபவள் அல்ல... அலுவல் ஒருவாறு முடிந்தது. அடுத்த கணமே அர்ச்சுனக் கணையை விஞ்சிய ஐந்து மடங்கு வேகத்தில் பாய்ந்து டிலிஸ் சமையல் அறைக்குச் சென்றான். அங்கிருந்த லாச்சியைக் கஸ்ரப்பட்டுக் கட்டி இருக்கும் கையால் திறந்து, ஒரு கத்தியை எடுத்தான். அந்த லாச்சியை சாத்த வேண்டும் என்று நினைத்தவன் அதைச் சாத்தாது அம்மாவிடம் விரைந்தான்.

*

சபேசனுக்கு இருவரின் மேலும் சிறிது சந்தேகம் இருந்தது. லாச்சி திறப்பது போலவும் மென்மையான சத்தம் ஒன்று அவன் காதை நோண்டிச் சென்றது. அவன் அதனால் லக்சாவை அவதிப்படுத்தி கூட்டிக் கொண்டு மீண்டும் ஹோலிற்குத் திரும்பி வந்தான். வரும்போது டிலிஸ் வேகமாகப் போவதை அவதானித்தான். அவன் அசுரவேகத்தில் லக்சாவைத் தள்ளி வந்து சோபாவில் இருத்தினான். எட்டி டிலிசின் பிடரியில் ஒன்று வைக்கப் போனான். பின்பு அந்தக் கோபத்தை அடக்கிக் கொண்டான். டிலிஸ் இதை எதிர்பார்க்கவில்லை. அவன் பயத்தில் கத்தியைத் தவறவிட்டான்.

மேலும் அப்பா ஏதும் துன்புறுத்துவாரோ என்கின்ற பயத்தில் நடுங்கினான். சபேசன் அவன் கால்களைப் பிணைத்தான்.

நந்தினியைப் பார்க்கக் கோபம் வந்தது. எட்டிக் காலால் உதைக்க வேண்டும் போல் இருந்தது. அவன் அதை அடக்கிக் கொண்டு அவளையும் தூக்கிச் சோபாவில் போட்டான். இயந்திர கதியில் எல்லோரையும் நாகாஸ்திரம் பாவித்தது போலக் கட்டிப் போட்டான். அவனிடம் அனல் கக்கும் கோபம் தணியாது இருந்தது. பிள்ளைகளை இதற்குமேல் துன்பப்படுத்தக்கூடாது என்கின்ற எண்ணம் கையைக் கட்டிப்போட்டது. அவனுக்கு இதயத்தில் முள்ளேறியதாக வலித்தது. கண்களில் நீர் கரைதட்டிக் கொண்டது. 'எனது குடும்பம். எனது பிள்ளைகள். ஆனால் நானே…?' அவனது மனது தணியாது வெந்தது. கெதியாக முடித்து விடவேண்டும். யாரையும் தேவை இல்லாது துன்பப்படுத்துக்கூடாது என்று எண்ணினான்.

அவன் சமையல் அறைக்குச் சென்றான். தண்ணீரை மேலும் தண்ணீராக்கக் குழாயைத் திறந்துவிட்டான். அப்படி வந்த மேலும் தண்மையான குளிர் நீரை எடுத்துப் பருகினான். மேலும் ஒரு பெரிய குவளைக்குள் அதைப் பிடித்துக் கொண்டு சோபாவுக்கு வந்தான்.

'யாருக்கும் தண்ணி வேணுமே?' என்று கேட்டான்.

'எனக்கு வேணும் அப்பா' என்றாள் லக்சா.

அவன் அவளுக்கு 'straw' போட்டுத் தண்ணீர் பருகக் கொடுத்தான். அவள் குடித்து முடிந்ததும் டிலிசைப் பார்த்து,

'உனக்குத் தண்ணி வேணுமா?' என்று கேட்டான்.

'என்ன அவுட்டு விடுங்க அப்பா. நீங்க ஏன் எனக்குத் தண்ணி எடுத்துத் தரவேணும். என்ன அவுட்டு விட்டா நான் சுயமா தண்ணி எடுத்துக் குடிக்கமாட்னா?'

'ம்… உன்ன எல்லாம் கஸ்ரப்படுத்த வேணும் எண்டு நான் நினைச்சதே இல்லை. வாழ்க்கைப் பயணம் எப்பிடி எல்லாம் மாறும் பாத்தியா? உங்கட அம்மா எல்லாத்தையும் மாத்தீட்டா. இப்ப அந்தப் பயணத்த நான் எந்த விதத்திலும் கட்டுப்படுத்த முடியாது. அதுக்கு ஒரு முடிவு காணவேணும் எண்டுதான் வந்திருக்கிறன். கொஞ்சம் பொறுமையா இரு. எல்லாம் சரியாகும். திரும்பத் திரும்பக் கேட்காத'

'சுத்திச் சுத்தி ஏனப்பா பைத்தியம் மாதிரிக் கதைச்சுக் கொண்டு இருக்கிறியள். தயவு செய்து உந்தப் பிசத்தலை நிப்பாட்டுறியளா அப்பா' என்றாள் லக்சா.

'அருமை மகளே! உனக்கேன் இந்த அவசரம்? அம்மாவோட மட்டும்தானே இவ்வளவு காலமும் இருந்தனியள்? இண்டைக்கு என்னோட பொறுமையா, ஆறுதலா இருங்க'
'கட்டி வைச்சிட்டு சந்தோசமாய் இருக்கச் சொல்லுறியள். ஏனப்பா நீங்கள் இப்படி எங்களைக் கஸ்ரப்படுத்திறியள்? எங்களை அவுட்டு விடுங்க அப்பா. எங்களுக்கு நிறைய வேலை இருக்குது'
'ஓ... நான் உங்களைக் கஸ்ரப்படுத்துறன். நீங்கள் மாத்திரம் என்னைக் கையில வைச்சுத்தான் எந்துறியள்... என்ன?'
'ஏனப்பா... நாங்கள் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தம்?' என்றாள் லக்சா.
'நீங்கள் கெடுதல் செய்தியள் எண்டு நான் சொல்லமாட்டன். ஆனா, அக்கறை இல்லாமல் இருந்தியள் எண்டு சொல்லலாம்' என்றான் சபேசன்.
'அப்பிடி நாங்கள் என்ன அக்கறை இல்லாமல் இருந்தம்? உங்களைப்பற்றி அக்கறைப்பட வேணும் எண்டு எங்களுக்கு ஒண்டும் கட்டாயம் இல்லையே?' என்றான் டிலிஸ்.
'உங்களுக்கு அப்பாவில அன்பு வைக்க வேணும் எண்ட எண்ணம் இருந்திச்சா. ஆனா, நான் உங்களில வைச்சிருந்த அன்பால கேக்கும், பரிசுகளும் வாங்கிக் கொண்டு லக்சாவின்ரை பிறந்த நாள் அண்டைக்கு குளிரில வந்து வெளியால நிண்டன். எவ்வளவு நேரம் வெளியில நிண்டு 'காலிங்பெல்' அடிச்சன் தெரியுமா? ஆனா, நீங்கள் கதவைத் திறக்கவே இல்லை. நான் அந்த 'மைனெஸ்' பதினெட்டில வெளியால நிண்டு எவ்வளவு நேரம் விறைச்சன் எண்டு தெரியுமோ? உங்களுக்கு அது தெரியாது. தொப்பியப் போட்டுக் கொண்டு வராமல் என்ரை காதே விறைச்சுக் காயமாச்சுது. ஆனா, நீங்கள் எட்டியும் பார்க்க மனமில்லாமல், கதவத் திறக்காமல் இருந்தியள். உங்களுக்குப் பிறந்த நாள் எண்டாக்கூட அப்பா தேவையில்லை... லக்சா உன்னைப் பொறுத்தவரை அப்பாவுக்கு சா வருத்தம் எண்டாலும் அது பாதிக்காது. என்ன நடந்ததெண்டு எட்டிப் பாக்க வேணும் எண்ட அக்கறை வராது. மருந்து வாங்கியா எண்டாலும் வாங்கி வரமாட்டாய். நீங்கள் அக்கறையா இருந்தியளா? அம்மா என்னில இருக்கிற விரோதத்தால செய்தா. நீங்கள் ஏன் அப்பாவை வெறுத்தியள்? நான் ஒரு நாள் உங்களில கை வைச்சு இருப்பனா? என்ன காரணம் எண்டு சொல்ல முடியமா?'
'இப்ப உறுக்கினியள் அப்பா' என்றான் டிலிஸ் அவசரமாக.
'அது நீ நிலைமை தெரியாமல் என்ரை பொறுமயச் சோதிச்சதால. இனி உன்னை நான் உறுக்கக்கூட மாட்டன். அது மட்டும் நடக்காது. எனக்கு இண்டைக்கும் விளங்காத ஒண்டு என்ன எண்டா அம்மா என்னை வெறுத்தா நீங்களும் வெறுக்க வேணுமே? உங்களோட பள்ளிக்கூடத்தில படிக்கிற எத்தினை பிள்ளயளின்ர அப்பா அம்மா டிவோர்சா இருப்பினம். அவையெல்லாம் அப்பாவ அல்லது அம்மாவ வெறுக்கினமா? தாய்

தகப்பன் இரண்டு பேரோடயும் சந்தோசமா வாழுகிற பிள்ளயளே இல்லையா? அப்பிடியான ஸ்கூல்லதானே படிக்கிறியள்? அப்பிடியான சமுதாயத்தில தானே வாழுகிறியள்? அப்பிடி இருந்தும் அப்பாவை ஏன் பழிவாங்க வேணும் எண்டு நினைச்சியள்?'

'நாங்கள் ஏன் அப்பா உங்களப் பழிவாங்க வேணும்? உண்மயில நாங்கள் உங்களப் பழிவாங்க இல்லை. சிலவேளை நாங்கள் உங்களில அக்கறை இல்லாமல் இருந்து இருக்கலாம். அது உங்கள இவ்வளவு காயப்படுத்தி இருக்கும் எண்டு எங்களுக்குத் தெரியாது அப்பா. நீங்கள் இப்பிடி எல்லாம் சிந்திக்கமாட்டியள் எண்டு நாங்கள் நினைச்சு இருந்தம். அது உங்களக் காயப்படுத்தி இருந்தா சொறி அப்பா' என்றாள் லக்சா.

'ம் தூக்கி வளர்த்த பிள்ளயள் திரும்பிப் பாக்காட்டி எப்பிடி வலிக்கும் எண்டு உனக்குத் தெரியுமா? ஒரு காலத்தில தெரிய வரும். எத்தினை நாள் நான் நித்திரை வராமல், சாப்பிட மனம் இல்லாமல், கண்டதையும் குடிச்சுக் கொண்டு, விசரன் மாதிரித் திரிஞ்சிருப்பன் தெரியுமா? எத்தின நாள் எப்படி தற்கொல செய்து கொண்டு இந்த நரகத்தில இருந்து விடுதல பெறலாம் எண்டு யோசிச்சு இருப்பன் எண்டு தெரியுமா? அது எல்லாம் உங்களுக்குத் தெரியாது. தெரிஞ்சால்கூட அதை நான் அனுபவிச்ச மாதிரி நீங்கள் அனுபவிக்க முடியாது. உங்கட நினைவு இல்லாத கணங்களே எனக்கு இருந்தது இல்லை. ரீவியில படம் பார்த்தால்கூட உங்கட நினைவுதான் வரும். நான் அப்பிடி எத்தினை நாள் சோபாவில இருந்து அழுதிருப்பன்? அது எல்லாம் உங்களுக்கு மட்டும் இல்லை யாருக்கும் தெரியாது. அப்பாவைக் கல்லில செய்து தனி வீட்டில வைச்சிருக்குது எண்டு நீங்கள் நினைச்சுக் கொண்டு இருந்தீங்களா?'

'சரி அப்பா. உங்களுக்கு நிறயக் கஸ்ரமாய் இருந்திருக்கும் எண்டது தெரியுது. தெரிஞ்சிருந்தால் நாங்கள் உங்களிட்ட நிச்சயம் வந்திருப்பம் அப்பா' என்றாள் லக்சா சமாதானமாக.

'இவர் இப்படிச் சொன்ன உடன இவர் சொல்லுறத எல்லாம் நாங்கள் நம்ப முடியுமா? அப்பிடியெண்டா, அம்மா சொன்னது எல்லாம் பொய்யே?' என்றான் டிலிஸ்.

'அம்மா உங்களிட்ட என்ன சொன்னவா?'

'அதெல்லாம் இப்ப உங்களுக்கு எதுக்கு?' என்றான் டிலிஸ்.

'நீ சொல்லு லக்சா?'

'அதை விடுங்க அப்பா... அது ஒண்டும் இல்லை. அவன் சும்மாய் விளங்காமல் கதைக்கிறான். கடந்தத இனி நாங்கள் மாத்த முடியாது. நடக்கிறதப் பாப்பம் அப்பா'

'நீ நினைச்சாலும் உங்கட அம்மா அதுக்கு விடமாட்டா. என்னோட வாங்க எண்டா நீங்கள் என்னோட வந்திடுவியளா என்ன? அப்பிடி எண்டா வெளிக்கிடுங்க'

'அதெல்லாம் சரிவராது அப்பா. அது எல்லாம் ஆறுதலா யோசிச்சுச் சொல்லுற விசயம். உங்களோட உடன வெளிக்கிட்டு நாங்கள் இப்ப வரமுடியாது. எங்களுக்கு இங்க இருந்து பழகிப் போச்சுது. அதோட எங்களுக்கு அம்மா எப்பவும் வேணும். அதை நீங்கள் மறுக்கக் கூடாது'
'அது எனக்குத் தெரியும். உங்களுக்கு அப்பா தேவையில்ல... அப்பாவோடையும் வரலாம் எண்டுகிற நம்பிக்கை உங்களுக்கு அறவே வராது. அந்த அளவுக்கு அம்மா உங்களக் கழுவி வைச்சிருக்கிறா. எனக்கு இங்க வரேக்கையே உங்களை எல்லாம் மாத்த முடியாது எண்டு தெரியும். அந்த அளவுக்கு இவள் உங்கள மாத்தி இருக்கிறாள் எண்டும் நல்லாய் அறிவன்'
'நான் ஒண்டும் அவங்கள மாத்த இல்லை. அவங்கள் ஒண்டும் இப்ப பால் குடிக்கிற சின்னப் பிள்ளயள் இல்லை. நீங்கள் உடனடியா வெளிய போனியள் எண்டா உங்களை மன்னிக்கிறது பற்றி யோசிக்கலாம். இல்லாட்டி இப்ப செய்யிறதுக்கு நீங்கள் நிச்சயம் கனகாலம் கழி சாப்பிடுவியள். நிலைமையை விளங்கிக் கொள்ளுங்க'
'நான் இதெல்லாம் யோசிக்காமல் வாறத்துக்கு வெறியிலயா இருக்கிறன்? எவ்வளவு காலம் தனியவே ஈ, காக்காய்கூடப் பக்கத்தில இல்லாமல் நடுக்கடலில அந்தரிக்கிற கப்பல் மாதிரி இருந்து இருக்கிறன்? அது எனக்கு நிறையவே யோசிக்க ரைம் தந்திருக்குது. அப்பிடி யோசிச்சு யோசிச்சு விசரே பிடிக்கப் போகுது எண்டு நினைக்கேக்கதான் அதுக்கு ஒரு முடிவு கட்ட வேணும் எண்டுகிற எண்ணம் வந்திச்சுது'
'உங்களுக்கு விசர் பிடிச்சிருக்குது. அதுதான் இவ்வளவு தயிரியமா இப்படிச் செய்யிறீங்க... இல்லாட்டி என்ன நடந்தாலும் ஒரு அப்பா இப்பிடிச் செய்வாரா? அதில இவருக்கு ஒரு யோசின இருந்திச்சாம்! அதுக்கு முடிவு கட்டப் போகிறாராம்! அதுக்கு எதுக்கு இங்க வந்தனீங்கள்? ம்... நீங்கள் இவரை நம்பிப் போனா அவ்வளவுதான். யாரையும் நம்பிப் போகலாம்... ஒரு பைத்தியத்தை நம்பி போக முடியாது. அது உங்களுக்கு விளங்கதே லக்சா?'
'அம்மா இப்ப உதெல்லாம் தேவையே?'
'ஓமடி... அது இப்ப தேவைதான். நீ இவருக்குச் சமாதானம் சொல்லுறாய். வாய ஆவெண்டு பாத்துக் கொண்டு இருக்கிறாய். நான் இவ்வளவு காலமும் சொன்னது எல்லாம் உங்களுக்கு காதில ஏற இல்லைத்தானே?'
'அப்பிடிச் சொல்லு உண்மையை. நீ நஞ்சை விதைச்சிருப்பாய் எண்டதில எனக்கு எள்ளளவும் சந்தேகம் இருந்ததில்லை... ஆனா, நீதான் அதை முழுப்பூசனிக்காய சோத்துக்க புதைக்கிற மாதிரிப் புதைச்சாய். உண்ம ஒரு நாளும் உறங்காதடி முண்டம்'
'ஓ... நான் முண்டம்? இவர் பெரிய அறிவாளி. அந்த உண்ம எனக்குத்தான் தெரியும்'

‘ம்… அது உண்மதான். நான் அறிவாளியாய் இருந்திருந்தால் உசாரா இருந்திருப்பன். உன்னிட்ட எல்லாம் ஏமாந்து இருக்கமாட்டன்’
‘நான் யாரையும் ஏமாத்த இல்லை. நான் பிள்ளயளோட தனியா எவ்வளவு கஸ்ரப்பட்டன் எண்டு உங்களுக்குத் தெரியுமா? அதைத் தனி மனிசியா நிண்டு அனுபவிச்சால்தான் தெரியும். அதெல்லாத்தையும் விட்டிட்டு குற்றம் சொல்ல வந்திட்டார். அதுவும் கள்ளன் மாதிரி வந்து, கையக் காலக் கட்டிப் போட்டுத், துவக்க கையில வைச்சுக் கொண்டு, நியாயம் பேசுறார். இதுதான் உங்கட வீரம் போல?’
‘ஓ நீ பெரிய கெட்டிக்காரிதான். என்னப் பொங்க வைச்சு நீ அதில சூடுகாயப் போகிறாயாக்கும்? இதுகூட விளங்காத பேயன் போல நான் பொங்கி எழுந்து உங்களை அவுட்டு விடுவனாக்கும்? என்னடி… எத்தினதரம் என்ர தலயச் சிரைப்பாய்?’
‘ஐயோ… இதை நான் எங்க போய் சொல்லுறது. இது என்ன சோதன கடவுளே?’
‘என்டி… செய்யிறது எல்லாம் செய்து போட்டு கடவுளக் கூப்பிட்டா அவர் வருவாரா? கடவுள் அவர் எல்லாருக்கும் ஒரு தனிக் கணக்கு வைச்சிருப்பார். எங்களுக்கு என்ன கணக்கு வைச்சிருப்பார் எண்டு யாருக்குத் தெரியும்?’

8

திடீரென வெளிக்கதவு அழைப்புமணி அலறியது. அது அனைவரையும் அதிர்ச்சியில் பந்தாகத் தூக்கி எறிந்து, அந்தரத்தில் பறக்க அதிரடித்தது. சபேசன் ஒரு கணம் இடி விழுந்ததாய் திகைத்துப் போனான். திகைப்புத் தணியக் கோபம் வந்தது. மீண்டும் அழைப்பு மணியை எடுக்க அவன் மனது ஒப்பவில்லை. அதை உடைத்து எறிய வேண்டும் போல் இருந்தது. அவன் பல்கணிக் கதவைத் திறந்து மறைவாக நின்றபடி யார் நிற்கிறார்கள் என்று எட்டிப் பார்த்தான். அங்கே 'A-Møbler' இல் இருந்து அந்தப் பாரவூர்தி வந்திருந்தது. ஏதோ தளபாடம் வாங்கி இருக்க வேண்டும். அது இப்போது வந்தால் என்ன? வராவிட்டால் என்ன? என்கின்ற எண்ணம் சபேசனுக்குத் தோன்றியது. இப்போது எந்த அலைபேசி எண்ணிற்கும் அவர்களால் தொடர்பு கொள்ள முடியாது. அழைப்பு மணியை எடுத்து எதுவும் கதைக்காது விட்டால் வீட்டில் ஆட்கள் இல்லை என்றுவிட்டுத் திரும்பிச் செல்வார்கள். அதுவே சரி என்பதாய் அவன் முடிவு செய்து கொண்டான்.

'அப்பா... யாரப்பா அது? எனக்கு மேசை ஒண்டு 'A-Møbler'-இல இருந்து வரும். அதுவா அப்பா? அதுவெண்டாக் கதவைத் திறவுங்க அப்பா' என்றாள் லக்சா.

'சரியாத் தெரியல்ல' என்றான் சபேசன்.

'அப்பா கதைச்சிட்டுக் கதவத் திறவுங்க. பிளீஸ்'

'திறந்து?'

'மேசைய வாங்குங்க அப்பா'

'ஓ... உள்ள வந்து அவங்கள் இதையெல்லாம் பாக்கவா?'

'அப்பா... என்னுடைய மேசையப்பா..'

'அவருக்கு அதைப் பற்றி என்ன? உங்களைப் பற்றி துளி அக்கறையும் இல்லாதவர்தானே இவர்... அவங்கள் வீட்டில ஆட்கள் இல்லை எண்டிட்டுப் போகப் போறாங்கள். நாங்கள் திரும்பக் காசுகட்டித்தான் அதை எடுக்க வேணும். எங்களைச் சித்திரவதை செய்ய வேணும் எண்டே இவர் இங்க வந்து இருக்கிறார். அது பத்தாதெண்டு மொபலையும் ஏதோ செய்து போட்டார். ஒண்டும் றிங் பண்ணுது இல்லை'

'அப்பா பிளீஸ்... அவங்கள் திரும்பிப் போகப் போறாங்கள். கதவத் திறந்து உள்ளுக்கு வரவிடுங்க அப்பா'

'அவங்கள் போகட்டும் லக்சா'

‘போனா எப்பிடி அப்பா?’ என்றாள் லக்சா.
‘அது உனக்குத் தேவைப்படாது. வேணும் எண்டா நான் வேற வாங்கித்தாரன். இப்ப நீ அதைப்பற்றிக் கவலைப்படாமல் அமைதியா இரு’ என்றான் சபேசன்.
‘ஓ இவர் வாங்கித் தந்திட்டுத்தான் வேறவேல பாப்பார். நீ மோடாட்டம் இவற்ற கதைய நம்புகிறாய். எல்லாம் எங்கட நட்டக் கணக்கிலதான் வரும். விடு சனியன் வந்த நேரம் தொலையிறது எல்லாம் தொலைஞ்சு போகட்டும்’

அவள் சொல்லும் சனியனின் அர்த்தம் சபேசனுக்கு விளங்கினாலும் அவன் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அந்தச் சனியன் இனி அவளில்தான் ஏறப்போகிறது என்பதை அறிவான். அவனுக்குத் தான் செய்வதில் தடுமாற்றம் இல்லை. இதற்கு வேறு முடிவு இருப்பதாயும் அவன் எண்ணவில்லை.

‘விடுங்க நான் அவங்கள நிப்பாட்டுறன்’ என்று டிலிஸ் திமிறிக் கொண்டு எழுந்தான். அது சபேசனுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. இருந்தும் அவன் அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு டிலிஸின் தோழில் கையை வைத்து அழுத்தி அவனை இருத்தினான். அவன் கோபத்தோடு திமிறிக் கொண்டு இருந்தான். கோபத்தில் காலால் உதைத்தான்.
‘என்னத்துக்கு இங்க வந்து எங்களைத் தேவை இல்லாமல் கஸ்ரப்படுத்திறியள்? நல்ல அப்பாவா இருந்தியளா எண்டா அதுகூட இல்லை. அம்மாதான் எங்களை எப்பவும் காப்பாத்தி வந்தா. நல்ல அப்பாவா இதுவரையும் இல்லாத நீங்கள் இண்டைக்கு வில்லனாக வந்து நிக்கிறியள். இதால யாருக்கு நன்மை அப்பா? பிரச்சனை பெரிசாகுமே தவிர உங்களை நாங்கள் நல்ல விதத்தில ஒருநாளும் விளங்கிக் கொள்ள முடியாது. வீட்டுக்கு வந்தியள். பிறகு பயங்கரவாதியள் ஆட்டம் எங்களைக் கட்டி வைச்சு சித்திரவதை செய்யிறீங்கள். தயவு செய்து எங்கள இப்ப அவுட்டு விடுறியளா இல்லையா? எத்தினை தரம் இதை உங்களிட்டக் கேட்டாச்சுது’
‘நான் கேட்டது எதையாவது நீங்கள் செய்திருப்பியளா? இப்ப கொஞ்ச நேரம் பேசாமல் இருங்க... நீங்கள் கேட்கிறதுக்காக இப்ப நான் எதுவும் செய்ய முடியாது. தயவு செய்து திரும்பக் கேக்காதையுங்க’ என்றான் சபேசன்.
‘ஓ நீங்கள் கேட்டு நாங்கள் என்ன செய்யாமல் விட்டு இருக்கிறம்?’
‘ஓ நீங்கள் ஒண்டும் நான் கேட்டுச் செய்யாமல் விட இல்லை எண்டுறியளே?’
‘நாங்கள் என்னப்பா செய்யாமல் விட்டம்?’

'ம்... சொல்லுறன். அப்பாவிட்டக் கேட்டு மொபைல் போன் வாங்கினீங்கள். பிள்ளைகள் என்னோட கதைக்க கேட்கினம் எண்டு அப்பாவும் வாங்கிக் குடுத்தன். ஆனா, நீங்கள் என்ன செய்தீங்கள்? அப்பா வாங்கிக் குடுத்த போனாக இருந்தால்கூட அப்பா போன் செய்தால் அதை எடுக்காமல் விடவேணும் எண்டுகின்ற ஒரு கடுமையான கொள்கை. ஏன் நீங்கள் அப்படிச் செய்தீங்கள் எண்டு எனக்குத் தெரியாது. யார் சொல்லி நீங்கள் அப்படிச் செய்தீங்கள் எண்டு நான் யாரை நினைப்பன்? ஆனால், நீங்கள் மொபைல எடுக்காத போதெல்லாம் என் நெஞ்சில் ஈட்டியே ஏறினமாதிரி வலிக்கும் எண்டு உங்களுக்குத் தெரியுமா? அது அனுபவிக்காமல் தெரியாது. அனுபவிச்சதச் சொன்னாலும் உங்களால விளங்கிக் கொள்ள முடியாது'

'சின்னப் பிரச்சனய பூதக்கண்ணாடி கொண்டு பாக்காதீங்க... நாங்கள் அந்த நேரத்தில விசியா இருந்திருப்பம். அதால போன் எடுக்காமல் விட்டு இருப்பம். அதப் போய் பெரிசாக் கதைக்கிறியள்'

'அதுதான் சொன்னனே.... சொன்னாலும் உங்களுக்கு இந்த வலி எல்லாம் விளங்காது. உங்களுக்கு இது ஒரு தேவையில்லாத வேலை'

'சரி... அது ஏதோ தவறுதலா நடந்திட்டுது. அதுக்குப் போய் இப்ப என்ன செய்ய முடியும்? எங்களக் கட்டி வைச்சிருக்கிறதுக்கு அது எல்லாம் ஒரு காரணமா அப்பா? தயவு செய்து கட்டை அவுட்டு விடுங்க' என்றாள் லக்சா சளைக்காது.

'அப்பிடியா...? தவறுதலா நடந்ததா? தவறுதலா நடக்கிறது எண்டா அது ஒரு நாள் இல்லாட்டி இரண்டு நாள் நடக்கும். ஒவ்வொரு நாளும் நடந்தால் அது தவறுதலா நடக்கிற விசயம் இல்லை. நீங்களா இதைச் செய்தியளா இல்லாட்டி அம்மா சொல்லிச் செய்தியளா எண்டு எனக்குத் தெரியாது. ஆனா, தப்பு எண்டது மட்டும் மாறாது. அதுக்கு இந்தச் சமாதானம் எல்லாம் சரிவராது. அப்பாவுக்கு கலோ சொல்லுறது அவ்வளவு பெரிய வேலையா?'

'சரி அப்பா... நாங்கள் தப்புச் செய்திட்டம். பிள்ளயள் நாங்கள் தப்புச் செய்தால் அதுக்கு என்ன செய்யப் போறியள் அப்பா? இப்பிடி எங்கள கட்டி வைச்சிருக்கிறது உங்களுக்கே சரியாப்படுகுதா? யோசியுங்க அப்பா'

'உங்களக் கட்டி வைக்க வேணும் எண்டு நான் கனவிலும் நினைச்சதில்ல... என்னை அந்த நிலமைக்கு தள்ளீட்டியள். எனக்கு இப்ப வேற வழி இல்லை. நான் விரும்பிச் செய்ய இல்லை. ஆனா, அந்த நிலமைக்குக் கொண்டு வந்திட்டியள். ரெலிபோன் எடுக்காதது மாத்திரம் உங்கட புறக்கணிப்பு இல்லை'

'வேற என்ன எல்லாம் நினைச்சு வைச்சிருக்கிறியள் அப்பா? நீங்கள் குழந்தப் பிள்ளையள் மாதிரிக் குற்றம் கண்டு பிடிக்கிறதில குறியா இருக்கிறியள். அது உங்களுக்கு விளங்குதா அப்பா?'

‘நான் அப்படி நினைக்க இல்லை. இந்தப் புறக்கணிப்பை அப்பாவால சாதாரணமாய் எடுத்துக் கொள்ள முடியாது. இது உங்களுக்கு விளங்காது. இதை உங்களுக்கு விளங்கப்படுத்தவும் முடியாது எண்டு ஏற்கனவே சொன்னன்’

‘ஐயோ! என்னப்பா முடிவு இதுக்கு?’ என்றாள் லக்சா சலிப்புடன்.

‘பொறுமையா இரு. ரெலிபோன்தான் முகம் தெரியாத புறக்கணிப்பு. ஆனா, நீங்கள் நேரையே பாத்திட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போனால் அதை என்ன சொல்லுறது? நீங்கள் அதைச் செய்ய இல்லையா? அப்பிடி நீங்கள் செய்யேக்க அப்பாவுக்கு எப்பிடி இருக்கும் எண்டு யோசிச்சு இருக்கமாட்டியள். ஆனா, அப்பா அந்த அனல் மிதிப்ப காணுற நேரமெல்லாம் அனுபவிச்சு வந்தார். அதனால அப்பாவுக்கு அந்த வேதனை தெரியும். அதை என்னால லேசில மறக்கவும் முடியாது’

‘நாங்க இப்ப என்ன செய்கிறது அப்பா?’

‘எதுவும் செய்ய வேண்டாம். எது நடக்க வேணுமோ அது தானாய் நடக்கிற நேரம் நடக்கும்’

9

திடீரென வெளிக் கதவு மணி மீண்டும் பேய் போல இடவெளி இன்றி அலறியது. பருந்தினைக் கண்ட தாய்க்கோழி போல அனைவரும் திடுக்குற்றார்கள். சபேசன் திடுக்குற்றதோடு அனல் பட்ட மயிர் கொட்டி போல் கோபத்தில் துடித்தான். அவனுக்கு மண்டையைப் பிளந்து ஆழ் உறை பனிக்கட்டியை அதற்குள் செருகியதான வேதனை மேலெழுந்தது. வந்தது தொடக்கம் இடையூறுகள் வந்து கொண்டே இருப்பது அவனுக்குப் புண்ணில் மிளகாய் அரைத்துப் பூசிய அந்தரத்தைத் தொடர்ந்தும் தந்தது. இதை இடையூறு இன்றி முடிக்க வேண்டும் என்கின்ற அவன் எண்ணத்தில் இடையூறுகள் மீண்டும் மீண்டும் குறுக்கிடுவதை அறவே வெறுத்தான்.

தூறல் மழைபோல வெளிக் கதவு மணி தொடர்ந்து இடைவெளி இல்லாது அலறியது. முதலில் எடுக்காது விடலாம் என்று எண்ணிய சபேசனை அது மேலும் வெறுப்பேற்றியது. கோபம் தலையைக் குடைய அவனுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. வாயிற் கதவைப் பார்ப்பதும் சோபாவில் இருப்பவர்களைப் பார்ப்பதுமாய் நின்றான்.

தொடர்ந்தும் அழைப்புமணி ஒலிக்க அவனால் அதைப் பொறுக்க முடியவில்லை. கோபத்தோடு வாசல் கதவை எட்டினான். அந்தக் கணமே திடீரென நிதானித்தவன் அப்போது கோபமாக வார்த்தைகளை விடக்கூடாது என்கின்ற உண்மை உறைக்க, தன்னை நிறுத்தி ஆசுவாசப்படுத்திக் கொண்டான். பின்பு அழைப்புமணியைக் கையில் எடுத்து,

'ஹலோ?' என்றான்.
'நான் விசாளி' என்று ஒரு பெண் குரல் வந்தது. 'யார் இந்த விசரி இப்ப?' என்கின்ற கோபம் முதலில் பீரிட்டது. பின்பு யோசித்தான். இவள் நந்தினியின் நண்பிகளில் ஒருத்தி. பிரிவு ஏற்பட்ட பின்பு பிணைப்பை உண்டாக்கிக் கொண்டவள். அதனால் சபேசனை அவளுக்கு அவ்வளவாகத் தெரியாது. சபேசனுக்கும் அவளைப் பெரிதாக தெரியாது. சபேசனை தெரியக்கூடிய மாதிரி எந்தப் படங்களையும் நந்தினி வீட்டில் கொளுவி வைத்திருப்பதும் இல்லை. மனிதர்களுக்குள் உண்டாகும் இணைவும் பிரிவும் எவ்வளவு விசித்திரமானவை? இணையும் பொழுது

எத்தனை விசித்திரங்களைச் செய்கிறார்கள்? பிரியும் பொழுது அதற்கு எதிராக எத்தனை விசித்திரங்களைச் செய்கிறார்கள்? அப்படித்தான் சபேசனுக்கும் நந்தினிக்கும் இடையிலும் நடந்தது. உயிரே என்பவர் எதிரியாக மாறும் பொழுது அது முதலில் நம்பமுடியாத, ஜீரணிக்க முடியாத அதிர்ச்சியாகும். நம்ப முடியாமல் கோபத்தால் நாடிகள் முறுகும். நீயே இப்படிச் செய்தால் என்கின்ற வன்மம் உண்டாகும். சுயமரியாதையும், பிடிவாதமும், பிரிவு என்னும் வெடிப்பைக் கிடங்காக்கி, அதையே நிரந்தரமாக்கிவிடும். சபேசன் இந்தச் சுழல்களுக்குள் அகப்பட்டு, அதில் தோற்றுப் போனவன். தோற்காது தப்பிக்க வேண்டும் என்று முயற்சி செய்தான். ஒற்றைக் கையைத் தட்டுவது போலத் தோல்வியே அவனுக்குப் பரிசாகக் கிடைத்தது.

'என்ன சத்தம் இல்லை?'

ஞாபகங்களில் திடீரெனத் தொலைந்தவனை அவளது குரல் மீண்டும் இந்த உலகிற்கு இழுத்து வந்தது. அவன் நிலைமையை உணர்ந்தவனாக,

'யார் விசாளி? உங்களுக்கு என்ன வேணும்?'

'ஓ... நீங்கள் யார் புதிசா நந்தினி வீட்டில...? நந்தினி எங்க? நான் அவவோட கதைக்க வேணும்' அவள் குரலில் ஒருவித எதிர்பாராத பரபரப்பும் ஆர்வமும் இருந்தது. அதற்கு என்ன அர்த்தம்? இங்கு வாழும் சில பெண்களுக்கு இருக்கும் எதிர்பார்ப்பாக இருக்குமோ எனச் சபேசன் எண்ணிக் கொண்டான். அது இயற்கையானது. மனிதர்களுக்கான அடிப்படை உரிமை என்பது சபேசனுக்கு விளங்கியது.

'நந்தினி குளிக்கிறாள்'

'நான் நந்தினியோட கதைக்க வேணும்'

'அவ குளிக்க நேரமாகுமே...? இன்னொரு நேரம் திரும்ப வந்து அவவோட கதைக்கலாமே? இங்க வந்தும் தேவையில்லாமல் வெயிற் பண்ண வேணும்'

'பறுவாய் இல்லை. நான் அவவோட கட்டாயம் கதைக்க வேணும். அது முக்கியம். வெயிற் பண்ணுறதில எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை'

'ம்... சரி... உங்களுக்கு வெயிற் பண்ணுறதில நிச்சயமா பிரச்சனை இல்லையா?' மீண்டும் சபேசன் கேட்டான்.

'இல்லை'

அவள் விடுவதாக இல்லை. 'இதைத்தான் விதி என்பார்களோ?' என்று சபேசனுக்குத் தோன்றியது. அவளை விட்டாலும் சிலவேளைப் பிரச்சனை ஆகிவிடும் என்பது அவனுக்கு விளங்கியது. என்ன செய்வது என்று மீண்டும் யோசித்தான். வேறு வழிகள் இருப்பதாய் அவனுக்கு விளங்கவில்லை. அப்படி இருந்தாலும் அது அவனது கட்டுப்பாட்டை

மீறியதாக இருக்கும். அவன் தனது கட்டுப்பாட்டிற்குள் அதை வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினான்.

‘என்ன யாரும் இருக்கிறியளா?’
‘ஓம்... ஓம்..’
‘அப்ப நான் வரலாமா?’
‘வாங்க... வாங்க..’

பல்லைக் கடித்த வண்ணம் வெளிக்கதவு திறக்கும் ஆழியை அழுத்தினான். வெளிக்கதவு திறந்து அவள் உள்ளே வரும் சத்தம் கேட்டது. தனது பையிலிருந்த துப்பாக்கியை எடுத்துத் தன் முதுகுபுறமாக அதை மறைத்து வைத்துக் கொண்டான். கதவு ஓட்டை வழியே அவள் தோன்றுகிறாளா என்று பார்க்கத் தொடங்கினான்.

கணங்கள் யுகங்களாக, காலம் சேற்றில் புதைந்த இரதமாக நேரம் நகர மறுத்து அடம்பிடித்தது. அவளின் வரவின் சுணக்கம் அவனை மேலும் ரௌத்திரம் கொள்ள வைத்தது... வரட்டும். வந்தபின்பு அவளை உள்ளே இழுத்துத் தலையில் போட வேண்டும் என்று ஒருகணம் அவனுக்கு எண்ணத் தோன்றியது. பின்பு அது மகா தப்பென உணர்ந்தவனாய் தன்மீது தானே கடிந்து கொண்டான். குறி தப்பக்கூடாது என்பது அவன் கொள்கை. அவன் தனது கொள்கையிலிருந்து மாற விரும்பவில்லை.

மேற்கொண்டு சோபாவில் இருப்பவர்கள் சம்பாசனையைக் கேட்டுவிடக் கூடாது என்பதால் ஹோல் கதவைச் சாத்தினான். ஹோலில் இருப்பவர்கள் சத்தமிட்டால் அது விசாளிக்குக் கேட்டுவிடும் என்பதும் அவனுக்கு உறைத்தது. விசாளி கேட்டுவிட்டு உள்ளே வராவிட்டால் அவளைத் துரத்திக் கொண்டு வெளியே ஓடுவது நடக்காத காரியம். அவள் உள்ளே வந்தால் புலியே கூட்டிற்குள் அகப்பட்டது மாதிரி. வெளியே போவென்று திறந்துவிட முடியாது. அதற்கு இனி எந்த விதியும் இடம் கொடுக்கக்கூடாது.

மின் தூக்கி வந்து நிற்கும் போது அது உண்டு பண்ணும் அதன் தேசிய இசை கேட்டது. சபேசன் அவசரமாகக் கண்ணை மீண்டும் கதவு ஓட்டையில் பொருத்தி அது அங்கிருந்து அகலாது பார்த்துக்கொண்டான். அவள் முழங்காலில் கிழிக்கப்பட்ட, வெளிறிய, நீலநிற ஜீன்சும், சிவப்பு நிறத்தில் ஒரு ஜக்கெற்றும் அணிந்து இருந்தாள். சபேசனுக்கு அதைப் பார்க்கச் சிரிப்பு வந்தது. இப்போது சிறு பிள்ளைகள் தொடக்கம் கிழடுகள் வரைக்கும் இப்படித்தான் அலைகிறார்கள். அதை அவர்கள் நவீனம் என்கிறார்கள். ஓட்டையால் காட்டுவதில் பெண் சுதந்திரம் இருக்கிறது என்று சில பெண்கள் எண்ணுகிறார்கள். அதையே பகட்டாக

எண்ணும் ஆண்களும் உண்டு. ஒட்டை உள்ளதை அணிந்தால் அவள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் வருவாள் என்று எண்ணும் ஆண்களும் உண்டு. இப்படி தப்பிதமான மனிதக்கற்பிதங்கள் பல. ஓட்டை உள்ள ஆடை அணிந்த பெண்ணை வன்மமாகப் பார்க்கும் ஆண் காமுகனே... அதற்காக ஓட்டை போட்ட உடையுடன் பெண் அலைந்தால் அவளை என்னவென்று சொல்வது? பின்பு ‘இவள் எப்பிடி இருந்தால் என்ன?’ தான் வந்த காரியத்தில் குறியாய் இருப்பதே முக்கியம் என்பதை எண்ணியவனாய் அவளைப் பார்த்தான்.

அவள் கதவின் முன்பு வந்து நின்றாள். என்ன நினைத்தாளோ தெரியவில்லை தன்னை ஒரு முறை அவசரமாகச் சரி செய்து மார்புப் பகுதி ஜக்கெற்றை இழுத்துவிட்டுக் கொண்டாள். அது கவர்ச்சியை உண்டு பண்ணியதாகவே சபேசனுக்குத் தோன்றியது. இந்த இரசிப்பிற்கு இப்போது நேரம், இடம், ஆள் சரிப்பட்டு வராது என்பதும் விளங்கியது. இது அவற்றைக் கடந்து வரவேண்டிய நேரம். அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

அவள் கதவு மணியைத் தேடினாள்.

அவளிற்கு அதிர்ச்சி கொடுத்து உள்ளே வரவைக்க வேண்டும் என்பதோடு சிந்திக்க நேரம் கொடுக்காத கதியில் அந்த அலுவல் நடக்க வேண்டும் என்று சபேசன் முடிவு செய்து கொண்டான். சபேசன் அதற்கு மேல் தாமதிக்கவில்லை. சட்டென வேகமாகக் கதவைத் திறந்தான். அவள் இதை எதிர்பார்க்கவில்லை. அதிர்ந்து, விறைத்து போய்விட்டாள். அவளிற்கு மேலும் நேரம் கொடுக்க விரும்பவில்லை. பார்த்து ‘ஹலோ!’ என்றான். அவள் இதை எதிர்பார்க்கவில்லை. நெளிந்தாள். பின்பு,

‘உங்கள நான் இதுக்கு முதல்ல இங்க பாத்ததே இல்லை’ என்று இழுத்தாள்.
‘உள்ள வாங்க சொல்லுறன்’ என்று கதவைத் திறந்து கண்ணைக் காட்டினான். அவளும் உள்ளே வந்தாள். ஜக்கெற்றைக் கழற்றிக் கொழுவத் திரும்பினாள். அதுவே சரியான சந்தர்ப்பம் என்பது அவனுக்கு விளங்கியது. சட்டென வேகமாக அதை எடுத்து அவள் பின் தலையில் ஒன்று போட்டான். அவள் ‘ஆ..| என்கின்ற சிறு அலறலுடன் திரும்பி அவன் கையில் விழுந்தாள். அவளையும் நாகாஸ்திரத்தால் பிணைப்பது போலப் பிணைத்து, வாயில் ‘RS PRO PE Coated Silver Duct Tape’ துண்டை ஒட்டிச் சோபாவிற்குக் கொண்டு செல்ல நினைத்தவன், சம்பந்தப்படாத இவள் எதற்கு அங்கே என்கின்ற கேள்வி எழ அவளை படுக்கை அறைக்கு தூக்கிச் சென்றான். படுக்கையில் அவளைப் படுக்க வைத்துவிட்டு அவளது கைப்பையை எடுத்தான். அதை திறக்க மேலேயே

அலைபேசி இருந்தது. அதைச் செயலிழக்கச் செய்தான். பாதுகாப்பிற்காய் கதவைப் பூட்டிக் கொண்டு ஹோலுக்குச் சென்றான்.

*

சோபாவில் இருந்தவர்களுக்கு யாரோ தேடி வந்தது போல இருந்தது. அவர்களுக்கு என்ன பதில் சபேசன் கூறினான் என்பதோ, அவர்கள் எங்கே போனார்கள் என்பதோ தெரியாது. ஏதாவது சொல்லிச் சமாளித்திருப்பான் என்றே நந்தினி எண்ணினாள். அவளையும் உள்ளே இழுத்துக் கட்டிப் போட்டிருப்பான் என்கிற எண்ணம் அவளிடம் இருந்ததில்லை. அவன் தனது அலுவல்களை முடித்துவிட்டு குளியல் அறைக்குச் சென்றுவிட்டு வந்தான்.
கோலில் அவர்கள் சும்மாய் இருக்கவில்லை. டிலிஸ் நிலத்தில் வீழ்ந்து கிடந்தான். அவனைப் பார்க்கச் சபேசனுக்குச் சிரிப்பு வந்தது. மறுகணமே வாழ்வை எண்ண இதயம் வெடித்தது. ஒரு கணம் பேசாமல் திரும்பிப் போய்விடலாமோ என்று திடீரெனத் தோன்றியது. மறுகணம் அசுரன் விழித்தானா அல்லது அர்த்தம் அற்றதிற்கு ஒரு முடிவு வரவேண்டும் என்று நினைத்தானோ தெரியவில்லை டிலிஸ்சைத் தூக்கி சோபாவில் இருத்தினான். அவனது தலையைத் தடவிவிட்டு,

'கொஞ்சம் அமைதியாய் இரு. அம்மா கண்ணைக் காட்டினால் நீ கட்டை அவுக்கலாம் எண்டு முயற்சி செய்யாத. செய்தது எல்லாம் காணும்'
'நீங்கள் செய்யிறதை விடவா அப்பா?'
'நான் இதெல்லாம் செய்ய வேணும் எண்டு ஒரு நாளும் நினைக்க இல்லை. முதல்ல அம்மா. அதுக்குப்பிறகு நீங்கள். என்ன விளங்கிக் கொள்ளாட்டியும் பறுவாய் இல்லை... ஆனா, விலகாமல் இருந்து இருக்கலாம். விலகினாலும் பறுவாய் இல்லை... நீங்கள் என்ன காரணம் எண்டு தெரியாமல்... ஒருபக்க நியாயத்தை மட்டும் கேட்டுத் தீர்ப்பு வழங்கினது போல... ஒரு தீர்ப்பு வழங்காமல் இருந்திருக்கலாம். எனக்குத் தரக்கூடாத தண்டனைய நீங்கள் தந்தீட்டியள்'
'நீங்கள் சொல்லுற மாதிரி நாங்கள் ஒண்டும் செய்ய இல்லை. உங்களுக்குள்ள பிரச்சனை. அதால நாங்கள் விலகி இருந்தம். அவ்வளவுதான் அப்பா'
'உங்களுக்கு அது விளங்க இல்லை. அணு அணுவாய் அந்த வேதனைய அனுபவிச்ச எனக்கு மட்டும்தான் அது தெரியும்'
'அப்பிடி என்னப்பா செய்தம்?'
'உங்களுக்கு அதுகூட ஞாபகம் இல்லையா? ம்... இருக்காது. உங்கட அம்மா அப்பிடி உங்கள மாத்தி இருக்கா'

'சும்மா அம்மாவையே குற்றம் சொல்லாதேங்க அப்பா. அதைவிட நாங்கள் ஏதும் செய்து இருந்தால்தானே ஞாபகம் இருக்கும்'
'ஓ அப்பிடியா? ரெலிபோன் எடுத்தாலும் அதுக்குப் பதிலளிக்காமல் இருந்ததாவது ஞாபகம் இருக்குதா?'
'ம்... அதுக்கு என்ன? அது ஒரு சின்ன விசயம்'
'பிறகு என்ன செய்ய முடியும்? சரி உங்கட மெயில் ஐடிக்கு மெயில் அனுப்பிப் பார்த்தன். ம்... ஒரு பதிலும் எனக்கு வர இல்லை. உங்களுக்கு அது ஒரு பிரச்சனையாக இருந்து இருக்காது. ஆனா, நான் நிம்மதி இல்லாமல் அலைஞ்சன். உங்கட பேஸ்புக் ஐடி எடுத்து தொடர்பு கொள்ள முயற்சித்தன். நீங்கள் எதுக்கும் பதில் அனுப்பவே இல்லை. சரி எண்டு வீட்டை வந்து ஹோலிங் பெல் அடிச்சா, எந்தப் பதிலும் வராது. நான் எவ்வளவு நேரம் நிண்டு அடிச்சுப் பார்த்திருப்பன் தெரியுமே?'
'சரி அதுக்கு என்ன அப்பா? வேண்டாம் எண்டா விடுகிறதுதானே அப்பா'
'அப்பிடி என்னால இருக்க முடிய இல்லை. நித்தம் நித்தம் எப்பவும் உங்கட நினைவாகத்தான் இருக்கும். ஆனா, உங்கள வருசக்கணக்காக் காண முடியாது. பைத்தியம் பிடிக்கும். வாழ்க்கையே தண்டனையானதை நான் மட்டுமே அனுபவிக்க முடிஞ்சுது. உங்களைக் கையில தூக்கி டைப்பர் மாத்தினது உங்களுக்குத் தெரியாது. எனக்கு அதை மறக்க முடியாது. அதில இருந்து தப்பிக்க முடியாத நிரந்தரத் தண்டனையா ஒவ்வொரு கணமும் நகரும். அந்தச் சிறைக்கு எந்தச் சுவரும் இல்லை. ஆனா, எல்லாமே சுவராக இருந்திச்சுது. நான் என்ன செய்ய முடியும்? என்னை யார் விளங்கிக் கொள்ளுவினம்? நித்தம் நித்தம் சாகோணும் எண்டுதான் நினைச்சன். ஆனா, ஏதோ ஒண்டு என்னைத் தடுத்திச்சுது. அது என்ன எண்டு விளங்குகிறதுக்குக் கொஞ்ச நாள் எனக்கு எடுத்திருக்கு'
'என்னப்பா சிலவேளை 'என்கிரிப்ரெட் டொக்குமென்ற்' மாதிரிக் கதைக்கிறியள். கதைக்கிறதை விளங்கக் கதையுங்க'
'நான் எப்பிடிக் கதைச்சாலும் அது உங்களுக்கு விளங்காது. அது இனி விளங்க வேண்டியதும் இல்லை'
'அப்பா யார் வந்தது? யாரோடையோ கதைச்ச மாதிரிச் சத்தம் கேட்டிச்சுது?' என்று கேட்டாள் லக்சா.
'அது ஒண்டும் இல்லை. அவை திரும்பிப் போயிட்டினம்' என்றான் சபேசன்.
'இப்ப விசாளிதானே வாறம் எண்டவள். அவள் வந்தாத் திரும்பிப் போகமாட்டாளே? இவர் பொய் சொல்லுறார் லக்சா' என்றாள் நந்தினி.
'வாயத் திறக்காத. திறந்தா மொன்னியில போட்டிடுவன்...' சபேசன் கோபத்தில் பாம்பு போலச் சீறினான்.

வழமையாக என்றால் நந்தினி நிறையக் கதைத்து இருப்பாள். ஆனால் நிலைமை இன்று அப்படி அல்ல... சபேசன் தன்னைக் கட்டி

வைத்திருக்கிறான். அதைவிடக் கையில் துப்பாக்கி ஒன்றைச் செங்கோலாய் தூக்கித் திரிகிறான். கோபத்திலும், வெறுப்பிலும், விசர் பிடித்தவன் போல வந்து நிற்கிறான். சபேசன் இப்போது என்ன செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அதனால் தான் அமைதியாகச் சிந்திக்க வேண்டும் என்பது விளங்கியது. எப்படியாவது இவனிடம் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தவிர அவளது மூளைக்குள் வேறு எதுவும் ஓடவில்லை.

'அது எப்படி?' அந்தக் கேள்வி அவளுக்குச் சவால் விட்டது. சபேசன் நந்தினியோடு முறுகியதைப் பார்த்ததும் லக்சாவும், டிலிசும் பேச்சிளந்து போனார்கள். அவர்களுக்கும் அப்பாவின் கோபம் பயத்தை உண்டு பண்ணியது. அப்பா வழமையாக இருந்தது போல இன்று இல்லை. எதற்கும் கவனமாக இருக்க வேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றியது. எப்படியாவது அப்பாவைச் சமாதானப்படுத்தி வெளியே அனுப்பிவிட்டால் மேற்கொண்டு எந்தக் காலத்திலும் இந்த கட்டடத்தின் பக்கமே தலைவைக்காது கவனமாகப் பார்த்துக் கொள்ளலாம். அதற்கான பொறி முறைகள் நிறையவே இங்கு உண்டு. அதை ஏற்கனவே செய்திருக்கலாம். ஆனால், அப்பா பொதுவாகப் புத்தனைப் போல அமைதியானவர். வன்முறையைக் கையில் தூக்கியதாக அவர் கடந்தகால வரலாறு இல்லை. அவர் புத்தர் தியானத்திலிருந்தது போல நீண்டகாலம் அமைதியாகவே இருந்தார். ஆனால் இப்படித் திடீர் என்று மாறுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இன்று வன்முறைப் பிசாசாக இங்கே வந்து நிற்கிறார். இப்போது அவர் தலைகீழாய் மாறிவிட்டார். வீட்டிற்குத் துப்பாக்கியோடு வந்து எங்களையே பயமுறுத்துகிறார். பயங்கரவாதி போல வெருட்டுகிறார். இவரை எப்படிச் சமாளித்து வெளியே அனுப்புவது என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டு இருந்தார்கள். பின்பு ஏதாவது கதைத்து அப்பாவைச் சமாதானப்படுத்தி வெளியேற்றுவது என்றால் அது தன்னால் மட்டுமே முடியும் என்கின்ற உண்மை விளங்கிய லக்சா மெதுவாகக் கதைக்கத் தொடங்கினாள்.

'அப்பா பிளீஸ். எங்களை விடுங்க அப்பா. இப்ப நீங்கள் வந்து இரண்டு மணித்தியாலம் ஆகியிருக்கும். பிளீஸ் அப்பா... தயவு செய்து எங்களைப் பற்றியும் கொஞ்சம் யோசியுங்க'

'பிள்ளைக்கு ரீ வேணுமா? ரீ போட்டரவா?'

'அது இல்லை அப்பா'

'அப்ப பிள்ளைக்கு என்ன வேணும்?'

'கட்டை அவுட்டு விடுங்க அப்பா. அதுதான் இப்ப எனக்கு வேணும்'

'கட்டையா? கொஞ்சம் பொறுங்க... நான் ஒழுங்கு செய்கிறன்'

‘என்னப்பா ஒழுங்கு செய்கிறது? கட்டை அவுட்டு விடுங்க அப்பா. இதுக்கு வெளியில இருந்தா ஆட்கள் வருவினம்? கதவை வேற பூட்டி வைச்சிருக்கிறியள்...’ லக்சா அந்தரத்தோடு கதைத்தாள்.
‘சும்மா நொய் நொய் எண்டாமல்... கொஞ்ச நேரம் அமைதியாய் இரு லக்சா...’ அவன் பதிலும் சூடாய் வந்தது.
‘அபபா...?’
‘ம்... அப்பா... இப்பிடி அன்பா நீ எப்ப கூப்பிட்டு இருக்கிறாய்? நான் இதுக்காக எவ்வளவு காலம் ஏங்கி இருப்பன் தெரியுமா? கிடைக்க வேண்டிய நேரத்தில கிடைக்காமல் போகிறது, பிறகு நேரம் மாறிக் கிடைக்கிறதால எந்தப் பிரயோசனமும் இல்லை’
‘ஏன் அப்பா நான் கூப்பிட்டதே இல்லையா?’
‘எனக்கு அப்பிடி எந்த ஞாபகமும் இல்லை. உனக்கு ஞாபகம் இருந்தால் சொல்லு பாப்பம். நல்ல காலம் இன்னும் எனக்கு அறளை பேர இல்லை’
‘அதை விடுங்க அப்பா. இப்ப எங்களை அவுட்டு விடுங்க’
‘உன்னால பதில் சொல்ல முடியாது லக்சா. அக்சிடென்ரா ஆளையாள் பார்க்கிறது எண்டாலே சிலவேளை பல மாதங்கள் ஆகும். சிலவேளை பல வருசங்கள் செல்லும். அதைப்பற்றி எல்லாம் நீங்கள் கவலைப்பட்டு இருக்கமாட்டியள். உங்களுக்கு அந்த ஏக்கம், வலி இருந்திருந்தால்தானே அது தெரியும். நான் நித்தமும் ஏங்குவன். என்னால முடியல்லையடி லக்சா...’
‘அதுக்கு இப்ப என்ன செய்கிறது? இனி நாங்கள் உங்களோட கதைக்கிறம் அப்பா. இப்ப எங்களை அவுட்டு விடுங்க அப்பா’
‘என்னால இதை எல்லாம் நம்ப முடியாது லக்சா. ஆகாயத்தில கோட்டை கட்டி அதில வாழுகிறதுக்கு எனக்கு இப்ப விருப்பம் இல்லை’

10

திடீரென மீண்டும் அழைப்புமணி அலறியது. எல்லோரும் மீண்டும் அதிர்ந்து போனார்கள். சபேசனுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக இருந்தது. அவனுக்கு அத்தோடு கோபமும் பீரிட்டது. துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு பல்கணிக் கதவுப்பக்கம் ஏவுகணை போல் சென்றான். அவன் துவக்கோடு போன வேகத்தைப் பார்த்த அனைவரும் அதிர்ந்து போனார்கள். சபேசன் வீட்டிலிருந்து கீழ்நோக்கிச் சுட்டுவிடுவானோ என்று நினைத்து உறைந்து போயினர். அவன் அப்படித்தான் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சென்றான்.

சபேசன் பல்கணியில் நின்று எட்டிப் பார்த்தான். 'A-Møbler' வாகனம் அது. அது ஏன் மீண்டும் திரும்பி வந்தது? வழமையாக அவர்கள் திரும்பி வரமாட்டார்கள். சிலவேளைப் புதிதாக வேலைக்குச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அதனால் மீண்டும் திரும்பி வந்திருக்கலாம். ஆனால், வரக்கூடாத நேரத்தில் வந்து இருக்கிறார்கள். சபேசனுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. எப்படி அவர்களைத் திருப்பி அனுப்புவது என்பதும் விளங்கவில்லை.
மீண்டும் அவர்கள் அழைப்பு மணியை அழுத்தினார்கள். இப்போது சபேசன் கோபமாக வாசல் பக்கம் ஓடினான். அழைப்பு மணியின் பேசும்--கேட்கும் பகுதியைத் தூக்கி உருவி இழுத்தான். அது கையோடு வந்தது. அத்தால் அவர்கள் அழைப்பு மணியை கீழிருந்து அழுத்தினாலும் மேலே எந்தச் சத்தமும் கேட்கவில்லை.
மீண்டும் சபேசன் பல்கணிக்கு ஓடி, அங்கு மறைந்து நின்று, அவர்கள் கீழே என்ன செய்கிறார்கள் என்று பார்த்தான். அவர்கள் மேலே சத்தம் கேட்காது என்பதை அறியாது அழைப்பு மணியை அழுத்துவதும் கதைப்பதுமாய் காலத்தைப் போக்கினர். சபேசனுக்குக் கீழ் நோக்கிச் சுடவேண்டும் போல் இருந்தது. அப்படிச் செய்தால் தனது திட்டங்கள் எல்லாம் பாழாய் போய்விடும் என்பது உறைத்தது. அவன் அதைப் பற்றிச் சிந்திப்பதை அத்தோடு விட்டான். அவர்கள் தொடர்ந்தும் அங்கே நின்றார்கள். சிறிது நேரத்தில் அவர்கள் அலுத்துப் போய் இருக்க வேண்டும். வண்டி நகரத் தொடங்கியது. அது சபேசனுக்குப் பெரும் நிம்மதியைத் தந்தது. அவன் நிதானமாக எட்டி வாகனம் போய் மறைகிறதா என்று பார்த்தான். அது போய் மறைந்ததும் பல்கணிக் கதவைப் பூட்ட எண்ணிய போது டிலிஸ் 'Hjelp oss Hjelp oss (எங்களக் காப்பாத்துங்க... எங்களக் காப்பாத்துங்க...)' என்று கத்தினான்.

சபேசனுக்கு அவனைப் பார்க்க முதலில் சிரிப்பு வந்தது. அவன் வேகமாக உள்ளே பாய்ந்து கதவை அடித்துச் சாத்தினான். பின்பு கதவைப் பூட்டி விட்டு டிலிசிடம் வந்தான்.

‘என்னை ஒண்டும் செய்யாதேங்க அப்பா... என்னை ஒண்டும் செய்யாதேங்க அப்பா..’ என்று சபேசனைப் பார்க்கத் துணிவற்றவனாய் கெஞ்சினான். அப்பா ஏதும் செய்து விடுவாரோ என்று நினைத்துப் பயந்தான்.

சபேசனுக்குச் சிரிப்பு வந்தது. அடுத்த கணமே கண்கள் திரையிட, பார்வை மறைந்து போக, கவலை அழுகையாக உடைந்து ஓடியது. இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சி அவர்களை உறை நிலைக்குக் கொண்டு சென்றது. உண்மையில் சபேசனால் யாரையும் காயப்படுத்தவோ அல்லது கவலைப்படுத்தவோ முடியாது. அதுவும் அவனருமைப் பிள்ளைகளை? இன்று அவனை இக்கட்டு மூச்சுவிட முடியாது சூழ்ந்து கொண்டது. பிள்ளைகளைப் பார்க்கும் பொழுது அவனிற்கு என்ன செய்வது என்று இடைக்கிடையே குழப்பமாக இருந்தது. அவன் டிலிசின் தலையில் கைவைத்துத் தடவினான்.

நந்தினிக்குச் சபேசனைப் பார்க்க இப்போது அதிக பயமாக இருந்தது. இன்று இவன் என்னைக் கொன்று விடுவானோ என்கின்ற சந்தேகம் அவளுக்கு உண்டாகியது. பிள்ளைகளை அவன் ஏதும் செய்யமாட்டான். அவ்வளவு பாசம் அவர்கள் மேல் அவனுக்கு இருக்கிறது என்பதை அவள் அறிவாள். அவர்களைப் பிரித்து வைத்ததில் அவனுக்கு தன்மீது கொலைவெறிக் கோபம் இருக்கும் என்பது அவளுக்குத் தெரியும். அதனால் ஏதாவது செய்வது என்றால் தன்னையே ஏதாவது செய்வான் என்பதை அவள் உறுதியாக நம்பினாள். தன்னை இவன் கொலை செய்தால் ‘பிள்ளைகளை பின்பு யார் பார்த்துக் கொள்வார்கள்? என்னால் உயிரினும் மேலாக நினைத்த செல்வங்களான பிள்ளைகளை விட்டுப் பிரிந்து, இறந்து, இவ்வுலகில் இல்லாது போக முடியுமா?’ என்று அவள் எண்ணினாள். அப்படி ஒன்றை அவளால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை. அதை நினைத்தாலே மூச்சு முட்டுவது போல இருந்தது. ‘சபேசனோ பேய் போல அங்கு பாய்கிறான். இங்கு பாய்கிறான். துப்பாக்கியைக் காட்டி அனைவரையும் வெருட்டுகிறான். என்ன செய்வது? இவனிடம் இருந்து எப்படித் தப்பிப்பது?’ என்பதற்கு அவளிடம் சரியான விடை இருக்கவில்லை. தான் கதைத்து அவனைச் சமாதானப்படுத்த முடியாது என்பதில் அவளுக்கு எந்தச் சந்தேகமும் கிடையாது. டிலிசுக்கு ஒழுங்காகக் கதைக்கும் பொறுமையும் அறிவும் கிடையாது. லக்சா முயன்றாலும் அவளால் அவனைச் சமாதானப் படுத்தும் அளவிற்குக் கதைக்க முடியவில்லை. ‘இவ்வளவு நேரம் தோற்ற பின்பு எப்படி இந்த

மனிதனைச் சமாதானம் செய்வது...?' அவளால் எதுவும் இயலாது என்று தோன்றிய போது இயற்கையான வடிகால் இமைகளைத் தாண்டிக் கண்ணீராகப் பாய்ந்தது. அவள் அந்த நிலையை நினைத்து விம்மி விம்மி அழுதாள்.

இவ்வளவு நேரமும் துணிவாக இருந்த அம்மாவே விம்மி விம்மி அழுவதைப் பார்த்த டிலிசும், லக்சாவும் கதிகலங்கிப் போய்விட்டார்கள். அவர்கள் 'அம்மா அழாத... அம்மா அழாத..' என்று கெஞ்சத் தொடங்கினார்கள்.

*

சபேசனுக்கு அதற்கு மேலும் பிள்ளைகள் அழுவதையோ, அந்தரப்படுவதையோ பார்த்துக்கொண்டு இருக்க முடியவில்லை. விசாளியை படுக்கை அறைக்குள் அடைத்து வைத்து நீண்ட நேரமாகிவிட்டது. அவளை நிச்சயம் யாராவது தேடுவார்கள். நேரம் வந்துவிட்டது. விரைவாக இதை முடித்துவிட வேண்டும். அதை எண்ணும் பொழுதே அவன் கண்கள் குளிர் கண்ட முகிலாகக் கண்ணீரைக் கொட்டத் தொடங்கியது. அவனால் விம்மலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் தனது சட்டையை வாய்க்குள் அடைந்து கொண்டான். என்றாலும் கண்களை மாத்திரம் அவனால் எதை வைத்தும் கட்டுப்படுத்த முடியவில்லை. மயக்கம் வந்து விடுமோ என்கின்ற பயமாகவும் இருந்தது. தன்னால் முடியுமா என்கின்ற கேள்வி மீண்டும் எழுந்தது. முடிந்தே ஆக வேண்டும். தனது துன்பத்திற்கு முடிவு வேண்டும் என்றால் இது முடிந்தே ஆகவேண்டும் என்று முடிவு செய்தான்.

இது சரியா என்பது அவனுக்கு விளங்கவில்லை. இது சுயநலம் என்பதும் விளங்கியது. தவிர்க்க முடியாத சுயநலம். தவிர்த்தால் தானே முடிவில்லாத தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்கின்ற பயம். அதிலிருந்து எப்பிடியாவது தப்பிவிடும் சுயநலம்.
ஆனால், இந்தத் தண்டனையை இப்போது அனுபவித்தாலே தனக்குக் கிடைத்த நிரந்தரத் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியும் என்பது விளங்கியது. வேறு வழிகள் இல்லை. யாரை என்பதில் குழப்பமாக இருந்தது. டிலிஸ் தவிப்பான் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் கண்கள் மீண்டும் திரையிட்டுக் கொண்டன. பார்வை கலங்கலாயிற்று. அவன் வடியும் கண்ணைத் துடைத்த வண்ணமே துப்பாக்கியை எடுத்தான்.

*

Helthjem காரனுக்குச் சந்தேகம் தீரவில்லை. அவன் மனதை அது பிறாண்டிக் கொண்டே இருந்தது. ஏதோ தப்பு நடப்பதாய் அவன் நம்பினான். நம்பியவனால் எதுவும் செய்யாமல் ஏதாவது நடக்கட்டும் என்று இருக்க முடியவில்லை. அப்படிச் செய்தால் 'அல்லா' அவனை மன்னிக்கமாட்டார் என்பதை அவன் நம்பினான். அதற்கு என்ன செய்வது என்று பலவாறு சிந்தித்தான். பின்பு முடிவு செய்தவனாய் கணினியை எடுத்து, காவல்துறை உருவாக்கி வைத்திருக்கும் துப்பு அனுப்புவதற்கான தளத்திற்குச் சென்றான். சில நிமிடங்களில் அவன் வேலை முடிந்தது. அது அவனுக்குத் தனது கடமையைச் செய்ததான மனநிறைவைத் தந்தது.

*

சபேசன் தனது அலைபேசியை எடுத்து முகப்புத்தகத்தில் நேரலைக்குச் சென்றான். அனைவரும் அதன் பார்வைக்குள் அடங்கும்படி அதை ஒரு இடத்தில் வைத்தான். இதனால் இந்த உலகமே ஒரு பாடம் படிக்க வேண்டும் என்று எண்ணினான். அதன் பின்பு துப்பாக்கியை எடுத்தான். ஏன் துப்பாக்கியை எடுக்கிறான் என்பது ஒருவருக்கும் விளங்கவில்லை. தனக்குத்தான் என்று எண்ணிய நந்தினி கண்ணை மூடி 'முருகா… முருகா..' என்று இறுதிப் பிரார்த்தனையாக அவன் நாமத்தை முணுமுணுத்தாள். அவள் இப்படி ஒரு முடிவு வரும் என்று தொலைந்த கனவுகளில்கூடக் காட்சிகளாகக் கண்டது இல்லை. இன்று அங்கங்கள் தொடக்கம் மனதுவரை அனைத்தும் தாமாகவே அவளைக் கேளாது நடுங்கின. ஒரு உயிரின் கடைசி கணங்களில் எத்தனை ஆயிரம் சிந்தனைகள் வெடித்துப் பறக்கும்? அத்தனையும் அவளுள் அளவிடமுடியாத பயத்தில், வேதனையில், வேகத்தில் பறந்தன. 'இப்படி எதுவும் நடக்கும் என்கின்ற ஊகம் இருந்திருந்தால் கண்காணாத தேசத்திற்குச் சென்று வாழ்ந்திருக்கலாம். அல்லது கொஞ்சம் விட்டுப் பிடித்திருக்கலாம். சிலவேளை அது இருவருக்கும் சாதகமாய் அமைந்திருக்கும். ஆனால், இவனுக்குச் சாதகமாய் அமைய வேண்டும் என்பது முக்கியம் இல்லை. இவன் இப்படிச் செய்வான் என்கின்ற உண்மை விளங்கி இருக்க வேண்டும். அதற்கேற்ப பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்…' இவ்வாறாக நந்தினி நடுக்கத்தோடு பலவாறு எண்ணிக் குழம்பினாள்.

டிலிஸ் பயத்தில் நடுங்கிக்கொண்டு இருந்தான். லக்சா அப்பாவைப் பார்க்கப் பயந்து குனிந்த வண்ணம் விம்மிக் கொண்டு இருந்தாள். அவள் அப்பா இப்படி மாறுவார் மாறிவந்து இப்படித் தங்களை சிறை செய்வார் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் எண்ணியதில்லை.

*

சபேசனாலும் விம்மலையும் கண்ணீரையும் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கு ஒரு முடிவு வேண்டும் என்கின்ற வேகத்தோடு துப்பாக்கியை எடுத்தான். அதே வேகத்தோடு டிலிசை நெருங்கி அவன் தலையில் சட்டென வைத்து ஆழியை அழுத்தினான். இரத்தமும் மூளையும் சிதறி வெளிவர ஒரு துடிப்புடன் அவன் உயிர் அடங்கியது.

'சொறி டிலிஸ்... சொறி..'
அவன் வாய் விட்டு அரற்றினான். எல்லோர் இதயமும் அதிர்ச்சியில் உறைந்து போனது. சபேசன் வேதனை தாங்காது தனது மூஞ்சையில் அறைந்து அறைந்து அழுதான். லக்சாவும் நந்தினியும் 'ஐயோ... ஐயோ..' என்று வாய்விட்டுக் கத்தி அலறினார்கள். நந்தினி அப்படி அழுதது சபேசனுக்குப் பிடிக்கவில்லை. அழுத வண்ணமே ரேப்பை எடுத்து அவள் வாயில் மீண்டும் ஒட்டிவிட்டான்.

லக்சா அழுதுகொண்டு இருந்தாள். அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவளை ஒன்றும் செய்யக்கூடாது என்கின்ற ஆசை வந்தது. அப்படி என்றால் அவளை நந்தினி துஷ்பிரயோகம் செய்வதை தனக்குப் பின்னும் தடுக்க முடியாது என்பது விளங்கியது. சபேசன் அதற்குமேல் ஓய்வு எடுக்கவில்லை. லக்சாவின் அருகே சென்றான்.

'அவளை விட்டிடு... அவளை விட்டிடு... என்னை வேணும் எண்டாக் கொல்லு' என்று நந்தினிக்கு கதறவேண்டும் போல இருந்தது. அவளால் முடியவில்லை. ம்... ம்... என்று இயலுமானவரை சத்தம் எழுப்பினாள். அவளைப் பொறுத்தவரை தனக்கு எது நடந்தாலும் பருவாய் இல்லை. லக்சாவை மட்டும் காப்பாற்றினால் போதும் என்று இருந்தது. இவளின் இந்தக் குமுறல்கள் எதுவும் சபேசன் காதில் விளவில்லை. அடுத்து துப்பாக்கி வேட்டு வெடிக்கும் ஓசை கேட்டது. லக்சா சட்டென்று சாய்ந்தாள். அப்பாவைப் பார்த்த வண்ணம் சோபாவில் சாய்ந்தாள். அவள் கண்கள் வெட்டாது சபேசனைப் பார்த்தன.

நந்தினி 'ம்... ம்....' என்று முனகினாள். இப்போது அவளின் உயிர் பயம் போயிருந்தது. இனி எது நடந்தால் என்ன என்கின்ற நிலை வந்திருந்தது. சபேசன் தன்னையும் விரைவாகக் கொல்ல வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். இதற்குமேல் அவள் யாருக்காகவும் வாழ விரும்பவில்லை. அவள் செய்வதறியாது திகைத்து, திக்குப்பிரமை பிடித்து இருக்கும் போது, அடுத்த வேட்டுச் சத்தம் கேட்டது. சபேசன் வேரற்ற மரமாய் விழுந்தான். சோபாவில் சாய்ந்து கிடந்த அவனது

வதனத்தில் ஏதோ ஒருவித புன்னகையும் சாந்தமும் பரவியிருந்தது. அது நந்தினியைப் பார்த்து அமைதி காண்பது போல் இருந்தது.

நந்தினி இதை எதிர்பாராது அதிர்ந்தாள். உறைந்தாள். அழுவதற்குக்கூட மறந்தாள்.
சபேசன் தனது தண்டனையை முடித்துக் கொண்டான்.

நந்தினியின் கடுழியம்...?

கொரோனா

'மனிதர்களின் சுயநலமும் கவலையீனமுமே இவ்வருத்தத்திற்கான விளைநிலமாகியது'

இக்கதை நோர்வேயில் நடந்தாலும் அனைவரும் இலகுவாக விளங்கிக் கொள்வதற்காய் பெரும்பான்மையான உரையாடல்கள் இயல்பை மீறி இயலுமானவரை தமிழிலேயே தரப்படுகிறது

1

உயிர்ப்பு அற்ற கிரகத்தில் மனிதன் கால் வைத்தது போன்று ஒஸ்லோ திடீரெனக் களையிழந்து, தெரு வெறித்து, உயிரடங்கி அமைதி தழுவிக் கிடந்தது. இருந்தும் அகிலனுக்குத் தவிர்க்க முடியாது கட்டாய வேலைக்குப் போக வேண்டிய தர்மசங்கடம். சில வேலைகள் மனித சமூகத்தின் உயிர்நாடியாகும். அப்படியான வேலைகளுக்கு அவசரகாலத்தில் விடுப்பு இருப்பதில்லை. விடுப்புக் கொடுத்தால் அது சமுதாயத்தைப் பாதித்துவிடும் என்பது அரசின் எண்ணம். வீட்டிலிருந்து செய்யும் அலுவலில் நோயாளிகளைக் கவனிப்பது அடங்காது. அதில் முக்கியமானவர்கள் மருத்துவமனையில் வேலை செய்பவர்கள். அதற்கு இப்போது மேலும் அதிகமான தேவையாக இருந்தது. அகிலனுக்கு வழமையாக வேலைக்குப் போவது மிகவும் பிடிக்கும். வேலை இல்லாது வீட்டில் இருப்பது சில நாட்கள் சர்க்கரைப் பொங்கலாய் இனித்தாலும் நீண்ட காலத்தில் வேம்பாய் கசந்துவிடும். காலையில் நேரத்தோடு எழுந்து இருக்காவிட்டால் அந்த நாளே அரை மதி போல ஆகிவிடும் என்பது அவன் எண்ணம். அதனால் அவன் காலையில் எழுந்து வேலைக்குச் செல்வதை மனமார விரும்பினான். இன்றும் அதே ஆர்வத்தோடு வேலை முடிந்து வீட்டிற்கு வந்தான். அப்பொழுது மத்திய சுரங்கரத நிலையத்தில் வண்டி நின்று மூச்சுவிட்டு மீண்டும் கதவை மூடத் தயாரானது. அந்த நேரத்தில் அந்த மனிதன் ஒரு பயணப் பொதியுடன் அவசரமாகக் காண்டீபத்தின் நாணாக வந்து அவனது பெட்டியின் முன்பகுதியில் ஏறினான். முதற் பெட்டியில் சாரதியின் அறைக்குப் பின்புறமாக இருந்த மூலையில் அகிலன் நின்றிருந்தான். கொரோனா பரவுகிறது என்று அறிந்தது தொடக்கம் அவன் அந்த இடத்தில் மட்டுமே

உறுமீனிற்காய் காத்திருக்கும் கொக்காய் பயணத்தின் போது இரட்டைக் கால்களில் நிற்பான். கொரோனாவிற்கான எச்சரிக்கை அவனிடம் அதிகம். கதவில் இருக்கும் ஆழியைக்கூட அவன் மறந்தும் வெறும் கையால் தொடுவதில்லை. அதை மீறித் தொடவேண்டி வந்தால் கைதுடைக்கும் காகிதத்தைப் பாவித்தே தொடுவான். அதைத் தவிர்த்து வீட்டிலிருந்து அல்லது வேலையிலிருந்து புறப்பட்டால் அடுத்த இடத்தைச் சென்றடையும்வரை அவன் தனது கையை முகத்திற்கு அருகே வராது கவனித்துக் கொள்வான். அது எவ்வளவு வேதனையான அரிப்பாக இருந்தாலும் அவன் கை முகத்தைத் தீண்டாது. இப்படியாக இன்னும் பல தற்காப்பு முறைகளை அவன் அன்றாட வாழ்வில் பயின்றான். மூச்சை அடக்கும் யோகாசனம்கூட அதில் அடங்கும்.

இன்று அந்த மனிதனைப் பார்த்ததும் அகிலனுக்கு அங்கிருந்து நகரவேண்டும் என்கின்ற எண்ணமே முதலில் வலுவாக ஏற்பட்டது. அதற்கான ஒரே காரணம் அவன் விமான நிலையத்திலிருந்து வருகிறான் என்பதே. அதை அவனின் பயணப் பெட்டியை வைத்து அகிலன் அறிந்து கொண்டான். அவனிடம் இருந்து விலகியோட மனம் மீண்டும் மீண்டும் ஏனோ ஏங்கியது. இருந்தும் அப்படி விலகி ஓடுவது அவனைத் தேவையில்லாது சங்கடப்படுத்தும் என்று எண்ணிய அகிலன் எதுவும் செய்யாது அப்படியே சிலையாகி நின்றான். சிறிது நேரம் அந்த மனிதனும் மிகவும் சாதாரணமாகவே நின்றான். வண்டி வேகமெடுத்து பனியில் வழுக்குவது போலத் தண்டவாளத்தில் நழுவி ஓடத் தொடங்கியது. திடீரென அவன் மூன்று முறை பலமாகத் தும்மினான். அவன் தும்மிய தும்மல் துகள் அவன் கையில் பட்டதை அகிலனால் உணர முடிந்தது. அவன் உடல் கூசியது. மயிர் குற்றிட்டு நின்றது. அகிலனுக்கு என்ன செய்வது என்று சில கணங்கள் தெரியவில்லை. மயக்கம் வந்துவிடுமோ என்று பயமாக இருந்தது. சுரங்க ரதம் குரன்லாண்டில் நிற்க அதிலிருந்து அவசரமாக இறங்கி அகிலன் வெளியே ஓடினான். தனது மேலங்கியைக் கழற்றி கையை நன்கு மீண்டும் மீண்டும் துடைத்தான். என்றாலும் அவனுக்குத் திருப்தி இல்லை. ஆனால் அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது என்பது அவனுக்கு விளங்கியது. மனதுக்குள் தொடர்ந்தும் ஒருமாதிரியாக இருந்தது. மரக்கறி வாங்க வேண்டும் என்கின்ற திட்டத்திற்கு அமைய அவன் அங்கே இறங்கினான்? அங்கேயும் எள்ளுப் போட்டால் அது நிலத்தில் வீழாத சனநெரிசலாக இருந்தது. மலிவு பார்த்துத் தேவையில்லாத ஆபத்தை விலைகொடுத்து வாங்குவதாய் இது அமைந்துவிடும் என்பதும் அவனுக்கு உடனடியாக விளங்கியது. இன்று இங்கு வந்தாகிவிட்டது. இம்முறை மரக்கறியை வாங்கிக் கொண்டு வீட்டிற்குச் செல்லலாம். ஆனால் இதுவே கடைசியாக இருக்கட்டும். இனி விலை அதிகம் என்றாலும் வீட்டிற்கு அருகில் உள்ள கடையில் நேரம் பார்த்து அவற்றை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அவன் முடிவு

செய்து கொண்டான். அதன் பின்பு அவசரமாகப் பொருட்களை எடுக்கத் தொடங்கினான். சன நெரிசலைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பயமாகவும் அருவருப்பாகவும் இருந்தது.

வீட்டிற்கு வந்தவன் வாயிற் கதவு மணியை அழுத்திவிட்டுச் சார்மினிக்காகக் காத்திருந்தான். வழமையாகக் கையில் எதுவும் இருக்காது. தானே திறந்து உள்ளே சென்றுவிடுவான். இன்று கையில் சுமையோடு கதவு திறப்பதற்கு அவனுக்கு மனது ஏகவில்லை. சார்மினிக்கு இரவு வேலை. அவள் ஒரு முதியோர் இல்லத்தில் தாதியாக வேலை செய்தாள். அதனால் பகலில் பொதுவாக வீட்டில் நிற்பாள். இன்று அவள் வீட்டில் நிற்பாள் என்பது தெரிந்ததால் கதவு மணியை அழுத்திவிட்டுக் காத்திருந்தான். அவள் கருத்தும் முக்கியம் என்பது அவன் எண்ணம் ஆகியது.
கதவு திறந்தது. அவளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவள் அவனை உற்றுப் பார்த்தாள். பின்பு சந்தேகத்தோடு,

'என்ன பேயறைஞ்ச மாதிரி வந்திருக்கிறியள்? தேவணில எதையும் வாங்கிக் கொண்டு வந்திட்டியளே? உங்களைப் பார்க்க எனக்கு அப்பிடிதான் இருக்குது' என்றாள்.
'நீ சொல்லுகிறது ஒருவகையில சரிதான்'
'என்ன சொல்லுகிறியள்?'
'தேவாணில ஒருத்தன் தும்மிப் போட்டான்'
'என்ன? என்ன கோதாரிய சொல்லுகிறியள்? தயவு செய்து அப்படியே நில்லுங்க... வீட்டிற்குள்ள தவறியும் வராதேங்க... நாங்கள் எப்பிடி எண்டாலும் இருந்திட்டுப் போகலாம். ஆனா, பிரசனுக்கு ஏதும் வருத்தம் வந்தால் என்னால தாங்க முடியாது. அதால, தெரிஞ்சு கொண்டு நீங்கள் அந்தச் சந்தர்ப்பத்தைத் தரக்கூடாது. தயவு செய்து அதை வீட்டிற்குள்ள கொண்டு வராதேங்க'
'எனக்கு மாத்திரம் வீட்டிற்குள்ள வருத்தத்தைக் கொண்டு வரவேணும் எண்டு ஆசையா? திடீரென அவன் தேவாணில தும்மினான். அதுக்காக எல்லாத்தையும் நாங்களா முடிவு பண்ணக்கூடாது. பிரசன் ஸ்கூலுக்குத் தொடர்ந்தும் போகிறான்தானே? அங்க என்ன நடக்குது எண்டு எங்களுக்குத் தெரியுமே? அதே நேரம் நாங்கள் றிஸ்க் எடுக்க முடியாது எண்டும் விளங்குது. நான் உங்களுக்காகத்தானே வேலைக்குப் போனன். மரக்கறியும் வாங்கப் போனன். இப்பவும் அங்கை நிறையச் சனமா இருக்குது. ஆனா… அதைப் பற்றி நான் கவலைப்பட இல்லை. நீ இப்ப என்னை வீட்டுக்க வராதை எண்டுகிறாய்? நான் எங்க தெருவிலையா நிற்கிறது? இது எனக்கு வேணுமே? ம்… இதுக்கு விளக்கம் சொல்லு பாப்பம்'

'எனக்கு உங்களைத் தெருவில நிறுத்த வேணும் எண்டு வேண்டுதலோ ஆசையோ இல்லை. என்ர கவலை உங்களுக்கு வந்த வருத்தம் தற்செயலா எங்களுக்கும் வரக்கூடாது எண்டுகிறதே. எனக்கு எண்டாலும் பறுவாய் இல்லை. பிரசனுக்குத் தொற்றினால்? கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க? நாங்கள் இவ்வளவு காலமும் சேர்ந்து வாழ்ந்ததுக்கே அர்த்தம் இல்லாமல் போயிடும். அதுகின்ர ஒரு அடையாளமும் இல்லாமல் போயிடும். தயவு செய்து அதை விளங்கிக் கொள்ளுங்க அப்பா'
'எனக்கும் விளங்காமல் இல்லை. அதுக்கு இப்ப நான் என்ன செய்ய முடியும் சொல்லு பாப்பம்?'
'என்னிட்டை ஒரு நல்ல ஐடியா இருக்குது'
'ஓ நீயும் இப்ப ஒரு பெரிய மதியூகீ ஆகீட்டாய் போல? ம்… என்ன பிளான் சொல்லு பாப்பம்? என்னுடைய சொந்த மதியூகீயின்ரை திறமையையும் பாப்பம்'
'அது சிம்பிள் அப்பா'
'என்ன எண்டு முதல்ல சொல்லு?'
'நீங்கள் போய் கீழ பேஸ்மண்டில இருங்க... சாப்பாடு மேல்க்கதவைத் திறந்து படியில வைக்கிறன். அதைவிட ஏதும் தேவை எண்டா எஸ்எம்எஸ் அனுப்புங்க... நான் கொண்டு வந்து கதவைத் திறந்து வைப்பன். நீங்கள் கொஞ்ச நேரம் கழிச்சு வந்து எடுங்க... இப்படி நாங்கள் இரண்டு கிழமைக்கு இருக்க வேணும். அதுக்கிடையில உங்களுகுத் தொற்றி இருக்குதா இல்லையா எண்டு முடிவாகீடும்'
'ம்... நீ சொல்லுகிறதும் சரிதான். எதுக்குத் தேவை இல்லாமல் றிஸ்க் எடுப்பான்? ஆனா, நான் நாளைக்கு வேலைக்குப் போக வேணும். அவங்கள் என்ன சொல்லுவாங்களோ தெரியாது. றிங்பண்ணிக் கேட்க வேணும்'
'நோய்க்கான அறிகுறி இல்லாதவரைக்கும் நீங்கள் என்ன காரணம் சொல்லுவியள்?'
'அப்ப நீ ஏன் இவ்வளவு பதறுகிறாய்?'
'அது வேலையிடம் அப்பா... அங்க பொருளாதாரம் பற்றி மட்டும் சிந்திப்பினம். இது வீடு... இங்க நாங்கள் முதலில பிள்ளையைப் பற்றித்தான் சிந்திக்க வேணும். அதால எங்களுக்கு வேற வழி இல்லை. எந்தவித ஆதாரம் இல்லாட்டியும் பாதுகாப்பாய் இருக்கிறது மட்டுமே நல்லது'
'சரி நீ பேஸ்மன்ற் திறப்பை கொண்டு வந்து தா. என்னோட தேவை இல்லாமல் நிண்டு நீ கதைக்காத' என்று கண்ணைச் சிமிட்டினான்.
'நீங்க சாப்பாட்டுச் சாமான்களை வைச்சிட்டு வெளியில நில்லுங்க... நான் போய் கெதியாய்த் திறப்பை எடுத்தாறன்'

என்று கூறிய சார்மினி வேகமாக உள்ளே சென்றாள். அகிலன் பாதாள அறைக் கதவைப் பார்த்தான். நல்ல வேளையாக தாங்கள் தற்போது தொடர் மாடி வீடொன்றில் இருப்பது இதற்கு வசதியாக அமைந்ததாக அவனுக்குத் தோன்றியது. இந்த வீட்டின் பாதாளத்தில் பெரியதொரு அறையும், குழியல் அறையும் இருந்தன. பெரிய அறையில் சோபாவும் தொலைக்காட்சியும் உண்டு. அது நீல நிறச் சோபா ஒன்று. வேண்டும் என்றால் அதை விரித்துப் படுக்கை போல மாற்றிக் கொள்ளலாம். இதில் இருக்கப் போகும் பெரிய அசௌகரியம் என்ன வென்றால் பிரசனையும் சார்மினியையும் பிரிந்து தனிமையாகப் பாதாள அறையில் இருக்க வேண்டும். அதை எண்ண எண்ண அகிலனுக்கு வெறுப்பாக இருந்தது. இருந்தும் இதைவிட வேறு வழி இருப்பதாக அவனுக்கு இப்போது தோன்றவில்லை. அகிலனின் நண்பன் ஒருவன் இந்த வருத்தம் இருப்பதான அறிகுறி இருந்ததைத் தொடர்ந்து மனைவியால் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டுவிட்டான். அவனுக்கு இப்படிப் பாதாள அறை கொண்ட வீட்டு வசதி எதுவும் இருக்கவில்லை. ஆனால் அவனிடம் கார் ஒன்று இருந்தது. வேறு வழி இன்றி அதை அவன் தனது தங்குமிடமாக மாற்றி வாழ்வதாய் அகிலனோடு தொலைப் பேசியில் கதைக்கும் பொழுது கூறி இருந்தான். அந்த வகையில் தான் அதிஸ்ரம் செய்ததாய் அவனுக்குத் தோன்றியது.

பாதாள அறைக்குள் செல்வதற்குத் தனியாக கதவு இருந்ததால் தேவையில்லாது பிரதான வீட்டிற்குள் செல்லத் தேவையில்லை. இந்த நோய் காற்றில் பரவுவது இல்லை என்கிறார்கள். சிலர் காற்றில் இருக்கும் திரவத் துளிகளில் வைரஸ் சொகுசாக வாழலாம் என்கிறார்கள். எது எப்படி என்பது தெளிவாக யாருக்கும் தெரியாது. சீனாவில் இப்படி நடந்ததாம் அப்படி நடந்ததாம் என்கிறார்கள். ஒரு வீட்டில் ஒருவருக்குத் தொற்றினால் அனைவருக்கும் தொற்றுவதாய் கூறுகிறார்கள். கூடவாழ்ந்த பூனைகள்கூட இறந்ததாகத் தகவல்கள் வருகின்றன. பெண்களைவிட ஆண்களுக்கே அதிக ஆபத்து என்கிறார்கள். நோர்வேயில் வெளிநாட்டிற்குப் போய் வந்தவர்களுக்கே இந்த வருத்தம் முதலில் வந்ததாக நம்பப்படுகிறது. உள்ளூரில் தொற்றத் தொடங்கி இருக்கலாம். அது பற்றிய தெளிவான தகவல்கள் இல்லை. இருந்தாலும் ஸ்திரமின்மை தொடர்கிறது. அகிலனின் சிந்தனையைக் கலைத்த வண்ணம் சார்மினி மீண்டும் திரும்பி வந்தாள்.

‘இந்தாங்க திறப்பு’ அவள் அதை தூரத்தில் நின்று அகிலனை நோக்கி வீசி எறிந்தாள். அகிலனுக்குச் சிரிப்பு வந்தது. கவலையாகவும் இருந்தது. அவன் கவலையோடு சிரித்தவண்ணம் குனிந்து திறப்பை எடுத்தான். சார்மினி மீண்டும் உள்ளே சென்று சோப்புக் கரைத்து வாளியில் எடுத்து வந்தாள். பின்பு அவன் கொண்டு வந்த பொருட்களை ஒவ்வொன்றாகத்

துப்பரவு செய்யத் தொடங்கினாள். சுடு நீருக்கும் சோப்பிற்கும் இந்த வைரஸ் சொற் கேட்கும் என்று பரவலாக நம்பப்படுகிறது. நோர்வேயில் இது ஆரம்ப நிலையில் இப்போது உள்ளது. இருந்தும் இது ஒரு ஆரூடமே. ஆனால் சீனாவில் ஒரு வாட்டு வாட்டிய பின்பு இப்போது இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற பல ஐரோப்பிய நாடுகளுக்குள் புகுந்து இருக்கிறது. இதன் பாதிப்பு எப்படி இருக்கும் என்பது யாருக்கும் சரியாகத் தெரியாது. சீனாவில் நடந்ததைக் கேள்விப்பட்டது மட்டுமே. அங்கே நடந்ததாகக் கேள்விப்பட்டதையும் சிலர் நம்பினர். சிலர் நம்ப மறுத்தனர். சில நாடுகள் ஏற்கனவே தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க தொடங்கிவிட்டார்கள். சில நாடுகள் உள்ளே விட்டுப் பிறகு அடிப்பதற்காய் காத்திருக்கிறார்கள்.

அகிலனோடு வேலை செய்பவளுக்கு மாறன் என்று பெயர். மாறன் என்று தமிழ்ப் பெயராக அர்த்தம் கண்டுவிட முடியாது. அவள் ஒரு அழகான பெண். அவளுக்கு இந்தச் செய்திகளில் நம்பிக்கை இல்லை. இவை அனைத்தும் பூதக்கண்ணாடியால் நோக்கிச் சொல்லப்படுவதாய் கோபமாகக் கூறுவாள். அகிலனுக்கு அவளைப் பாக்க வியப்பாக இருக்கும். அதே நேரம் இப்படி நம்பாதவர்களால் இந்த வருத்தம் மேலும் பரவ வாய்ப்பு இருக்கிறது என்கின்ற உண்மையும் கசக்கும்.

பாதாள அறைக்குள் வந்த அகிலனுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. இப்போது சார்மினியைக் கூப்பிட முடியாது. அவள் பம்பரமாய் சுழலும் நேரம் இது. அந்த அறையிலிருந்த ஒரு குவளையைக் கையில் எடுத்தான். குளியல் அறைக்குள் சென்று நீரைத் திறந்துவிட்டு அது குளிரான நீராக வரும் வரைக்கும் பொறுமையாகக் காத்திருந்தான். நீர் நன்றாக ஓடத் தொடங்கியதும் குளிரான நீர் வந்தது. அவன் அதை எடுத்துக் கொண்டு மீண்டும் கோலுக்குள் வந்தான். அவனுக்குத் தாகமாக இருந்தது. அதைப் பருகத் தொடங்கினான். எதுவும் தொற்றி இருக்கக்கூடாது என்று மனம் கிடந்து அடித்தது. இந்த நோய் பெண்களைவிட ஆண்களை அதிகமாக பாதிக்கிறது என்று அவன் கேள்விப்பட்டு இருந்தான். அதுவும் நாற்பது வயதிற்கு மேல் என்றால் மேலும் பயப்பட வேண்டும் என்று அவன் வாசித்த ஞாபகம். அதன் உண்மை பொய் விளங்காவிட்டாலும் அவனுக்குப் பயமாக இருந்தது. ஒஸ்லோவின் மேற்குப் பகுதியைச் சார்ந்த பல சுதேசிகளுக்கு இந்த வருத்தம் முதலில் வந்திருக்கிறது. அது இத்தாலியில் அல்லது ஆஸ்திரியாவில் குளிர்கால விடுமுறையைக் கழிக்கச் சென்றதால் தொற்றியது என்கிறார்கள். நாட்டிற்குள் வந்துவிட்டால் இதைக் கட்டுப்படுத்துவது கடினம் என்பதைப் பலர் அறிவார்கள். இருந்தும் இன்று போல விமான நிலையத்திலிருந்து எந்த ஒழுங்குமுறையும் இன்றிப் பயணிகள் நாட்டிற்குள் வருகிறார்கள். அவர்களில் எவர் நோயைக் காவி

வருகிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. தும்மியவனுக்கு நோய் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். அறிகுறி தெரிவதற்கு முன்பு யாருக்கும் இப்போது பரிசோதனைகள் செய்யப்படுவதில்லை. அதனால் உடம்பிற்குள் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாது. ஏதாவது அறிகுறிகள் தெரிந்தால் மட்டுமே மேற்கொண்டு அவர்களுடன் கதைத்துப் பரிசோதிக்க செல்லலாம். நோர்வே அரசாங்கம் முதலில் இங்கு எதுவும் இல்லை என்பது போலக் கண்களை மூடிக்கொண்டு இருந்தது. இப்பொழுது அப்படி இருக்க முடியாது என்பது நன்கு உறைக்கத் தொடங்கி இருக்கிறது. அகிலனுக்கு நோர்வே மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போதாது என்றே எண்ணத் தோன்றியது.

நாளை என்ன செய்வது என்கின்ற குழப்பமாக இருந்தது. இதற்கு யோசித்துப் பிரயோசனம் இல்லை. அகிலனின் முக்கிய வேலை மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளிடம் இருந்து இரத்தம் பரிசோதனைக்காக எடுப்பது. அதைப் பரிசோதிக்கும் ஆய்வுகூட பகுதியில் வேலை செய்வது. இது மருத்துவமனையில் உள்ள மிகவும் பிரதானமான பகுதிகளில் ஒன்று. அங்கே யாருக்கும் தொற்று இருந்தால் அது பலருக்கும் பரவ வாய்ப்பு உண்டு. வேலைக்குப் பொறுப்பில்லாது போய் அங்கே நோயைப் பரப்புவது மிகவும் தவறான விடயம். ஆகவே திறன்பேசியில் தொடர்பு கொண்டு அவர்களின் கருத்தைக் கேட்டு அதற்குப் பின்பு அவர்கள் சொல்வது போல நடந்தால் எந்த தவறும் செய்ததாக அவர்கள் குற்றம் சுமத்தமாட்டார்கள் என்பது அகிலனின் எண்ணம். அவனுக்குத் திடீரென அவன் கேள்விப்பட்ட அந்தச் சம்பவம் நினைவிற்கு வந்தது. மருத்துவர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து விடுமுறை கழித்து மீண்டும் நோர்வேக்கு வந்த பின்பு தன்னைப் பரிசோதிக்கக் கேட்டிருக்கிறார். ஆனால் அது அவரது மேல் அதிகாரிகளால் மறுக்கப்பட்டதோடு வேலையைத் தொடருமாறும் பணிக்கப்பட்டு இருக்கிறது. அதனால் சிலருக்கு வருத்தம் பரவி உள்ளது. அப்போது அந்த மருத்துவர் தான் பரிசோதிக்க மேலதிகாரியைக் கேட்டேன் என்பதிலிருந்து அவர் மீது வீண் குற்றம் சுமத்த முடியாது தப்பித்துக் கொண்டார். அப்படியே தானும் புத்தியாக அவர்களைக் கேட்டு நடப்பது நல்லது என அகிலன் முடிவு செய்து கொண்டான். அகிலன் திறன்பேசியைப் பார்த்தான். விரைவு மின்னூட்டலை எடுத்து வருமாறு முதலில் சார்மினிக்குக் அலைபேசியிலிருந்து குறுஞ் செய்தி அனுப்பிவிட்டு தனது தலைமை அதிகாரிக்கு அதனால் தொடர்பை உண்டுபண்ணினான்.

‘வணக்கம்! நான் அகிலன்’
‘சொல்லுங்கள்… என்ன உதவி உங்களுக்கு வேண்டும்?’
‘எனக்கு ஒரு ஆலோசனை வேண்டும்’
‘எதைப் பற்றி?’

'நான் இன்று சுரங்க இரதத்தில் வீட்டிற்குப் போகும் போது விமான நிலையத்திலிருந்து வந்த பயணி ஒருவரும் எங்களுடன் அதில் பயணித்தார். எதிர்பாராத விதமாக அவர் சுரங்கரதத்திற்குள் பலமுறை தும்மிவிட்டார். நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு விளங்கவில்லை. அதனால் உங்களின் அறிவுரை எனக்கு வேண்டும். நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதன்படி நான் செய்வேன்'
'ஓ… மிகவும் சிக்கலான விடயம். எது எப்படி என்றாலும் சிறிது ஐயம் ஏற்பட்டாலும் நாம் அதைப் பார்த்தும் பாராமலும் விடமுடியாது. இங்கு வருத்தம் பரவத் தொடங்கினால் என்ன நடக்கும் என்பது உங்களுக்கே தெரியும். அதனால் நீங்கள் வீட்டிற்குள் முடங்கி இருப்பதே நல்லது என்று நான் எண்ணுகிறேன். ஏதாவது அறிகுறி தென்பட்டால் அல்லது காய்ச்சல் வந்தால் கொரோனா எண்ணிற்குத் தொடர்பு கொள்ளுங்கள். இரண்டு கிழமைக்கு நீங்கள் வீட்டிற்குள் இருப்பதே நல்லது. வருத்தம் ஏதும் இல்லை என்றால் அதன் பின்பு நீங்கள் வேலைக்கு வரலாம். எனக்கு இப்படியே அறிவிப்பு வந்து இருக்கிறது. நான் அதில் எந்த மாற்றத்தையும் செய்ய விரும்பவில்லை'
'நீங்கள் சொல்வது மிகவும் சரியே. எங்கள் வேலையிடம் அப்படியானது என்பது எனக்கு நன்கு விளங்கும். அதில் எந்த தவறும் ஏற்பட நாம் ஏதுவாக இருக்கக்கூடாது'
'அதுவே என் கவலையும் அகிலன். அதையே நானும் விரும்புகிறேன். உங்களுக்கு விரைவில் குணமாக எனது வாழ்த்துக்கள். நிச்சயம் இது கொரோனாவாக இருக்காது என்று நம்புகிறேன்'
'அப்படியே இருக்க வேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனையும். உங்கள் அறிவுரைக்கு நன்றி. விரைவாக மீண்டும் சந்திப்போம்'

அவர் அத்துடன் தொலைப்பேசியைத் துண்டித்துக்கொண்டார். இப்போது பலர் தன்னைப் போல வேலைக்குப் போகமுடியாமல் இருப்பதால் அங்கே தற்போது வேலைக்கு வருபவர்களுக்கு அதிகமான வேலைப் பழுவாய் இருக்கும் என்பது அகிலனுக்கு விளங்கியது. தலைமை அதிகாரிக்கும் அதிக வேலைப் பழுவாய் இருக்கும். என்றாலும் இதை எல்லோரும் சிரம தானம் போல எண்ணி உதவுவார்கள் என்பது அகிலனுக்கு நன்கு தெரியும். நோர்வே மக்களின் உயரிய பண்புகளில் சிரம தானமும் ஒன்றாகும். இந்தப் பண்பு அகிலனை மலைக்க வைத்திருக்கிறது. அகிலனை மட்டும் அல்ல நோர்வேக்கு வரும் அனைவரையும் அது திகைக்க வைப்பது உண்டு. பொதுவாக நோர்வே மக்கள் மிகவும் கனிவானவர்கள். அதற்குப் புறநடையானவர்களும் உண்டு. அதேபோன்ற புறநடையான அரசியல் கட்சிகளும் உண்டு. அவர்களது கைகள்கூட இக்காலத்தில் வலுத்துக் கொண்டு வருகின்றன. அது இங்கு மட்டும் நடப்பதல்ல. உலகம் முழுவதும் நடக்கும் ஒரு புதிய மார்க்கமாக இருக்கிறது. அந்தப் புறநடைகளை விட்டுப் பொதுவாகப் பார்த்தால்

நோர்வே மக்கள் மிகவும் கனிவானவர்கள். பொதுவாகச் சட்டத்தை மதிப்பவர்கள். அதனால் இங்கு இந்த வருத்தத்தைக் கட்டுப்படுத்த கொண்டு வரும் நடைமுறைகளையும் அவர்கள் நிச்சயம் கடைப்பிடிப்பார்கள். அது இந்த வருத்தத்தை கட்டுப்படுத்த பெரும் உதவியாக இருக்கும். அதற்குப் புறநடையாகவும் பல காரியங்கள் நடந்து ஏறலாம். அதுவும் எங்கும் நடக்கும் மனித யதார்த்தமாகும். எந்த நாட்டிலும் பெரும்பான்மையின் செயற்பாடே அந்த நாட்டின் செயற்பாடாகப் பார்க்கப்படும். அப்படிப் பார்த்தால் நோர்வே மிகவும் ஒரு உன்னதமான நிலையைப் பெறும் என்பதில் அகிலனுக்கு எந்த ஐயமும் இல்லை. கொரோனா என்கின்ற வருத்தம் தாக்குகின்ற போது நோர்வே என்னும் நாட்டில் இருப்பது மிகவும் பாதுகாப்பை தந்தாலும் இந்த வருத்தம் இத்தினை பாதுகாப்பையும் தாண்டி மனிதர்களை வதைத்துவிடுமோ என்கின்ற ஐயம் அவன் மனதை அலைக்கழித்தது. தனது வீட்டில் இன்று தொடங்கிய இந்தப் பிரச்சனை எப்போது முடியும் என்பதும் அவனுக்கு விளங்கவில்லை.

அகிலனுக்கு ஒரே யோசனையாக இருந்தது. சார்மினி வேலைக்குச் சென்றால் பிரசனை யார் பார்த்துக் கொள்வது என்றும் அவனுக்கு விளங்கவில்லை. அவனைத் தனித்து இருக்க விடமுடியாது. அதே நேரம் அவன் தன்னுடன் இருக்கவும் முடியாது. அப்படி என்றால் என்ன செய்வது என்கின்ற கேள்வி புழுபோல அவன் மண்டையைக் குடைந்தது. எதற்கும் சார்மினியோடு கதைக்க வேண்டும். யாரையாவது உதவிக்குக் கேட்க முடியுமா என்றும் தெரியவில்லை. கொரோனாவை முன்னிட்டு யாரும் இலகுவில் உதவி செய்யமாட்டார்கள். அதுவும் குழந்தைப் பிள்ளையை தங்களோடு வைத்திருப்பது என்றால் சம்மதிக்கமாட்டார்கள். அப்படி என்றால் சார்மினி இல்லாத நேரத்தில் எப்படிச் சமாளிப்பது? அவனைப் பார்த்துக்கொள்ள ஒரு நபர் தொடர்ந்து வேண்டுமே? அகிலனுக்கு எந்தப் பதிலும் கிட்டுவதாக தெரியவில்லை. இதைப்பற்றி சார்மினியோடு கதைக்க வேண்டும். அவளுடனும் நேரடியாகக் கதைக்க முடியாது. ஆகவே அவன் திறன்பேசியை எடுத்து அவளது எண்களை அழுத்தினான்.

'என்னப்பா அதுக்குள்ள என்னுடைய ஞாபகம் வந்திட்டுதே? அவசரமாய் அடிக்கிறியள்? எனக்கு இங்க நிறைய அலுவல்கள் இருக்குது. முதல்ல பிரசனுக்குச் சாப்பாடு கொடுக்க வேணும். அதைவிடத் துப்பரவு... புதிய விதிமுறை... இயலும் எண்டா ஸ்பிரீற் வாங்க முடியுமா எண்டு பார்க்க வேணும். அப்படி நிறைய வேலை இருக்குது. சிலவேளை வெளிய போக வேணும்'

'எனக்கும் பிரசனைப் பற்றின யோசனையா இருக்குது. அதுதான் உன்னோட கதைக்க வேணும் எண்டு எடுத்தன். அவனை என்ன

செய்கிறது? நீ வேலைக்குப் போனா அவனை யார் பார்க்கிறது? இதைப்பற்றி நீ யோசிச்சியா?'
'நீங்கள் யோசிக்கிற அளவுக்கு நான் யோசிக்காமல் இருப்பனா? தகப்பன் சந்ததியை தாறதோட சரி. தாய்தான் அதைப் பேணிப் பாதுகாக்கிறவள் எண்டு தெரியாதே? அப்படி எண்டா நானும் அவனை எப்பிடிப் பாதுகாக்கிறது எண்டு யோசிக்காமலா இருப்பன்?'
'சரி... சரி... நீ நிச்சயம் யோசிப்பாய். அப்படி யோசிச்சு என்ன முடிவு எடுத்தாய் எண்டு எனக்குச் சொல்லு பார்ப்பம்? அதுக்குப்பிறகு எனக்குத் தேவையானது எல்லாத்தையும் படியில வை. நான் வந்து எடுத்துக் கொண்டு வாறன். கதவுக்குத் திறப்பு போட்டு பூட்டி விடு. இல்லாட்டி பிரசன் இங்க ஓடி வந்திடுவான். சரி சொல்லு... என்ன எண்டு இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கிறது? குறிப்பா பிரசன்ரை பிரச்சினையை எப்பிடிச் சமாளிக்கிறது'
'அது சிம்பிள் அப்பா. நான் வேலைக்குப் போன் பண்ணி நடந்ததைச் சொன்னனான். அவைக்கும் நிலைமை விளங்கி இருக்குது. அவையும் வீண் றிஸ்க் எடுக்க விரும்ப இல்லையாம். அதால பதின்நாலு நாளுக்கு காரன்தேனில இருக்கட்டாம். நானும் கரன்தேனில இருந்தால் பிரசனைப் பார்க்கிறது ஒரு பிரச்சினை இல்லை. உங்களையும் வீட்டையும் பார்த்துக் கொள்கிறதும் ஒரு பிரச்சினையாக இருக்காது. ஏலும் எண்டா உங்கட மெபீல்ல இருந்து ஸ்பிரீற், மாஸ்க் ஓடர் பண்ணி எடுக்க முடியுமோ எண்டு பாருங்க... இரண்டும் கொஞ்சம் கொஞ்சம் மட்டுமே எங்களிட்டை இருக்குது. சாப்பாட்டுச் சாமான்களும் நெத்தில ஓடர் பண்ண வேணும். அதை நான் செய்கிறன். இதை உங்களால ஓடர் பண்ணி எடுக்க முடியுமா எண்டு பாருங்க... நாங்கள் கடைக்குப் போக முடியாது. ஆனால் அவசரம் என்டா மாஸ்க்கைப் போட்டுக் கொண்டு போயிட்டு வரவேண்டி இருக்கும். வேற வழி இல்லை. எல்லாரும் இப்ப விசியா இருப்பினம். அதோடை அவைக்கும் பயமாகவும் இருக்கும்'
'ஓ நீ கெட்டிக்காரி. அப்ப நான் பெரிய பிரச்சினை எண்டு நினைச்சது இப்ப பெரிய பிரச்சினை இல்லை. ஓ மற்றதை நாங்கள் சமாளிக்கலாம். அந்த நம்பிக்கை எனக்கு இருக்குது. நான் அதுக்கு றை பண்ணுகிறன். ஸ்பிரீற்றும், மாஸ்க்கும் எடுக்கிறது சுலபமாக இருக்காது. முயற்சி செய்வம். இல்லாட்டி நீ போய் அப்போத்தெக்கில (மருந்துக்கடை) பாத்திட்டு வா. அதுவும் இல்லை எண்டால் இருக்கிறதை வைச்சு சமாளிக்க வேணும்'
'ம் நீங்கள் சொல்லுகிறதும் சரி. நான் வெளிய போகிறது எண்டா இவனையும் இழுத்துக் கொண்டு போக வேணும். அதைவிட வேற வழி இல்லை. யாரையும் கேட்டால் உதவி செய்வினமோ தெரியாது. அதேநேரம் எதுக்கு இப்ப தேவையில்லாமல் அவை இவைய கடமைப்படுத்திக் கொண்டு... இப்போதைக்கு இதை எங்களால சமாளிக்க முடியும். அதுக்கான நம்பிக்கையும் தைரியமும் என்னிட்ட இருக்குது'

‘அப்பிடிதான் நானும் நினைக்கிறன் சார்மினி. ஆனா, என்ன நான் மட்டும் இரண்டுபேரையும் பார்க்காமல் தனிய இருக்க வேணும். அதை நினைக்க நினைக்க வெறுப்பா இருக்குது. அதோட இது எப்பிடி முடியுமோ எண்டும் பயமா இருக்குது’

‘முதல்ல நீங்கள் எதுக்கும் பயப்படாதையுங்க... நீங்கள் தனிய இருக்க வேண்டிய கட்டாயமும் இல்லை. உங்க இருந்தாலும் நீங்கள் எங்களோட இருக்கிறமாதிரி உணரலாம். அதுக்கான வழியும் உங்களுக்குத் தெரியும்தானே?’

‘என்ன சொல்லுகிறா?’

‘பிறகு என்ன…? ஸ்கைப் என்னத்திற்கு இருக்குது? அது இருக்க உங்களுக்கு ஏன் பயம்? அதைவிட நாங்கள் மேலதானே இருக்கிறம். உங்களுக்கு ஏதும் கடுமையா இருந்தாச் சொல்லுங்க... மிச்சத்தை நான் பாக்கிறன். நான் கதைச்சா நிச்சயம் அது எடுபடும். அதால நீங்கள் தேவை இல்லாமல் பயப்பிட வேண்டாம்’

‘அது உண்மை. சாதாரண ஆட்கள் சொல்லுகிறதைவிட நீ சொன்னா நிச்சயம் கேட்பாங்கள். எனக்குத் தேவையான பொருட்களை எல்லாம் பை ஒண்டில போட்டுக் கதவுக்கு வெளிய வை. குறிப்பா மொபீல் சார்ச்சர் எனக்கு வேணும். அது இல்லாட்டி ஒரு தொடர்பும் இருக்காது. அதோட அந்த எக்ஸ்றா கேத்தில், ரீ பக்கேற், ரின்பால், எண்டு தேவையானதை எல்லாம் எடுத்து வை. படுக்கைக்குத் தேவையான பொருட்களையும் மறந்திடாத’

‘இதெல்லாம் எனக்குத் தெரியாதே? நீங்கள் இதையெல்லாம் சொல்ல வேணுமே? எல்லாம் சரியாய் வரும். நான் வைச்ச பிறகு போன் பண்ணுகிறன். அப்ப போய் பைய எடுங்க... சாப்பாடும் அப்பிடியே வரும்... வேற என்ன வேணும் எண்டாலும் போன் பண்ணுங்க... காய்ச்சல் காயத் தொடங்கினா அதையும் உடனடியா எனக்குப் போன் பண்ணிச் சொல்லுங்க’

‘கட்டாயம் சொல்லுறன். நீ தேவை இல்லாமல் பயப்பிடாத. நீங்கள் இரண்டுபேரும் தனியச் சமாளிப்பீங்கள் தானே? பயம் ஒண்டும் இல்லையே?’

‘நீங்கள் கீழ இருக்கிறியள். நாங்கள் மேல இருக்கப் போகிறம். இதில பயப்பிட என்ன இருக்குது? நீங்கள் ஒண்டும் இதைப்பற்றிக் கவலைப்படாதையுங்க’

‘இல்லை… இந்த வருத்தம் தொத்த தொத்த இங்கையும் என்ன மாற்றங்கள் வருமெண்டு யாருக்குத் தெரியும்? அதை நினைக்கவும் பயமாக இருக்குது’

‘உது தேவை இல்லாத கவலை அப்பா. இங்க அப்படி எதுவும் நடக்கிறதுக்குச் சந்தர்ப்பம் இல்லை. சாப்பாட்டுச் சாமான்களைக்

கொண்டு வந்து தந்தாங்கள் எண்டா நாங்கள் சமாளிப்பம். என்ன... உங்களுக்கும் தொற்றி இருக்கக் கூடாது. அப்பிடித் தொற்றினாலும் கடுமை ஆக்கக் கூடாது. அதில ஏதும் சிக்கல் வரேல்லை எண்டா நாங்கள் எதுக்கும் பயப்பிடத் தேவை இல்லை. இங்க வேற நாடுகளில நடக்கிற மாதிரி வீட்டுக்க எல்லாம் யாரும் லேசில வரமாட்டாங்கள். நீங்கள் ஆறுதலா றிலக்ஸ் எடுங்க அப்பா'
'சரி நான் உன்னை மினக்கெடுத்த இல்லை. நீ போய் உன்ரை அலுவலைப் பார். நானும் இதுக்க இருக்கக்கூடிய மாதிரி எல்லாத்தையும் ஒழுங்கு படுத்துகிறன். இங்க ஒரே தூசா இருக்குது. வைக்கும் மெசின் பிடிக்க வேணும். அது கீழ இருக்குதா?'
'ஓ... அங்கதான் இருக்குது. அதை எடுத்து ஒருக்காக் கீழ்க்கோலை நல்லாத் துப்பரவு செய்யுங்க... பிறகு அங்கேயே வைச்சிடுங்க... இனி என்ன பொருள் உங்களிட்ட இருந்து வாறது எண்டாலும் ஸ்பிரீற் போட்டுத் துடைச்ச பிறகு மட்டுமே இங்க வரவேணும்'
'நான் இங்க நெத்தில செக் பண்ணினனான். ஸ்பிரீற் நெத்தில கிடையாது. சில அப்போத்தெக்கில மட்டும் இருக்குது. நீ ஒருக்கா நேர போய் அதை வாங்கி வா. சோப்புத் தாராளமாய் இருக்குது தானே?'
'இருக்குது. சரி நான் அப்ப அதை முதல்ல பாக்கிறன். பிறகு ஏதும் எண்டாத் துப்பரவா வெளியில போகமுடியாமல் போயிடும். நீங்கள் உங்கட அலுவலைப் பாருங்க... அப்ப நான் கெதியாப் போயிட்டு வாறன். கடைக்கு ஐஞ்சு நிமிசத்தில காரில போயிட்டு வந்திடலாம். பக்கத்தில இல்லாட்டியும் வேறை இடத்திலை எண்டாலும் போய் வாங்கிக் கொண்டு வாறன்'
'சரி கெதியாய் போயிட்டு வா. வந்த பிறகு மிச்சத்தைப் பார்க்கலாம். காருக்கையும் ஒரு ஸ்பிரீற் போத்தல் வை. நான் காரைப் பாவிச்சா அதைத் துடைக்க வேணும்'
'சரி நான் வைக்கிறன்'
'சரி. வாய்'
'வாய்'

அகிலன் திறன்பேசியை வைத்த பின்பு சவர்க்காரத்தை வாளியில் கரைத்துத் தூசு படிந்திருக்கும் மேற்பரப்புகளை முதலில் நன்றாக துடைத்தான். பின்பு நிலத்தையும் 'வைக்கும் கிளினரால்' துப்பரவு செய்துவிட்டுச் சவர்க்காரத்தில் நனைத்த துணியால் துடைத்து எடுத்தான். அதைச் செய்து முடித்த பொழுது அவனுக்குப் பசித்தது. சார்மினி அவசரமாகப் புறப்பட்டு மருந்துக் கடைக்குச் சென்றுவிட்டாள். இனி அவள் மீண்டும் திரும்பி வந்தாலே சாப்பாடு கிடைக்கும். ஆனால் மற்றைய பொருட்களை உள்ளே வைத்துவிட்டேன் என்று மருந்துக் கடைக்குச் செல்வதற்கு முன்பு திறன்பேசியில் தொடர்பு கொண்டு கூறிவிட்டுச்

சென்றிருந்தாள். துப்பரவு செய்து முடிந்துவிட்டதால் அவள் என்ன என்ன பொருட்களை வைத்திருக்கிறாள் என்று பார்த்து அதை எடுத்து வரலாம் என்று அவன் எண்ணினான். அதில் அவன் கேட்டுக் கொண்டது போலக் கேற்றிலும், தேநீருக்குத் தேவையான பொருட்களும் இருந்தன. அதனால் தற்போது சுவையான தேநீர் தயாரித்துப் பருகலாம் என்று எண்ணினான்.

சார்மினி அவனது மனதை நள்ளிரவுச் சூரியன் போல எப்போதும் அறிந்தவள் என்றே சொல்ல வேண்டும். எதிர்பார்த்தபடியே தேநீருக்குத் தேவையான பொருட்கள் வைக்கப்பட்டு இருந்தன. சிற்றுண்டிகளும் அதற்குத் துணையாக இருந்தன. அத்தோடு படுக்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் வைத்திருந்தாள். அதைப் பார்த்ததும் அகிலனுக்குச் சந்தோசமாய் இருந்தது. இப்போது இருக்கும் பசிக்குத் தேநீர் குடித்தால் நன்றாய் இருக்கும் என்கின்ற நினைப்பை அவன் செயலாக்கினான். தேநீரைக் குடித்துவிட்டு மற்றைய வேலைகளைச் செய்யலாம் என்பது அவன் எண்ணம். அப்போது சார்மினி திரும்பிவரும் நேரத்திற்கு அது கணக்காக இருக்கும் என நினைத்தான்.

கோலுக்குள் பொருட்களைக் கொண்டு வந்து வைத்துவிட்டுத் தேநீர் தயாரிக்கும் வேலையில் அகிலன் ஈடுபட்டான். தேநீரைத் தயாரித்து ஒரு இழுவை இழுத்த பொழுது சொர்க்கம் கோலுக்குள் வந்ததாக அவனுக்குத் தோன்றியது. ஆறுதலாக அதை இரசித்துப் பருகலாம் என்று சோபாவில் அமரும் போது மீண்டும் திறன்பேசி அவனை அன்போடு அழைத்தது. யாராக இருக்கும் என்கின்ற கேள்வியே அவன் மனதில் முதலில் எழுந்தது. யாராக இருந்தாலும் இந்த நேரத்தில் அது முக்கியமான அழைப்பாக இருக்கலாம் என்பது விளங்கியவனாய் அவசரமாகச் சென்று அதை எடுத்தான். அப்படி எடுக்கும்போது அது யாரிடம் இருந்து வருகிறது என்பதைப் பார்த்தான். அது அவன் வேலை செய்யுமிடத்தின் தலைமை அதிகாரியிடம் இருந்து வந்தது. என்னவாக இருக்கும்? சிறிது நேரத்திற்கு முன்புதானே கதைத்தது…? என்கின்ற யோசனையுடன் அவன் அதைப் பாய்ந்து எடுத்தான்.

‘ஹலோ… நான் கெலேனா’

‘சொல்லுங்க என்ன விஷயம்?’

‘நீங்கள் உல்லவோலிற்கு போய் கொரோனா உங்களுக்கு இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும். அதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய எண்ணைத் தருகிறேன். மறந்துவிடாமல் பரிசோதனை செய்யுங்கள். முடிவு வந்த உடன் அதை அறிவியுங்கள். நான் தரும் எண்ணிற்குத் தொடர்பு கொண்டால் அவர்கள் மேற்கொண்டு விபரம் கூறுவார்கள்’

‘ஓ… அப்படியா? நீங்கள் எண்ணைச் சொல்லுங்கள். நான் நிச்சயம் தொடர்பு கொண்டு அந்தப் பரிசோதனையை மிக விரைவாகச் செய்கிறேன். அது எங்களுக்கும் மன அமைதியைத் தரும்’
‘உண்மை அகிலன். எல்லோரும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய காலம் இது. அதனால் இந்தப் பரிசோதனை மிகவும் முக்கியமானது’
‘எனக்கு அது நன்கு விளங்குகிறது. எனது குடும்பமும் இதற்கான விடையை அறியக் காத்திருக்கிறது’
‘சரி அகிலன் தொலைப்பேசி எண்ணை எழுதிக் கொள்ளுங்கள்’

அவள் தொலைப்பேசி எண்ணைக் கூறினாள். அகிலன் அவதானமாக எண்ணை எழுதிக் கொண்டான். அதன் பின்பு கெலேனா தொலைப்பேசியைத் துண்டித்துக் கொண்டார். அகிலன் அவர் தந்த எண்ணைப் பார்த்தான். அது ஆறு இலக்கம் கொண்ட பிரத்தியேக எண்ணாக இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டு இருக்கும் பொறுமை அவனிடம் இருக்கவில்லை. அவன் அந்த எண்ணுடன் தொடர்பு கொண்டான். கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் காத்திருக்க வேண்டும் என்று பதில் வந்தது. மனிதர்களுக்கு இயந்திரம் பதில் சொல்லும் காலம் இது. அகிலனுக்கு அது புதுமை இல்லை. அவன் மனிதக் குரலுக்காய் காத்திருந்தான்.

நோர்வேயில் இந்த வருத்தத்தின் தொடக்க காலம் இது. பலரும் சந்தேகத்தில் அந்த எண்ணுடன் தொடர்பு கொள்வார்கள். தொடர்பு கொள்பவர்களில் பலர் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள அதிக கேள்வி கேட்பார்கள். அதனால் அதிக நேரம் கதைப்பார்கள். பொறுமையைத் தவிர அகிலனுக்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. அவன் அந்தக் காத்திருப்பிற்கான இசையைக் கேட்ட வண்ணம் காத்திருந்தான். அந்தக் காத்திருப்பு மிகவும் அலுப்பைத் தந்தது. இருந்தாலும் இணைப்பைத் துண்டித்துக் கொள்ள முடியாது என்பது அவனுக்கு நன்கு விளங்கியது.

இதற்கு இடையில் சார்மினி வந்துவிட்டதற்கான சத்தம் மேலே கேட்டது. இருந்தும் அவளுடன் தொடர்பு கொள்ள முடியாத அவஸ்தை அவனுக்கு. அவன் தொடர்ந்தும் தொடர்பில் காத்திருந்தான். இறுதியாக ஒருவாறு அவர்கள் அழைப்பிற்கு உயிர் கொடுத்தார்கள்.

‘இது தொற்று நோய்த் தடுப்பு மையம். நான் நீனா கன்சன் பேசுகிறேன். உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?’ என்று ஒரு பெண்குரல் அவனை களத்திற்கு இழுத்து வந்தது.

‘நான் அகிலன் பேசுகிறேன். எனது வேலையிடம் றிக்ஸ்கொஸ்பிற்றல். அங்கே இரத்தப் பரிசோதனை எடுக்கும் இடத்திலும் அதை பரிசோதிக்கும் இடத்திலும் வேலை செய்கிறேன். இன்று சுரங்க ரதத்தில் வரும்போது அதில் விமான நிலையத்திலிருந்து வந்த பயணி ஒருவர் மிகவும் பலமாகத் தும்மிவிட்டார். நானும் அவ்விடத்தில் சுவாசித்துவிட்டேன். அதனால் அவருக்குக் கொரோனா இருந்தால் அது தொற்றி இருக்குமோ என்று பயப்படுகிறேன். எனது தலைமை அதிகாரி கொரோனாவிற்கான பரிசோதனை செய்து எனக்குக் கொரோனா தொற்றவில்லை என்று உறுதி செய்த பின்பே வேலைக்கு வருமாறு கூறுகிறார். அதனால் எனக்கு விரைவாக அந்தப் பரிசோதனை செய்ய வேண்டும்’

‘ஓ… உங்களுக்குத் தொண்டை நோ, இருமல், காய்ச்சல் இப்படி ஏதாவது தொடங்கி இருக்கிறதா? அனேகமாக அவை இருப்பதற்கு இப்போது வாய்ப்புக்கள் இருக்காது என்று நினைக்கிறேன். அதனால் உங்களுக்குப் புதன்கிழமை பன்னிரண்டு மணிக்கு நேரம் ஒதுக்குகிறேன். அதுவரையும் நீங்கள் எங்கும் வெளியே செல்ல வேண்டாம். தனித்து வீட்டில் இருக்க வேண்டும். அத்தோடு இங்கே பரிசோதனைக்கு வரும்போது பொதுப் போக்குவரத்தை பாவிக்கக்கூடாது. உங்களின் சொந்த வாகனத்தைப் பாவியுங்கள். அல்லது யாராவது நண்பர்களிடம் இருந்து உதவியைப் பெறுங்கள்’

‘பருவாய் இல்லை. என்னிடம் சொந்த வாகனம் இருக்கிறது. அதில் நான் வரலாம்’

‘மிகவும் நன்று. அதற்கு இடையில் உங்களுக்கு ஏதாவது கடுமையான வருத்தமாக இருந்தால் நீங்கள் அம்புலன்சிற்கு தொடர்பு கொள்ளுங்கள். அப்படி எதுவும் நடக்காது என்று நினைக்கிறேன். எதற்கும் ஒரு எச்சரிக்கைக்கு இதைப் பற்றிச் சொல்லி வைக்கிறேன்’

‘பரிசோதனைக்கு நான் ஏதாவது முன்னேற்பாடு செய்ய வேண்டுமா?’

‘இல்லை. இதற்கு எதுவும் தேவையில்லை. நீங்கள் தனித்து இருங்கள். மற்றவர்களுக்கு அருகே செல்ல வேண்டாம். மற்றும்படி நீங்கள் சாதாரணமாக உங்கள் நாளைக் கழியுங்கள். ஏதாவது அவசரம் என்றால் ஏற்கனவே கூறியபடி தொடர்பு கொள்ளுங்கள்’

‘பரிசோதனைக்கு வரும்போது அதிக நேரம் காத்திருக்க வேண்டி வருமா?’

‘அது வருபவர்களின் தொகையை பொறுத்தது. எப்படி என்றாலும் அரை மணித்தியாலம் தொடக்கம் ஒரு மணித்தியாலம் வரைக்கும் நீங்கள் காத்திருக்க வேண்டி வரும் என்று நான் நினைக்கிறேன். அதற்குத் தயாராக வாருங்கள்’

‘தயவு செய்து நான் எங்கே வரவேண்டும் என்பதையும் நீங்கள் எனக்கு விரிவாகக் கூற வேண்டும். இடம் தெரியாது தேடிக்கொண்டு நின்றால் நேரத்திற்குப் பரிசோதனைக்கு வரமுடியாது போய்விடும்’

'ஓ... அப்படியா...? நீங்கள் இதற்கு முன்பு உல்லவோல் மருத்துவமனைக்கு வந்து இருக்கிறீர்களா? உங்களுக்கு மருத்துவமனையின் அமைப்பு பற்றிய பரிட்சியம் இருக்கிறதா?'
'ஆம்... நான் சில வேளை அங்கே வந்து இருக்கிறேன். நீங்கள் விளங்கப்படுத்துங்கள். அது எனக்கு இலகுவாகக் கண்டுபிடித்து வருவதற்கு மிகவும் உதவியாக இருக்கும்'
'உங்களுக்கு உல்லவோல் மருத்துவமனைக்குள் இருக்கும் 'கிவி' கடை தெரியுமா?'
'தெரியும்'
'நீங்கள் அந்தப் பாதையால் தொடர்ந்து நேராகப் பின்னோக்கி வரவேண்டும். பரிசோதனை செய்யும் இடத்திற்கு முன்பாக தற்காலிக கூடாரம் அமைக்கப்பட்டு இருக்கிறது'
'ஓ... அப்படியா? அப்படி என்றால் கண்டுபிடித்து வருவது சிரமமாக இருக்காது. தங்கள் உதவிக்கு மிகவும் நன்றி. ஆனால் நீங்கள் இன்னும் நேரத்தை சொல்லவில்லை'
'ஓ... மறந்துவிட்டீர்களா? நீங்கள் புதன்கிழமை பன்னிரண்டு மணிக்கு இங்கே வரவேண்டும் என்று கூறினேன். அங்கே பலரும் வரிசையில் நிற்பார்கள். நீங்களும் அதில் இணைந்து கொள்ளுங்கள்'
'நான் நேரத்தை மறந்ததிற்கு என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் விளக்கத்திற்கு மிகவும் நன்றிகள்'
'நல்லது நீங்கள் மிகவிரைவாக உண்மையை அறிந்து கொள்ள எனது வாழ்த்துக்கள். பயப்படாதீர்கள். அனேகமாக உங்களுக்கு இந்த நோய் தொற்றி இருக்க வாய்ப்பு இருக்காது என்று எண்ணுகிறேன். இது ஒரு உறுதி செய்யும் முயற்சியே'
'மிக்க நன்றி'
'காத'
'காத'

என்று விடை கூறிய அகிலன் திறன்பேசியைத் துண்டிக்க அது தனக்கு ஓய்வு வேண்டாம் என்பது போல மீண்டும் சிணுங்கியது. அதை எடுத்து பார்த்த பொழுது அந்த அழைப்புச் சார்மினியிடம் இருந்து வருவது தெரிந்தது. அகிலன் ஆர்வத்தோடு அதை ஏற்றான்.
'என்னப்பா செய்கிறியள்? எவ்வளவு நேரமா உங்களுக்கு அடிக்கிறன் எடுக்கிறியள் இல்லை. என்ன சரியான விசியா இருந்தீங்கள் போல...? நானும் ஓயாமல் கால் மணித்தியாலமாய் உங்களுக்கு அடிச்சுக்கொண்டு இருக்கிறன்'
'தெரியும் சார்மினி. ஆனா, நான் உல்லவோல் ஹொஸ்பிற்றலோட கதைச்சு கொண்டு இருந்தன். அதை கட்பண்ணி உன்னோட கதைக்க முடியாது. அப்பிடி கட்பண்ணினால் திரும்ப அவங்களோட கதைக்க

ஒருமணித்தியாலம் வெயிற் பண்ண வேணும். அதால நீ அடிக்கிறாய் எண்டு தெரிஞ்சும் அதை எடுக்கிற சந்தர்ப்பம் எனக்கு இருக்க இல்லை. இப்ப விளங்கிச்சா உனக்கு? போனை எடுக்காததுக்கு சொறி செல்லம்'
'பருவாய் இல்லை அப்பா. நல்லதாய் போச்சுது. எப்ப வரட்டாம்?'
'புதன்கிழமை வரட்டாம். எங்க வரவேணும் எண்டும் விளங்கப்படுத்திச்சினம்'
'அப்ப நல்லதாப் போச்சுது. எப்பிடிப் போகப் போகிறியள்?'
'என்னைக் கூட்டிப் போகக் கெலியா வரும்? கார்ரிலதான் போக வேணும். வேறை எப்பிடிப் போகலாம்? பப்பிளிக் ரான்ஸ்போட் பாவிக்க வேண்டாமாம். வேற வழி இல்லை'
'அதுக்குப் பிறகு நான் எங்கையும் போகிறது எண்டா என்ன செய்கிறது?'
'நடந்து போகலாம்தானே? என்ன நீ இப்படிப் பயப்பிடுகிறாய். நான் கார் யன்னல திறந்து காத்து போகவிட்டு பிறகு ஸ்பிரீற்றால காரின்ரை உட்பகுதியை துடைச்சு துப்பரவு செய்து போட்டு வாறன். நீயும் வேணுமெண்டால் ஸ்பிரீற்றால துப்பரவு செய்துபோட்டு காரை பாவிக்கலாம்'
'றிஸ்க் இல்லையே அப்பா?'
'நீதான் சொல்ல வேணும். அந்த அளவுக்கு இருக்காது எண்டு நான் நினைக்கிறன். தேவையில்லாமல் பயப்பிடாத. வேணும் எண்டா மாஸ்க் கொண்டே வை. நான் மாஸ்க் பாவிக்கிறன். நீ ஸ்பிரீற் வாங்கி வந்திட்டியா?'
'நீங்கள் இன்னும் இந்த வருத்தத்தின்ர சீதியஸ் பற்றி விளங்கிக் கொள்ளாமல் இருக்கிறியள் எண்டு நான் நினைக்கிறன். இந்த வைரஸ் சுவாசத்தில இருந்து வருகிற நீர்த்துளிகளுக்கு உள்ளேயும் வாழுமாம். அதுவும் காற்றில மூன்று மணித்தியாலத்திற்கு மேல உயிர் வாழுமாம். அப்பிடி நீங்கள் தும்மி அது காருக்க இருந்தா நான் என்ன செய்யலாம் சொல்லுங்க பாப்பம்?'
'உன்னுடைய பயத்திற்கும் சில காரணங்கள் இருக்குது. இருந்தாலும் அதுக்குத்தானே கார் கண்ணாடிய திறந்துவிடப் போகிறன். அது காத்தோட போயிடும். மீதியை நீ ஸ்பிரீற் போட்டுத் துடைச்சுவிடு. வேணும் எண்டா நான் கார் பாவிச்சு மூண்டு மணித்தியாலத்திற்குப் பிறகு நீ காரைப் பாவி. இப்ப ஓகேயா? அல்லது இன்னும் பயமா இருக்குதா?'
'இல்லை நீங்கள் சொல்லுகிறது சரிதான். அப்படிச் செய்வம். எதுக்கும் நாங்கள் முன்னெச்சரிக்கையா இருக்கிறது நல்லதுதானே?'
'ம்… உண்மை. அது சரி ஸ்பிரீற் வாங்கி வந்திட்டியா?'
'அதுக்கு நிறைய இடம் அலைய வேண்டி இருந்திச்சுது. ஒரு மாதிரி நெத்தில பார்த்து கடையைத் தேடிப் பிடிச்சுப் போய் வாங்கிக் கொண்டு வந்திட்டன். சாப்பாட்டுச் சாமான்களும் நெத்தில ஓடர் பண்ணப் போகிறன். அதுவும் கடைகளில என்ன இருக்கும் என்ன இல்லை எண்டு தெரிய

இல்லை. அதோட நெத்தில ஓடர் பண்ணினால் கொஞ்சம் விலையாகவும் இருக்கும்'

'இப்ப விலையைப் பற்றி யோசிக்காத. வருத்தம் வராமல் இல்லாட்டி பரவாமல் இருக்கிறது முதல் முக்கியம். மற்றதைப் பற்றி ஒண்டும் நாங்கள் இப்ப யோசிக்கத் தேவையில்லை. காசைப் பார்த்து வருத்தத்தை வாங்க இயலாது'

'நான் உங்களுக்குச் சாப்பாடு சூடாக்கிக் கொண்டு வாறன்... நீங்க முதல்ல சாப்பிடுங்க. நானும் இவனுக்குச் சாப்பாடு குடுக்க வேணும். எண்டாலும் இன்னும் ஒரு குழப்பம் எனக்கு இருக்குது அப்பா'

'என்ன அது?'

'அது என்ன எண்டா கரந்தேன முடிய வேலைக்குப் போக வேணும். அப்பிடி எண்டால் எங்களுக்குப் பிரச்சினையா இருக்கும். அதுக்கு என்ன செய்கிறது? நாளைக்கும் அவனை எப்பிடிப் பள்ளிக்கூடம் அனுப்புகிறது எண்டும் தெரிய இல்லை. அங்க ஏதாவது தொற்றிக் கொண்டு வந்தால் என்ன செய்கிறது எண்டும் தெரியாது? இல்லாட்டி அவனுக்கும் கரந்தேனவா?'

'அவன் பள்ளிக்கூடம் கட்டாயம் போக வேணும் எண்டு இல்லை. அதுக்கும் ஏதாவது ஒரு முடிவு வரும். மற்றதை ஆறுதலாக யோசிப்பம். இப்ப நீ சாப்பாட்டைச் சூடாக்கிக் கொண்டு வா'

'சரி'

அகிலன் திறன்பேசியை வைத்துவிட்டுக் குளிக்க நினைத்தான். அதற்கிடையில் சார்மினி உணவைச் சூடாக்கிக் கொண்டு வந்தால் சிக்கலாகிவிடும் என்பது அவனுக்கு விளங்கியது. அவளுடன் மீண்டும் திறன்பேசியில் தொடர்பு கொண்டு தான் குளித்துவிட்டு வந்த பின்பு உணவைச் சூடாக்குமாறு கூறிவிட்டுக் குளிக்கச் சென்றான்.

அவன் விரைவாகவே குளித்துவிட்டு வந்து சாப்பாட்டைச் சூடாக்கி வைக்குமாறு திறன்பேசியில் கூறிவிட்டுத் தொலைக்காட்சியை இயக்கினான். அதில் செய்தி போய்க்கொண்டு இருந்தது. செய்தியில் அரசாங்கம் பாடசாலைகளைத் திங்கள் கிழமையிலிருந்து மூடுவதாக அறிவித்தது. அதைப் பார்த்த பொழுது அவனுக்கு நிம்மதியாக இருந்தது. இன்று தான் தேவையில்லாது சுரங்க ரதத்தில் ஏறி இருக்காவிட்டால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது என்கின்ற எண்ணம் எழுந்தது. சார்மினி காரைக் கொண்டு செல்வதால் அவன் அதில் போகவேண்டியது கட்டாயமாகியது. சார்மினி ஏற்கனவே ஒரு முறை மிதிவண்டியில் வேலைக்குச் சென்று வருமாறு கூறினாள். ஆனால் அலுப்பில் அகிலன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதைக் கேட்டிருந்தால் இன்று சிலவேளை இப்படிச் சிந்திக்க வேண்டிய அவசியம் வந்து இருக்காது என்று அவனுக்குத் தோன்றியது. செய்தியில் இனி

நோர்வேயில் எப்பிடியான நடைமுறைகள் அமல்படுத்தப்பட இருக்கின்றன என்று விவரித்து கொண்டு சென்றார்கள். இந்தக் கட்டுப்பாடுகள் போதுமா அல்லது இதைவிட கட்டுப்பாடுகள் வேண்டுமா என்பது அகிலனுக்கு விளங்கவில்லை. அவனது சிந்தனையைக் குழப்புவது போல மீண்டும் சார்மினி திறன்பேசியில் தொடர்பு கொண்டாள்.

'திரும்ப என்ன சார்மினி?'

'சாப்பாடு கொண்டு வந்து வைக்கிறன். சூடாறமுதல் வந்து எடுத்துக் கொண்டேச் சாப்பிடுங்க. சரியே? பிறகு மறந்துபோய் ரீவியைப் பார்த்துக் கொண்டு இருக்கிறது இல்லை'

'இல்லை… நான் இப்ப வாறன். நீயும் ரீவியைப் பார். திங்கள் கிழமையில இருந்து ஸ்கூல் இல்லையாம். ஆனா நாங்கள் கரந்தேனவுக்குப் பிறகு வேலைக்குப் போக வேண்டி வரும் எண்டு நினைக்கிறன்'

'முதல்ல இது முடியட்டும் அப்பா'

'நீ சொல்கிறதும் உண்மை. எதுக்கும் நாங்கள் நிலைமையைச் சமாளிக்கிறதுக்கு றெடியா இருக்க வேணும்'

'ம்… இருப்பம் அப்பா. நாங்களே நிலைமையைச் சமாளிக்க முடியாட்டி யார் நிலைமையைச் சமாளிப்பினம்?'

'அதைத்தானே நான் சொதப்பிப் போட்டன்'

'நடந்தது அல்லது முடிஞ்சத இனி யாராலும் மாற்ற முடியாது. மாத்த முடிஞ்சிருந்தா சீனாவே மாத்தி இருக்கும். மாத்தி இருந்தால் அது எப்பிடியான உலகமாய் இருந்து இருக்கும்? அது முடியும் எண்டால் எத்தினை விசயத்தை மனிசன் றிவேர்ஸ் பண்ணி இருப்பான். அதைப் பற்றி இப்ப யோசிச்சு என்ன பிரயோசனம்? இனிக் கவனமா இருப்பம். அப்பிடி இருந்தால் அதுவே போதும். எதுவும் உண்மையில் எம் கையில் இல்லாத உலகு இது. இல்லையா அப்பா?'

'தத்துவம்… ஆனா, நீ சொல்லுகிறது உண்மை. அதை எல்லாம் தெரிஞ்சு கொண்டும் நாளை நிரந்தரம் எண்டுகிற கற்பனையில வாழ்கிறதே இந்த மனித வாழ்க்கை. அதை யாரும் இலகுவில மீறிவிட முடியாது. சரி…. நீ போய் முதல்ல செய்தியைப் பார்'

'ஓ நான் பார்க்கிறன். அதோட பிரசன் உங்களோட கதைக்க வேணுமாம்'

'ஓ ஸ்கைப்பில கதைப்பம்'

'அவன் உங்களிட்ட வரவேணும் எண்டு அடம்பிடிக்கிறான். அவனுக்கு இந்த வருத்தத்தைப் பற்றி முழுமையா விளங்குதில்லை. அப்பாவிட்டப் போக வேணும் எண்டு கேட்கிறவனிட்ட இல்லை எண்டால் உடன முகம் சிவந்து கண்ணீர் பெரும் ஊற்றாய் பொங்குது. 'ஏய் காத்த டை' (நான் உன்னை வெறுக்கிறேன்) எண்டுறான். எதுக்கும் நீங்கள் இப்ப சாப்பிடுங்க... அவனுக்குச் சாப்பாடு குடுக்கேக்க நான் உங்களை ஸ்கைப்பில கூப்பிடுகிறன்'

‘சரி. அவன் குழந்தைப் பிள்ளை தானே? அவனுக்கு எப்பிடி இது எல்லாம் விளங்கும்? குழந்தைப் பிள்ளையளுக்கு இது பெரிசாத் தொத்தாது எண்டுறாங்கள். அதால நாங்கள் தேவை இல்லாமல் பயப்பிட தேவை இல்லை எண்டு நினைக்கிறன்’
‘அப்பிடி எல்லாம் நாங்கள் அசண்டையீனமாய் இருக்க முடியாது. இந்த வைரஸ்சால எப்பிடியான பிரச்சினை வரும் எண்டு யாருக்கும் சரியாகத் தெரியாது. உடலில இருக்கிற இயற்கையான எதிர்ப்புச் சக்தியையே கடத்தி தன்ர விருப்பத்திற்கு பாவிக்குமாம். இந்த வைரஸ் எண்பது வீதத்திற்கு மனிதப் புரதத்தைக் கொண்டிருக்காம். அப்படியான வைரஸ் யாருக்கும் தொத்தாமல் இருக்கிறதுதான் நல்லது. தொத்தினா உடன வாற வருத்தம் ஒண்டு. ஆனா நீண்டகாலத்தில எப்பிடியான பாதிப்புகளை உண்டு பண்ணும் எண்டது சரியாக யாருக்கும் தெரியாது. அதால எந்தவொரு விசயத்திலும் நாங்கள் அசண்டையீனமாய் இருக்கக்கூடாது அப்பா. இது சிலருக்கு சாதாரண காய்ச்சல் மாதிரிக் கழியலாம். ஆனால் சிலரது வாழ்க்கையைத் தலைகீழாக்கிப் போடும் போல இருக்குது. எதுக்கும் போகப் போகத்தான் தெரியும். நாங்கள் இயலுமானவரை கவனமாய் இருக்க வேணும்’
‘நீ சொல்லுறுது உண்மை. நாங்கள் கவனமாக இருக்க வேணும். அதே நேரம் அவனுக்கும் அதில பெரிய அதிர்ச்சி ஏற்படக்கூடாது. எப்பிடியாவது அவனைச் சமாளிக்க வேணும்’
‘அதுக்கு நாங்கள் இதைவிட என்ன செய்ய முடியும்? இந்த வைரஸ் எப்பிடி ஒரு ஆளைவிட்டு மற்ற ஆளுக்குப் பாயுது எண்டு முழுமையாத் தெரியாது. அப்படி இருக்கேக்க நாங்கள் இதைவிட வேற என்ன செய்யமுடியும்? பிறகு ஏதும் தப்பாகீட்டா இருந்து கவலைப்பட முடியாது’
‘சரி… நீ போய் அலுவலைப் பார்’
‘சரி’

குளித்துவிட்டு வந்ததிலிருந்து அகிலனுக்கு உடம்பு குளிர்வது போல இருந்தது. அவன் எழுந்து சென்று வெப்மூட்டியை முறுக்கிவிட்டான். இது நிலத்திற்குக் கீழே இருக்கும் பாதாள அறை. பொதுவாக கோடைக்காலத்திலும் சீதளம் சிதையாது இருக்கும். குளிர்காலம் என்றால் சொல்ல வேண்டியது இல்லை. இப்போது குளிர்காலம் முடிந்து கோடைக்காலம் தொடங்கும் தருவாய். சிறிது நேரம் வந்துவிட்டப் போனால் குளிர் தெரியாது. இப்போது அதிக நேரம் இங்கு இருப்பதால் அதை உணர முடிகிறது என்பது அகிலனின் எண்ணமாகியது.

சார்மினி குத்தரிசிச் சோறும் முருங்கைக்காய் குழம்பும், நண்டு வறையும் சமைத்து இருந்தாள். அகிலன் ஆர்வத்தோடு எடுத்து அதைச் சாப்பிடத் தொடங்கினான். இரண்டு வாய் வைத்திருப்பான்… அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. பொதுவாகச் சாப்பாட்டில் அவன் யாரும் குறை

சொல்ல வைப்பது இல்லை. இன்று என்ன நடந்தது என்பது அவனுக்கு விளங்கியும் விளங்காது போல இருந்தது. அவன் இது தனது வீண் கற்பனை எனத் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டு மீண்டும் சாப்பிட்டான். அவனால் வழமை போல் முழுவதையும் சாப்பிட முடியாவிட்டாலும் பெரும்பகுதியைச் சாப்பிட்ட திருப்தியோடு மீதம் இருந்த உணவைக் குப்பை வாளிக்குள் கொட்டிவிட்டு தட்டைச் சவர்க்காரம் இட்டுச் சுடுநீரில் நன்கு அலசிக் கழுவினான். அவனுக்கு அதில் திருப்தி ஏற்படவில்லை. அவன் அந்தத் தட்டை மீண்டும் சவர்க்காரம் இட்டு கவனமாகக் கழுவினான். கழுவிய உடனே சென்று அதைக் கதவடியில் வைத்தான். சார்மினி அதை எடுத்துப் பாத்திரங்கள் கழுவும் இயந்திரத்தில் கழுவப் போடுவாள் என்பது அவனுக்குத் தெரியும். அதன் பின்பு அதில் வைரஸ் வாழ்வதற்கான சந்தர்ப்பம் இருக்காது. இந்த வைரசிற்கு வெப்பம் அதிகம் பிடிப்பதில்லை என்று கதைக்கிறார்கள். பொதுவாகக் குளிர்மையான நோர்வேக் காலநிலை மிகவும் அதற்குப் பிடிக்குமென நம்பப் படுகிறது. அது வைரசிற்குச் சாதகமாய் அமைந்தாலும் இங்கு மனிதர்களின் செறிவு குறைவாக இருப்பது அதற்கு பாதகமாக அமையும் என்பதும் உண்மை. சனநெருக்கம் குறைவு என்றால் ஒரு மனிதனை விட்டு மற்றைய மனிதனுக்குப் பாய்வது கடினமாக இருக்கும். அப்படி நோர்வேயின் மற்றப் பகுதிகளிலிருந்தாலும் ஒஸ்லோ அப்படி அல்ல என்பதும் உண்மை. அதில் வெளிநாட்டவர்கள் அதிகம் செறிவாக வாழும் பகுதி முக்கியமானது. அத்தோடு பல நபர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட பெரிய குடும்பங்கள் வாழும் ஒஸ்லோவின் கிழக்குப் பகுதியும் அடங்கும். இந்தப் பகுதிகள் நோர்வேயில் வைரசிற்கு பெரும் வாய்ப்பான இடமாகும். லண்டன் போன்று இங்கு நகரத்தினுள் அதிக சனநெருக்கம் இல்லாவிட்டாலும் ஒஸ்லோவின் மத்திய பகுதி எப்போதும் சனநெருக்கமாகவே இருக்கும். அதுவும் குரன்லாண்ட் போன்ற பகுதிகளில் மக்கள் மிகவும் நெருக்கமாகச் செறிந்து நடமாடுவார்கள். அங்கே இடிபட்ட வண்ணம் மரக்கறிக் கடைகளில், இறைச்சிக் கடைகளில் கொள்முதல் செய்வார்கள். அது வைரசிற்கு மிகவும் பிடித்த இடமாக இருக்கும் என்பதிலும் ஐயம் இல்லை. இதைப் பற்றி எப்படிக் கவனம் எடுக்கப் போகிறார்கள் என்று அகிலனுக்கு விளங்கவில்லை. குரன்லாண்ட் போன்ற வெளிநாட்டுக்காரர்கள் அதிகம் நடமாடும் இடங்களில் மக்களும் அசண்டையீனமாக இருப்பதாகவே அகிலனுக்குத் தோன்றியது.

தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் நாட்டில் மாறி இருக்கும் நடைமுறை பற்றி விளங்கப்படுத்திக் கொண்டு இருந்தார்கள். இந்த நடைமுறை மாற்றத்திற்கு முதற்காரணம் பலரும் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்ந்து இருக்க வேண்டும். அதன் பின்பே அரசாங்கம் விழித்துக் கொண்டதாக அகிலனுக்குத் தோன்றியது.

இப்போது என்றாலும் நோய் பரவாது கட்டுப்படுத்தும் விதமாக அவர்கள் நடவடிக்கை எடுப்பது அவனுக்கு பெரும் மன அமைதியைத் தந்தது.

2

பலரும் விளையாட்டாகவே நினைத்தார்கள். இதில் எந்த விபரீதமும் இருக்காது என்று நம்பினார்கள். நித்தம் நித்தம் ஆயிரம் மாயிரம் நபர்கள் தும்முகிறார்கள். அவர்களால் வருத்தம் பரவுவது என்றால் நோர்வேயின் கணிசமான மக்களுக்கு அது பரவி இருக்க வேண்டும். அப்படிப் பரவியதாக எந்தத் தகவலும் இல்லை. பரவிவிடுமோ என்கின்ற பயம் நாடு முழுவதும் பரவி இருப்பது மட்டும் பலமான உண்மை. சுரங்க ரதத்தில் நடந்ததை பற்றிச் சார்மினி கவலை கொண்டாலும் அகிலன் அதிகம் கவலை கொள்ளவில்லை. கவலை கொள்ள வேண்டும். அளவுக்கு அதிகம் கவலைகொண்டால் வாழமுடியாது என்பது அவன் எண்ணம். இருந்தாலும் சார்மினியின் மன அமைதிக்கும் எல்லோரினதும் பாதுகாப்பிற்கும் அவள் கூறுவது போல நடப்பதே சரி என்று அவன் முடிவு செய்து இருந்தான். அதன்படியே அவன் ஒழுகினான். முதலில் பிரசனோடு கதைத்து அவனைச் சமாதானம் செய்ய வேண்டும். ஏன் இதுவரையும் சார்மினி ஸ்கைப் இணைப்பை ஏற்படுத்தவில்லை என்பது அவனுக்கு விளங்கவில்லை. அவள் ஏற்படுத்தாவிட்டால் என்ன? தான் அதை ஏற்படுத்துவோம் என்று முடிவு செய்தான். அவன் தனது திறன்பேசியை எடுத்து ஸ்கைப்பை இயக்கினான். அது உயிர் பெற்றுக் கொண்டு அடுத்த முனையை இணைப்பதில் மும்மரமாகியது. நான்கு முறை அனுங்கிய பின்பு சார்மினி அதை எடுத்தாள்.

‘அதுக்குள்ள என்னப்பா அவசரம் உங்களுக்கு?’ என்றாள். இந்த நேரத்திலும் அவள் கண்களில் காதல் மின்னுவதாக அவனுக்குத் தோன்றியது.

‘நீ சாப்பாடு கெதியா அவனுக்குக் குடுப்பன் எண்டா... ஆனாக் காண இல்லை. அதுதான்..’

‘நான் பிளானை மாத்திப் போட்டன். அவனை முதல்ல குளிப்பாட்டிப் போட்டுப் பிறகு சாப்பாடு குடுக்கலாம் எண்டு நினைச்சன்’

‘ஓ அப்பிடியே?’

‘அம்மா... அங்க பார் அப்பா... அப்பா... நான் அப்பா... அப்பாவோடை கதைக்க வேணும். போனைத் தா அம்மா... போனைத் தா அம்மா..’ என்று கூறிய வண்ணம் பிரசன் சார்மினியின் கையைப் பிடித்துப் பலமாக இழுத்தான். அவன் இழுவையை அவளால் தாங்க முடியவில்லை. இதற்குமேல் தான் அகிலனுடன் கதைக்க முடியாது என்பதை விளங்கிய சார்மினி திறன்பேசியைப் பிரசனிடம் கொடுத்துவிட்டு அவசரமாக அவனுக்குச் சாப்பாடு எடுத்துவரச் சென்றாள். கதைக்கும் ஊட்டிற்குள்

அவனுக்கு உணவு ஊட்டும் அலுவலை இலகுவாகச் செய்ய முடியும் என்பது அவளுக்கு நன்கு தெரியும். அவள் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எண்ணினாள்.

'இந்தா கதை'

'தக் அம்மா'

'அப்பா... மிஸ் யூ அப்பா. எப்ப நீங்க மேல வருவீங்க அப்பா? நீங்கள் இல்லாமல் பயமா இருக்குதப்பா. அம்மா விளையாட வாறா இல்லை. நீங்க இப்ப மேல வாங்க அப்பா'

'பிரசன் நல்ல பிள்ளை எல்லோ?'

'ம்..'

'அப்பிடி எண்டால் அம்மாவின்ரை சொல்லுக் கேட்டு அம்மாவோட குளப்படி இல்லாமல் இருக்க வேணும். முக்கியமா இங்க வரவேணும் எண்டு அடம்பிடிக்கக் கூடாது'

'ஏன் அப்பா?'

'எனக்கு வருத்தம் வந்து இருக்குதோ இல்லையோ எண்டு இன்னும் தெரியாது. அது தெரியும் வரைக்கும் நீங்கள் இங்க வரக்கூடாது?'

'ஏன் அப்பா?'

'எனக்கு வருத்தம் இருந்தால் உங்களுக்கும் அது தொற்றிடும் இல்லையா... அதுதான்'

'ஏன் தொற்றும் அப்பா?'

'வருத்தம் எண்டா அப்பிடிதான். தொற்றிக் கொண்டு இருந்தால் மட்டுமே அதால வாழ முடியும். அதுதான்'

'தொத்தினா என்ன அப்பா?'

'தொத்தினா வருத்தம் வரும். அது கடுமையா இருக்கும்'

'ஆ வெண்டு பிரசன்' என்றாள் அவன் அருகில் வந்த சார்மினி.

'சாப்பிட்டா அப்பாவோட கதைக்க முடியாது'

'கொஞ்சம் கொஞ்சமாய் சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கதை'

'ம்... ஆ... கொஞ்சம்... சரியா?'

'கடுமையா இருந்தா என்ன அப்பா?'

'கடுமையா இருந்தால் கஸ்ரமாய் இருக்கும். சுவாசிக்க இயலாது. அதால நீ இங்க வரக்கூடாது. அம்மாவோட கவனமாய் இருக்க வேணும்'

'அப்ப... உங்களுக்கு அப்பிடி வருமா அப்பா?'

'அது ஒண்டும் அப்படி வராது. நான் கெதியா வந்து பிள்ளையோட விளையாடுவன்'

'எப்ப அப்பா இங்க வருவீங்கள்?'

'கெதியா'

'கெதியா எண்டா?'

'சும்மா அப்பாவோட நொய் நொய் எண்டாதை. ஆ எண்டு' என்றாள் சார்மினி கடுமையான தொனியில்.
'எனக்கு அப்பா வேணும். இல்லாட்டி நான் ஆவெண்ட மாட்டன்'
'அப்பா கெதியா வருவாரடா கண்ணா. இப்ப நீ சாப்பிட்டால்தான் அப்பாவோட அப்ப உசாராக விளையாடலாம்'
'அப்பா வேலைக்குப் போகிறது இல்லையா?'
'அப்பா கொஞ்ச நாளைக்கு வேலைக்கு போகமாட்டார். நாங்களும் வெளியால போகத் தேவையில்லை. வீட்டில இருந்து விளையாடலாம்'
'வீட்டில விளையாட அப்பா இல்லை. பிறகு எப்பிடி அப்பாவோட விளையாடுகிறது?'
'நீ என்னோடு இப்ப விளையாடு'
'அம்மாவோட விளையாடு பிரசன். அம்மாவை ஆக்கினைக்கட்டக் கூடாது. சரியா?' என்றான் அகிலன்.
'சரி. கெதியா நீங்கள் இங்க வரவேணும்'
'ஓ நான் கெதியா வருவன். இப்ப போனை அம்மாவிட்ட குடுங்க...' திறன்பேசி கைமாறியது.
'ம்... சொல்லுங்க?' என்றாள் சார்மினி.
'இவனைச் சமாளிக்கிறது பெரிய வேலையாகத்தான் இருக்கப் போகுது..'
'அதெல்லாம் சமாளிக்கலாம் அப்பா... நீங்கள் ஒண்டும் கவலைப் படாதையுங்க... நீங்கள் றிலக்ஸ் பணணுங்க. நான் இவனுக்குச் சாப்பாடு குடுத்து முடிச்ச பிறகுதான் சாப்பிட வேணும்'
'சரி... சரி... நீ உன்ரை அலுவல பார். வாய்'
'வாய்'

*

அகிலன் தொலைக்காட்சியைப் பார்த்தான். தொடர்ந்தும் கொரோனா பற்றி அறிவுரை தொடர் செய்தியாக நீண்டது. இந்த வருத்தம் மக்களுக்கு முதலில் பெரும் பயத்தை உண்டு பண்ணுகிறது. அதனால் பலரும் பலவிதமாகச் சிந்திக்கிறார்கள். சிலர் உணவைச் சேமிப்பதை முதன்மைப்படுத்துகிறார்கள். சிலர் மருந்துப் பொருட்களை சேமிப்பதில் தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்கள். அதுவும் மலேரியா மருந்தை மருத்துவர்களே பதுக்குகிறார்கள். அப்பாவி மக்கள் அதுபற்றி எதுவும் அறியார். அதைவிடச் சிலர் துப்பரவு செய்வதற்கான பொருட்களைச் சேகரிப்பதில் அக்கறை காட்டுகின்றனர். சிலர் பணம் மற்றும் போக்குவரத்து வசதி பற்றி சிந்திக்கிறார்கள். சிலர் மிகவும் நிதானமாக எல்லாமே அவசியம் என்று அதற்கேற்ப செயற்படுகிறார்கள். ஆகமொத்தத்தில் எங்கும் அலைமோதல். அதனால் அளவுக்கு அதிகமாகக் கொள்முதல். அதுவே சொந்தப் பதுக்கலாக மாறுகிறது.

இருந்தும் அதன் பாதிப்பு நோர்வேயில் ஒரு கட்டுக்குள் தொடர்ந்தும் இருக்கிறது.

மீண்டும் மயிர்க்குச்செறிந்தது. உடல் குளிர்ந்து நடுக்கம் எடுத்தது. அறை இப்போது நன்கு சூடாகிவிட்டது. இருந்தும் ஏன் குளிர்கிறது என்பது அகிலனுக்கு விளங்கவில்லை. அது அவனுக்கு மனதில் ஒருவித பயத்தை தந்தது. ஏதாவது பயப்படும்படியாக இருக்குமோ என்கின்ற கவலை உண்டாகியது. எதுவாக இருந்தாலும் எதுவும் செய்ய முடியாத நிலை. இது சிலவேளை உடல் அலுப்பாக இருக்கலாம் என்றும் தோன்றியது. சிறிது நேரம் நித்திரை கொண்டு எழும்பினால் இந்த அலுப்புக் குளிர் எல்லாம் தீர்ந்து போய்விடும் என்று நினைத்தான். அவன் சென்று படுக்கையைத் தயார் செய்தான். சார்மினி தேவையானவற்றை ஏற்கனவே கொண்டு வந்து வைத்திருந்தாள். அவன் படுக்கையைத் தயார் செய்து விட்டுத் தொலைக்காட்சியை நிறுத்தினான். பின்பு படுத்து நித்திரை கொள்ள முயற்சித்தான். நித்திரை ஆகாயத்துச் சந்திரன் போல அருகே வர மறுத்தது. அவனுக்கு எட்டாத தூரத்தில் நின்றது. உடல் தொடர்ந்தும் குளிர்வதும், முறிவதுமாக இருந்தது. மருந்து ஏதாவது எடுத்தால் நல்லது என்று தோன்றியது. அதற்கும் சார்மினியைத் தொடர்புகொள்ள வேண்டும். அப்படித் தொடர்பு கொண்டால் பிரசன் ஆயிரம் கேள்வி கேட்பான். அதற்கு வேறு பதில் சொல்ல வேண்டும். பொறுத்துப் பார்ப்போம். மேலும் அதிகமானால் அவளுடன் நேரம் கழித்துத் தொடர்பு கொள்ளலாம். அப்போது பிரசன் நித்திரை ஆகிவிடுவான் என்று எண்ணினான்.

*

அகிலன் மருத்துவ மனைக்குச் சென்று இருந்தான். அவன் முதுகில் வேலைக்குக் கொண்டு செல்லும் பை கங்காருக் குட்டி போல அதன் பிடி விடாது அவனிலிருந்தது. அதை ஏன் இங்கும் எடுத்து வந்தான் என்று அவனுக்கு விளங்கவில்லை. அங்கே மக்கள் பனங்கிழங்கை அடுக்கியது போல நெருக்கமாக இருந்தார்கள். உண்மையில் அங்கே இருப்பதற்கோ நிற்பதற்கோ, பாதுகாப்பாய் சுவாசிப்பதற்கோ இடம் இருக்கவில்லை. அதனால் வேறு வழி இன்றிப் பலர் நிலத்திலிருந்தார்கள். சிலர் நிலத்தில் இருக்க முடியாது வருத்தத்தால் தரையில் வீசப்பட்ட மீன்கள் போல அங்கே பரிதாபமாகப் படுத்துக் கிடந்தனர். பலரால் மூச்சுவிட முடியாது துடித்தனர். பலர் பலமாக இருமினார்கள். சிலர் பலமாகத் தும்மினார்கள். அகிலனுக்கு உள்ளே போக மனம் இல்லாது இருந்தது. இதற்குள்ளே சென்றால் இப்போது வருத்தம் இல்லாவிட்டாலும் அது வந்துவிடும் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் அப்படித் தயங்கித் தயங்கி நிற்க அவன் பின்னாலும் மனிதர்கள் வந்து நிரைக்கு நெருக்கிய வண்ணம்

நின்றார்கள். இரண்டு மீற்றர்கள் இடைவெளி விட்டு நிற்க வேண்டும் என்பது அறிவுறுத்தலாக இருந்தாலும் அவசரத்தில் அதை ஏற்க முடியாதவர்களாக அவர்கள் அகிலனை உள்ளே போ என்று சைகை காட்டினார்கள். பலர் இப்போது அவன் பின்னே கூடிவிட்டார்கள். அவர்களில் சிலர் பலமாக இருமினார்கள். சிலர் அகிலனை நெருக்கிக் கொண்டு உள்ளே வந்தார்கள். அதற்குப் பின்பு அகிலனால் அங்கே நிற்க முடியாது என்பது விளங்கியது. உள்ளே போவது என்றால் அது மரணத்திற்குள் தலையைக் கொண்டு சென்று கொடுப்பது போல... உள்ளே போகாது திரும்பிப் போவதும் மரணத்தோடு மணவாழ்வு கொள்வது போல. என்ன செய்வது என்று அவனுக்கு விளங்கவில்லை. அதை அலசி முடிவெடுக்கும் அவகாசமும் அவனிடம் தற்போது இருக்கவில்லை. உள்ளே போ என்பது போல் அவர்கள் மிகவும் நெருக்கிக் கொண்டு வந்தார்கள். கண் இமைக்கும் நேரத்தில் அது நடந்துவிட்டது. அவர்கள் பலம் கொண்ட யானைகள் மோதுவது போல அவனை முட்டி மோதி உள்ளே தள்ளினார்கள். அவனால் அந்தத் தாக்குதலை எதிர்கொள்ள முடியவில்லை. இப்படியான தாக்குதல் வரும் என்றும் அவன் எதிர்பார்த்து இருக்கவும் இல்லை. அவர்கள் பலம் கொண்டு மோதியதில் அவன் தன்நிலை இழந்து காற்றில் அகப்பட்ட சருகு போலத் தன் கால்கள் தரையில் தங்காது அவனை மோசம் செய்ய வருத்தத்துடன் நிலத்தில் படுத்து இருந்த ஒரு வயோதிபர் அருகில் சென்று திடீரென விழுந்தான். அவன் அப்படி வந்து விழுவான் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அனைவரும் அதிர்ச்சியில் ஆடிப் போயினர். இதற்கு என்ன செய்வது என்பது விளங்காது அவர்கள் தவித்தனர்.

அந்தப் பெரியவர் மூச்சு இழுக்க முடியாது தவித்தார். இருந்தும் அகிலனைப் பரிதாபமாகப் பார்த்தார். கருணைக் கொலை பற்றி அகிலன் கேள்விப்பட்டது உண்டு. இப்பொழுது அந்த முதியவர் அவனை அந்த உதவியைச் செய்ய சொல்லிக் கேட்கிறாரா என்று அவனிடம் ஒரு கற்பனை தோன்றியது. அடுத்த கணமே அந்த உதவி உனக்கு வேண்டுமா என்று கேட்கிறாரோ என்கின்ற குழப்பம் உண்டாகியது. கருணைக்கொலை இங்கே சட்டத்திற்கு புறம்பானது. இந்த உலகில் முதுமையில் பலருக்கு அது வரப்பிரசாதமாய் இருக்கும். உலகத்தின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் முதுமையில் பலரும் அதை எண்ணிப் பார்க்கும் நாட்கள் வரலாம். முதுமை பலருக்கு நரகமாக மாறுவதே அதற்குக் காரணமாக இருக்கிறது. கண்ணிற்குத் தெரியாத இந்த எதிரியின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்ள வேறு எந்த வழி இருக்கிறது என்பது அவனுக்குப் புலப்படவில்லை. கருணைக்கொலை ஒரு வழியாகுமா? அந்த முதியவர் திணறினார். அகிலனைப் பார்த்து வருத்தமாக முகத்தைக் கோணினார். மீண்டும் அவர் தன்னை சுதாகரித்துக் கொண்டு அகிலனைப் பார்த்தார். அவருக்கு அவனைக்

கருணைக்கொலை செய்ய விருப்பம் இல்லாது இருக்க வேண்டும். அகிலனைப் பார்த்து,
'நீ ஏன் இங்கு வந்தாய்?' என்றார். அவர் பார்வையில் கருணை இருந்தது. அகிலன் அதைக் கவனிக்கவில்லை.
'நீங்கள் அறியாது கேட்கிறீர்களா?' என்றான் அகிலன். அவன் அகங்காரம் அதில்.
'நான் இங்கு வேறு வழியின்றி வந்தேன். உன்னைப் பார்க்கும் பொழுது அப்படித் தெரியவில்லை. பின்பு எதற்கு நீ இங்கே வந்தாய்? இது சிங்கம் குடியிருக்கும் இருண்ட குகை போன்றது. குகை போலத் தோன்றினாலும் உள்ளே வரும்பொழுது எங்கே வருகிறோம் என்பது தெரியாது. வந்தவர்கள் மீண்டு திரும்பிப் போகமுடியாது'
'எங்கள் எதிரிகள் ஒன்றே. அதை உறுதிப்படுத்த நான் இங்கே வந்தேன்'
'இது எதிரிகளை உறுதிப்படுத்தும் இடம் அல்ல'
'அப்படி என்றால்?'
'இது எதிரியின் குகை. அவனிடம் தோற்றவர்களுக்குக் கருணை அல்லது மரணம் கிடைக்கும். எதிரியால் கொல்லப்படுவதற்காய் தாக்கப்பட்டவர்களை மரணத்திலிருந்து மீட்டுவரும் வெள்ளை உடை தரித்த மனிதர்களின் போராட்டம். அவர்கள் எதிரிபற்றி முழுமையாக அறியாது அவனோடு போராட வேண்டிய அவல நிலை. நீ உன்நிலையை உணராதவனாய் இருக்கிறாய். இங்கு வரவேண்டிய அவசியம் உனக்கு இல்லை. இருந்தும் இப்போது இங்கு வந்து இருக்கிறாய்'
'எனக்கு என்ன செய்ய வேண்டும் என்பது நன்கு தெரியும். நான் கட்டளைக்குப் பணிந்தே இங்கு வந்தேன். ஆனால் இங்கே காட்சி பிழையாக இருக்கிறது. அதற்காக நீங்கள் என்னைக் கண்டிக்க எந்த உரிமையும் உங்களுக்கு இல்லை'
'நான் உன்னைக் கண்டிக்கவில்லை. எனக்கு அதனால் எந்த நன்மையும் இல்லை. உன்னைப் பார்க்க இந்த நாட்டிற்குப் புதிதாக வந்து குடியேறியவன் போலத் தோன்றுகிறாய். நீ வழி தவறி இங்கு வந்துவிட்டாயோ என்று எனக்குப் பதட்டமாக இருக்கிறது'
'நீங்கள் சொல்வது போல நான் இந்த நாட்டிற்கு வந்து குடியேறியவனே. அதற்காக எனது பாதை தவறு என்று நீங்கள் எதை வைத்து சொல்லுகிறீர்கள்? அப்படி நீங்கள் கருதுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது'
'தவறு இருந்தால் என்னை மன்னித்துக்கொள். உனது அறியாமையும் பதட்டமும் அதைக் காட்டிக் கொடுத்தது. என்னைப் போன்றவர்கள் இங்கு வருவது தவிர்க்க முடியாதது. இந்த எதிரி அப்படியானவன். நீங்கள் மிகவும் இளம் வயதினராகத் தோன்றுகிறீர்கள். அதனால் நீங்கள் பிழையான இடத்திற்கு வந்துவிட்டீர்கள் என்று பதட்டப் படுகிறேன். தாமதியாது இங்கு இருந்து புறப்பட்டு விடுங்கள். அல்லது எதிரி விரித்த வலையில் நீங்கள் பலமாக மாட்டி கொள்வீர்கள். அது உங்களை பெரும்

துன்பத்தில் ஆழ்த்திவிடும். தயவு செய்து நீங்கள் இங்கிருந்து அவசரமாகத் தப்பித்துவிடுங்கள்'
'இந்த அறிவுரையைக்கூற நீங்கள் யார்? நீங்கள் கூறுவதை நான் எப்படி நம்புவது? நானே உயிரியல் படித்த பொறியியலாளன். எனக்குப் புத்திமதி சொல்ல உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? தயவு செய்து என்னைக் குழப்பாதீர்கள். உங்கள் சிகிச்சைக்காகக் காத்திருங்கள்'
'ம்...' அவர் கதைக்க முடியாது சுவாசிக்கப் போராடினார். அந்த போராட்டம் ஓயும் பொழுது அகிலனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார். அது அவனுக்கு மிகவும் கோபத்தை உண்டு பண்ணியது. எவ்வளவு திமிராக இருந்தால் இவரால் இப்படி எள்ளி நகைக்க முடியும் என்கின்ற கோபம் கொதியாக மேல் எழுந்தது.
'எதற்குச் சிரிக்கிறீர்கள்?' அகிலன் கோபத்துடன் அவரை பார்த்துச் சீறினான்.
'எனக்கு என்ன அருகதை இருக்கிறது என்று கேட்டாயே... அதை எண்ணிச் சிரிக்கிறேன்'
'அதை எண்ணிச் சிரிக்க என்ன இருக்கிறது. உங்களுக்கு உண்மையில் எனக்குப் புத்திமதி சொல்ல என்ன அருகதை இருக்கிறது? அதை முதல் சொல்லுங்கள். அதற்கு பின்பு நான் உங்கள் அறிவுரையைக் கேட்பதா இல்லையா என்று முடிவு செய்கிறேன்'
'உனக்குப் புத்திமதி சொல்லும் அருகதை எனக்கு உண்டு. அதில் எந்தச் சந்தேகமும் உனக்கு வேண்டாம்'
'என்ன அருகதை? நீங்கள் இந்த நாட்டின் வெள்ளை குடிமகன் என்கின்ற அருகதையா? அல்லது நீங்கள் இந்த நாட்டின் பூர்வக்குடிகளில் ஒருவர் என்கின்ற அருகதையா?'
'ம்... ம்... ம்...'
'ஏன் நகைக்கிறீர்கள்? எதற்காக நகைக்கிறீர்கள்?'
'உனது அறிவீனத்தைப் பார்த்து நான் வேறு என்ன செய்ய முடியும்?'
'அப்படி என்றால் எனக்கு புத்திமதி சொல்வதற்கு உங்களுக்கு என்ன தகமை இருக்கிறது? அதை முதலில் தெளிவாகச் சொல்லுங்கள்'
'சொல்கிறேன்'
அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அவர் தொடர்ந்து சிறிது நேரம் இருமினார். சுவாசிப்பதற்கு அவஸ்தைப் பட்டார். பின்பும் ஏதோ ஒரு ஓர்மத்தோடு தனது அவஸ்தையைச் சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கினார்.
'எனக்கு இப்பொழுது வயது எண்பத்து ஐந்து ஆகிறது'
'அதை நீங்கள் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உங்களைப் பார்க்கும் பொழுதே நன்கு விளங்குகிறது'

‘நான் கதைப்பதைக் குழப்பாது சொல்ல வருவதை அவதானமாகக் கேள். அப்பொழுதே நான் ஏன் உனக்குப் புத்திமதி கூறுகிறேன் என்பது விளங்கும்’

‘சரி சொல்லுங்கள்’

‘நான் இதே மருத்துவமனையில் எண்பத்து மூன்று வயது வரையும் வேலை செய்தேன்’

‘அறுபத்து இரண்டு வயதில் ஓய்வு எடுத்துக் கொள்ளவில்லையா?’

‘இல்லை’

‘ஏன்?’

‘அது நான் எனது வேலையின் மேல் வைத்திருந்த காதல் என்று சொல்ல வேண்டும். இதே மருத்துவமனையில் நான் ஆராய்ச்சியாளனாக பணிபுரிந்தேன். அதுவும் வைரஸ் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தேன். எனக்கு இறுதிவரைக்கும் வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளும் எண்ணம் இருக்கவில்லை. ஆனால் வயது போகப் போக எனது ஞாபக சக்தி இந்த வேலைக்கு ஒத்துழைக்க மறுத்தது. அதனால் நான் கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டி வந்தது. நான் ஒரு துறையில் அல்ல பல துறையில் பேராசிரியனாகப் பட்டம் பெற்றவன். அதுவும் இந்த வைரஸ்சைப் பற்றி ஆராய்வதிலேயே எனது வாழ்வின் ஒவ்வொரு கணங்களையும் செலவு செய்து வந்தேன். எனது ஆராய்ச்சியின் பயனாக சில வருடங்களுக்கு முன்பு ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தேன். அதில் அரசை இப்படி ஒரு உலகப்பிணி வரும் என்றும் அதற்கு நாங்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் எச்சரித்து இருந்தேன். யாரும் அதைப் பெரிதாகக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இன்று அதற்கான பலனைப் பல அப்பாவிகள் அனுபவிக்கப் போகிறார்கள். அந்தப் பட்டியலில் நீயும் ஒருத்தன் ஆகிவிட வேண்டாம் என்கின்ற அக்கறையில் நான் புத்திமதி கூறினேன். அப்படி புத்திமதி கூறியது உனக்கு பிடிக்காவிட்டால் தயவு செய்து என்னை மன்னித்துக் கொள். ஆனால் உனக்குப் புத்திமதி சொல்வதற்கு எனக்கு இருக்கும் ஏட்டுப் படிப்பினால் உண்டாகிய தகமைகளைவிட ஒரு சக இளம் மனிதனுக்கு அனுபவம் உள்ள மனிதன் புத்திமதி கூறலாம் என்கின்ற மனிதாபிமானத் தகமை என்னிடம் தாராளமாக இருக்கிறது என்பதை நான் நம்புகிறேன். இதற்கு மேல் நான் சொல்வதைக் கேட்பதும் கேட்காது விடுவதும் உனது விருப்பம். ’

‘தயவு செய்து எனது அறியாமையை மன்னித்துவிடுங்கள். நான் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டது இப்பொழுது எனக்கு விளங்குகிறது. எனக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. எனக்கு இந்த வைரஸ் தொற்றி இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும் என்று பணித்து இருக்கிறார்கள். நான் அதைச் செய்யவே இங்கு வந்தேன். இங்கு வந்த பின்பு நடப்பதைப் பார்க்க எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. வெளியே போய்விடலாமோ என்றும் எண்ணினேன். அதற்கு வழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இப்போது இதிலிருந்து தப்பிச்

சென்றாலும் மீண்டும் பரிசோதித்து வருத்தத்தைப் பற்றி உறுதிப்படுத்த வரவேண்டும் என்பது எனக்கு விளங்குகிறது. அதனாலேயே நான் இந்த ஆபத்தைப் பொறுத்துக் கொண்டு இருந்தேன்'

'பரிசோதிப்பது என்றால் எதற்கு நீ இங்கு வந்தாய்? அதுவும் இந்த நேரத்தில் ஏன் இங்கு வந்தாய்? உனக்கு வருத்தம் இல்லாவிட்டாலும் இங்கு வந்திருப்பவர்கள் சுவாசிக்கும் காற்றிலிருந்து உனக்கு அது தொற்றிவிடலாம். இவை காற்றில் வாழக்கூடிய வைரஸ் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. நீ எவ்வளவு நேரம் இங்கு இருக்கிறாய் எவ்வளவு சுவாசிக்கிறாய் என்பதைப் பொறுத்து அதன் தாக்கம் இருக்கும். தயவு செய்து ஓடிவிடு. இங்கு இருந்து அவசரமாக வெளியேறிவிடு. வெளியே சென்று சுத்தமான காற்றைச் சுவாசி. அப்படியே வீட்டிற்குச் சென்றுவிடு. நீ தனித்து வாழ்கிறாயா?'

'இல்லை. நான் திருமணமானவன். எனக்கு ஒரு மகன் இருக்கிறான்'

'உன்னால் எப்படிப் பொறுப்பு இல்லாது இப்படி நடக்க முடிகிறது? காற்றில் உள்ள நீர்த்துளிகளில்கூட இந்த வைரசால் பலமணித்தியாலங்கள் வாழ முடியும் என்பது என்னுடைய முடிவு. இந்தப் பிரதேசத்தில் நீ சுவாசிக்கும் ஒவ்வொரு துளி காற்றிலும் இந்த வைரஸ்சுகள் இருக்கும். இப்போது நீ அவற்றில் எந்த அளவு சுவாசிக்கிறாய் அதற்கு உனது உடம்பு எப்படி எதிர்வினையாற்றுகிறது என்பதை பொறுத்து உனது நாளைய பொழுது அமையப் போகிறது. நீ உன்னை மாத்திரம் அல்ல உனது குடும்பத்தையும் ஆபத்திற்குள் அகப்பட வைத்துவிட்டாய். நீ வரக்கூடாத இடத்திற்கு வந்து விட்டாய். எவ்வளவு விரைவாக இங்கு இருந்து வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவாக வெளியேறிச் சென்றுவிடு'

'என்ன சொல்லுகிறீர்கள்? நான் பரிசோதிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். அதனால் நான் அதை விரைவாகச் செய்து முடிக்க எண்ணினேன். அதற்காகவே புறப்பட்டு இங்கே வந்தேன். இப்பொழுது அதிகமான நோயாளிகள் இங்கு இருக்கமாட்டார்கள் என்பது எனது எண்ணம். ஆனால் இங்கு அதற்கு மாறாக மனிதர்களின் நெருக்கம். புழுக்களாக அவர்கள் துடிக்கும் அவலம். அதற்கு நான் என்ன செய்வேன்? என்மேல் நீங்கள் இப்படிப் பழிபோட கூடாது. எனக்கு இதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இல்லை. நான் நல்லதை எண்ணியே இங்கு வந்தேன். நான் நல்ல மனிதனாகவே இவ்வுலகில் வாழ நினைக்கிறேன்'

'தவறிழைக்காத மனிதர்கள் என்று யாரும் இல்லை. உனது எண்ணம் நல்லதாக இருக்கலாம். ஆனால் இங்கே இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. நீ உடனே இங்கு இருந்து சென்றுவிடு. எந்த மனிதருக்கும் அருகே சென்றுவிடாதே. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அவர்களிடம் இருந்து நீ இந்த நோயைப் பெற்றுவிடக்கூடாது. தவறுதலாக உன்னிடம் இருந்தால் அது அவர்களுக்குத் தொற்றிவிடக்கூடாது'

‘அப்படி என்றால் நீங்கள் ஏன் இங்கு இருக்கிறீர்கள். உங்களை விட்டுச் செல்வது எனது மனிதாபிமானத்தைக் கொல்வது போல இருக்கிறது’
‘எனது கணிப்பின்படி எனக்கு இந்த வருத்தம் ஏற்கனவே வந்துவிட்டது. எனக்குச் சுவாசிப்பதற்கு உதவி தேவை. அதனாலேயே நான் இங்கே வந்தேன். அதனால் தயவு செய்து நீ என்னைவிட்டு விலகி நில். இங்கிருந்து தப்பித்து சென்றுவிடு. உனக்கு நிச்சயம் விளங்கி இருக்க வேண்டும். நான் சுவாசிப்பதற்குப் பிரயத்தன படுவதிலிருந்து அது என் சுவாசப் பையைத் தாக்கிவிட்டது என்பது விளங்கி இருக்க வேண்டும். நான் உட்பட இங்கு இருக்கும் பலர் இருமும்பொழுது அவை சிறிய நீர்த்துளிகளுக்குள் பாதுகாப்பாய் பிரயாணிக்கும். பின்பு பிறமனிதர்கள் சுவாசிக்கும் பொழுது அவர்களது மூச்சுக்குளாயை அது அடைந்துவிடும். அதன் பின்பு அதன் வேலை ஆரம்பமாகும். தயவு செய்து உனக்கு என்னைப் போன்ற அவல நிலை வேண்டாம். தயவு செய்து உடனடியாகப் புறப்படு. இங்கு இருந்து தப்பி ஓடிவிடு’
‘உங்கள் அறிவுரைக்கும் அன்பிற்கும் மிகவும் நன்றி. நான் எப்படியாவது முழுமூச்சாக முயற்சி செய்து இங்கிருந்து வெளியேறிவிடுவேன். உங்கள் அன்பிற்கும் அக்கறைக்கும் மீண்டும் ஆயிரம் ஆயிரம் நன்றிகள். நான் இந்த உதவியை என்றும் மறவேன்’
‘இது உங்கள் மீது உண்டான அன்போ அல்லது அக்கறையோ அல்ல… வெறும் மனிதாபிமானம் மட்டுமே. அக்கறை அற்று மனிதாபிமானத்தை காட்டாது என்னால் வாழ முடியாது. அதைச் செய்யாவிட்டால் நான் வாழ்ந்த வாழ்விற்கே அர்த்தமற்றதாக போய்விடும். மீண்டும் சொல்கிறேன். தேவையில்லாது நேரத்தை இங்கு விரயம் செய்யாதே. ஓடிவிடு. விரைவாக இங்கிருந்து தப்பி ஓடிவிடு’
‘நான் போகிறேன். உங்கள் உடம்பை கவனித்துக் கொள்ளுங்கள்’

கூறிய அகிலனால் அதற்கு மேல் அங்கு நிற்க முடியவில்லை. அவன் கண்கள் திரையிட்டுக் கொண்டன. இவ்வளவு மனிதாபிமானம் நிறைந்த அந்த மனிதருக்கு உதவி செய்ய முடியாது அவசரமாகப் பிரிய வேண்டியது அவன் மனதை வருத்தியது. கண்கள் சக மனிதனுக்காய் மெழுகாகக் கசிந்தன. இந்த வயதில் இந்த மனிதர் இந்த நோயைப் பெற்று இருக்கிறார் என்பது அவனை வேதனைக்கு உள்ளாக்கியது. இவர் வாழ்வு என்ன ஆகும் என்று யாருக்கு தெரியும்? இருந்தும் அவருக்கு உதவ முடியாது. அவரோடு இதற்கு மேல் நின்று கதைக்க முடியாது. அப்படி நின்றாலோ அல்லது தொடர்ந்து கதைத்தாலோ தனது உயிரையும் இந்த வருத்தத்திற்குக் காவு கொடுக்க வேண்டி வரலாம் என்பதாக அகிலனுக்குத் தோன்றியது. அதற்கு மேல் அவன் அங்கு நிற்காது வெளியே செல்வதற்கு வாயலை நோக்கிப் புறப்பட்டான். ஆனால் மனிதர்கள் தலையில் கொம்பு முளைத்த ராட்சதர்கள் போல அவனது வழியை மறித்துக் கொண்டு நின்றனர். எப்படிச் செல்வது என்று

அவனுக்கு விளங்கவில்லை. அவர்கள் சுவாசம் சாவைத் தரும் ஆபத்தைக் கொண்டது. அவர்கள் நிற்கும் நெருக்கத்திற்கு அவர்களைத் தள்ளிக் கொண்டே செல்ல வேண்டும். அதை எப்படிச் செய்வது? அவர்களைத் தள்ளிக் கொண்டு செல்வது என்றால் அவர்களின் காற்றைச் சுவாசிக்க வேண்டும். உண்மையில் அவர்களின் காற்றை சுவாசிக்கக்கூடாது. ஆனால் அவர்களைத் தள்ளிக் கொண்டு வெளியேற வேண்டும். அது எப்படி சாத்தியமாகும் என்பது அவனுக்கு விளங்கவில்லை. அவனுக்குத் தலை சுற்றியது. அவன் சிறிது நேரம் என்ன செய்வது என்று தெரியாது திகைத்துப்போய் நின்றான். பின்பு எதையோ எண்ணியவனாய் திரும்பினான்.

‘நீ திரும்பி இங்கே வந்து என்ன செய்யப் போகிறாய்?’ என்றார் அந்த மனிதர் அவனைப் பார்த்து.

‘நான் திரும்பினாலும் உங்கள் திசையில் வரப்போவதில்லை’ என்றான் அகிலன்.

‘ஓ நல்ல யோசினை... பலமாகத் தள்ளிக்கொண்டு சென்றுவிடு’ என்றார் அவர்.

‘வருகிறேன்’ என்றான் அகிலன்.

‘போய் வா’ என்றார் அவர்.

அகிலன் அவரைப் பார்த்த வண்ணம் பின்னோக்கி சென்றான். அவன் யுக்தியை உணர்ந்த சிலர் அவனுக்கு வழிவிட்டனர். சிலர் அவனைப் பொருட்படுத்தாது நின்றனர். அவர்களை அவன் தனது பையால் பின்புறம் பாராது இடித்துத் தள்ளிக் கொண்டு முன்னேறினான். இல்லைப் பின்னேறினான். இது வழமைக்கு மாறானது. வாழ்வைக் காத்துக்கொள்ள இப்போது அந்த யுக்தியே இங்கே தேவைப்பட்டது. அவர்களில் சிலர் அவனைப் பார்த்து கோபமாகக் கத்தினார்கள். அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவனுக்கு அங்கு இருந்து வெளியேறிவிட வேண்டும் என்பதே முக்கிய நோக்கமாக இருந்தது. அதை அவன் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்க தயாராக இல்லை. வாழ்க்கை என்பது இவ்வுலகில் ஒருமுறையே. இதற்கு முந்திய வாழ்வு பற்றி கேள்விப்பட்டதெல்லாம் கற்பனையே. இதற்குப் பிந்திய வாழ்வு பற்றிக் கேள்விப்படுவதும் கற்பனையே. இந்த வாழ்வே எமக்குக் கிட்டிய நிஜமான வாழ்வு. அதுவும் நாம் வாழும் இந்த கணமே எம்வசமானது. அதை நாம் எதற்காகவும் இழந்துவிட முடியாது. அகிலனுக்கும் அதை யாருக்காகவும் இழக்கும் எண்ணம் இருக்கவில்லை.

அவன் அப்படிப் பலமாகத் தள்ளி கொண்டு வந்தபோது அவனை யாரோ ஓடி வந்து பலமாகக் கட்டிப் பிடித்தார்கள். யார் என்பது அவனுக்கு தெரியவில்லை. வருத்தம் உடையவர்களே இங்கே வந்திருப்பார்கள் என்பது அவனுக்கு விளங்கியது. அதனால் தனக்கும் அவர்கள்

வருத்தத்தைத் தொற்ற பண்ணுகிறார்கள் என்கின்ற உண்மை உறைத்தது. அவன் வேறு வழி இன்றித் திமிறினான்.
‘என்னை விட்டுவிடுங்கள். என்னை விட்டுவிடுங்கள்’ என்று அவன் பலமாக வாய்விட்டுக் கத்த முயன்றான். ஆனால் எதனாலோ அவனது குரல் வெளியே வர மறுத்தது. இது என்ன அவஸ்தை என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவனை கட்டிப்பிடித்தவரின் பிடி இரும்பாக இறுகியது. அவனால் அந்தப் பிடியிலிருந்து எதுவும் செய்ய முடியவில்லை. அவன் மீண்டும் இயலுமான பலம் கொண்டு தன்னை விடுவிக்கத் தனது வாயை நம்பினான்.

‘என்னை விட்டுவிடுங்கள். என்னை விட்டுவிடுங்கள்’ என்று மீண்டும் வாய்விட்டுக் கத்தினான். இம்முறை சிறிது சிறிதாக அவன் குரல் வெளியே வரத் துவங்கியது. அவன் கையைக் காலை உதறி அந்த மனிதனிடம் இருந்து விடுபட்டு ஓட முயன்றான். அவன் உதறியதில் கை எங்கோ அடிபட்டது. அப்படி அடிபட்டதில் கை நோவெடுத்தது. மனிதர்களில் பட்டு இப்படி நோகுமா என்கின்ற கேள்வி எழுந்தது. அவனுக்குத் தான் எங்கே இருக்கிறேன் என்பது ஒருகணம் விளங்கவில்லை. இது மருத்துவமனையல்ல என்பது மெதுவாக விளங்கியது. அப்படி என்றால்? விழித்துக் கொண்டவன் தன்னைச் சுற்றி பார்த்தான். உடம்பு தெப்பமாக வியர்த்து இருந்தது. வியர்த்தால் காய்ச்சல் விட்டுவிடும் என்பார்கள். நித்திரையில் உடம்பு காய்ந்ததா என்பது அவனுக்கு விளங்கவில்லை. எதற்கும் வியர்ப்பது நல்லதாகவே அவனுக்குத் தோன்றியது. தான் எங்கே இருக்கிறேன் என்கின்ற அலசலுக்கு விடை புலப்படத் தொடங்கியது. சொந்த வீட்டின் கீழ்த்தளத்தில் படுத்து இருப்பது நினைவில் மீண்டும் வந்தது. எதற்கு இங்கே வந்து படுத்து இருக்கிறேன் என்பது அவனுக்கு முதலில் ஞாபகம் வரவில்லை. பின்பு சிறிது சிறிதாக அதுவும் ஞாபகம் வரத் தொடங்கியது.

அகிலன் நேரத்தைப் பார்த்தான். நேரம் ஒருமணி ஆகிவிட்டது. உடல் வியர்த்தாலும் தொண்டைக்குள் கடுமையாக நோவது போல இருந்தது. சார்மினியோடு கதைத்தால் நல்லது என்று தோன்றியது. ஆனால் சார்மினி இப்போது பிரசனோடு நித்திரை கொள்வாள். அவளை எழுப்பினால் அவனும் எழுந்துவிடுவான். பின்பு அவனது கேள்விகள் இராமரின் கணைகள் போல இடைவிடாது வேகமாகத் தொடரும். அதற்கு இலகுவில் விடை கண்டு பிடிக்க முடியாது. அதனால் தற்போது பேசாது சமாளிப்பதே உத்தமமான வழி என்று அவனுக்குத் தோன்றியது.

எப்படி இந்தக் கனவு வந்தது என்பது அவனுக்கு விளங்கவில்லை. இன்று நேரமும் இடமும் பிழைத்துவிட்டது. ஆனால் அதுவே இப்படியான கனவுகளை உற்பத்தி செய்யக்கூடாது. என்னையும் மீறி அது

நடைபெறுகிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். புதன்கிழமையே அதைச் செய்ய முடியும். அதுவரையும் எப்படியாவது சமாளிக்க வேண்டும். எப்படி என்பதே விளங்கவில்லை. இப்படியாகச் சிந்தித்துக் கொண்டு படுத்து இருந்தவன் சிறிது நேரத்தின் பின்பு அலுப்பில் இயற்கையின் அணைப்பில் உறங்கிப் போய்விட்டான்.

*

திறன்பேசி மீண்டும் மீண்டும் அழைப்பதான ஒரு உணர்வு. அது எங்கே எப்படி நடக்கிறது என்பது முழுமையாகப் புலப்படவில்லை. அருகில் கேட்கிறது. ஆனால் கைக்கு எட்ட மறுக்கிறது. இது என்ன அழைப்பு யாரிடம் இருந்து வருகிறது? எனக்கு ஏன் வருகிறது? நான் எங்கே இருக்கிறேன்? எதற்காகத் தனித்து இருக்கிறேன்? எனக்கு ஏன் தொண்டை நோகிறது? ஏதோ அறியாத அருவருப்பான சுவையற்ற தன்மை ஒன்று ஏன் என் வாயில் தோன்ற வேண்டும்? சார்மினியும் பிரசனும் எங்கே? ஏதோ கனவு போல நினைவுகள் தொடர்ந்தன. இருந்தும் அவனால் எழுந்து இருக்க முடியவில்லை. எழுந்து இருக்காத வரைக்கும் என்ன நடக்கிறது என்பதை அறியமுடியாது என்பது விளங்கியது. உடலைச் சங்கிலி கொண்டு பிணைத்துப் போட்டது போல பாரமாக இருந்தது. அந்தச் சங்கிலியை அறுத்துக் கொண்டு எழுவதற்கு அவன் முயற்சி செய்தான். அவனால் அது இயலும் என்று தோன்றவில்லை. உடலை வருத்தம் தொடர்ந்து உள்ளிருந்து முறித்தது. மயக்கம் வருவது போல இருந்தது. அவன் தன்னை இழந்து மீண்டும் உறக்கத்தில் மூழ்கத் தொடங்கினான்.

எவ்வளவு நேரம் மீண்டும் நித்திரை கொண்டு இருப்பான் என்று அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்கு இப்போது உறக்கம் கலைந்து நிதானம் குடிவரத் தொடங்கியது. அதற்கு மீண்டும் திறன்பேசியின் அழைப்பே காரணமாகிற்று. அது யாரிடம் இருந்து வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். முதலிலிருந்ததிற்கும் இப்போது இருப்பதற்கும் சிறு வித்தியாசம் இருந்தது. ஏனோ இப்பொழுது மயக்கம் தணிந்து விட்டது. இப்பொழுது கை காலை சிறிது அசைக்க முடிந்தது. மெதுவாகப் புரண்டு திறன்பேசியை எடுத்தான். அது அடித்து ஓய்ந்து விட்டது. யார் என்று பார்த்தான். அது சார்மினியிடம் இருந்து வந்திருந்தது. அவன் அவளது எண்ணிற்குத் தொடர்பு கொண்டான். இரண்டு முறை திறன்பேசி சிணுங்கியதும் அவள் அழைப்பிற்கு வந்தாள். சிலவேளை அவள் அவனுக்காகக் காத்து இருந்திருக்கலாம் என்று தோன்றியது. சரி எப்படி என்றாலும் சமாளிக்க வேண்டும். அவளையும் பிரசனையும் தேவையில்லாது கவலை கொள்ள வைக்கக்கூடாது என்று அவன் எண்ணினான்.

‘என்னப்பா…? உங்களுக்கு என்ன நடந்தது? நான் எத்தினை தரம் இப்ப அடிச்சுப் பார்த்திட்டன்? நீங்கள் போனையே எடுக்க இல்லை. எனக்கு பயம் வந்திட்டுது. ஏதோ என்னவோ எண்டு தலையே சுத்தத் தொடங்கீட்டுது. அம்புலன்சிற்குப் போன் பண்ணுவமோ எண்டு கூட நினைச்சு பார்த்தன். எத்தினை தரம் போன் பண்ணினன். உங்களுக்குக் கேட்கவே இல்லையா?’
‘இல்லை. எனக்கு ஏதோ சாதுவா கனவில கேட்டமாதிரி இருந்திச்சுது. ஆனா, என்னால முழிப்பிற்கு வரமுடிய இல்லை. இப்பதான் முழிச்சன். நீ எனக்குப் போன் அடிச்சிருக்கிறதைப் பார்த்தன். நிச்சயம் நீ குழம்பி போய் இருப்பாய் எண்டிட்டு உடன போன் எடுத்தன்’
‘உண்மையா நான் பயந்துதான் போயிட்டன். உங்களுக்கு ஏதும் பிரச்சினையே அப்பா? நாங்கள் பயந்த மாதிரியே நடந்திடுமா அப்பா?’
‘தெரிய இல்லை சார்மினி. உடம்பை முறிச்சு போட்ட மாதிரி இருக்குது. நித்திரை வந்த பிறகு எனக்கு நிறையக் கனவும் வந்திச்சுது. எழும்ப நினைச்சாலும் என்னால எழும்ப முடியாமல் இருந்திச்சுது. உண்மைய சொல்ல போனால் அவங்கள் சொல்லுகிற சில அறிகுறியும் இருக்கிற மாதிரி இருக்குது’
‘என்னப்பா சொல்லுறியள்? அப்பிடி என்ன பீல் பண்ணுறியள்?’
‘தொண்டை நோ இருக்குது. சாதுவாய் உடம்பு காயிது. ரேஸ்ற் ஒண்டும் தெரியுது இல்லை. மணம் ஒண்டும் பிடிபடுகுது இல்லை. இதுகள் சில அறிகுறிகள். ஆனால் கட்டாயம் இந்த வருத்தத்தால மட்டும்தான் வரும் எண்டு நூறு வீதம் யாராலும் சொல்ல முடியாது. எதுக்கும் நாங்கள் பொறுத்து இருந்து பாக்க வேணும். சும்மா தேவை இல்லாமல் பயப்பிட வேண்டிய அவசியம் இல்லை’
‘சாதாரண நாள் எண்டா நாங்கள் ஏன் பயப்பிட போகிறம்? இப்ப நிலைம அப்பிடியே? அதுவும் அவன் ஒருத்தன் உங்களுக்கு கிட்ட தும்மினான் எண்டுறியள். இதை எல்லாம் கேட்ட பிறகு எப்பிடி பயப்பிடாமல் இருக்க முடியும்? எண்டாலும் இது சாதாரண காய்ச்சல் தடிமனா இருக்க வேணும் எண்டதுதான் என்னுடைய ஆசை’
‘நானும் அப்பிடி இருக்க வேணும் எண்டு ஆசைப்படுகிறன். பயப்பிடாத… எல்லாம் நல்லபடியா நடக்கும். நீ எனக்கு வெந்நீர் வைச்சுவிடு. குடிக்கிறதுக்கும் அதையே தா’
‘காலைமை சாப்பாடு உங்களுக்கு என்னப்பா வேணும்?’
‘என்னால சாப்பிட முடியுமோ தெரிய இல்லை. ரேஸ்ற் தெரியுது இல்லை. சாப்பிட்டா வெளியால வருமோ எண்டு பயமா இருக்குது’
‘அதெல்லாம் அப்பிடி ஒண்டும் நடக்காது. நீங்கள் முதல்ல சாப்பிட முயற்சி செய்யுங்க… அப்பிடி ஏதாவது நடந்தா பிறகு பார்க்கலாம்’
‘சரி. ஏதாவது கொண்டு வந்து வைச்சுவிடு’
‘என்ன வேணும் அப்பா உங்களுக்கு?’

'ஏதாவது உறைப்பா... புளிப்பா...?'
'ஓ அந்த களத்துக்குக் கொண்டு போகிற கஞ்சிமாதிரி இருந்தால் ஓகேயா'
'அதேதான். சுடு சோத்தில செய்'
'சரி. அது ஒரு ஐஞ்சு நிமிசத்தில செய்து போடுவன். வேறை என்ன அப்பா வேணும்?'
'வேறை எனக்கு இப்ப ஒண்டும் வேண்டாம். இப்ப வெந்நீரை மறக்காமல் வைச்சுவிடு. தாகமாய் இருக்குது'
'நான் வைக்கிறன். சரி நான் போனையும் வைக்கிறன். ஏதாவது கொஞ்சம் வித்தியாசம் எண்டாலும் எனக்கு முதல்ல அடியுங்க'
'சரி நான் அடிக்கிறன். இப்ப வாய்'
'வாய்'

திறன்பேசியை வைத்த சார்மினிக்கு யோசனையாக இருந்தது. தனித்து அவர் கீழே இருக்கிறார். ஏதாவது அவருக்கு நடந்தாலும் உடனடியாகத் தெரிய வராது. திறன்பேசி இல்லாவிட்டால் வேற்றுக் கிரகத்தில் இருப்பது போலவே இருந்து இருக்கும். எதுவும் அவருக்கு நடக்கக்கூடாது. அப்படி நடந்தால் அம்புலன்சை தொடர்பு கொள்வதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. உள்ளே சென்று பார்த்து வருவதற்கான பாதுகாப்பான முகக்கவசத்தோடு மேலாடைகள் எதுவும் வீட்டில் இல்லை. வைத்திருக்கும் இந்த முகக்கவசத்தை இந்த நோயைப் பொறுத்தமட்டில் நம்ப முடியாது. அது எந்தவித பாதுகாப்பையும் தந்திடாது. அதனாலேயே பல மருத்துவர்கள், தாதியர் தொடர்ச்சியாகப் பல நாடுகளிலும் மடிகிறார்கள். எவ்வளவோ அவதானமாக அவர்கள் இருந்தும் அது நித்தமும் நடைபெறுகிறது. நாங்கள் அப்படி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்கொள்ள முடியாது. எங்கள் இருவரையும் பொறுத்தமட்டில் பிரசன் வாழ்வே முக்கியமானது. யாருக்குப் பாதிப்பு ஏற்பட்டாலும் அது அவனது வாழ்விற்கும் பாதிப்பாக அமையும். அதை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி என்றால் என்ன செய்வது? எப்படி இந்தச் சிக்கலிலிருந்து வெளி வருவது? எதற்கும் நாங்கள் பொறுமையாகவே இருக்க வேண்டும். அப்போதே உண்மையான முடிவு தெரியும். அதன் பின்பே எதுவென்றாலும் செய்ய முடியும். சிலவேளை இது தேவையற்ற பயமாக இருக்கலாம். சாதாரண தடிமன் காய்ச்சலாய் முடியலாம். மனிதனை பரிட்சியம் இல்லாத நோய் தாக்கும் பொழுது அவன் தன்நம்பிக்கை தவிடு பொடியாகிறது. சிந்தனை தறிகெட்டு ஓடுகிறது. உண்மையில் இந்த நேரத்தில் அமைதியாகச் சிந்திக்க வேண்டும். நிதானமாக நடக்க வேண்டும். மன உறுதியைப் பாதுகாக்க வேண்டும். எதையும் சாதகமாக எண்ண வேண்டும். நினைப்பது எல்லாம் நிச்சயமாக நடந்துவிடுவதில்லை. நினைப்பது போல மனிதனாலும் நடந்துவிட முடிவதில்லை. காலை அவர் நிலைமையை நன்கு அறிய வேண்டும்.

வெளியே வருமாறு கூறித் தூரே நின்று அவரது நிலைமையைக் கவனிக்க வேண்டும். அதன் பின்பு என்ன செய்வது என்று யோசிக்கலாம் என்பதாக எண்ணிக் குழம்பிக் கொண்டு நித்திரை கொண்டவள் இயற்கையின் தழுவலில் உறங்கிவிட்டாள். பிரசனும் அவளுடன் படுத்து இருந்தான். சார்மினியை விட்டிருந்தால் மதியம் வரைக்கும் நித்திரை கொண்டிருப்பாள். ஆனால் பிரசனுக்கு காலை ஏழுமணிக்கே நித்திரை முறிந்துவிட்டது. அவன் எழுந்து சார்மினி மேல் நடக்கத் தொடங்கிவிட்டான். அவனின் அந்த உளக்கலில் துடித்து பதைத்து எழுந்தவளால் அதற்கு மேல் நித்திரை கொள்ள முடியவில்லை.

அதன் பின்பு அவள் பிரசனுக்கு காலைச் சாப்பாட்டைத் தயார் செய்தாள். வழமையாகக் காலைச் சாப்பாடாக கொன்பிளெக்ஸ் சாப்பிடுவான். அதுவே அவசரத்திற்குச் சார்மினிக்கும் அவனுக்கும் வசதியாக இருக்கும். ஆனால் இன்று நேரம் இருந்தது. அவருக்குக் கஞ்சி செய்வதோடு அவனுக்கும் பாண் வாட்டி எடுத்து அத்தோடு முட்டை பொரியலும் பொரித்து, தொத்திறைச்சியும் பொரித்துப் பாலுடன் பரிமாறினாள். சுடச்சுடச் சாப்பாடு பரிமாறப்பட்டதில் பிரசனுக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது. இப்படிச் சூடான சாப்பாடு காலைவேளையில் நித்தமும் கிடைப்பதில்லை என்பதால் அவன் அதை இரசித்து ருசித்து உண்ணத் தொடங்கினான். அவன் சாப்பிட்ட பின்பே பல்லுத்துலக்குவதால் அவன் முகம் கழுவாது சாப்பிடுவது பற்றி அவள் கவலைப்படவில்லை. ஆனால் சார்மினியால் பல்லு துலக்காது எதையும் வாயில் வைக்க முடியாது. அதன் பின்பு சார்மினி கஞ்சியைத் தயாரிக்கும் வேலையைக் கவனித்தாள். கஞ்சி தயாரித்து முடியும் பொழுது எட்டு மணியாகிவிட்டது. சென்று முகத்தைக் கழுவிவிட்டு வந்து திறன்பேசியைக் கையில் எடுத்தாள். மறுமுனை விரைவாகவே உயிர் பெற்றுக் கொண்டது. அகிலன் பதில் சொல்வதற்கு முன்பே மிகவும் ஆர்வத்தோடு சார்மினி கதைக்கத் தொடங்கினாள்.

‘எப்பிடியப்பா இப்ப இருக்குது? இராத்திரி அதுக்குப் பிறகு நித்திரை கொண்டியளே? எனக்கு மனம் நிம்மதி இல்லாமல் இருந்திச்சுது. எல்லாம் நல்லபடியா நடக்க வேணும் எண்டு கடவுளைக் கும்பிட்டுக் கொண்டு இருந்தன்’

‘தேவை இல்லாமல் பயப்பிடாதை. பிறகு நான் ஒருமாதிரி நித்திரை கொண்டிட்டன். இப்ப கொஞ்சம் ஒகேயா இருக்குது. நீ சொன்ன மாதிரிச் சூடாக் கஞ்சியும் அதோடை இஞ்சி போட்டுப் பிளேன் ரீயும் கொண்டு வந்து வை. நான் முதல்ல போய் முகம் கழுவ வேணும்’

‘இப்ப நீங்கள் கதைக்கிறதை கேட்க்க நிம்மதியா இருக்குதப்பா. இரவெல்லாம் பயந்துகொண்டு இருந்தன்’

‘சரி… தேவை இல்லாமல் பயப்பிடாத. பிரசன் என்ன செய்கிறான்?’

‘அவருக்கு இண்டைக்கு சூடான காலைமைச் சாப்பாடு... அவர் ரீவிய பார்த்து பார்த்து நடத்துகிறார். அதில நீங்கள் கதைக்கிறதுகூட அவருக்கு கேட்க இல்லை’
‘சரி விடு... விடு... அவன் அப்பிடி எண்டாலும் அமைதியா இருக்கட்டும்’
‘ம்... நானும் அதுதான் குழப்ப இல்லை’
‘அப்ப மத்தியானம் நோர்மலா சமைக்கிற மாதிரிச் சமைக்கட்டே?’
‘ஓ எனக்கு இரவு இருந்ததோட ஒப்பிடேக்க இப்ப எவ்வளவோ மேல். மத்தியானம் இன்னும் நல்லாய் இருக்கும் எண்டு நினைக்கிறன். அதால நீ வழமைபோல சமை. அப்பதான் நானும் ஒழுங்கா சாப்பிடலாம்’
‘என்ன சமைக்கட்டும் அப்பா?’
‘ம்... மீன் சமை. குளம்பும் வைச்சு பொரியலும் பொரி’
‘ஓகே அப்பா’
‘அவனுக்கு உறைப்பில்லாமல் பொரி’
‘அது ஞாபகம் இருக்கும். நீங்கள் சாப்பிட்ட பிறகு வெளியால வாறியளா? நாங்கள் யன்னல்ல நிண்டு உங்கள பாக்கிறம். எனக்கும் அவனுக்கும் உங்கள பாக்க வேணும் போல இருக்குது. சரியே? பிரச்சன ஒண்டும் இல்லையே?’
‘ஓ உனக்கு என்னில அவ்வளவு அன்பா?’
‘ச்... பகிடிய விட்டிட்டு போய் சாப்பிடுங்க... அது முக்கியமா பிரசன் உங்கள பாக்க வேணும் எண்டு அடம்பிடிச்சவன். அதுதான். நீங்கள் வீணா கற்பனை எதையும் வளக்காதீங்க’
‘ம்... விழுந்தாலும் மீசையில மண் ஒட்டாது எண்டுகிறாய். இத்தனை வருசம் உன்னோட வாழ்ந்திட்டன் எனக்கு உன்னைத் தெரியாதா?’
‘தெரிஞ்சு? உங்கள நான்தானே நேற்று வீட்டவிட்டு கலைச்சனான். அது உடன மறந்து போச்சுதா?’
‘ம்... எனக்குத் தெரியும். நீ பருந்து மாதிரி எதுவும் செய்வாய் எண்டும் நல்லாய் தெரியும். அதே நேரம் என்மேல உனக்கு என்ன இருக்குது எண்டும் தெரியும்’
‘சரி... சரி... நான் இப்ப வைக்கிறன். சாப்பாடு வைச்ச பிறகு போன் பண்ணுகிறன்’
‘சரி’

3

புதன்கிழமை இமை மூடித் திறப்பதற்கு முன்பு பிரசன்னமாகியது. இடையில் நாட்கள் அண்ட வஸ்துக்களாய் அதன் வேகத்தில் கழிந்துவிட்டன. இடையில் பெற்ற அனுபவத்தில் அவனது நம்பிக்கை சிறிது தள்ளாடியது. இருந்தும் அவன் தளர்ந்துவிடவில்லை. பத்து ஐம்பதிற்கே அகிலன் உல்லவோல் மருத்துவ மனைக்கு வந்துவிட்டான். அங்கே வந்ததும் தனது காரைத் தரிப்பிடத்தில் விட்டு அதற்குக் கட்டணம் செலுத்தினான். அவனுக்கு இடைக்கிடையே சாதுவாக இருமல் வருவதால் அதைக் கையாள்வதற்காகத் துடைக்கும் கிருமிநாசினித் தாளை எடுத்துச் சென்றான். அதில் ஒன்றை இப்போது கையில் எடுத்துக் கொண்டான். அதன் பின்பு அவன் அந்தக் கூடாரத்தை நோக்கி நடந்தான். நல்ல வெயில் எறித்துக்கொண்டு இருந்ததால் வெளியே வெந்நீரில் குளித்தது போன்று கணகணப்பாய் இருந்தது. வந்த புதிதில் இருபத்தி ஐந்து பாகைக்கு மேலே சென்றால் கணகணப்பாய் உணர முடிந்தது. இப்போது பத்துப் பாகை நின்றாலே சூரியனைக் கண்டால் அது கணகணப்பாக இருக்கிறது. அதற்கு முன்பைவிட இப்போது துடிப்பாய் இருப்பது ஒரு காரணமாய் இருக்கலாம். துடிப்பாய் இருப்பதற்கு உடல் நலம் பற்றிய அக்கறை அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அதற்குத் தன்னுடன் வேலை செய்யும் சுதேசிகள் முக்கிய காரணமாக இருக்கிறார்கள். அவர்கள் உடல் மீது காட்டும் அக்கறையும் அவர்களிடம் அதைப்பற்றி இருக்கும் அறிவும் மதிய இடைவேளையிலிருந்து கதைக்கும் போது உரையாடலாக வெளியே வரும். அது அவனிலும் மாற்றத்தை உண்டுபண்ணி இருக்கிறது என்பது அவனுக்குத் தெரியும். நோர்வே மக்களிடம் இருக்கும் உடலைப் பற்றிய அறிவும், அதற்குத் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிர்கள் பற்றிய அறிவும் அத்தோடு கேடு விளைவிக்கும் இரசாயனங்கள் பற்றிய அறிவும் நிச்சயம் இந்த நோயை எதிர்த்துப் போராடுவதற்கு உதவும் என்கின்ற நம்பிக்கை அவனிடம் இருந்தது. இப்படியான நினைவுகளின் அலம்பல்களுடனே அவன் கூடாரத்தை நோக்கி நடந்தான்.

அப்படி நடந்து போகும் போதே அவனால் அதை அவதானிக்க முடிந்தது. மனிதர்கள் வரிசையாக இடைவெளிவிட்டு நின்றார்கள். அது பல மீற்றர்களுக்கு நீண்டு கொண்டே சென்றது. என்றாலும் முந்நூறு மீற்றருக்கு அதிகம் இருக்காது என்று அவனுக்கு தோன்றியது. அதனால் அதிக நேரம் காத்திருக்கும் அவஸ்தை இருக்காது என்பது அவனுக்கு விளங்கியது. அகிலன் விரைவாக நடந்தான். அப்படி நடப்பதற்கே இப்போது இளைப்பது போல இருந்தது. ஆனாலும் பரிசோதனையின்

முடிவு தெரியாது தானாக எந்த முடிவுக்கும் வரமுடியாது என்பதை நினைவு படுத்தியவன் முந்தைய நினைவைப் புறம் தள்ளித் தொடர்ந்து நடந்தான்.

அகிலன் விரைவாக வந்து வரிசையில் நின்று கொண்டான். வரிசை மெதுவாகவே நகர்ந்தது. சிலர் அகிலனைவிடப் பலமாக இருமினார்கள். சிலர் கை இடுக்கிற்குள் அமுக்கமாகத் தும்மினார்கள். அகிலனுக்கு அந்தக் கனவு ஞாபகம் வந்தது. அப்படி யாரும் இங்கு இருப்பதாய் அவனுக்குத் தெரியவில்லை. அது கனவாகவே இருந்தது இப்போதும் அவனுக்கு நிம்மதியைத் தந்தது. அகிலன் தனது திறன்பேசியை எடுத்து அதற்கு தலையணியை மாற்றினான். பின்பு ஓஷோவின் பிரசங்கம் ஒன்றைக் கேட்கத் தொடங்கினான். ஓஷோவின் பிரசங்கம் கேட்கும் பொழுது நேரம் பிரயோசனமாய் கழிவதாக அவன் உணர்வது உண்டு. இருந்தும் சிலவேளை அதற்கு மாறாக இந்த மனிதர்களிடம் என்ன இருக்கிறது என்கின்ற கேள்வியும் அவனுக்கு உண்டாகும். நாம் ஒருவர் சொல்வதை அவதானமாய் கேட்கிறோம் என்றால் அவரிடம் எங்களால் அடையமுடியாத பிறப்போடு உண்டான ஞானம் இருக்க வேண்டும். அந்த ஞானத்தை வெளிப்படுத்தும் சொல்வன்மை அல்லது உடற்பாசை வசப்பட வேண்டும். அவ்விரண்டையும் தவிர்த்துப் பார்த்தால் அவரிடம் என்ன இருக்கிறது என்கின்ற கேள்வியே உண்டாகும். அவர்களும் மனித பலவீனங்களுக்கு உட்பட்டவர்களே. உண்மையில் பல மனிதர்கள் தங்கள் மாயமான தோற்றத்தோடே மற்றவர்கள் முன்பு பிரசன்னம் ஆகிறார்கள். அதையே நாம் உண்மை என்று தப்பிதமாக நம்புகிறோம். அது ஒருசிலர் இடத்தில் அதிகமாகவே இருக்கிறது. அப்படியானவர்களை நாம் கையெடுத்துக் கூம்பிடக்கூடத் தயங்குவதில்லை. உண்மையை உணர்ந்தால்... அந்த மனிதர்களின் மாயத்தைத் தவிர்த்து அவர்களைப் பார்த்தால்... எமது மயக்கம் தீரும். விவேகானந்தரின் தாயார் கூறியது போல நாம் நடந்து கொண்டால் எந்த மலைப்பும் எமக்கு ஏற்படாது. ஓஷோ தொடர்ந்தும் பிரசங்கம் செய்தார். அவர் சொல்வதையும் மறுப்பதற்கு இல்லை. உண்மையை உரைப்பவர்களுக்குப் பகை வராமலும் இல்லை. யார் எதை எப்படிக் கூறினாலும் நாம் மட்டுமே நல்லதைக் கண்டுபிடித்து எங்கள் மண்டைக்குள் சரியானதை ஏற்றிக் கொள்ள வேண்டும் என்பது அகிலனுக்கு விளங்கியது.

வரிசை மெது மெதுவாகவே நகர்ந்தது. ஒரு இளைஞன் அங்கே நோர்வேயின் வசந்த காலத்துச் செடியாகத் திடீரெனத் தோன்றினான். அவன் தனது மருத்துவ உடைக்கு மேல் ஒளியைப் பிரதிபலிக்கும் பாதுகாப்பு அங்கியும் அணிந்து இருந்தான். ஆனால் அவன் முகக்கவசம் அணியவில்லை. நோர்வேயில் முகக்கவசம் அணியத் தேவையில்லை என்பது அரசின் நிலைப்பாடு. அதை அனேக மக்கள் பின்பற்றினர்.

அதைப் பாவிக்கத் தெரியாது பாவித்தால் நோயைக் கட்டுப்படுத்துவதைவிட அது பரவுவதற்கே ஏதுவாகும் என்பதை அவர்கள் நம்பினார்கள். அந்த இளைஞன் கையில் ஒரு பட்டியல் இருந்தது. அவன் ஒவ்வொருவராக அணுகி அவர்களது பெயர் மற்றும் பரிசோதிக்க வேண்டிய நேரம் என்பதைக் கேட்டுத் தனது பட்டியலோடு ஒப்பிட்டுச் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு வந்தான். அந்த இளைஞன் சிரித்த வண்ணம் அகிலனை அணுகினான். அப்போது அவனும் அகிலனும் தங்களுக்கு இடையிலான இடைவெளியை அவதானமாகக் கவனித்துக் கொண்டார்கள். அவன் அகிலனின் பெயரையும் நேரத்தையும் கேட்ட பின்பு அகிலனுக்குப் பின்பாக நின்றவர்களை நோக்கிச் சென்றான். அவன் சென்றாலும் ஓஷோ ஓயாது பிரசங்கம் செய்து கொண்டு இருந்தார். அது அகிலனுக்குப் புத்துணர்வு ஊட்ட அவன் அத்தோடு தானும் அசையலானான்.

அகிலனின் முறை வந்தது. அங்கே இருபத்தி ஐந்து வயது மதிக்கத்தக்கப் பெண் ஒருத்தி மேசை ஒன்றின் முன்பாக ஒரு நாற்காலியிலிருந்தாள். அவள் மீண்டும் புன்னகைத்த வண்ணம் பெயரைக் கேட்டாள். பின்பு அவளின் பின்னே இருந்த அலுவலகத்திலிருந்தவர்களுக்கு அதை அறிவித்தாள். சிறிது நேரத்தில் அவர்கள் உள்ளே வருமாறு அழைப்பு விடுத்தனர்.

அங்கே இரண்டு அலுவலகங்களில் பரிசோதனை நடந்தது. சிறிது நேரத்தில் மறுமொழி வந்ததும் முதலாவது அறைக்குச் செல்லுமாறு அகிலனுக்கு அவள் கட்டளையிட்டாள். அகிலன் முதலாவது அறைக்குச் சென்றான். அங்கே ஒரு இளைஞன் முகக்கவசம், உடம்பைப் பாதுகாக்கும் மேலாடை, மற்றும் கையுறை அணிந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டு பரிசோதனை செய்வதற்குத் தயாராக நின்றான். உள்ளே சென்றதும் வழமை போலக் கையைக் குலுக்கி அவன் வரவேற்கவில்லை.

அந்தப் பழக்கம் தற்காலிகமாக அழிந்து போய்விட்டது. அவன் மீண்டும் அகிலனின் பெயரைக் கேட்டு உள்ளே இருந்த பெண்மணியுடன் அதை உறுதி செய்து கொண்டான். அந்தப் பெண் வெளியே வரவில்லை. பின்பு அவன் கையைச் சுத்தம் செய்ய கிருமிநாசினி வழங்கினான். அடுத்ததாக இடையில் தும்மல் அல்லது இருமல் வந்தால் அதை மூடிக் கட்டுப்படுத்த துடைக்கும் காகிதம் கொடுத்தான். பின்பு தான் எப்படி மூக்குத் துவாரத்திற்குள்ளும் தொண்டைக் குளிக்குள்ளும் பஞ்சு பொருத்திய குச்சியைச் செலுத்திப் பரிசோதனை எடுக்க போகிறேன் என்பதைத் தள்ளி நின்றே விளங்கப்படுத்தினான். மீண்டும் அந்த நடைமுறைகள் விளங்கியதா என்பதைக் கேட்டு உறுதி செய்தான். பின்பு அவதானமாகத்

தான் கொடுத்த காகிதத்தால் வாயை மூடி கொள்ளுமாறு கூறிவிட்டு மூக்கிற்குள் குச்சியைச் செலுத்தினான். அகிலனுக்கு பலங்கொண்ட மட்டும் அவன் மேல் தும்மி விடுவேனோ என்று பயமாக இருந்தது. அவன் தன்னை இயலுமானவரை கட்டுப்படுத்தினான். அந்த இளைஞனும் எவ்வளவு விரைவாகப் பரிசோதனை செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக மூக்கிற்குள் விட்டுத் துடைத்துப் பரிசோதனைக்கான பொருளை எடுத்து முடித்தான். பின்பு அப்படியே தொண்டைக் குளிக்குள்ளும் துடைத்து எடுத்து தனது வேலையை முடித்தான். அதன் பின்பு மீண்டும் கையைக் கிருமிநாசினியைக் கொண்டு சுத்தம் செய்துவிட்டு அகிலன் விடை பெற எண்ணினான். இருந்தும் அவன் மனதில் சில கேள்விகள் உண்டாகின. அதை அவன் தெளிவுபடுத்த எண்ணி...

'இதன் முடிவு எப்போது... எப்படி வரும்?' என்று கேட்டான்.

'இதன் முடிவு தெரிவதற்கு சில நாட்கள் எடுக்கும். உங்களுக்கு வருத்தம் இருந்தால் உங்கள் திறன்பேசிக்குச் செய்தி வரும். அதுவரையும் நீங்கள் விதிமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும்'

'அது வரைக்கும் நான் வேலைக்கு போக முடியாது என்கிறீர்கள்'

'நிச்சயமாக... நீங்கள் வேலைக்கோ அல்லது மற்றைய பொது இடங்களுக்கோ செல்லக்கூடாது. எப்போதும் மனிதர்களிடம் இருந்து விலகி இருங்கள்'

'கட்டாயமாக நான் அவற்றை கடைப்பிடிப்பேன். நன்றி'

'வாருங்கள்'

அகிலன் வெளியே வந்தான். அந்த பெண் நலம்பெற வாழ்த்துக்கள் என்றாள். அதற்கு நன்றி தெரிவித்துவிட்டு அகிலன் அவசரமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறினான். நோய் இருக்கிறதா என்று நிச்சயம் பரிசோதிக்க வேண்டும். ஆனால் அப்படிப் பரிசோதிக்க வரும்பொழுது நோய் தொற்றிவிடுமோ என்கின்ற பயமும் இருந்தது. அதனால் எவ்வளவு விரைவாக அந்த இடத்தைவிட்டு வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவாக வெளியேற அவன் சித்தமானான்.

வெளியே வந்த பொழுது அவன் முன்பு நின்றிருந்த வரிசை அவன் வந்த பொழுது இருந்ததைவிட மேலும் அனுமர் வால் போல நீண்டு இருந்தது. நல்ல வேளையாக தனக்குச் சற்று முன்பாக நேரம் கிடைத்திருக்கிறது என்பது அவனுக்குப் பெரும் ஆறுதலைத் தந்தது. அதன் பின்பு அவன் மருத்துவ மனையில் நின்று நேரம் கழிக்க விரும்பவில்லை. வில்லிலிருந்து புறப்பட்ட கணையாக வாகனத்தை நோக்கி விரைவாகச் சென்றான்.

மருத்துவமனையை விட்டு வெளியே வந்த பொழுது தெருவில் மனிதர்களின், வாகனங்களின் நடமாட்டத்தை அவதானமாகக் கவனித்தான். வழமை போல நடமாட்டம் இருக்கவில்லை. பலர் வீட்டிலிருந்து வேலை செய்யும் வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அதைவிடப் பலர் நோய்க்குப் பயந்து தங்களது அலுவல்களைத் தள்ளி வைத்திருக்க வேண்டும். அவசியமானவர்களும், வேறு வழி இல்லை என்பவர்களுமே இப்பொழுது வெளியே வந்திருக்கிறார்கள் என்பது அகிலனுக்கு நன்கு விளங்கியது. இந்த நோயை கட்டுப்படுத்த இதைவிட வேறு வழி ஒன்றும் இல்லை. கையைச் சுத்தமாக வைத்திருப்பதும், மனிதர்களுக்கு இடையேயான தூரத்தை கடைப்பிடிப்பதும் முக்கியமானது. நோர்வேயில் வாழும் பெரும்பான்மையினர் அதைக் கடைப்பிடிப்பார்கள் என்கின்ற நம்பிக்கை அகிலனுக்கு இருந்தது. சிலர் அதிலும் விதிவிலக்காக இருப்பார்கள் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இல்லை. அந்த எண்ணங்களுக்கு அத்தோடு விடை கொடுத்து அவன் அமைதியாக வீட்டை நோக்கி வாகனத்தைச் செலுத்தினான்.

*

வீட்டிற்கு வந்ததும் வாகனத்தை தரிப்பிடத்தில் நிறுத்தி அதன் கதவைத் திறந்து அதை இயலுமானவரைக் கிருமிநாசினியால் துடைத்துவிட்டு மீண்டும் தனது அறைக்குச் சென்றான். சார்மினியும் பிரசனும் இல்லாத அந்த அறைக்குச் செல்வது சிறைக்குச் செல்வதான ஒரு உணர்வை அவனுக்கு உண்டு பண்ணியது. இருந்தும் அதற்கு வேறு வழி இல்லை என்பதால் மிகவும் சோர்வுடன் அங்கே சென்றான். அகிலன் கீழே வந்த சத்தத்தைக் கேட்ட சார்மினிக்கு என்ன நடந்தது என்பதைக் கேட்க வேண்டும் என்கின்ற அடக்க முடியாத ஆவல். அவள் தனது ஆவலுக்கு அணை போட நினைக்கவில்லை. திறன்பேசியை எடுத்து அழைப்பை மேற்கொண்டாள். அழைப்பு உயிர்பெற்றுக் கொண்டது.

‘ஒ... நான் வந்ததை எப்படி அறிஞ்சா?’

‘உங்கை கமறா பூட்டி வைச்சிருக்கிறது உங்களுக்குத் தெரியாதே?’

‘நீ பூட்டினாலும் அதிசயப்பட ஒண்டும் இல்லை’

‘தெரியுது தானே? அப்ப கவனமாய் இருங்க’

‘நான் கவனமாய் இருக்கிறன். இப்ப எடுத்த விசயத்தைச் சொல்லு?’

‘நீங்கள்தான் சொல்ல வேணும். ஆஸ்பத்திரிக்குப் போனீங்கள்... என்ன சொன்னாங்கள்?’

‘அவங்கள் டெஸ்ற் எடுத்தாங்கள். ஆனா அது மெசினில ஆராய்ஞ்சு முடிவு சொல்ல ஒரு நாள் அல்லது இரண்டு நாள் செல்லுமாம். நாங்கள் அதுவரைக்கும் பொறுமையாக இருக்க வேணும். நிறையச் சனம் வரிசையா நிக்குதுகள். அங்க போன பிறகுதான் போனதாலேயே வருத்தம் வந்திடுமோ எண்டு பயமா இருந்திச்சுது. ஒரு மாதிரிக் கெதியா முடிச்சுக்

கொண்டு ஓடி வந்திட்டன். காரை நல்லாத் துடைச்சு இருக்கிறன். நீ எடுக்கிறது எண்டா திரும்பவும் நல்லாக் கிளீன் பண்ணீட்டு எடுத்துக்கொண்டு போ. சரியே? காருக்குள்ள ஏறமுதல் திரும்பவும் ஜன்னலையும் கொஞ்ச நேரம் திறந்தவிடு'

'இதை எத்தினைமுறை சொல்லுவியள்? நான் சீக்கப்பிளையராக்கும். எனக்கு எப்பிடி நடந்து கொள்ள வேணும் எண்டு தெரியாதே?'

'சரி... சரி... தெரியாமல் சொல்லீட்டன் தாயே. மன்னிச்சுக்கொள்'

'சரி அப்பா. என்ன சாப்பிடப் போறியள்? சொன்னியள் எண்டா நான் கொண்டு வந்து வைப்பன். பிறகு இவனுக்குச் சாப்பாடு குடுப்பன். அவன் ஒரேதா ரீவியிலும் கொம்பியூற்றரிலும் தொங்கிக் கொண்டு இருக்கிறான்'

'எனக்காக நீ இப்ப சமைக்க போறியா? சமைச்சதை கொண்டு வா'

'அதைத்தான் கொண்டு வரவேணும்'

'என்ன சமைச்சா?'

'இறைச்சி கறி அப்பா'

'அது நல்லா இருக்கும். எனக்குத் தொடர்ந்தும் ஒரு மாதிரி இருந்தாலும் ஒரு பிடி பிடிக்க வேணும் எண்டும் ஆசையா இருக்குது. நீ கொண்டு வந்து வை'

'சரி. பிரசன் உங்களோட கதைக்க வேணுமாம். ஸ்கைப்பில கதையுங்க... அவனுக்கும் சிறை மாதிரி இருக்குது'

'அது எண்டா உண்மை. எனக்கே சிறை மாதிரி இருக்குது எண்டா அவனுக்கு எப்பிடி இருக்கும்? நீதான் அவனுக்கு அலுப்படிக்காமல் பாத்துக் கொள்ள வேணும்'

'பாத்துக்கொள்ளுகிறன். நீங்கள் இப்ப அவனோடை கதையுங்க'

'அப்பா... அப்பா... மேல வாங்க அப்பா. இல்லாட்டி நான் கீழ வரட்டே அப்பா? அம்மாவோடை இருக்கச் சேடிலியா (அலுப்பா) இருக்குதப்பா'

'பிள்ளைக்கு அலுப்பாய் இருக்கும் எண்டு எனக்குத் தெரியும். ஆனா நான் இப்ப மேல வரமுடியாது. நீங்களும் இப்ப கீழ வரமுடியாது. அப்பாவுக்கு வருத்தம் இல்லை எண்டு தெரிஞ்ச பிறகு அப்பாவே மேல வருவன். ஓகேயா?'

'எப்ப முடிவு தெரியும் அப்பா?'

'கெதியா தெரியும் பிரசன்'

'கெதியா எண்டா, நாளைக்கு?'

'ம்... அப்பிடியும் இருக்கலாம்'

'ச் வாங்க அப்பா...?'

'பொறுமையா இருக்க வேணும் பிரசன். லாப்பில வேலை செய்கிற அவங்களுக்கும் நிறைய வேலை இருக்கும் எல்லோ? நீ நல்ல பிள்ளையா இருக்கோணும் சரியா?'

'ம்... சரியப்பா'

'சரி... அப்பாவுக்கு உம்மா தா'

‘உம்மா..’
‘உம்மா...’

4

அகிலனுக்கு அலுப்பாக இருந்தது. மருத்துவ மனைக்குச் சென்று வந்ததால் ஏற்பட்டதாய் இது இருக்க வேண்டும் என்று அவனுக்கு தோன்றியது. அலுப்பென்றால் என்ன? வேலையா? வெட்டியா? நன்றாக உறங்கியெழ வேண்டியதே. அதற்கு ஏன் தேவை இல்லாது கவலைப்படுவான்? என்று எண்ணிய அகிலன் சென்று படுக்கையில் விழுந்தான். நெஞ்சிற்குள் விட்டு விட்டு நோவது போல இருந்தது. இது ஒன்றும் புதிது இல்லை. இப்படி இடைக்கிடையே நோவது பலகால வழக்கம். சில நேரத்தின் பின்பு அது மறைந்து போய்விடும். வாய்வுக் கோளாறு என்று ஊரில் சொல்வார்கள். அதே நேரம் சுவாசிப்பதற்கும் சாதுவாக அந்தரமாய் இருந்தது. வாய்வுக்கோளாற்றால் ஏற்பட்ட நோவின் பயத்தில் உண்டாகிய திணறல் இது என்பதை அவன் முழுமையாக நம்பினான்.

இருந்தும் தொடர்ச்சியாக அவனுக்கு ஏதோ அந்தரமாய் இருந்தது. இந்த நோவுடன் நித்திரை கொள்ள முடியுமா என்கின்ற சந்தேகம் உண்டாகியது. அவனுக்கு அதற்குமேல் நிமிர்ந்து இருக்கவும் முடியவில்லை. அவன் இயலாது படுத்துக் கொண்டான். உடம்பு குளிர்வது போல இருந்தது. போர்வையால் இழுத்துப் போர்த்திக் கொண்டான். சார்மினியை அழைத்து இதைப்பற்றிச் சொல்வதா என்கின்ற எண்ணம் ஒருமுறை உண்டாகியது. இப்பொழுது அழைத்தால் அவள் பயந்துவிடுவாள் என்கின்ற உண்மை விளங்க அந்த எண்ணத்தைக் கைவிட்டான். மிகவும் கடுமையாக இருந்தால் மட்டுமே அவளைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தவனாய் கண்ணை மூட முயன்றான். உடல் அலுப்பும் பலவீனமும் அவனை ஒருகணம் அமுக்கியது.

*

அகிலனுக்கு அதிசயமாக இருந்தது. எங்கோ அவன் திடீரென வந்திருந்தான். அங்கே அப்பா, அம்மா, மாமாக்கள், பாட்டிகள், தாத்தாக்கள் எனப் பலகாலம் பார்க்காத, பார்க்க முடியாத உறவினர்கள் சூழ்ந்து இருந்தார்கள். அது எந்த இடம் என்பது அவனுக்குச் சிறிதும் விளங்கவில்லை. அப்படியான இடத்தை அவன் ஒருபோதும் பார்த்ததில்லை. இவ்வளவு அழகான இடத்தில் இருக்கும் அந்த உறவினர்கள் ஏன் அவனைப் பார்த்துக் கவலை கொள்கிறார்கள் என்பதும் அவனுக்குப் புலப்படவில்லை. அவர்கள் கவலை கொள்வதற்கான காரணம் என்ன என்பது தெளிவற்ற, விடையற்ற

வினாவாகியது. இவர்கள் ஏன் இங்கு வந்தார்கள்? தான் எதற்காக இப்பொழுது இங்கு வந்து இருக்கிறேன்? தான் வந்ததைப் பார்த்து ஆனந்தம் கொள்ளாது இவர்கள் ஏன் கவலை கொள்கிறார்கள்? என்று குழம்பிய அவனால் அதற்கு மேல் தனது ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் அம்மாவிடம் சென்றான். அம்மா அவனைப் பார்த்து இமயம் இந்நாளில் உருகுவதாய் கட்டற்றுக் கண்ணீர் வடித்தார். அந்த கண்ணீர் பெருக்கின் காரணம் பிடிபடாது அவன் இதயத்தை அக்காட்சி, வாள் கொண்டு அரிந்தது. எதற்காக இந்தக் கவலை என்பது அவனுக்குத் தொடர்ந்தும் விளங்கவில்லை. அதற்கு மேல் தாயின் கண்ணீர்த் துளிகளைப் பார்த்துக் கொண்டு இருக்கும் பொறுமை அவனிடம் இருக்கவில்லை. அவன் பாய்ந்து அம்மாவின் அருகே சென்றான். அவரின் கையைத் தனது கையால் பிடித்துக் கண்ணில் ஒற்றினான். அவசரமாக முத்தம் கொடுத்தான்.

‘அழாத அம்மா... அழாத... நீ எதுக்கு அம்மா இப்ப அழுகிறாய்? எல்லாரும் இங்க இருக்கினம். நானும் வந்திட்டன். நீ எதுக்கு அம்மா இப்ப தேவை இல்லாமல் அழுகிறாய்?’ என்றான்.
‘எல்லாரும் இருக்கினம் எண்டதுக்காக நான் இப்ப அழ இல்லை. நீ எதுக்கு இங்க வந்தாய் எண்டுதான் நான் அழுகிறன்? அதை நினைச்சு நினைச்சு அழுகிறன். நீயும் இங்க வந்தால் நான் எப்பிடியெடா சந்தோஷமாய் இருப்பன்? உன்ன யாரடா இங்க வரச் சொன்னது? நாங்கள் தப்ப முடியாமல் இங்க வரவேண்டியதாய் போயிட்டுது. உனக்கு ஏனடா இந்த அவசரம்? ஏனடா நீ இங்க இப்ப அவசரப்பட்டு வந்தாய்? நீ இங்க வந்தா அங்க யாரடா சார்மினிய பாத்துக் கொள்ளுவினம்?’
‘நான் எங்க வந்து இருக்கிறன் அம்மா?’
‘நீ எங்க வரக்கூடாதோ அங்க வந்து இருக்கிறாய்’
‘என்ன சொல்லுறாய் அம்மா?’
‘உனக்கு எதுக்கெடா இந்த அவசரம்?’ அம்மா அவனைப் பார்த்து மீண்டும் கேட்டார்.
‘தெரியாதம்மா. ஆனா, நான் உங்கள பாக்க வேணும் எண்டு ஆசைப்பட்டன். அதுதான் வந்து இருக்கிறன். ஏன் அம்மா நான் உன்ன பாக்க வரக்கூடாதே? நான் அவையோடதான் இண்டைக்கு இருந்தன். பிறகு எப்ப வெளிக்கிட்டன்... எப்பிடி இங்க வந்தன் எண்டு எனக்கு தெரியாது. ஆனா, உன்ன பாக்கிறது பெரிய சந்தோஷமாய் இருக்குதம்மா. உன்ன பாத்து எவ்வளவு காலமாச்சுது?’
‘நீ இங்க வாறத்துக்கு காலம் இருக்குதெடா. தயவு செய்து உடனடியா திரும்பி போயிடு. கெதியா இப்பவே போயிடு’
‘நீ சும்மா இரம்மா. நான் போறன். ஆனா, உடன போக முடியாது. உன்னோட கொஞ்ச காலம் இங்க இருக்க வேணும்’

‘நீ உடன போக வேணும். இல்லாட்டி நீ திரும்பியே போக முடியாமல் போயிடும்’
‘என்ன சொல்லுறாய் அம்மா?’
‘அவன் எங்களோடயே இருக்கட்டும்’ என்று ஒரு மாமா இடையில் கூறுக்கிட்டார்.
‘உன்ர பிள்ள எண்டா நீ இப்பிடி சொல்லுவியே?’ அம்மா மிகவும் ஆக்ரோஷமாய் அவரைப் பார்த்து உரத்துக் கர்ச்சித்தார்.
‘எல்லாரும் இஞ்ச வரத்தானே வேணும்? நீ ஏதோ பெரிசா துள்ளுகிறா... உனக்கு மாத்திரமே பிள்ள இருக்குது? எனக்கும் இருக்கினம். அவையும் ஒரு நாளைக்கு இங்க வரத்தானே போகினம். நான் அதுக்காக அழப் போகிறது இல்லை. நடப்பதை யாரும் தடுக்க முடியாது. விளங்குதா தங்கச்சி? கடவுளுக்கே அதுதான் விதி. உனக்கு விளங்கும் எண்டு நினைக்கிறன்’
‘உங்களிட்ட நான் இப்ப விளக்கம் கேட்க இல்லை அண்ண... என்ரை வேதனை எனக்குத்தான் தெரியும்’
‘நீ ஏன் அம்மா தேவையில்லாமல் பயப்பிடுறாய்? மாமா துணிவா பிள்ளைகள எதிர்பாத்து கொண்டு இருக்கிற மாதிரி நீங்களும் துணிவா இருக்க வேணும். எதுக்காக நான் உங்களிட்ட வாறதுக்கே பயப்பிட வேணும்?’
‘நீ இப்ப எங்க வந்திருக்கிறா எண்டு தெரியுமாடா?’
‘நான் எங்க வந்து இருக்கிறன்? எங்க வந்தாலும் திரும்பி போறதுதானே? அதில என்ன இருக்குது?’
‘விளங்காமல் கதையாத. நீ திரும்பி போய் சார்மினிய பாக்க வேணும் எண்டா இப்பவே போ. பிறகு நீ என்ன பாடுபட்டாலும் திரும்பி போகவே முடியாது’
‘ஏன் அம்மா? இது என்ன இலங்கை இராணுவ முகாமா? அல்லது ஏதாவது இயக்கத்தின்ர முகாமா?’
‘பாவம் செய்யிறவைக்கு அப்பிடிதான் இது இருக்கும். புண்ணியம் செய்தவைக்கும் திரும்பி போகிற பாக்கியம் கிடையாது’
‘புண்ணியம் செய்தவை சந்தோஷமாய் இருப்பினமா? நீ சந்தோஷமாய் இருக்கிறியா அம்மா?’
‘நான் சந்தோஷமாய் இருந்தன். ஆனா, இப்ப இல்லை. ஏதோ பாவம் செய்து இருக்கிறன்’
‘இப்ப ஏன் சந்தோஷமாய் இல்லை அம்மா? எதுக்கு கவலை?’
‘நீ நல்லாய் வாழவேணும் எண்ட கவலை. அதால உண்டான ஆதங்கம்’

அவன் தாயுடன் கதைத்துக் கொண்டு இருக்கும் போழுதே ஆதிகாலத்து இராணுவம் போலப் பலர் திடுதிடுமென அங்கே ஓடிவந்தார்கள். அவர்கள் அங்கேதான் ஓடி வருகிறார்களா என்பதை நிதானிக்க முன்பே அவர்கள்

விரைவாக வந்து அவனைச் சூழ்ந்தார்கள். அகிலன் திகைத்து நிற்கும் போழுதே அவர்கள் சங்கிலி கொண்டு அவனை கெட்டியாகப் பிணைத்தார்கள். அகிலன் பலம் கொண்ட மட்டும் திமிறினான். அவர்களைப் பார்த்து,

'என்னை எதற்கு அரஸ்ட் பண்ணுறீங்க?' என்று கேட்டான். அவர்கள் அவன் கேட்பது விளங்காது அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். அகிலன் சிந்தித்தான். அவர்களுக்கு விளங்கும் மொழியில் கதைத்தாலே அவர்களுக்கு அது ஏறும் என்பது தெளிவாகியது. இவ்வாறு எண்ணியவன் பின்பு தனது மொழியைத் திருத்தித் தெளிவாகக் கதைத்தான்.

'என்னை எதற்காகக் கைது செய்கிறீர்கள்?'

'உன் காலம் முடிந்துவிட்டது. நீ எங்கும் தப்பிவிடாது உனது தீர்ப்பை இன்று பெறவேண்டும். அதற்காக உன்னைக் கைது செய்து உனக்கான கணக்கைபார்ப்பதற்கான உத்தரவு வந்தாகிவிட்டது'

'நீங்கள் யார் என் கணக்கை பார்க்க? எதற்காக நீங்கள் என் கணக்கைப் பார்க்க வேண்டும்? அவற்றை நான் வசிக்கும் நாட்டில் அரசே இலவசமாகப் பார்க்கிறதே?'

'ம்... நாங்களே எல்லோர் கணக்கையும் பார்ப்பவர்கள். பார்த்த பின்பு அதை முடித்தும் வைப்பவர்கள். இது உனது ஆயுள் கணக்கு. மனிதர்களின் அற்பப் பணத்திற்கான கணக்கல்ல'

'என்ன பிதற்றுகிறீர்கள்? நீங்கள் எந்த உலகில் வாழ்கிறீர்கள்?'

'நீயே உனது உலகு மாறி இங்கே வந்து இருக்கிறாய். உங்கள் உலகு எப்படியும் மாறி இருக்கலாம். எங்கள் உலகு எப்போதும் மாறாது. என்றும் ஈர் எண் வயதைத் தாண்டாதவர்கள் நாங்கள். அதன் விதிமுறைகளும் அப்படியே இருக்கும். அதிலிருந்து நீங்கள் என்றும் தப்பித்துக்கொள்ள முடியாது'

'நான் எனது உலகிற்குத் திரும்பி போக வேண்டும். எனக்காக மனைவியும் மகனும் காத்திருப்பார்கள். அவர்களை மேலும் காக்க வைக்க முடியாது'

'இந்த உலகிற்கு வந்தவர்கள் யாரும் அந்த உலகிற்குத் திரும்பிப் போக முடியாது... அதற்கு நீயும் விதி விலக்கல்ல. உனது மனைவிக்கு எப்பொழுது நேரம் முடிகிறதோ அப்பொழுது அவளும் இங்கே வந்தாக வேண்டும்'

'நான் அங்கே போக வேண்டும் என்கிறேன். நீங்கள் அவர்கள் இங்கே வருவார்கள் என்கிறீர்கள். உங்களுக்கு என்ன பயித்தியமா பிடித்து இருக்கிறது?'

'எங்களுக்கு அல்ல. அது உனக்கு பிடித்து இருக்கிறது. இதற்குமேல் உன்னோடு உரையாடிக் கொண்டு இருக்கமுடியாது. சேவகர்களே உடனடியாக இவனை இழுத்துக் கொண்டு வாருங்கள். இன்று உனது

கணக்கு நன்கு பார்க்கப்படும். அதன் முடிவில் நீ எங்கு இருக்க வேண்டும்... என்ன செய்ய வேண்டும் என்பது அறியத்தரப்படும்'

'என்ன கூத்து இது? என்னை விட்டுவிடுங்கள். நான் அவசரமாகத் திரும்பிப் போக வேண்டும். எனக்காக அங்கே பலர் காத்திருக்கிறார்கள்'

'இழுத்து வாருங்கள் அவனை. அவன் தேவையற்ற பிரசங்கம் செய்துகொண்டு நிற்கிறான்'

'ஐயோ என்னை விடுங்கள்'

'பேசாதே... இழுத்து வாருங்கள் இவனை'

'ஐயோ... ஐயோ... என்னை விடுங்கள்'

திடீரென அவன் வலது பாதத்தில் அடிபட்ட வேதனை உண்டாகியது. பக்கத்தில் நின்ற சிப்பாய் அடித்தானா? அவன் அந்த வேதனையில், 'ஐயோ அம்மா..' என்று கத்தினான். அதே வேதனையுடன் எழுந்து காலைத் தடவினான். அவனுக்குத் தான் எங்கே இருக்கிறேன் என்பது விளங்கத் தொடங்கியது. பக்கத்தில் நல்ல வேளையாக எந்தச் சிப்பாயும் நிற்கவில்லை. அந்த வேதனை காலிலிருந்து மட்டும் வரவில்லை. உள்ளிருந்து உடலெங்கும் பரவியதாகத் தோன்றியது. நெஞ்சிற்குள் நோவதோடு கடுதாசியைக் கசக்குவது போன்ற சளியின் சத்தம் கேட்டது. அத்தோடு உடல் எங்கும் முறிப்பதாக உளைந்தது. அதுவும் சுவாசத்தை இழுத்துவிடும் பொழுது ஊசி முனையால் சுவாசப்பை எங்கும் உறுத்துவது போல வேதனையாக இருந்தது. சுவாசிப்பதே கடுமையாக இருக்கும் அதே வேளையில் மூச்சுவிட முடியாதவாறு இருமலும் வந்தது. அகிலனுக்கு உடல் காய்வதும் விளங்கியது. அதனால் மேலும் குளிராக இருந்தது. உடல் நடுங்கத் தொடங்கிவிட்டது. அது தன்னை தானே வெப்பமாக்கிக் கொள்ளும் தந்திரம் என்பது அவனுக்கு விளங்கியது? அப்படி என்றால்? அவனுக்குப் பயமாக இருந்தது. தனக்கு ஏன் இப்படி நடக்க வேண்டும் என்பதை எண்ண அழுகை வந்துவிடும் போலத் தோன்றியது. என்ன செய்வது என்று முழுமையாக அவனுக்கு முதலில் விளங்கவில்லை. சார்மினிக்கு கூறினால் அவள் அதிர்ந்து போய்விடுவாள் என்பது விளங்கியது. அவளிற்குக் கூறாமலும் அம்புலன்சை அழைக்கலாம். அவனால் தொடர்ந்து சிந்திக்க முடியவில்லை. இருமல் தூக்கித் தூக்கிப் போட்டது. இந்த இருமலுடன் அவர்களுக்கு விளங்கப்படுத்துவது இலகுவான காரியம் இல்லை என்பது விளங்கியது. வெளியே இன்னும் இருட்டாகவே தோன்றியது. அவன் ஒருவாறு திறன்பேசியை எடுத்து நேரத்தைப் பார்த்தான். இரவு ஒருமணியாகிவிட்டது. விடிந்தால் வருத்தம் நீங்கிவிடலாம் என்கின்ற எண்ணம் முதலில் வந்தது. ஆனால் கொரோனாவாக இருந்தால் விடியும் பொழுது மேலும் கடுமையானாலும் கடுமையாகலாம். கொரோனாவைத் தவிர வேறு வருத்தமாக இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. எல்லா அறிகுறிகளும் அதை நோக்கியே காட்டியது. அப்படி என்றால் அதிக நேரம் வீட்டில் தாமதிப்பது புத்திசாலித்தனமாகாது. ஒன்று ஒன்று

மூன்று என்கின்ற அம்புலன்சின் எண் அவனுக்கு ஞாபகம் இருந்தது. திறன்பேசியை எடுத்தான். அவனால் இணைப்பை ஏற்படுத்த முடியவில்லை.

மூச்சு எடுக்க முடியாது மீண்டும் கடுமையாக இருமியது. அவன் அந்த இருமலில் திறன்பேசியைக் கைவிட்டான். சில நிமிடங்கள் உலுக்கிய இருமல் ஒருவாறு ஓய்ந்தது. ஆனாலும் நெஞ்சு எங்கும் இரத்தம் சிந்தும் புண்ணாக வலித்தது. ஏதாவது குடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அவனால் எதையாவது பருக முடியுமா என்கின்ற கேள்வியும் அவனுக்கு உண்டாகியது.

அவன் சிறிது நேரம் இருமிய களைப்பில் படுத்து இருந்தான். படுத்து இருக்கும் பொழுதே வர வர இருமல் அதிகரிப்பது அவனுக்கு விளங்கியது. இரும இரும நெஞ்சு நோ அதிகரிப்பதையும் அவனால் உணர முடிந்தது. மீண்டும் மூச்சுத் திணறியது. இருந்தும் ஒருவாறு சமாளித்து திறன்பேசியை எடுத்து அம்புலன்சிற்கு இணைப்பை ஏற்படுத்தினான். அதை எடுத்து 'கலோ' என்றான். அடுத்த முனை உயிர் பெற்றுக்கொண்ட அதே நேரம் சுனாமி போல இருமல் மீண்டும் நெஞ்சை அறுத்துக் கொண்டு புறப்பட்டு அவனைத் தாக்கியது. அவனால் மூச்சு எடுக்கவோ கதைக்கவோ முடியவில்லை. அடுத்த முனை முகவரி கேட்டது. தொடர்ந்து விபரம் தருமாறு கேட்டது. மீண்டும் மீண்டும் அவனைப் பேசுமாறு மன்றாடிக் கேட்டது. அவனால் அது முடியவில்லை. அவன் அதைத் துண்டித்தான். பின்பு வாயைத் துணியால் பொத்திக் கொண்டான். இதைக் கேட்டுச் சார்மினியும் பிரசனும் பயந்து விடுவார்களோ என்று அவனுக்குப் பயமாக இருந்தது.

சில நிமிடங்களின் பின்பு இருமல் ஒருவாறு சிறிது ஓய்ந்தது. நெஞ்சு புண்ணாக நோவது மேலும் கூடி இருந்தது. உடலின் சக்தியை இருமல் உறிஞ்சியதில் அது வலுவற்றுக் காற்றில் பஞ்சாய் மிதப்பதாய் தோன்றியது. அடுத்த இருமல் இனி எப்போது வரும் என்பது அவனுக்கு விளங்கவில்லை. எப்படி அவர்களைத் தொடர்புகொண்டு முழு விபரங்களையும் கூறுவது என்றும் விளங்கவில்லை. இந்த வருத்தம் இவ்வளவு வேதனையை தரும் என்றும் அவன் எதிர்பார்க்கவில்லை. அதுவும் இவ்வளவு விரைவாக அது இப்படித் தாக்கும் என்கின்ற எண்ணம் அவனிடம் இருந்ததில்லை. அவன் மீண்டும் திறன்பேசியைக் கையில் எடுத்தான். இப்போது மீண்டும் அழைப்பை ஏற்படுத்தப் பயமாக இருந்தது. இம்முறையும் கதைக்க முடியாது போய்விட்டால் மறுமுறை அழைக்கும் பொழுது அவர்கள் வராமல் விட்டுவிடலாம் என்கின்ற பயம். என்ன செய்வது என்று மீண்டும் மீண்டும் அவன் யோசித்தான்.

சார்மினியை அழைத்து அவளிடம் விடையத்தை கூறிவிட்டால் என்ன என்கின்ற எண்ணம் ஏற்பட்டது. அவன் திறன்பேசியை எடுத்தான். மீண்டும் பலமாக இருமல் வந்தது. மூச்சு நிறுத்தி நிறுத்தி வருவது போல நெஞ்சிற்குள் வலி ஊளித் தாண்டவம் ஆடியது. மீண்டும் மீண்டும் தூக்கிப் போடும் இருமலுடன் அவளை எப்படித் தொடர்பு கொள்வது என்கின்ற கேள்வி எழுந்தது. அவன் இருமிய வண்ணம் திறன்பேசியில் செய்தியை எழுத தொடங்கினான். அதுவே அவனால் தற்போது செய்யக்கூடிய இலகுவான வழியாகத் தோன்றியது. அதை தனது இருமல் தடுத்துவிட முடியாது என்பது அவனுக்கு விளங்கியது.

அவன் 'தயவு செய்து உடனடியாக அம்புலன்சைத் தொடர்பு கொள்ளவும். எனக்கு மூச்சுவிடவே கடினமாக இருக்கிறது என்று அவர்களிடம் கூறவும். அப்படிக் கூறினால் மட்டுமே அவர்கள் விரைவாக வருவார்கள். தயவு செய்து நீ பயந்து விடாதே. அவன் குழப்பம் அடையாது பார்த்துக்கொள். அம்புலன்ஸ் வந்தால் வெளியே வா. நான் உன்னுடன் அப்பொழுது கதைக்க வேண்டும்' என்று ஒருவாறு நெடுஞ்செய்தி எழுதி அனுப்பினான். அப்படி ஒரு முறை அனுப்பிய பின்பு அவள் அதைப்பார்க்காவிட்டால் என்கின்ற பயமும் தோன்றியது. அதற்கும் ஒரு வழி அவனிடம் கைவசம் இருந்தது. அவன் திறன்பேசியால் சார்மினியை அழைத்துவிட்டு அதைத் துண்டித்துக் கொண்டான். அது வேலை செய்திருக்க வேண்டும். சிறிது நேரத்தில் அவள் அழைத்தாள். அவள் குரல் பதட்டமாக இருந்தது. எடுத்த உடனேயே கேள்வி கணைகளைத் தொடுக்கத் தொடங்கினாள்.
'என்னப்பா செய்யுது? எனக்கு உங்கட எஸ்எம்எஸ்சைப் பாத்துப் பயமா இருக்குது. ஏதாவது கடுமையா இருக்குதா அப்பா? உங்கள திரும்பவும் கேட்டிட்டு அம்புலன்ஸ்சிற்கு போன் பண்ணுவம் எண்டு நினைச்சன். அதுதான் அப்பா உங்களுக்கு இப்ப போன் எடுத்தனான்'
'எனக்கு ஒண்டும் கடுமையில்ல. ஆனா, கடுமையாக்கிறதுக்கு முதல்ல ஹொஸ்பிற்றலுக்கு போகிறது நல்லது எண்டு எனக்குப்படுகுது... அதாலதான் உன்ன போன் பண்ண சொன்னனான்' அகிலனுக்கு அவளோடு கதைத்துக் கொண்டு இருக்கும் போழுதே இருமத் தொடங்கியது.
'என்ன செய்யுதப்பா உங்களுக்கு? என்ன செய்யுதப்பா உங்களுக்கு?' என்று அவள் மீண்டும் மீண்டும் கதறினாள். அந்த இருமலின் சத்தத்தைக் கேட்டு அவள் பயந்துவிட்டாளோ என்று அவனுக்குக் கவலையாக இருந்தது. இருந்தும் அதற்குச் சொல் வடிவம் கொடுக்க முடியாது அந்த இருமல் அவனைத் தொடர்ந்தும் வாட்டி எடுத்தது.
'என்ன செய்யுதப்பா உங்களுக்கு?' என்று மீண்டும் சார்மினி கேட்டாள். அகிலன் தொடர்ந்தும் இருமினான். பின்பு இதற்கு மேல் அவள் இதைக் கேட்க வேண்டாம் என்கின்ற கவலையுடன் திறன்பேசியைத் துண்டித்தான்.

திறன்பேசியைத் துண்டித்ததால் மிகவும் கவலையும் பயமும் கொண்ட சார்மினி சிறிது நேரம் அதிர்ந்து போய் இருந்தாள். பின்பு நிலைமை அவளுக்கு உறைக்க உடனடியாக ஒன்று ஒன்று மூன்றிற்குத் தொடர்பு கொண்டாள். அவளால் நிலைமையை விளங்கப்படுத்த முடிந்தது. தான் யார் தன்னுடைய நிலைமை என்ன என்பதையும் விளங்கப்படுத்த முடிந்தது. அவளின் விளக்கத்தைக் கேட்டவர்கள் உடனடியாக அம்புலன்ஸ் வரும் என்றார்கள்.

சார்மினிக்கு எல்லாம் கனவு போல இருந்தது. சிறிது நேரம் என்ன செய்வது என்று விளங்கவில்லை. நிலைமை விளங்கியதும் உடனடியாக தனது உடையை மாற்றிக்கொண்டு பாதாள அறைக் கதவைத் திறப்பதற்கான சாவியையும் எடுத்துக் கொண்டாள். வெளிக்கதவைத் திறந்துவிட்டு அவள் அம்புலன்சிற்காய் காத்திருந்தாள். தற்போது வெளியே குளிராக இருப்பதால் சத்தம் கேட்டதும் வெளியே போகலாம் என்பது அவள் எண்ணமாகியது.

அவளுக்கு நடக்கும் விடயங்கள் அனைத்தையும் நம்ப முடியாமல் இருந்தது. எப்படி இருந்தவர் இப்படி ஆகிவிட்டார் என்கின்ற கவலையும் பயமும் அவளைக் கொன்றது. எதனால் இது நடக்கிறது என்பதை அவளால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இவ்வளவு அவதானமாய் இருந்தும் எங்களுக்கு ஏன் இந்த நிலை வரவேண்டும் என்பது அவளுக்கு தெரியவில்லை. எங்கே பிழை விட்டோம் என்பது மங்கலாக விளங்கியது. அது சுரங்க ரதத்திலேயே நடந்து இருக்க வேண்டும். அதை அவரால் தவிர்க்க முடியாது போய்விட்டது. இருந்தாலும் அவர் விரைவாகக் கூறியதும் அதனால் உசாராகியதும் பிரசனுக்காவது பாதுகாப்பாய் அமைந்து இருக்கிறது. கடவுளே அவருக்கு எதுவும் ஏற்படக்கூடாது. எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று அவள் மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டு இருக்கும் பொழுது,
'அம்மா..' என்கின்ற அழைப்பு மிகவும் அருகில் கேட்டது. சார்மினி இதை எதிர்பார்க்காததால் அதிர்ந்து போய்விட்டாள். இருந்தாலும் அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்பதை விரைவாகச் சிந்தித்தாள்.
'என்ன கண்ணா...? ஏன் இப்ப எழும்பி வந்தாய்?'
'நான் சுச்சா போக எழும்பினன் அம்மா. உன்னை அங்க காண இல்லை. அதுதான் தேடி வந்தன். ஏன் நீ இங்க வந்து இருக்கிறாய்? இப்ப எங்க என்னை விட்டிட்டு போகப் போகிறாய்? என்னைத் தனியாவா விட்டிட்டு போகப் போகிறாய்? சொல்லு அம்மா... சொல்லு...?'
'இல்லையடா கண்ணா... நீ இங்க வா..'
'சொல்லம்மா?'
'வா உடுப்பு மாத்திக்கொண்டு வருவம்'
'ஏன் அம்மா?'

'அதுவா? நான் சொல்லுறன் வா'
'நாங்கள் எங்க போகப் போகிறம் அம்மா?'
'வெளிய போயிட்டு வருவம். அம்புலன்ஸ் இப்ப வரும். அது வந்து போன பிறகு நாங்கள் திரும்ப வீட்டை வரலாம்'
'ஏன் அம்புலன்ஸ் இங்க வரும் அம்மா?'
'அப்பாவுக்குக் கடுமையா இருக்குதாம். அதுதான் நான் அம்புலன்சிற்கு போன் பண்ணி இருக்கிறன். அது இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடும்'
'நான் இருமினாலும் அம்புலன்ஸ் வருமா அம்மா?'
'கடுமையான இருமல் எண்டா அது வரும். அது சந்தர்ப்பத்த பொறுத்தது கண்ணா'
'நான் கண்ணனா என்ன? அப்பா அம்புலன்சில போயிடுவாரா அம்மா?'
'உனக்குப் பிரசன் எண்டு பெயர் இருந்தாலும் நீ எனக்குக் கண்ணன்தான். சரி நீ இப்ப ஜக்கற்றை போடு பாப்பம்'
'பதில் சொல்லம்மா... அன்புலன்சில அப்பா போயிடுவாரா?'
'அடம் பிடிக்கக்கூடாது கண்ணா'
'அப்பா போயிடுவாரா எண்டு சொல்லம்மா?'
'ம்... அப்பா அன்புலன்சில போயிடுவார்'
'உண்மையாவா அம்மா'
'உண்மையாகத்தான் கண்ணா?'
'அப்ப நான் அப்பாவுக்கு உம்மா குடுக்க வேணும்'
'அதெல்லாம் குடுக்க முடியாது கண்ணா. அப்பாவுக்கு என்ன வருத்தம் இருக்குது எண்டு டொக்ரர் கண்டு பிடிக்கும் வரைக்கும் நாங்கள் கிட்டப் போகக்கூடாது'
'அது கொரோனா இருக்கிறவைக்கு மட்டும் எண்டு பள்ளிக்கூடத்தில சொல்லிச்சினம்?'
'கொரோனாவாக இருக்குமா எண்ட சந்தேகம் இருந்தாலும் அப்பிடித்தான்'
'அப்ப அப்பாவுக்கும் இருக்குது எண்டு சந்தேகமா?'
'தெரியாது கண்ணா. அதுக்கான முடிவு இன்னும் வரேயில்லை. ஆனா, அப்பாவுக்கு கஸ்ரமாய் இருக்குதாம். எதுக்கும் பாதுகாப்பாய் இருக்க வேணும் எண்டதால அப்பா இப்பவே ஹொஸ்பிற்றலுக்கு போகிறார். நீ இதைப் பற்றி எல்லாம் தேவை இல்லாமல் கவலைப்படத் தேவை இல்லை. அப்பாவுக்கு டாட்டா சொன்னால் அது போதும். விளங்கிச்சுதா கண்ணா?'
'நீ மோசம் அம்மா?'
'ஏனடா கண்ணா?'
'அப்பாவையே கட்டிப்பிடிக்கக்கூடாது எண்டுகிறாய்?'
'நான் வேணும் எண்டா சொல்லுறன்? உனக்கு ஸ்கூல்ல ஒண்டும் சொல்ல இல்லையா?'

'அது வெளியாட்களுக்கு... அப்பாவுக்குமா அம்மா? அப்பிடி சொல்ல இல்லை'
'வருத்தம் இருக்குது எண்டு சந்தேகம் வந்தால் அப்பாவுக்கும்தான்'
'அப்ப அப்பாவுக்கு வருத்தம் இருக்கா அம்மா?'
'எனக்குத் தெரியாது. முடிவு இன்னும் சொல்ல இல்லை. அது வாற நேரம் வரட்டும். வா நாங்கள் இப்ப வெளிய போவம்'

சார்மினி கதையை மாற்ற முயன்றாள். பிரசனின் முகம் வாடிப் போயிற்று. அவன் கடுமையாகச் சிந்திப்பது அவளுக்கு விளங்கியது. அப்பா இனித் திரும்பி வரமாட்டாரோ என்று அவன் பயந்துவிடக்கூடும் என்கின்ற கவலை அவள் மனதை அரக்கன் போல ஆக்கிரமித்து இருந்தது. அம்புலன்ஸ் சத்தம் சாதுவாகக் கேட்கத் தொடங்கியது. அவள் பிரசனின் கையைப் பிடித்தாள். சாவிகளை எடுத்துக் கொண்டு மெதுவாக வாசலை நோக்கி நடக்க தொடங்கினாள். அவனிடம் மாலையிலிருந்த துள்ளல் இப்போது அமாவாசை நிலவு போல மறைந்து போய் இருந்தது. அதைப் பார்க்கும் போது சார்மினிக்கு இதயம் புண்ணாக நொந்தது. அவனை எதற்காகவும் அவள் கவலைப்படுத்தியது இல்லை. அப்பாவோ அம்மாவோ மறந்தும் அவன் மீது கைவைத்தது இல்லை. இன்று அவன் மனதை நெரிந்தோ தெரியாதோ புண்படுத்த வேண்டி வந்துவிட்டது. அவள் வெளியே வந்துவிட்டாள். அம்புலன்ஸ் மிக அருகில் வந்துவிட்டது போல் சத்தம் கேட்டுக் கொண்டு இருந்தது. அன்புலன்ஸ் வந்தால் சாவியைக் கொடுக்க வேண்டும் என்கின்ற ஆயுத்தத்தில் சார்மினி தயாராக நின்றாள். அப்போது பாதாள அறைக்கதவு உள்ளிருந்து திறந்தது. அகிலன் தள்ளாடித் தள்ளாடி வெளியே வந்தான். அவன் இடைக்கிடையே கடுமையாக இருமுவதையும் சுவாசிப்பதற்குக் கஸ்ரப்படுவதையும் அவள் கண்டாள். அதைக் கண்டு அவள் கம்பனின் கடன்பட்டார் நெஞ்சம் போல் கதிகலங்கி நிற்கையில் பிரசன் அவளது பிடியைத் தளர்த்திவிட்டு ஓட முயன்றான். சார்மினி நிலைமையைச் சமாளித்து அவன் கையை மீண்டும் பலமாகப் பற்றிக் கொண்டாள். அதிலிருந்து விடுபட அவன் முயற்சிக்க முயற்சிக்க அவள் பிடி இறுகியது. இது வன்முறை என்பது அவளுக்கு விளங்கியது. இருந்தும் அதைவிட வேறு வழி இருப்பதாக அவளுக்கு அப்போது தோன்றவில்லை.
அகிலனால் நிற்க முடியவில்லை. சார்மினியைப் பார்த்துக் கையைக் காட்டினான். பின்பு நிலத்தில் இதுவே தஞ்சமென இருந்தான். இடையில் இருமல் சற்று ஓய்ந்து இருந்தது.
'நீங்கள் இரண்டு பேரும் கவனமா இருங்க'
'என்ன அப்பா இது? என்ன சோதனை அப்பா இது?'
'நாங்கள் என்ன செய்கிறது. யாரும் இப்படி வரும் எண்டு எதிர் பார்த்தவையே? தெரிஞ்சால் நான் தேவாணில போய் இருப்பனே? இப்ப முக்கியமானது நடந்தது பற்றி கதைக்கிறது இல்லை... நடக்கப் போகிறது

பற்றிய தெளிவான சிந்தனையோட இருக்கிறது. நீங்கள் எதுக்கும் பயப்பிடாமல் கவனமா இருங்க... எல்லாம் கெதியா சரியாகும் எண்டு நினைக்கிறன்'
'அப்பா... அப்பா..' பிரசன் கையை நீட்டி நீட்டி அழத் தொடங்கினான். அதைப் பார்த்த அகிலனுக்கு வருத்தத்தை வென்ற வருத்தமாக இருந்தது. எது எப்படி என்றாலும் ஓடிச் சென்று அவனைக் கட்டி அணைக்க முடியாது என்பது அவனுக்கு நன்கு விளங்கியது.

அகிலனின் கண்கள் கொடும் வெயிலில்பட்ட மெழுகாகத் தொடர்ந்தும் கரைந்து அவன் பார்வையை மறைத்தது. அதில் சார்மினியும், பிரசனும் கரைந்து மறைந்து போகும் காட்சி அவனிற்குப் புலப்பட்டது. அதை அவனால் தாங்க முடியவில்லை. அவசரமாகக் கண்களைத் துடைத்து மீண்டும் அவர்களைத் தெளிவாகப் பார்க்க முயன்றான். அவன் அந்த முயற்சியில் போராடிக்கொண்டு இருக்கும் பொழுதே அம்புலன்ஸ் வேகமாக வந்து அவர்கள் வீட்டிற்கு முன்பு நின்றது. அதிலிருந்து இருவர் மிகவும் அவசரமாக இறங்கி வெளியே வந்தனர்.

அவர்கள் நோயாளியைப் படுக்க வைக்கும் கட்டில் ஒன்றையும் தள்ளிக் கொண்டு வந்தார்கள். முகக்கவசம், அதை மூடிய பிளாஸ்ரிக் கவசம், உடையைப் பாதுகாக்கும் மேலுறையுடன் கையுறையும் அணிந்திருந்தனர். அவர்களைப் பார்த்ததும் அகிலனுக்கே இந்த வருத்தம் இவ்வளவு கொடியதா என்கின்ற எண்ணம் ஏற்பட்டது. அவன் அந்த எண்ணங்களுக்குத் தற்காலிக விடுப்புக்கொடுத்து அவர்களைப் பார்த்தான். அப்படி வந்தவர்கள் அகிலனையும் அவன் இருக்கும் கோலத்தையும் அவதானித்து இருக்க வேண்டும். அதற்கு அவர்கள் அனுபவங்கள் காரணமாய் இருந்து இருக்கலாம். அவர்கள் நேரடியாக அவனிடம் சென்றனர்.
'உங்கள் பெயர் என்ன?'
'அகிலன் சோமசுந்தரம்'
'உங்களுக்காகத் தொடர்பு கொண்டது யார்?' அவன் சார்மினியை நோக்கிக் கையைக் காட்டினான். அவனால் கதைக்க முடியாது இருந்தது. அதற்கு அவனை ஆக்கிரமித்த இருமலே காரணம். அந்த இருமலோடு அவனின் நிலைமை அவர்களுக்கு நன்கு விளங்கி இருக்க வேண்டும். அவர்கள் கொண்டு வந்த கட்டிலில் அகிலன் ஏறிப்படுப்பதற்கு உதவி செய்தனர். படுக்கையில் ஏறியதும் அகிலன் சார்மினியையும் பிரசனையும் பார்த்தான். மீண்டும் கண்ணீர் அவன் பார்வைக்குத் திரையிட அவர்கள் கலங்கலாகத் தெரிந்தனர். அந்தக் கலங்கலிலும் பிரசன் அப்பா அப்பா என்று கையைக் காட்டி அழுவதை அவன் கண்டான். அவன் இதயம் வேதனை தாங்காது வெடிப்பதாய் அச்சுறுத்தியது. அம்புலன்சில் வந்தவர்களுக்கு எதற்காகவும் தாமதிக்கும் எண்ணம் இருக்கவில்லை.

அவர்கள் மெதுவாக வண்டியின் பின்கதவைச் சாத்தினர். அதன் பின்பு முன்கதவும் சாத்தப்பட்டது. வண்டி மீண்டும் ஒலியுடன் புறப்பட்டது. சார்மினி அதைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். பிரசன் அவளைப் பார்த்து அழுதான். அகிலன் வண்டிக்குள் வேதனை தாங்காது கண்ணீர் வடித்தான்.

*

மருத்துவ மனைக்குச் சென்ற பின்பு இரண்டு நாட்கள் அகிலன் சார்மினிக்கு குறுஞ்செய்தி அனுப்பினான். மூன்றாவது நாள் இரவு எட்டு மணிக்கு தனக்கு மயக்கம் வருவது போல இருப்பதாகக் குறுஞ்செய்தி அனுப்பினான். அதன் பின்பு அவனிடம் இருந்து எந்தத் தகவலும் வரவில்லை. ஆனால் சார்மினியால் அதை ஏற்றுக் கொண்டு சும்மாய் இருக்க முடியவில்லை. அவள் மருத்துவமனையுடன் தொடர்புகொண்டு தகவல் அறிந்தாள். அவர்கள் அகிலனுக்குச் சுவாசிப்பதற்குக் கடினமாக இருப்பதாகவும், அவனிற்குச் சுவாசக் கருவி பொருத்தப்பட்டு இருப்பதாயும், அவர் இப்போது கதைக்கும் நிலையில் இல்லை என்றும் கூறினார்கள். அதன் அர்த்தம் என்ன என்பது அவளுக்கு விளங்கியது. ஐயோ என்று கத்தி அழ வேண்டும் போல இருந்தது. அப்படி அழுதால் பிரசன் பயந்துவிடுவான் என்பதால் அவள் அதை மனதில் அடக்கிக் கொண்டாள். ஆனால் மனதிற்கு யார் கட்டுப்பாடு போட முடியும்? அவள் பல தெய்வங்களுக்கு நேர்த்தி வைத்தாள். அந்தக் கடவுள்களின் அருளால் அகிலன் மீண்டுவருவான் என்று மிகவும் நம்பி இருந்தாள்.

ஐந்து நாட்களுக்கு அவர்கள் ஒரே பதிலையே அவளுக்குக் கூறினார்கள். சார்மினிக்கு மருத்துவ மனைக்கே செல்ல வேண்டும் என்பது போல இருந்தது. ஆனால் வெளியார் யாரும் செல்ல முடியாது என்பதும் அவளுக்கு நன்கு தெரியும். அவள் நம்பிக்கையோடு ஆண்டவனைப் பிரார்த்தித்தாள். மனிதனால் மனிதனைக் காக்க முடியாத பொழுது வேறு யாரிடம் போவது என்பது அவளுக்கு விளங்கவில்லை. மனிதனை மனிதனால் இப்படிக் காப்பாற்ற முடியாத காலம் வரும் என்றும் அவள் எதிர்பார்க்கவில்லை.

பிரசன் ‘அப்பா எப்ப வருவார்?’ என்று அடிக்கடி கேட்கும் பொழுது என்ன பதில் சொல்வது என்பது அறியாத திகைப்பே முதலில் அவளுக்கு உண்டாகும். பின்பு ‘அப்பா கெதியா வருவாரடா கண்ணா’ என்று சொல்லிச் சமாளிப்பாள். அவள் அப்படிச் சொல்லும் பொழுது அவன் அவளை ஊன்றிக் கவனிப்பது போல இருக்கும். ஏன் அப்படிப் பார்க்கிறான் என்பது அவளுக்கு விளங்கவில்லை. இந்த விளக்கம் இன்மை அவளுக்குப் பெரும் பீதியை உண்டு பண்ணியது. இப்படி

வாழ்க்கையில் வரக்கூடாத ஐந்து நாட்கள் அவள் வாழ்க்கையில் வந்து போனது. ஆறாவது நாள் அந்தத் தொலைப்பேசி வந்தது. அவள் முதலில் பயத்தில் உறைந்தாள். பின்பு அப்படி இருக்காது என்கின்ற நம்பிக்கையோடு அதை எடுத்தாள். அடுத்த கணம் அவள் பிரசனைக் கட்டியணைத்து முத்தமிட்டாள்.

எத்தினை புன்னகை மலர்கள் அவள் முகத்தில்
இத்தினை இடைவெளி இல்லாது பூத்தது?

--முற்றும்--

தானம்

சொக்கனும் சுப்பனும் ஒரே விமானத்தில் நோர்வேக்கு வந்தார்கள். அப்படி வந்தவர்கள் ஒஸ்லோவின் பொர்னவூ விமானநிலையத்தில் இறங்கிய பொழுது விமானத்திற்குள் பார்த்த அதே சொர்க்கம் இங்கு நாட்டிற்குள்ளும் வஞ்சகம் இல்லாமல் பரந்து தொடர்கின்ற உண்மை இருவருக்கும் விளங்கியது. அதனால் கள்ளுண்ட மந்தி போல் உண்டான மலைப்பு அவர்கள் வாயைப் பிளக்க வைத்தது. இந்த அளவிற்குத் தூய்மை, வசதி, சொகுசு என்பவற்றை அவன் இலங்கையில் இதற்கு முன்பு கண்டதில்லை. அங்கே கூரையும், தரையும் கதவோடு இருந்தால் அதை வீடு என்பார்கள். அவை எதனாலும் உருவாக்கப்பட்டு இருக்கலாம். உள்ளே அடுப்பு மட்டும் இருக்கலாம். அதுகூடப் பலருக்கு நிம்மதி தந்த காலம் உண்டு. அந்தக் காலம் கப்பல்லேற இவர்கள் விமானம் ஏறினார்கள். இங்கு அவன் விமானத்திலிருந்து பார்த்த வீடுகளின் வெளித் தோற்றமே அவனை மலைக்க வைத்தன. அனேகமான வீடுகள் அரிகல் அச்சில் அரிந்தது போல ஒரே அளவிலிருந்தன. அதன் உள்ளேயும் விமான நிலையத்தை போன்ற சொகுசும் நவீனமும் இருக்கும் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இல்லை. இப்படி மலைப்போடு இருவரும் விமானத்தை விட்டு இறங்கிப் பழக்கத் தோசத்தில் கையைத் தூக்கிக் கொண்டு வர எண்ணியவர்கள் இது நோர்வே என்பதால் அந்த எண்ணத்தைக் கைவிட்டுக் குடிவரவு குடியகல்வுப் பகுதிக்கு வந்தார்கள். இவர்கள் வரும் காட்சியைக் கண்டு இன்புற்ற விமானநிலைய அதிகாரிகள் விமான நிலையக் காவலர்களுக்கு உடனடியாக நடைபேசியில் அறிவித்துவிட்டு இவர்களை அங்கே இருக்கும் ஒரு ஆசனத்தில் காத்திருக்குமாறு பணிவுடன் கட்டளை இட்டார்கள். அது தமிழர்கள் வஸ்கொடகாமா போல நோர்வேயைக் கண்டுபிடித்த குடியேறிகளின் ஆரம்பக்காலம். அதனால் தமிழர்கள் பற்றி நோர்வே அதிகாரிகளுக்கு அவ்வளவாகத் தெரியாது. இவர்களும் தங்களைப் போன்ற சாதுவான ஜந்துக்கள் என்ற கணிப்புடனே தமிழர்களை நடத்தினார்கள். இராஜ மரியாதை கொடுத்தனர். அது காலத்தால் கரைந்த கதை வேறு ஒன்று. சிறிது நேரத்தில் ஒரு அதிகாரியால் சொக்கனும் சுப்பனும் விபரங்கள் பதிவதற்காய் உள்ளே அழைத்து செல்லப்பட்டனர். அப்போது சொக்கன் சுப்பனைப் பார்த்துச் சொன்னான்…

'நோர்வே வசதியான நாடு எண்டு நான் கேள்விப்பட்டிருக்கிறன். ஆனால் இவ்வளவு வசதியாய் இருக்கும் எண்டு நான் நினைக்க இல்லை. இங்க உழைச்சா நல்ல வருமானம் வருமாம். நிறைய றொக்கெற் ஊருக்கு அடிக்கலாம் எண்டு கேள்விப்பட்டன். அதோட ஏதாவதும் பிரத்தியேகமாய் செய்ய வேணும்' என்றான்.

‘என்ன பிரத்தியேகமாச் செய்ய வேணும் எண்டு நினைக்கிறாய்?’
‘நிறையத் தமிழ் ஆட்கள் இனி நோர்வேக்கு வருவினம். அதுவும் யாழ்ப்பாணத்தார். தாங்கள் அனுபவிக்காததை எல்லாம் தங்கட பிள்ளையள் அனுபவிக்க வேணும் எண்டு ஒற்றை காலில நிப்பினம். அவைக்குச் சேவை செய்கிற மாதிரி ஏதாவது செய்யலாம்’
‘ஓ… அப்ப நீங்கள் சேவை செய்யப் போகிறியளா?’
‘ஏன் நான் செய்யக்கூடாதே? சேவைதான் நல்ல தொடக்கம் சுப்பா. அது உனக்கு இப்ப விளங்காது. ஆனால் போகப் போக விளங்கும். எனக்கு சேவை செய்யிறது எண்டால் அப்பிடி ஒரு விருப்பம். அது எனக்கு நிறைய மனசிற்கு சந்தோசம் தரும். ம்…’ அவன் சிரித்தான்.
‘நீ ஏன் சிரிக்கிறா? நீ என்ன சொல்ல வாறா எண்டு எனக்கு விளங்க இல்லை’
‘அதை விடு… அதுதான் உனக்கு நல்லது’
‘நானும் அப்பிடிதான் நினைக்கிறன். எனக்கு என்னுடைய சொந்தப் பிரச்சினை தீர்க்கவே நேரம் இல்லை. அது சரி நீ இங்க என்ன பொதுச் சேவை செய்யப் போகிறாய்?’
‘எத்தினையோ சேவை செய்யலாம். அது அவை அவையின்ர திறமைய பொறுத்தது. திறமைக்கு ஏற்ப பயனும் கிடைக்கும். சேவை செய்கிறதுக்கு தேவை இருக்கோணும் எண்டு இல்லை. தேவையை நாங்களே உருவாக்க வேண்டியதுதான். பிறகு பார்க்க வேணும் அது எப்பிடி செளிக்குது எண்டு’
‘சேவை… செழிப்பு… நீ என்னவோ கதைக்கிறாய்… உன்ரை பிளான் என்ன?’
‘நான் ஒரு காலத்தில ஒரு மடத்தை இங்க ஸ்தாபிப்பன்’
‘இங்க மடம் நடத்தப் போகிறியா? அது ஏற்கனவே ஹரி ராமா ஹரி கிருஷ்ணா எண்டு ஒண்டு ஒஸ்லோவில இருக்குதாமே? ‘
‘இருந்தால் என்ன? நான் வேற ஒரு பெயரில வேறை ஒரு மடம் நடத்துவன். திட்டங்கள் நல்லாய் இருந்தால் விட்டில்கள் தானாய் வரும். நீ இருந்துபார்… எப்பிடி எல்லாம் இங்க மாற்றம் வரும் நான் எப்பிடி அதை வளர்த்து எடுக்கிறன் எண்டு’
‘ம்… நல்ல கற்பனைதான். இப்ப நாங்கள் பறக்கிறதை விட்டிட்டு இருக்கிறதைப் பார்ப்பமே?’
‘ம்… தொடங்குவம்’

*

காலங்கள் உருண்டோடின. சொக்கன் கூறியது போலவே ஒஸ்லோவில் தமிழர் பல்கிப் பெருகினர். சொக்கன் பல சேவை செய்யும் அமைப்புக்களில் அக்கறை காட்டினான். அதன் நிர்வாகங்களிலும் பங்களித்தான். சுப்பனையும் அங்கே வருமாறும் அதற்குச் சேவை செய்யுமாறும் அழைத்தான். சுப்பனுக்கு நிறையப் பொறுப்புகள் இருந்தன. அதனால் அவன் தன்னால் அதற்கு நேரம் ஒதுக்க முடியாது என்றான்.

ஆனால் சொக்கனோ நீ ஓய்வாக இருக்கும் நேரங்களில் என்னுடன் வந்தால் அது உனக்குப் பல நன்மைகளை உண்டு பண்ணும் என்றான். என்ன நன்மை உண்டாகும் என்பது சுப்பனுக்கு விளங்கவில்லை. தனது சகோதரங்களுக்காய் உழைக்க வேண்டிய நேரமே வீணடிக்கப்படும் என்று அவன் மேலோட்டமாக எண்ணிக்கொண்டான். பல அமைப்புகள் பல பெயர்களில் நோர்வே எங்கும் உருவெடுத்தன. இங்கு மாத்திரம் அல்ல பல நாடுகளிலும் அப்படித்தான். சேவை செய்பவர்கள் சேவை பெறுபவர்களைவிட அதிகமாக இருப்பது போலத் தோன்றியது. இப்படி ஒரு மனம் படைத்த மாந்தர்கள் எதற்காக நாடு விட்டு நாடு வந்தார்கள் என்பது சுப்பனுக்கு விளங்கவில்லை. இந்தச் சேவையை இலங்கையில் செய்திருந்தால் சமுதாயத்திற்குள் நிலவி இருந்த பல பகைகள் காணாமல் போயிருக்கலாம். சிலவேளை அதற்கு இடம் காலம் சூழ்நிலை என்பன ஒத்து வந்திருக்காது போல என்று அவன் எண்ணிக் கொண்டான்.

அன்று மாலை சுப்பன் வீட்டிற்குச் சொக்கன் வந்திருந்தான். சுப்பனுக்கு இவன் எதற்கு வந்து இருக்கிறான் என்பது விளங்கவில்லை. சேவை செய்வதற்கு பலமுறை கேட்டுவிட்டான். சுப்பனால் அதற்கு ஒத்துக் கொள்ள முடியவில்லை. முதலில் தனது வீடு. அதன் பின்பே பொதுச் சேவை என்பதில் அவன் உறுதியாக இருந்தான். இருந்தாலும் சொக்கன் எப்படி முதலில் சேவை பின்பு வீடு என்று வாழ்கிறான் என்பது மட்டும் அவனுக்கு விளங்கவே இல்லை. தான் இப்படி யோசித்துக் கொண்டு நிற்பது சரி அல்ல என்பதை உணர்ந்த சுப்பன் சொக்கனைப் பார்த்தான்.

‘என்ன சொக்கா… என்ன விசயம்? நீ விசயம் இல்லாமல் நேரத்தை வீணாக்க மாட்டியே? ‘ என்று தொடங்கினான்.

‘ஓ முதலில வசதியா ஒரு இடத்தில இருப்பம். பிறகு அதைப்பற்றிக் கதைப்பம். என்ன?’ என்றான் சொக்கன்.

‘ஓ நீ சொல்லுகிறது சரி. வந்து முதல்ல இரு’

‘நான் இவ்வளவு நாளும் ஓடி ஓடிச் சேவை செய்தது உனக்கும் நல்லாய் தெரியும்’

‘உன்ர மனது யாருக்கு வரும் சொக்கா. நான் சொல்லுகிறது சரியே?’ என்றவன் உதட்டில் ஒரு மென்னகை.

‘ம்… அது மட்டும் இல்லை. அப்படி சேவை செய்ததால எனக்கு ஒஸ்லோவில இருக்கிற எல்லாப் பெரிய காய்களையும் தெரியும். அவையின்ர சப்போட்டும் எனக்கு இனி எப்பவும் இருக்கும். சப்போட் எடுக்கோணும் எண்டா தகுதியில்லாததையும் வாழ்த்தி பழக வேணும். முகப்புத்தகத்தில ஓடி ஓடி விருப்பம் தெரிவிக்கிற மாதிரி இதுவும் ஒரு முக்கியமான சடங்கு. எல்லாம் ஒரு சதுரங்கம்’

‘ஓ… உன்னமாதிரி முறிஞ்சா நிச்சயம் அவங்கள் அதுக்கு மரியாதை தருவாங்கள் தானே? அதோட உனக்கு விளங்காத அரசியலா? எனக்கு இதெல்லாம் தூரம் சொக்கா’
‘சுப்பா நீ இங்கதான் கோட்டை விடுகிறாய்’
‘என்ன சொல்லுறாய் சொக்கா?’
‘பிறகென்ன? நான் என்னுடைய குடும்பத்தையே விட்டிட்டு பாடுபட்டன் எண்டால் அதுக்கு முறையான ஒரு காரணம் இருக்காமல் நான் அதைச் செய்வன் எண்டு நினைக்கிறியா? இந்த உலகத்தில அப்பிடி எதுவும் இந்த யுகத்தில லேசில நடந்திடுகிறது இல்லை’
‘உண்மய சொன்னால் எனக்கு உள்ளேயும் அப்பிடி ஒரு கேள்வி இருக்குது. சோழியன் குடுமி சும்மா ஆடுமோ எண்டு நினைப்பன். எண்டாலும் எனக்கு உன்னுடைய சேவை மனப்பான்மையில இன்னும் கொஞ்சம் நம்பிக்கை இருக்குது. அதை நானாக கெடுத்து கொள்ள விரும்பவில்லை’
‘உனக்கு நான் சேவை பற்றி காட்டுகிறதுக்குத்தான் என்னோட சேவை செய்ய வரச்சொல்லி கேட்டனான். நீ வர இல்லை. இப்ப எனக்கு என்ன சேவை ஒஸ்லோவில எப்பிடி நடக்குது, அதை எப்படி நடத்த வேணும், அதனால எனக்கு என்ன வரும் எண்டு எல்லாம் அக்கு வேறு ஆணி வேறாகத் தெரியும். வியாபாரம் செய்கிறதவிட இது றிஸ்கில்லாத அலுவல். இதை எல்லாம் படிக்க வேணும் எண்டுதான் நான் இவ்வளவு காலமும் மினக்கெட்டன். பறுவாய் இல்லை… சில இடங்களில சில இரையும் கிடைச்சுது. கணக்கில்லாத இரை அது. இது எல்லாம் சாதாரணமாய் வெளிய நிண்டு பாத்தால் விளங்காது. உள்ள இறங்கினால்தான் தெரியும். ஒவ்வொரு அங்கத்தவரும் பொன் முட்டை இடுகிற வாத்து போல. அப்பிடி இப்பிடி கணக்கு காட்டி இரகசியம் காக்க வேணும்…’
‘நீ என்ன சொல்லுகிறாய் சொக்கா?’
‘சேவை எண்டுகிறது சேவை மட்டும் இல்லையடா சுப்பா. அது ஒருவிதமான உழைப்பு. அது உனக்கு விளங்குதா?’
‘ஏதோ அப்பிடி கேள்விப்பட்டு இருந்தன். ஆனா, எனக்கு உண்ம பொய் என்ன எண்டு விளங்க இல்லை. சேவை எண்டா எனக்கு முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி தான் ஞாபகம் வரும். அது எதையும் எதிர்பாக்காது தன்னிடம் இருப்பதையும் கொடுப்பது. சிலர் அதைத் தியாகம் எண்டு சொல்லலாம். ஆனா, நான் உண்மயான சேவையெண்டா அதுதான் எண்டு நினைக்கிறன். உண்மயான சேவை எண்டுகிறது பிரதி பலனை எதிர்பாராது செய்யப்படும் கல்வி, கலை, செல்வம், தொண்டு, உணவு எண்டு எதையும் இதயம் மகிழ்ந்து கொடுப்பது. அது இல்லாமல் இங்க நடக்கிறது உண்மயில சேவையா? குரு எண்டால் மாணவனிடம் தட்சணையைக்கூட எதிர்பாக்காது போதிப்பதாம். தட்சணை பெற்றால்

அது வியாபாரம் எனப்படுகிறது. இங்கே யார் குரு? யார் இங்கே ஆகக்குறைந்தது ஆசிரியன்?'

'நான் உனக்கு அதை விளங்கப்படுத்துகிறன். உழுத்துப் போன தத்துவங்கள முதல்ல விடு. மற்றவங்கள மாதிரி நீயும் பிழைக்கப்பார். யாருக்கும் எதுக்கும் சிலை வைக்க போகிறது இல்லை. சிலை வைச்சாலும் அது நீடுழி நிலைக்க போகிறது இல்லை. நீ சேவை என்கிற சொல்லிற்கு வைச்சிருக்கிற கற்பனை மிகவும் பழமையானது. அது எப்பவோ அழிஞ்சு போயிட்டுது. இது கலி யுகம். இங்க நடக்கிறது எல்லாம் நேரடியாகவோ மறைமுகமாகவோ வியாபாரம். அதை நாங்களும் பயன்படுத்தி கொள்ள வேணும். இல்லாட்டி நாங்கள் வாழ தெரியாத மனிசராகிடுவம். இப்ப நான் சொல்லுகிறதை கேளு… நாங்கள் ஒரு மடம் திறப்பம். அதுக்கான காலம் இப்ப வந்திட்டுது. நீ என்னோட சேவை செய்ய வா. திரும்பவும் சொல்லுகிறன்… சேவை எண்டுகிறது சேவை மட்டும் இல்லை. விளங்கிச்செண்டா என்னோட வா. நாங்கள் இன்னும் சிலரோட அதை தொடங்குவம். அதில எங்கட முழு நேரத்தையும் செலவிடுவம். அது பொழுது போக்காகவும் இருக்கும். பொருளாகவும் பெருகும். விளங்குதா சுப்பா? இங்க யாரும் உன்னுடைய கற்பனை பாரி இல்லை. அதை யாரும் எதிர்பார்க்கிறதும் இல்லை. நான் இவ்வளவு காலமும் சேவை சேவை எண்டு அலைஞ்சதின்ரை அர்த்தம் பற்றி இப்ப உனக்கு விளங்கி இருக்கும்'

'நான் அரசல்புரசலாக கேள்விப்பட்டிருந்தன். இப்ப நீயே வெட்ட வெளிச்சமா அதை சொல்லி போட்டாய்'

'அப்ப வேலைய தொடங்குவமே? எனக்கு உன்னை மாதிரி நம்பிக்கையான வேறு ஒரு நண்பன் கிடையாது. எல்லாரையும் நம்ப இயலாது'

'உன்னுடைய எண்ணம் விளங்குது. ஆனா, நான் கொஞ்சம் ஆழமா இதைப்பற்றி யோசிக்க வேணும். என்னைப் பொறுத்தவரையில வாழ்க்கை எண்டுகிறது மற்றைய ஜீவன்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் ஆக குறைஞ்சது எங்கடை பேராசைக்காக அவற்றை இம்சை படுத்தாமலாவது இருக்கிறது. அதுவே எங்களை போன்ற மனிசருக்கு சரியாக இருக்கும்'

'இது கலியுகம் சுப்பா. யதார்த்தத்தை விளங்கிக்கொள். உன்னுடைய குடும்ப பொறுப்பே இன்னும் முடிய இல்லை எண்டது ஞாபகம் இருக்கா? உதில இருந்து எல்லாம் நீ எப்ப விடுபட போகிறாய்?'

'ம்… எல்லாம் ஞாபகம் இருக்குது. அதுக்கான காலம் வரும்'

'சரி நான் வெளிக்கிடுகிறன். உனக்கு பிறகு போன் பண்ணுகிறன். நீ எதுக்கும் யோசிச்சு போட்டு அப்ப முடிவை சொல்லு'

என்று கூறிய சொக்கன் சுப்பனிடம் விடை பெற்று சென்றான். சுப்பனுக்கு ஒன்று விளங்கியது. இந்த உலகில் உண்மையாக சேவை செய்யும் சிலரும் உண்டு. ஆனால் துரதிஷ்டவசமாக சேவை செய்வதாக வேஷம்

போடுபவர்களும் கோஷம் போடுபவர்களுமே அதிகம். அவர்கள் நோக்கம் கிடைப்பதை சுருட்டுவது அல்லது சுயவிளம்பரம் செய்து கொள்வது. அதற்காக அவர்கள் போற்றப்படும் எதையும் விற்பார்கள். யாரையும் ஏமாற்றுவார்கள்.

*

'அப்பா உங்களுக்கு என்ன வேணும்? எதற்காக இப்படித் திடீர் என்று வந்தீர்கள்? நான் ஏதும் குறை வைத்தேனா?'
'நீ குறை வைத்தால்கூட பருவாய் இல்லை. எனக்கு அது ஒரு பிரச்சினையே இல்லை. உன்னை நான் என்றும் நேசிப்பவன். உன்மீது எனக்கு வஞ்சம் வாராது'
'ஓ… என்னை பார்க்க வேண்டும் என்கின்ற ஆசை உங்களுக்கு வந்துவிட்டதா?'
'உன்நினைவு என்னோடு என்றும் நீங்காது இருக்கிறது'
'பிறகு?'
'என்மனதில் அமைதி இல்லை. அதில் ஒரு தாங்க முடியாத புதிய உறுத்தல். அது என்னை இடைவிடாது வருத்துகிறது. அதிலிருந்து விடுதலை வேண்டி இங்கு வந்தேன்'
'எதனால், எப்பிடி அப்பா அது வந்தது?'
'அது உன்னால் உருவாகியது'
'என்னால் உருவாகியதா? என்னால் எப்படி உருவாகியது அப்பா?'
'உன் சித்தம் கலங்கிப் போய்விட்டது. அதுவே என்கலக்கத்திற்கும் காரணமாகியது'
'என் சித்தம் எதற்காகக் கலங்கியது என்கிறீர்கள் அப்பா? '
'உன் சித்தம் பொருள்மேல் கொண்ட வேட்கையால் கலங்கி இருக்கிறது'
'அப்பா?'
'உன் சகவாசம் உன்னைத் தப்பான வழிக்கு இழுத்துச் செல்கிறது'
'நான் என்ன செய்ய வேண்டும் அப்பா?'
'எவன் ஒருவன் பொருள்மேல் வேட்கை கொண்டு தர்மத்தைத் துறக்கிறானோ நீ அவனுடைய நட்பைத் துறந்துவிடுவது மேல். யாருக்கும் சேரவேண்டிய பொருளை உனது மதியால் மயக்கி அபகரித்துக் கொள்வதும் மகா பாவமே. அரச சொத்தாக இருந்தால்கூட அது கொடும் பாவமே. உனது ஞானத்தை விற்றாலோ அல்லது குறுக்கு வழியில் பாவித்தாலோ அதுவும் பாவமே. அந்தப் பாவத்தைச் செய்தால் பின்பு நீ எனக்கு எள்ளும் தண்ணியும் இறைக்காதே. அது என்மீது அனலை அள்ளிக் கொட்டுவதாய் இருக்கும்'
'அப்பா?'

‘நீ தப்பு செய்யமாட்டாய் என்பது எனக்குத் தெரியும் சுப்பா. ஆனால் நீ தளும்புவதுகூட எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் நான் உன்னிடம் வந்தேன் சுப்பா? எனக்கு நீ ஒரு தானம் தரவேண்டும் சுப்பா’
‘என்னப்பா அது?’
‘நீ எனக்கு என்றும் உன்வாழ்வில் மாறாத வாக்கு ஒன்று வஸ்துவாக தானம் தரவேண்டும்?’
‘அப்பா?’
‘தருவாயா?’
‘தருவேன் அப்பா. உங்களுக்கு என்ன வேண்டும்?’
‘முளை விட்ட உன் ஆசை சுப்பா. அதை என்னிடம் தந்து நீ அதிலிருந்து விலகிவிடு’
‘அப்பா?’

*

சுப்பனிற்கு விழிப்பு வந்தது. திறன்பேசி அவனை விழிப்பிற்குக் கொண்டு வந்திருந்தது. அதை எடுத்து பார்த்தான். சொக்கன் அழைத்தான். சுப்பன் அந்த அழைப்பை ஏற்றான். அவன் இதழ்களில் மீண்டும் ஒரு மென்னகை. ‘என்ன சொக்கா? இந்த நேரத்தில? உனக்கு நித்தரை வரவில்லையா? நித்திரை கொள்ள முயற்சிசெய் சொக்கா’
‘அது இருக்கட்டும். நீ யோசிச்சியா?’
‘ம்… யோசிச்சன்’
‘என்ன முடிவு? ‘
‘நான் எந்தச் சேவை செய்ய வேண்டும் என்பது எனக்கு நன்கு தெரியும். அது நீ எண்ணும் சேவை அல்ல… தயவு செய்து என்னை மன்னித்துவிடு’
‘சுப்பா? இது ஒரு நல்ல சந்தர்ப்பம். நீ அதை வீணாக்குகிறாய்’
‘பருவாய் இல்லை. எனக்கு நித்திரை வருகிறது’
சுப்பன் திறன்பேசியைத் துண்டித்தான். நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினான். சுப்பனின் அப்பா தான் பெற்ற தானத்தோடு திருப்தியாக தன்னிடம் மீண்டார்.

சொக்கட்டான்

சென்னை கோடம்பாக்கத்தில் மேலும் கீழுமாக வழி பிரிக்கும் அந்தப் பாலம். அதன் கீழ் இரண்டு சிறிய சந்துகள் பாலத்திற்குத் தோழர்கள் போல நீளும். அவை பல வரலாற்றைத் தம்மில் அடக்கிய வண்ணம் பல சகாப்தங்களாக அவ்விடத்தில். அங்கே பல பதிப்பகங்கள், உணவு விடுதிகள், வழிபாட்டு தலங்கள், வியாபார நிலையங்கள் என்பவற்றின் நெருக்கம். ஈ இருக்கும் இடம்கூட இனி எவருக்கும் இல்லை என்பதாக சென்னையில் மனிதர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இதுவும் ஒன்று. பாலத்திற்கு கீழ் அது ஒரு சந்து என்றாலும் புழுத்துப் போய்விட்ட சன நெரிசல் எப்போதும் இருக்கும். வறுமையும் வாழ்வும் ஒவ்வொரு மனித அசைவிலும் அங்கு, இங்கு என எங்கும் இயங்கும் காட்சிகள். அவ்விடத்தில் ஒரு கடையைப் பதிப்பகமாக்கிப் பிதாமகர் காலையும் மாலையும் தவறாது தனது யாகத்தைச் செய்து வந்தார். சிலவேளைகளில் மட்டும் சந்திப்புகள் காரணமாக யாகத்திற்குத் தற்காலிக சாந்தியும் சித்திப்பது உண்டு. பிதாமகர் யாருடனும் நேருக்கு நேரே அதிகம் மிண்டிப் பழகத் தெரியாதவர். பிதாமகருடன் பழகுபவர்கள் அவருடன் எதற்காகவும் மிண்ட மனமேகார். ஆனால் அதுவும் நடந்தேறியது. எழுத்தில் அவர் மிண்டாத மலைகள் கிடையாது. அதனால் தனக்கென ஒரு போக்கையே தனியாக அமைத்துக் கொண்டவர். அவருடன் இருந்து அந்த மிண்டல்கள் பற்றிய கதைகள் கேட்பதே சுதனுக்கு ஒரு அலாதியான அனுபவமாகும். அதைச் சுதன் பலமுறை அனுபவித்து இருக்கிறான். பிதாமகர் ஈழத்தின் தமிழ் இலக்கியத்திற்கு ஈடுயிணை இல்லாத பிதாமகரே என்பதை யாரும் ஆரவாரத்தால் அல்லது அவர் ஈட்டிய செல்வத்தால் மறைக்க முடியாது. அவர் புகழுக்கு சில இசங்கள் குறுக்கே நின்றது வரலாற்று உண்மை. இலக்கியத்தால் சில சமுகப் போராட்டங்களை உருவாக்கலாம். சமுகப் போராட்டத்திற்கான ஆக்கங்கள் அனைத்தும் இலக்கியம் ஆகிவிடுமா? அப்படியான படைப்புகளால் பிதாமகரை அம்புப் படுக்கையில் வீழ்த்திவிட முடியுமா? வரலாறு இல்லை என்கிறது. அந்த அலசலைச் சுதன் அதிகம் மேற்கொள்வதில்லை. அவன் தன்னை எதிலும் சாராதவனாய் நினைத்திருந்தான். குருச்சேத்திரத்தின் பிதாமகருக்குப் பாண்டவர் மேல் இருந்த அன்பு போல நமது பிதாமகருக்கும் அவர் நம்பும் பாண்டவர்கள் மீது அளவுகடந்த நம்பிக்கை இருந்தது. அதற்குப் பாண்டவர்கள் அல்லக் காரணம் பதிலாக ஈழத்தின் கௌரவர்கள் காரணமாய் இருந்தனர். துரியோதனன்கூடத் திருந்தி நல்ல மனிதனாகலாம் ஆனால் ஈழத்து கௌரவர்கள் அப்படி எல்லாம் தப்பு செய்துவிடமாட்டார்கள் என்பதற்கு எதிராக அவருடன் யாரும் வாதிடுவதில்லை. அதற்கான பிரதிவாதம்

தாராளமாக அவரிடம் இருக்கும். அது ஆத்ம விசுவாசம். அந்தக் குருச்சேத்திர கதைகளில் இருப்பது போல அல்ல இது. இது நம் கண்முன்னே ஆடி அழிந்தவை. அநியாயத்தை அநியாயத்தால் வெல்ல முடியாது என்கின்ற புது யுகம். ஈழத்திற்காய் மரித்தவர்கள் சிலருக்குக் கௌரவர்கள். அவர்களே சிலருக்குப் பாண்டவர்கள். அது அவரவர் பார்வையைப் பொறுத்தது. துரியோதனனும் தான் செய்வது தனக்கான நியாயம் என்றே இறப்புவரை கருதினான். பிதாமகர் ஈழத்தின் பொக்கிசங்களை தன்னுடன் காவிக்கொண்டு கோடம்பாக்கத்திற்குத் தனது சொகுசு வாழ்வைத் துறந்து ஆத்ம இன்பம் தேடி வந்தார். அவரது கவனம் தொடக்கத்தில் ஆத்ம இன்பத்தைப் பெருக்கும் யாகத்தில் மட்டுமே இருந்தது. அதற்காக அவர் செய்த அர்ப்பணிப்பு அனைவரையும் மலைக்க வைத்தது. அவர் அப்படி யாகம் செய்கையில் பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடையும் பொழுது அமிர்தம் திரண்டு எழுந்தது போலப் பிதாமகரின் யாகத்திலும் ஒரு அமிர்தம் திரண்டு எழுந்தது. என்னதான் பிதாமகராய் இருந்தாலும் அவரும் உலக பாசங்களுக்குக் கட்டுப்பட்ட சாதாரண மனிதரே. தேவேந்திரன் உண்டதும் கொடுத்ததும் போல ஆசை அவருக்கும் உண்டாகியது. அதை இவ்வுலகில் யாரும் தவறாக கருத முடியாது. அவர் செய்த கடும் யாகத்திற்கு இந்த அமிர்தம் பெரிய பலன் இல்லை என்றே சொல்லலாம். என்றாலும் அதில் ஒரு பலன் இருப்பதை அவர் கண்டு கொண்டார். ஈழத்தைப் பற்றி அறியாமலே அல்லது எந்தத் தொடர்பும் ஏற்படாமலே வியாபார நோக்கிற்காக ஈழ, புலம்பெயர் இலக்கியங்களை வெளியிட்ட பலரோடு அவரை எக்காரணம் கொண்டும் ஒப்பிட முடியாது. இந்த யாகம் பலனை எதிர்பார்த்து அவரால் தொடங்கப்பட்டது அன்று. பலனை கண்டபொழுது அவரையும் மனித பலவீனம் ஆட்கொண்டதை அவரால் வெல்ல முடியவில்லை. பலன்மீது பற்று வைக்காது காரியம் செய்ய வேண்டும் என்றார் பரமாத்மா. அதற்கான காரணம் உண்டு. பலனை எதிர்பார்த்து செயற்படத் தொடங்கினால் நாம் செய்யும் யாகமே கெட்டுப் போய்விடும். பலனில் உண்டாகும் பற்றால் செய்கின்ற காரியத்தின் அல்லது யாகத்தின் குறிக்கோள் அல்லது முனைப்பு தொலைந்துவிடும். பிதாமகர் அப்படி எல்லாம் தன்வழி விட்டுப் பெரிதாக மாறாவிட்டாலும் மாற்றம் இருந்தது என்பதை மறுப்பதற்கு இல்லை. அத்தால் பிதாமகருக்குச் சிலவேளைகளில் பல சங்கடங்கள் ஏற்பட்டன. அவர் புகழக்கூடாத மனிதர்களைப் புகழ வேண்டி வந்தது. இகழக்கூடாத சிலரை இகழ வேண்டி வந்தது. பரிசிற்காகக் கவி பாடியது போன்ற நிலைமை அவருக்கும் உண்டாகியது. வியாபாரத்திற்கு என்று ஒரு தருமம் இருக்கிறது. நேர்மை மீறப்படுவது அதில் கண்டும் காணாமலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பிதாமகருக்கு புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றும் புதிதல்ல... மற்றைய மனிதர்கள்மேல் அவர் காட்டும் நம்பிக்கைக்கும் அவரிடம் பஞ்சம் இல்லை. ஈழத்திலேயே அவர் அப்படியான யுத்தங்களைப் பலமுறை கண்டவர். அப்பொழுது அவருக்கு எழுத்து மட்டுமே தளமாகும். வியாபாரம் அவருக்குக் கன்னி கழியாத பெண் போல. சுதன் அன்று காலையே பிதாமகரிடம் சென்றுவிட்டான். காலை வந்து சந்திக்குமாறு அவர் கேட்டு இருந்தார். காலை அங்கே சென்ற பொழுது வயிற்றை இயற்கை கிள்ளியது. அதனால் அருகே இருந்த உணவு விடுதிக்கு இருவருமாகச் சென்றார்கள். அப்பொழுது பிதாமகர், 'உனக்குச் சபேசனைத் தெரியுமோ?' என்று அவனைப் பார்த்துக் கேட்டார். சபேசன் ஸ்கண்டிநேவியன் நாடு ஒன்றில் இருப்பது அவனுக்குத் தெரியும். மின்னஞ்சல் வழியாகத் தொடர்பு கொண்டதும் ஞாபகம் இருந்தது. நேரடியாக அவனைச் சந்தித்தது இல்லை. அதற்கான சந்தர்ப்பம் கிட்டியதில்லை. சுதனுக்கு சபேசனும் எழுத்து ஆர்வத்தால் பிதாமகரைத் தேடிவந்த ஒருவன் என்கின்ற பிம்பம் ஒன்று உண்டாகியது. நல்லது. பல நபர்கள் எழுதினால் தமிழ் கொழிக்கும் என்று அவன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான். வெளியே வெயில் விட்டுக் கொடுப்பில்லாது வாட்டத் தொடங்கி இருந்தது. உணவு விடுதி என்றும் போல் இன்றும் அமளிப்பட்டது. உணவின் வாசங்கள் மேலும் வயிற்றைக் கொதியேற்றின. பிதாமகரோடு ஒருவாறு இடத்தைப் பிடித்து அமர்ந்த சில நிமிடங்களில் 'உங்களுக்கு என்ன வேண்டும்? ' என்கின்றபடி ஒரு பணியாள் வந்து நின்றான். அவனிடம் தேவையானதை கூறினார்கள். பிதாமகரின் சாப்பாடு சுதனோடு ஒப்பிடுகையில் மிகக் குறைவாக இருந்தது. வயது ஏற ஏற உணவு இறங்க வேண்டியது விதியாகிறது எனச் சுதன் எண்ணிக் கொண்டான். பிதாமகர் தனக்கு ஒரு பொங்கலும் குடிப்பதற்குக் கோப்பியும் தருமாறு கூறினார். சுதனுக்கு ஒரு பிடி பிடிக்க வேண்டும் என்கின்ற அவா. நோர்வேயில் இப்படிச் சாப்பிட முடியாது. இங்கு வந்து நிற்கும் போது அந்தச் சந்தர்ப்பத்தை அவன் கோட்டைவிட விரும்பவில்லை. அவன் தனக்கு முதலில் பொங்கலும் பின்பு மசாலாத் தோசையும் அத்தோடு கோப்பியும் கொண்டு வருமாறு கூறினான். உணவிற்காக அவர்கள் காத்து இருக்கும் பொழுது மீண்டும் பிதாமகர் தொடங்கினார். 'சபேசன் நல்லா எழுதுறான். அவனுக்கு நிச்சயம் நல்ல வரவேற்புக் கிடைக்கும். தமிழிலையும் நல்ல ஆர்வம் இருக்குது. ''நல்ல விசயம். யார் எண்டாலும் ஈழத்து இலக்கியத்திற்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்தால் அது எங்களுக்கும் சந்தோசம் தான்' என்றான் சுதன். அவன் மனதும் அர்ச்சுனன் மனது போல ஏங்கியது. இருந்தும் அதை அவன் பிதாமகரிடம் காட்டிக் கொள்ளவில்லை. அந்த எண்ணம் தவறு என்றே அவன் எண்ணினான். 'சபேசன் இப்ப சென்னையிலதான் நிக்கிறான். பத்து மணிபோல இங்க வருவான் எண்டு சொல்லி இருக்கிறான். நீ கொஞ்சம் வெயிற்பண்ணினா அவனைப் பாத்திட்டுப் போகலாம். நிச்சயம் ஈழத்தமிழர்

தமிழ் இலக்கியத்தை வாழ வைப்பினம் எண்டு நான் சொல்லுகிறதுக்கு இவனைப் போன்றவர்கள் பலமான என்னுடைய நம்பிக்கைகள். நீங்கள்தான் வருங்காலம். உனக்கும் நிச்சயம் அவனுடைய உதவி எதிர்காலத்தில தேவைப்படலாம்' எதற்கு அவனது உதவி தனக்குத் தேவைப்படும் என்பது சுதனுக்கு முழுமையாக விளங்கவில்லை. என்றாலும் பிதாமகர் எதாவது சொன்னால் அதில் விசயம் பொதிந்து இருக்கும் என்று அவன் நம்பினான். அத்தால்… 'கேட்கவே சந்தோசமாய் இருக்குது. எனக்கும் இப்ப ஒண்டும் அவசர அலுவல் இல்லை. இருந்து பார்த்திட்டுப் போகலாம்' என்றான். சாப்பாட்டை முடித்துக் கொண்டு மீண்டும் யாகசாலைக்குச் சுதனும் பிதாமகரும் திரும்பி வந்தார்கள். அவர்கள் வரும்பொழுது சபேசன் வந்துவிட்டான். அவனைக் கண்ட பொழுது பிதாமகரின் வதனம் ஆதவன் கண்ட தாமரையாக அங்கே சட்டென அகல விரிந்தது. சபேசனுக்கு அவர் சுதனை அறிமுகம் செய்து வைத்தார். சபேசன் வாட்டசாட்டமான உருவம் கொண்டவன். அவனது வெளித் தோற்றம் போல அகமும் இருக்க வேண்டும். அதனாலேயே பிதாமகரின் நற்பெயரை விரைவில் சம்பாதித்து இருக்கிறான் என்று சுதன் எண்ணினான். சுதனுக்குப் பிதாமகரை நீண்டகாலம் தெரியும் என்றாலும் அவன் யாருடனும் அதிகம் பழகுவது இல்லை. அதைப் போன்று யாரிடம் இருந்தும் அதிகமாக எதிர்பார்ப்பதும் இல்லை. உள் ஒன்று வைத்து புறம் ஒன்று போலியாகப் பழகுவதும் கிடையாது. இருந்தும் தன்னைப் போல அல்லாது மிகவும் ஆக்கப்பூர்வமாய் சபேசன் இருப்பதால் அவன் பிதாமகரைக் கவர்ந்திருப்பது சுதனுக்கு தற்போது வியப்பைத் தரவில்லை.

சிறிது நேரம் நின்று சபேசனுடன் கதைத்தான். சபேசன் தேனொழுகக் கதைத்ததில் அவன் மலைத்தான். என்றாலும் அது எங்கோ சுதனுக்கு நெருடியது. சிலர் அப்படித்தான் என்று எண்ணிக் கொண்டான். சபேசனிடம் இடைக்கிடையே ஒருவித மமதை மேலோங்குவதையும் அவனால் அவதானிக்க முடிந்தது. பிதாமகர் எப்படி இவனை என்கின்ற கேள்வி திடீரென ஒரு கணம் தோன்றி மறைந்தது. அது எப்படி என்றாலும் இருந்துவிட்டுப் போகட்டும். இப்போது பிதாமகருக்கும் அவனுக்கும் நடக்க இருக்கும் சம்பாஷனைக்குத் தான் தடையாக இருக்கக்கூடாது என்கின்ற எண்ணத்தோடு சுதன் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தான். அவன் ஏதோ ஒரு கடமையைச் செய்யாது தப்பி ஓடுவது போன்ற உறுத்தல். இது தேவையற்ற உணர்வு எனத் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

*

ஐந்து வருடங்கள் கழிந்துவிட்டன. உலகம் ஒரு விண்மீன் பேரடையில் இருந்து இன்னோர் பேரடைக்குச் சென்ற மாற்றம். ஆனால் கோடம்பாக்கம் மட்டும் கிட்டத்தட்ட அப்படியே இருந்தது. சுதன் இன்று பிதாமகரை மீண்டும் சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தான். அவரது யாகசாலையை இப்போது சில காரணங்களால் இடம்மாற்றி இருப்பதாகக் கூறியிருந்தார். அந்த புதிய யாகசாலையில் வந்து தன்னைச் சந்திக்குமாறும் அவர் பணித்திருந்தார்.
பிதாமகரின் புதிய யாகசாலை முதல் இருந்ததிற்குப் பின் ஒழுங்கை ஒன்றிற்கு மாறி இருந்தது. தொலைப்பேசியில் கதைக்கும் பொழுது எதனால் என்று கூறினார். என்றாலும் சுதன் அதை யாரிடமும் கூறுவதில்லை. அதற்காக அவன் அனைத்தையும் இரகசியமாய் அடைகாத்து வைத்திருப்பான் என்றும் இல்லை. இரண்டு பக்கம் இருக்கும் பொருளிற்கு ஒரு பக்கத்தைப் பார்த்து மதிப்புக்கூற முடியாது. அது தார்மீகமும் ஆகாது. பிதாமகர் சுதனைக் கண்டதும் என்றும் போல் இன்றும் இன்முகத்தோடு வரவேற்றார்.
'நீ உன்ர கைக்காசை போட்டு எண்டாலும் தமிழை வளர்க்க வேணும் எண்டு ஆசைப்படுகிறாய். உன்னை மாதிரி எல்லாரும் இருக்கமாட்டினம் சுதன். முதல்ல நல்ல பிள்ளையளாட்டம் பௌவியமாக வாறான்கள். தந்திரமா தேனும் பாலும் ஒழுக கதைக்கிறாங்கள். கொஞ்ச நாளில குருவுக்கு மிஞ்சிய சீடனாக பாக்கிறாங்கள். ஈழத்தமிழை அவைதானாம் இப்ப தூக்கிப்பிடிக்க போகினம். அதுகூட பருவாய் இல்லை. ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரியை விரட்டின கதையாட்டம் என்னிட்ட இருக்கிறதையும் பறிச்சு கொண்டு போக பாக்கிறாங்கள்' என்று தனது மனக் கொதிப்பைச் சுதனைப் பார்த்ததும் கொட்டித் தீர்த்தார்.
சுதன் ஏதோ தமிழில் எழுதினாலும் அவனுக்குக் கொஞ்சம் மந்த மூளை. பிதாமகர் என்ன சொல்கிறார் என்பதின் வாலோ தலையோ எதுவும் அவன் மூளைக்கு அகப்படவில்லை. அவன் விளங்காது அவரது முகத்தைப் பேந்தப் பேந்தப் பார்த்தான். அவனுக்கு தனது கைக்காசைப் போட்டு தனது புத்தக அலுவல்கள் செய்யும் விடயம் பற்றிச் சொல்லத் தேவையில்லை. தமிழில் எழுதும் பலருக்கும் அதுவே விதி. சுதனைப் பொறுத்தவரையில் அவனால் ஈழத்தமிழ் இலக்கியத்திற்குப் பெரிதாக எதுவும் செய்ய முடியாது என்பதும் தெரியும். அதைவிட அவன் எந்தப் பதவிக்கோ அல்லது பெயருக்கோ பேராசைப் படுபவனும் அல்ல.
பிதாமகர் சுதனைப் பார்த்தார். பிதாமகருக்கும் அவனைப் பற்றி விளங்கும். அதனால் அவர் நேரடியாக விசயத்தை அவனுக்கு விளக்கமாகக் கூறினார்.
'இவன் சபேசனை பற்றித்தான் கதைக்கிறன். கொஞ்சம் கெட்டித்தனமா எழுதுகிறான் எண்டு நினைச்சன். அதை வேறை அவரிட்ட சொல்லியும் போட்டன். அப்பிடியே எனக்கும் உதவியா இருக்கும் எண்டு ஒரு ஒப்பந்தம் அவனோட. இப்ப அது முதலுக்கே நட்டமாய் வந்து நிக்குது. ஒட்டு

மொத்தமா தந்திட்டு வெளிய போ எண்டுகிறான். தன்னால என்ர இடத்தப் பிடிக்க முடியும் எண்டுகிறான். இப்ப வழக்கு கோடு எண்டு ஒரே பிரச்சனையா இருக்கு சுதன். அதால மனசிலும் நிம்மதி இல்லை. உன்னுடைய இந்தப் புத்தக வேலைகள் எனக்கு இப்ப சரியான உதவியா இருக்கும்'

சுதனுக்கு இப்போது விஷயம் முழுமையாகப் பிடிபடத் தொடங்கியது. இதற்குச் சபேசனை மட்டும் குறை கூறிவிட முடியாது. சொந்தத் தகப்பன், மகன், சகோதரங்களே வியாபாரத்தில் தகராறுப்படுகிறார்கள். அப்படி உலகு கலியுகத்தைக் கடைப்பிடிக்க இவரால் எப்படி இவனை நம்ப முடிந்தது? மனிதச் சொற்களே மனிதனை மாய மானாக மயக்க வைக்கும். கண்ணைக் காட்சி மாற்றிக் கட்டிப் போடும். தன் சொல்லால் தமிழைக் கட்டிப் போடும் பிதாமகரே சபேசன் சொல்லில் ஏமாந்து இருக்கிறார் என்றால் அவன் எப்படிப்பட்டவனாய் இருப்பான் என்பதை எண்ணச் சுதனுக்கு மலைப்பு ஏற்பட்டது.

'என்ன பேசாமல் இருக்கிறாய்? ' என்றார் பிதாமகர்.

'உங்களுக்கே ஆப்பு எண்டா நான் என்ன சொல்ல இருக்குது. நீங்கள் நாலும் தெரிஞ்ச அடிபட்ட மனிசர். நீங்களே ஏமாந்ததாய் இப்ப சொல்லுறியள். அப்பிடி எண்டா சபேசன் எப்படிப்பட்டவனாய் இருப்பான் எண்டு யோசிக்கிறன்'

'காலம் சரியில்லையடா தம்பி. நானும் அவன்ர கதையிலதான் ஏமாந்து போயிட்டன். மன சுத்தியோட தமிழுக்காக எழுதுகிறது வேற. அது உன்ன மாதிரி. எதை செய்தாலும் பேசாமல் இருக்கிற மனசு யாருக்கும் வராது. சிலர் முட்டை போட்ட கோழியாட்டம் எழுத முதல் ஆரம்பிச்சுடுவாங்கள். அப்பிடி இருந்தாலும் பறுவாய் இல்லை. மனதில இருந்து மனிதத்திற்காக சொல்லு வராமல் மற்றவனை ஏமாத்தோணும் எண்டு எழுதுகிறவங்கள என்ன செய்ய முடியும்? அவங்கள் எதை எழுதினாலும் ஒரு பெறுமானமும் எதிர்காலத்தில இருக்கப்போகிறது இல்லை. காச கொடுத்தே பட்டங்களும், கௌரவங்களும் பெறலாம் எண்டு நினைக்கிறவங்கள நான் என்ன செய்ய முடியும்? இந்த நாடும் அப்பிடி. இதெல்லாம் எனக்கு பிறகுதான் தெரிய வந்திச்சுது. அதுக்கு முதலே நாங்கள் அவசரப்பட்டிட்டம். தலைய கொண்டே தூக்கு கயித்தில கொடுத்தமாதிரி இப்ப எங்கட நிலைமை'

'நீங்கள் எழுத்தை தவமா நினைக்கிற மனிசர். இந்த சின்ன சின்ன சில்லறைத்தனமான பிரச்சினைகளுக்க அகப்பட்டு நேரத்தை வீணடிக்கிறது தமிழுக்கே நட்டம் இல்லையா? '

'உண்மை சுதன். முள்ளில சீலையைப் போட்டாச்சுது. அதை எப்பிடியாவது குறைஞ்ச சேதாரத்தோட எடுத்துக்கொண்டு நான் என்ர வேலைய பாக்க வேணும்'

'அதுதான் நல்லது'

அதன் பின்பு பலகாலம் சுதனால் பிதாமகரைச் சந்திக்க முடியவில்லை. இயற்கை தனது கடமையை யாரது பலனையும் எதிர்பார்க்காது ஆற்றும். அதற்கு அற்ப மனிதர்கள் போன்று அடங்காத அகங்காரமோ, புகழோ, இகழோ, ஆசையோ கிடையாது.

*

அன்று முகநூலில் சபேசனின் பக்கத்தைச் சுதன் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. பிதாமகர் ஏன் ஏமாந்தார் என்பது சட்டென அவனுக்கு விளங்கியது. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்று கூறிய ஔவையார் கூடத் தோற்றுப் போகும் சில அறிவுரை அமுதம் அதில்... அழுக்காறு அற்றுக் காவி தரித்த ஔவையோடு ஒப்பிடுவது மடமையே... இருந்தும் இதிலே அவனது உண்மை உள்ளம் எங்கே என்று சுதன் தேடினான். பிதாமகருக்கு ஏற்பட்ட அனுபவம் அவனுக்கும் உண்டாகியது. எழுத்து என்பது மனதிலிருந்து மனிதம் காக்க வரவேண்டும் என்றார் பிதாமகர். உண்மை. அது மனித இச்சைகளுக்காக அல்ல... ஞானம் கைகூடுவது ஒரு தவத்தை மேற்கொள்ளவே அன்றித் தராசைத் துக்கிக் கொண்டு வியாபாரியாகக் கூவுவதற்கு அல்ல... சுதன் சட்டென வெறுப்போடு கணினியை மடித்து வைத்தான்.